www.onlineuthayan.com

பக்கங்கள் : 58

# உதயன்

சுடர் 27
கதிர் 197

வள்ளுவர் ஆண்டு 2043 வைகாசி 28 ஞாயிற்றுகிழமை (10/06/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

# பட்டதாரிப் பயிலுநர் நியமனத்தில் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் ஊழல்

## அவர் அனுப்பிய பட்டியலில் இருந்த 50 பேருக்கு முல்லையில் திடீர் நேர்முகம்

யாழ்ப்பாணம், ஜூன்10
பட்டதாரிப் பயிலுநர் நியமனத்தில் அரசியல் முறைகேடு, ஊழல் இடம்பெற்று வருவது அம்பலத்துக்கு வந்துள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் நிர்ப்பந்தம் காரணமாக நேற்றைய தினம் 50 பட்டதாரிகளுக்குத் தனியான நேர்முகத் தேர்வுநடத்தப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டப் பட்டதாரிகளுக்கு நாளை திங்கட் கிழமையும் நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமையும் நேர்முகத் தேர்வு நடத்தப்பட இருந்த நிலையில் நேற்றைய தினம் 50 பட்டதாரிகளுக்கு இந்த ரகசிய நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டுள்ளது.

அமைச்சர் ரிஷாத் பதியுதீன் முல்லைத்தீவு அரச அதிபருக்கு வழங்கிய அழுத்தத்தின் பேரிலேயே இந்த நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டது என்று உதயனுக்குத் தெரியவந்தது.

தான் அனுப் 04

## வவுனியா பட்டதாரிகள் புறக்கணிக்கப்படுவது ஏன்?

யாழ்ப்பாணம், ஜூன் 10
வவுனியா மாவட்டப் பட்டதாரிப் பயிலுநர்களுக்கான ஆள்சேர்ப்பு செய்வதற்கான நேர்முகத் தேர்வுகள் நடத்தப்படாமல் இழுத்தடிக்கப்படுவதில் பின்னணி எதுவும் உள்ளதா? அல்லது அதிகாரிகளின் அசமந்தமா? என்று வவுனியா மாவட்ட தமிழ்ப் பட்டதாரிகள் சங்கம் கேள்வியெழுப்பியுள்ளது.

வவுனியா பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் எஸ்.விஜயகுமாரால் ஒப்பமிடப்பட்டு வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

வேலையற்ற பட்டதாரிகளைப் பயிலுநர்களாக ஆள்சேர்ப்புச் செய்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் கிழக்கு மாகாணத்திலும் வடக்கு மாகாணத்தின் யாழ்ப்பாணம், 04

## பொன்சேகாவின் பாதுகாப்புக்கு விசேட படை

கொழும்பு, ஜூன் 10
விடுதலை செய்யப்பட்ட முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் பாதுகாப்புக்காக ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவின் 15 படையினரைக் கொண்ட விசேட படை நேற்று முதல் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

சிறையில் இருந்து விடுதலை பெற்ற பின்னர், நாடாளுமன்ற உறுப்பினர் ரிரான் அலஸின் ஆலோசனையின்படி செயற்பட்டு வரும் பொன்சேகாவின் நன்னடத்தையைக் கவனத்தில் கொண்டு பாதுகாப்புச் செயலாளரின் தீர்மானத்துக்கு அமைய இந்தப் பாதுகாப்பு அவருக்கு வழங்கப்பட் 04

## அகதிகள் கேரளா செல்ல தமிழ்நாட்டு பொலிஸ் உடந்தை

புதுடில்லி,ஜூன் 10
தமிழகத்தின் ராமேஸ்வரம், சென்னை நகரங்களிலுள்ள அகதிமுகாம்களில் தங்கியுள்ள இலங்கை அகதிகள் கேரள மாநிலத்துக்கு செல்வதற்குத் தமிழகப் பொலிஸார் உடந்தையாக இருப்பதாக இந்திய மத்திய புலனாய்வு முகவரமைப்புக்கள் குற்றம் சுமத்தியுள்ளன.

அகதி முகாம்களிலிருந்து கேரளவுக்கு இலங்கை அகதிகள் செல்வதைத் தமிழக பொலிஸார் கண்டுகொள்ளாமல் இருக்கிறார்கள். இவ்வளவு பெரும் எண்ணிக்கையான அகதிகள்பொலி 04

# விகாரைகள் அமைப்பதை யாருமே தடுக்க முடியாது

## கோத்தபாய ராஜபக்ஷ இறுமாப்பு



கொழும்பு,ஜூன் 10
இலங்கையில் உள்ள பௌத்த விகாரைகளைக் கட்டி எழுப்பும் அரசின் செயற்பாடுகளை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது.அந்தச் செயற்பாடுகள் எந்தவித தடைகளுமின்றி மேற்கொள்ளப்படும் என்று பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்திருக்கிறார். தடைகளைச் சவாலாக ஏற்று விகாரைகளைக் கட்டியெழுப்புவோம் என்றும் அவர் கூறியுள்ளார்.

மாத்தறை, வெஹரஹேன விஹாரையில் நேற்று நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே 04

## நாடு திரும்பினார் ஜனாதிபதி மஹிந்த

கொழும்பு.ஜூன் 10
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாடு திரும்பியுள்ளார்.நேற்று அதிகாலை ஜனாதிபதி இலங்கை வந்தடைந்துள்ளதாக அரச ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பிரிட்டன் எலிசபத் மகாராணியின் வைரவிழா கொண்டாட்டங்களுக்காக ஜனாதிபதி மஹிந்த கடந்த 4ஆம் திகதி பிரிட்டனுக்குப் பயணம் செய்தார்.

இதன் பின்னதாக ரோமுக்குச் சென்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பாப்பரசரை நேற்று முன்தினம் சந்தித்துக் கலந்துரையாடினார். (த)

## நவநீதம்பிள்ளை மீது இலங்கை குற்றச்சாட்டை முன்வைக்காது

### வெளிவிவகார அமைச்சின் அதிகாரி தகவல்

கொழும்பு,ஜூன் 10
ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அலுவலகத்துக்குள் இடம்பெற்ற மின்னஞ்சல் பரிமாற்றத்தின் அடிப்படையில், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளைக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும் நோக்கம் இலங்கை வெளிவிவகார அமைச் 04

## மாதகல் மேற்குக் கடலில் தொழில் செய்யத் தடை

யாழ்ப்பாணம், ஜூன் 10
மாதகல் மேற்குக் கடல் பகுதியில் கடற்றொழில் செய்வதற்குத் தற்போது அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாக அந்தப் பகுதி கடற்றொழில் அமைப்புகளின் பிரதிநிதிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கடற்படையினரே இதற்கான அனுமதியை மறுத்துள்ளதாகவும் மாதகல் மேற்கு சாம்பல் துறையில் அமைக்கப்பட்டு வரும் பௌத்த விகாரையை அண்டிய 04

## தென்மராட்சியிலும் 300 ஏக்கர் நிலம் பறிபோகிறது

### பிரதேச செயலர்களின் முடிவே இறுதியானது

யாழ்ப்பாணம், ஜூன் 10
யாழ்ப்பாணம், நல்லூர், தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவுகளில் 61 ஏக்கர் நிலத்தைக் கபளீகரம் செய்வதற்குமுயன்றதுபோலவே தென்மராட்சிப் பிரதேசத்திலும் சுமார் 300 ஏக்கர் நிலத்தை அபகரிப்பதற்கு இராணுவம் முன்முயற்சிகளை எடுத்துள்ளது.

தென்மராட்சியில் தற்போது இராணுவம் நிலை கொண்டுள்ள 41 காணித் துண்டங்களைத் தமக்கு உரிமையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி தென்மராட்சிப் பிரதேச செயலரை இராணுவ அதிகாரிகள் கோரியிருக்கின்றனர்.

1996ஆம் ஆண்டு முதல் தாம் நிலை கொண்டுள்ள தனியார் காணிகளையும் தமக்கு உரிமைப்படுத்துமாறு இராணுவம் கோரியுள்ளது.

இவ்வாறு இராணுவம் தங்கியுள்ள வீடுகள், காணிகளின் உரிமையாளர்கள் நூற்றுக்கணக்கானவர்கள் தற்போது வாடகை வீடுகளில் தங்கியிருக்கிறார்கள்.

இதேவேளை யாழ்ப்பாணம், நல்லூர், தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுகளில் அபகரிக்கப்படஉள்ள 61 ஏக்கர் நிலமும் 4A

# போர்க் குற்ற ஆதாரங்கள் முற்றிலும் பொய்யானவை

## மீண்டும் மறுக்கிறது இலங்கை அரசு

லண்டன்,ஜூன் 10
இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் அண்மையில் லண்டனில் வெளியிடப்பட்ட புதிய வீடியோக்களும், புகைப் படங்களும் முற்றிலும் உண்மைக்குப் புறம்பானவை என ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் பந்துல ஜயசேகர தெரிவித் 04




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# எரிபொருள் விலை குறைப்பு தீவிரமாக ஆராய்கிறது அரசு

## யாழ். வந்த அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்த தகவல்

யாழ்ப்பாணம், ஜூன் 10

எரிபொருள்களின் விலைகளைக் குறைப்பது குறித்து அரசு தீவிரமாக ஆராய்ந்து வருவதாக யாழ். வருகை தந்த பெற்றோலியத்துறை அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்த தெரிவித்தார்.

நேற்று யாழ். வருகை தந்த அமைச்சர் இங்குள்ள எரிபொருள் நிலையங்களின் முகவர்களைச் சந்தித்து அவர்களின் குறைகளைக் கேட்டறிந்தார்.



இதில் உரையாற்றிய அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:

உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை நாளுக்கு நாள் வேறுபட்டுக் காணப்படுகிறது.

இலங்கையில் எரிபொருள்களின் விலைகளைக் குறைப்பது தொடர்பில் அரசு தீவிரமாக ஆராய்ந்து வருகிறது. ஆயினும் இது குறித்து தீர்மானம் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

வடமாகாணத்தில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபத்தின் முகவராகச் செயற்பட்டுவரும் கூட்டுறவுச் சங்கங்களின் எரிபொருள் விற்பனை நிலையங்கள் சிறப்பாகச் செயற்படுகின்றன.

வடக்கின் எரிபொருள் விற்பனை நிலையங்களின் செயற்பாடுகள் மிகச் சிறப்பாக உள்ளன.

எரிபொருள்கள் எவ்விதத் தட்டுப்பாடும் இன்றி மக்களுக்குத் தாராளமாக விநியோகிக்கப்படுகின்றன.

வடக்குக்கான போக்குவரத்து நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதற்கமைய எரிபொருள் விற்பனை நிலையங்களில் எரிபொருள்களைத் தாராளமாகக் களஞ்சியப்படுத்தி வைக்க வேண்டும்.

இதற்கென எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் மேலதிக நிலத்தடித் தாங்கிகளை அமைப்பதற்கு எரிபொருள் விற்பனை நிலையங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தற்போது வடக்குக்கான எரிபொருள்கள் யாவும் தாராளமாக அனுப்பி வைக்கப்படுகின்றன. எரிபொருள் விற்பனை நிலைய முகவர்களும் விற்பனை நிலையங்களில் எரிபொருள் பற்றாக்குறை ஏற்படாத வகையில் பார்த்துக் கொள்ள வேண்டும் - என்றார்.

இந்தக் கலந்துரையாடலில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வடபிராந்திய முகாமையாளர் வி.சண்முகநாதன், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அகில இலங்கை முகவர் சங்கத்தின் தலைவர் குமார ராஜபக்ஷ மற்றும் கூட்டுத்தாபன அதிகாரிகள், முகவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (த-17)

## இலங்கை எழுத்தாளருக்கு பொதுநலவாய விருது



கொழும்பு, ஜூன் 10

இலங்கை எழுத்தாளரான ஷொன் கருணாதிலக்கவுக்கு பொதுநலவாய புத்தக விருது கிடைத்துள்ளது. 'சினமன்: லெஜன்ட் ஒவ் பிரதீப் மத்திவ்' என்ற தலைப்பில் அவர் எழுதிய முதலாவது நாவலுக்காக இந்த விருது கிடைத்துள்ளது. சிறந்த சிறுகதைக்கான விருதை நியூஸிலாந்தைச் சேர்ந்த எம்மா மார்ட்டின், வென்றுள்ளார்.

பிரதீப் சிவநாதன் மத்திவ் என்ற கிரிக்கெட் வீரரின் வாழ்க்கையை விளையாட்டுச் செய்தியாளர் ஒருவர் எப்படி தேடி ஆராய்கிறார் என்பதன் அடிப்படையில் இந்த நாவலின் கதை அமைந்துள்ளது.

பொதுநலவாய நூல் விருதுக்கு 10,000 ஸ்ரேலிங் பவுண் பரிசும் சிறந்த சிறுகதைக்கு 5000 ஸ்ரேலிங் பவுண் பரிசும் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

பொதுநலவாய மன்றம் இந்த விருது வழங்கலை இந்த வருடம் மீண்டும் ஆரம்பித்துள்ளது. பிரதான நூலுக்கான விருது அறிமுக நாவலாசிரியர்களுக்கு மாத்திரமே வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

தனது நாவலுக்கு விருது கிடைத்தமை பெரும் ஆச்சரியகரமானது என ஷெஹான் கருணாதிலக்க கூறியுள்ளார்.

'நீங்கள் ஆங்கிலத்தில் எழுதும் ஒரு இலங்கையராக இருந்தால் இலங்கைக்கு வெளியே நூலை வெளியிடலாம் என எதிர்பார்க்க முடியாது. நான் இந்த நாவலை பூர்த்தி செய்தபோது, அது இலங்கையர்களையும் பெரும்பாலும் இந்தியா, பாகிஸ்தானிலுள்ள வாசகர்களையும் கவரும் என எண்ணினேன். ஆனால் அவற்றுக்கு அப்பால் அது செல்லும் என நிச்சயமாக நான் எண்ணவில்லை' என அவர் தெரிவித்துள்ளார். (த)

## இணையத்தள செய்தியாளர் விவரம் திரட்டுகிறது அரசு

கொழும்பு, ஜூன் 10

வெளிநாடுகளில் இயங்கும் இணையத்தளங்களுக்குத் தகவல்களை வழங்கும் செய்தியாளர்களின் விவரங்களைத் திரட்டுவதற்கான பொறுப்பு இலங்கை இராணுவ அதிகாரியான மேஜர் ஜெனரல் சாந்த திசநாயக்கவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கான உத்தரவை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே நேரடியாக வழங்கியுள்ளார். கஜபா படைப் பிரிவைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் சாந்த திசநாயக்க பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவுக்கு மிகவும் நம்பிக்கைக்குரியவராவார்.

சில காலங்களுக்கு முன்னரே இவர், போர்த் தந்திரோபாயக் கற்கைநெறி ஒன்றை முடித்துக் கொண்டு சீனாவில் இருந்து திரும்பியிருந்தார்.

அதேவேளை, அரச புலனாய்வுச் சேவையின் தலைவர் சந்திரா வாகிஸ்ராவிடமும் இணைய ஊடகவியலாளர்கள் பற்றிய விவரங்களைச் திரட்டி அறிக்கை ஒன்றைத் தயாரிக்கும்படி ஜனாதிபதி மகிந்த உத்தரவிட்டுள்ளார். இதையடுத்து, இணையத் தளங்களுடன் தொடர்புடைய பெருமளவானோரின் விவரங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

அரச அமைச்சர்கள் மற்றும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் தனிப்பட்ட அதிகாரிகளாகப் பணியாற்றுவோரே இணையத் தளங்களுக்குத் தகவல்களை வழங்கி வருவதாக ஏற்கனவே கண்டறியப்பட்டுள்ளது என்று அரச புலனாய்வுச் சேவை அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

இந்த விவரங்கள் அனைத்தும் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.(த)

## சீனா செல்கிறார் ரணில்

கொழும்பு,ஜூன் 10

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க இன்று ஞாயிற்றுக் கிழமை சீனாவுக்குப் பயணம் செய்ய உள்ளார். ரணில் விக்ரமசிங்கவுடன் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் இந்த பயணத்தில் இணைந்து கொள்ளவுள்ளனர்.

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் அழைப்பை அடுத்து இந்தப் பயணம் இடம்பெறுவதாகக் கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன. எதிர்வரும் 16ஆம் திகதி வரை ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் சீனாவில் தங்கியிருப்பார்கள் எனக் குறிப்பிடப்படுகிறது. தலைநகர் பீஜிங், ய்வாங், சங்காய் போன்ற நகரங்களுக்கு பயணம் செய்ய உள் ளனர். சீன கம்யூனிஸ்ட் கட்சியின் சிரேஸ்ட தலைவர்களுடன் ரணில் விக்ரமசிங்க பேச்சு நடத்த உள்ளார். (த)

## இலங்கை விவகாரத்தில் தலையிட அமெ. தூதருக்கு அதிகாரமில்லை

### அரசின் பங்காளிக்கட்சிகள் காட்டம்

கொழும்பு, ஜூன் 10

அமெரிக்காவின் அடிமை இராஜ்ஜியம் அல்ல இலங்கை. அமெரிக்காவின் தாளத்திற்கேற்ப ஆட்டம்போடும் கைப்பொம்மை நாடாக எம்மால் திகழ முடியாது. அதற்கான தேவைப்பாடும் எமக்கில்லை என்று ஆளும் ஐக்கிய மக்கள் சுதந் திரக் கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகளான தேசிய சுதந்திர முன்னணி, ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகள் திட்டவட்டமாக இடித்துரைத்துள்ளன.

போர்க்குற்ற விடயத்திலேயோ அல்லது நல்லிணக்க ஆணைக்குழு விவகாரத்திலேயோ தலையிடும் அதிகாரம் அமெரிக்கத் தூதுவருக்கோ அல்லது அமெரிக்காவுக்கோ கிடையாது என்றும் அக்கட்சிகள் சுட்டிக்காட்டின.

வடக்கில் இராணுவ முகாம்களை நிறுவுவதா அல்லது அகற்றுவதா எனத் தீர்மானம் எடுக்கவேண்டியது எமது அரசே தவிர, அமெரிக்கா அல்ல என்று கூறி, அமெரிக்காவின் செயற்பாடுகளைக் கடுமையாக விமர்சித்துள்ளன மேற்கூறப்பட்ட அரசின் பங்காளிக் கட்சிகள்.

புதிதாக நியமனம் பெற்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராக வரவுள்ள மிச்சேல் சிசன் இலங்கை விவகாரம் தொடர்பில் முக்கிய உரையொன்றை நிகழ்த்தினார். அதில் குறிப்பாக,

* அரசு வடக்கிலுள்ள இராணுவத்தை அகற்ற வேண்டும்.
* வடமாகாண சபைக்கான தேர்தலை அறிவிக்க வேண்டும்.
* யுத்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணை அவசியம். இல்லையேல் நாட்டில் நல்லிணக்கம் ஏற்படாது.
* இலங்கையில் மனித உரிமை விவகாரத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பேன் -ஆகிய விடயங்களை உள்ளடக்கியிருந்தார்.

இலங்கை அரசுக்கு அமெரிக்கா கடுமையான அழுத்தங்களைப் பிரயோகித்து வரும் இவ்வேளை யில், புதிதாக நியமனம் பெற்று நாட்டுக்குத் தூதுவராக வரவுள்ள மிச்செல் சிசனின் கருத்துகள் இலங்கை அரசுக்கு கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளன என அறியமுடிகின்றது.

இந்நிலையில், இலங்கைக்கான புதிய அமெரிக்கத் தூதுவர் இலங்கை விவகாரம் தொடர்பில் தெரிவித்துள்ள கருத்துகள் குறித்து ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் முக்கியஸ்தர்கள் கடும் விசனம் அடைந்துள்ளனர். அமெரிக்கத் தூதுவருக்கு இப்படிக் கூறும் அதிகாரம் இல்லை எனவும் இதற்குஎதிராக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (த)

## மூலிகை வனப்பகுதியில் தொடர்ந்தும் தீ

பிபில, நில்கல மூலிகை வனப்பகுதியில் ஏற்பட்ட தீ தொடர்ந்தும் பரவி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பலத்த காற்றின் காரணமாக தீ தொடர்ந்தும் பரவி வருவதாகப் பிரதேசத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்தக் காட்டுப் பிரதேசத்தின்ஒரு பகுதி தீயில் கருகி முற்றாக அழிந்துள்ளது. ஒருவார காலத்துக்கு முன்னதாக நல்வள மூலி கைக் காட்டில் இத் தீ பரவ ஆரம்பித்துள்ளது. இது வரையில் 400 ஏக்கர் வனப் பகுதி தீயினால் அழிவடைந்துள்ளது.

## மீள் நடைமுறைக்கு வருகிறது பிளாஸ்ரிக் கூடைப் பயன்பாடு

கொழும்பு, ஜூன் 10

மரக்கறிகள் மற்றும் பழங்கள் போக்குவரத்தின் போது கட்டாயம் பிளாஸ்ரிக் கூடைகள் பயன்படுத்துவது மீண்டும் நடைமுறைப் படுத்தப்படவுள்ளதாகக் கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

நாளை திங்கட்கிழமை தொடக்கம் இந்த நடவடிக்கையை நடைமுறைப் படுத்த உத்தேசித்துள்ளதாகக் கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சின் செயலாளர் சுனில் எஸ். சிறிசேன தெரிவித்தார்.

முதலில் கொழும்பை அண்டிய பிரதேசங்களில் இந்த நடைமுறையினைப் பழக்கத்துக்குக் கொண்டு வர திட்டமிட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

பிளாஸ்ரிக் கூடைகள் பயன்படுத்துவது தொடர்பில் கடந்த காலங்களில் வர்த்தக நிலையங்கள் பலவற்றில் வியாபாரிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டதாக அமைச்சின் செயலாளர் தெரிவித்தார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சியில் பஸ் விபத்து சாரதி உட்பட நால்வர் காயம்



கிளிநொச்சி, ஜூன்10

கிளிநொச்சி பஸ் நிலையத்திலிருந்து இராமநாதபுரம் நோக்கி வேகமாக பயணித்த தனியார் பஸ் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி மரமொன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் 3.40 மணியளவில் இராமநாதபுரம் பிரதான வீதியில் இடம்பெற்றது. சம்பவத்தில் சாரதி உட்பட நால்வர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (10-6)

# கலாசாரச் சீரழிவுகளைக் கட்டுப்படுத்த மாணவரிடையே விழிப்புணர்வு தேவை

## நடவடிக்கை எடுக்குமாறு அரச அதிபரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 10

*அண்மைக்காலமாக யாழ்.மாவட்டத்தில் இடம்பெற்று வரும் சிறுவர் துஷ்பிரயோகம், கலாசாரச் சீரழிவு நடவடிக்கைகள் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகள் பாடசாலை தோறும் மேற்கொள்ளப்பட வேண்டும்.*

*வலிகாமம் மேற்கு பிரதேச சபைத் தலைவர் திருமதி நா.ஐங்கரன் யாழ்.மாவட்ட அரச அதிபருக்கு இது தொடர்பான கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.*

*இந்தக் கடிதத்தில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-*

அண்மைக்காலமாக தொடர்ச்சியாக பெண்கள் மீதான வல்லுறவு, சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் கலாசார சீரழிவு நடவடிக்கைகள் யாழ்.மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெற்று வருகின்றன.

இது போன்ற சம்பவங்கள் மக்கள் மத்தியில் ஓர் அச்ச உணர்வை ஏற்படுத்தியுள்ளது.

காலத்துக்குக் காலம் தமிழ் மக்கள் மீது இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டே வருகின்றன. கடந்த காலங்களில் கிறீஸ் மனிதன் பிரச்சினை, தற்போது பெண்பிள்ளைகள் மீதான வன்புணர்வு மிகக் கொடூரமான நிலையை ஏற்படுத்தியுள்ளது.

குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவதால் மட்டும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் கிடைத்துவிடமுடியாது. இது தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடுகளை பாடசாலை ரீதியாக சகல பிரதேச செயலகங்களிலும் கடமையாற்றும் சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர், மற்றும் சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் ஆகியோர் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

இனங்களுக்கிடையே நல்லுறவையும் சமாதானத்தையும் மேம்படுத்துவோம் எனப் பேச்சளவில் உள்ள கூற்று உறுதிப்படுத்தப்படவேண்டும்.

வன்முறைச் சம்பவங்கள் தொடர்ச்சியாக விழிப்புணர்வு ஊட்டக்கூடிய வகையில் மாவட்ட ரீதியிலும், பிரதேச ரீதியிலும், அரசியல் மற்றும் அரச அதிகாரிகள் தலைமையில் குழுக்கள் அமைக்க ஏற்பாடு செய்யப்படவேண்டும்.

அத்துடன் வெளிமாவட்டங்களில் இருந்து வியாபார நோக்கத்துக்காக யாழ். மாவட்டத்துக்கு வருபவர்கள் உரிய முறையில் அனுமதி பெறும் ஒரு பொறிமுறையையும் உருவாக்க வேண்டும். - என்றுள்ளது. (ம-14-115)

# இரத்தச் சோகையால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறுவோர் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 10

நிறைந்த சத்துணவு உட்கொள்ளாமல் இரத்தச் சோகை நோயால் பாதிக்கப்பட்ட 164 பேர் கடந்த ஜனவரி மாதம் முதல் மார்ச் மாதம் வரையான காலப் பகுதியில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர். இருவர் உயிரிழந்தும் உள்ளனர்.

இதனைவிட ஏனைய நோய்களால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றவர்களினதும் இறந்தவர்களினதும் விவரங்களை யாழ்.போதனா வைத்தியசாலையின் புள்ளி விவரப் பகுதி தெரிவித்துள்ளது.

இவற்றில் நெருப்பால் ஏற்பட்ட காயங்களால் 64 பேர் சிகிச்சை பெற்றதுடன் 13 பேர் உயிரிழந்தும் உள்ளனர். சிகிச்சை பெற்றவர்களில் அதிகமாக தனக்குத் தானே நெருப்பை மூட்டிக் கொண்டவர்களும் விபத்தால் நெருப்புப் பற்றிக் கொண்டவர்களும் அடங்குவர்.

காசநோயால் பாதிப்படைந்த 59 பேர் சிகிச்சை பெற்றதுடன் 3 பேர் உயிரிழந்துள்ளனர்.

சிகிச்சை பெற்றவர்களில் நீண்ட நாள் இருமலால் பாதிப்படைந்து சளிப் பரிசோதனை மேற்கொள்ளாமல் அசண்டையீனமாக இருந்ததன் காரணமாகவே காசநோயால் பாதிப்படைந்துள்ளனர்.

அல்கஹோல் பாவனையால் ஈரல் கருகி 30 பேர் சிகிச்சை பெற்றதுடன் 3 பேர் உயிரிழந்துள்ளனர். பாதிக்கப்பட்டவர்கள் அதிகமது உட்கொண்டமையே காரணம் எனவும் இவர்கள் அதிகமாக நடுத்தர வயதுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

164 பேர் கடந்த ஜனவரி மாதம் முதல் மார்ச் மாதம் வரையான காலப்பகுதியில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

சத்தான உணவு உட்கொள்ளாமல் இரத்தச்சோகை நோயால் பாதிக்கப்பட்ட 164 பேர் சிகிச்சை பெற்றதுடன் 2பேர் உயிரிழந்துள்ளனர்.

நாய்க்கடிக்கு இலக்காகி 533 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர். பாம்புக் கடிக்கு இலக்காகி 80 பேர் சிகிச்சை பெற்றதுடன் 78 பேர் உயிரிழந்துள்ளனர்.

மஞ்சள்காமாலை நோயால் 9 பேரும் தைபொரஸ்ட் காய்ச்சலால் 69 பேரும் மலேரியா நோயால் 7 பேரும் டெங்குக் காய்ச்சலால் 96 பேர் சிகிச்சை பெற்றதுடன் 9 பேர் உயிரிழந்து உள்ளனர்.

இவர்களை விட 28 பேர் காரணம் தெரியாமல் இறப்பை சந்தித்துள்ளனர் என்றும் புள்ளி விவரம் தெரிவித்துள்ளது. (ம-14)

## நிகழ்வுகள் இன்று

**பரிசில் விழா**

கைதடி யூப்பிற்றர் கல்வி நிலையத்தின் பரிசளிப்பு விழா பிற்பகல் 1.30 மணிக்கு கல்வி நிலைய முதல்வர் சி. மதியழகன் தலைமையிலே கைதடி வடக்கு கயற்ற சிட்டி முருகன் ஆலய கலா மண்டபத்திலே நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் வே.கா. கணபதிப்பிள்ளை கலந்துகொள்வார். (ம-288)

**நூல் வெளியீடு**

மயிலங்கூடலூர் பி.நடராசனின் ''ஈழத்தமிழர் தொன்மையும் வரலாறுகளும்'' எனும் கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா பிற்பகல் 3 மணிக்கு இணுவில் அறிவாலயத்தில் நடைபெறவுள்ளது. யாழ்.பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் நூலின் வெளியீட்டுரையை கீரிமலை நகுலேஸ்வர வித்தியாலய அதிபர் சு.ஸ்ரீகுமரன் நிகழ்த்துவார். (ம-14)

**பணி நயப்பு**

நீர்வேலி தெற்கு முன்னாள் கிராம அலுவலர் சு.சண்முகவடிவேலின் பணி நயப்பு விழாவும், புதிய கிராம அலுவலர் சி.தயாபரனின் வரவேற்பு நிகழ்வும் பிற்பகல் 2 மணிக்கு நீர்வேலி திருமுருகன் மணிமண்டபத்தில் யாழ்.வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.குணநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ம-14)

**பொதுக்கூட்டம்**

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் மாதாந்தப் பொதுக்கூட்டம் இன்று கோப்பாய் வடக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-14)



*அச்சுவேலி பத்தமேனி அருள்மிகு மிட்டிலாங்கூடல் நடராஜ அம்பலவாணர் விநாயகர் ஆலய மகாகும்பாபிஷேகம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. பிரதான கும்பங்கள் வீதியுலாவாக எடுத்துவரப்படுகின்றன. கோபுரத்துக்கு கும்பாபிஷேகம் இடம்பெறுகிறது.*

*(ம)*

# நயினை திருவிழாவை முன்னிட்டு சுகாதார ஏற்பாடுகள் பூர்த்தி

யாழ்ப்பாணம், ஜூன் 10

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த திருவிழாவை முன்னிட்டு புங்குடுதீவு உப அலுவலகம் குறிகாட்டுவான் துறைமுகத்தில் சுகாதார குடிதண்ணீர் மற்றும் தற்காலிக இளைப்பாறும் மண்டபம், மின்சார வசதி, வாகனத்தரிப்பிடங்களை மக்களின் வசதிகள் கருதி உரிய முறையில் அமைத்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருவிழாக் காலத்தில் வர்த்தக நிலையங்களை அமைக்கவுள்ளோர் புங்குடுதீவு, நயினாதீவு உப அலுவலகங்களில் அதற்கான வியாபார உரிமங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

அனுமதிப் பத்திரமின்றி வியாபாரம் செய்பவர்கள் மீது சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று வேலணை பிரதேச சபைத் தலைவர் எஸ்.சிவராஜா தெரிவித்துள்ளார். (ம-7)

# இடிகுண்டு அபிவிருத்திக்கு ஒன்றிணைய அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜூன் 10

இடிகுண்டு அபிவிருத்தித் திட்டத்துக்கு இரண்டு தடவைகள் நிதி ஒதுக்கித் திட்டம் நிறைவேறாது பின் தள்ளப்பட்டுள்ளது.

தற்போது 'சொண்ட்' நிறுவனம் நிதி வழங்கி வந்த வாய்ப்புக்கு வடக்கு நீர்ப்பாசன பொறியியலாளர், வலி. தென்மேற்கு பிரதேச சபை சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் என்பன ஒருங்கிணைந்து விரைந்து செயற்பட வேண்டும்.

இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார் யாழ். மாவட்ட தேசவள விவசாயிகள் சம்மேளன தலைவர் க.முதலியார். கட்டுடை இடிகுண்டு அபிவிருத்தி தொடர்பான அபிவிருத்தி கூட்டம் இடம்பெற்று ஒரு மாதம் முடிவுற்றுள்ளது.

இடிகுண்டு உட்கட்டுமான அபிவிருத்திக்கு இன்னும் நான்கு மாதங்கள் மட்டுமே உள்ளன. பின்னர் பெரும்போக மழை வந்துவிடும்.

'சொண்ட்' நிறுவனம் நிதி வழங்க வந்த வாய்ப்பை பயன்படுத்தி ஆபத்தான இடிகுண்டை பாதுகாப்பதுடன் விவசாய மற்றும் தேவைகளுக்கு ஏற்ற வகையில் விரைந்து புனரமைக்க வேண்டியது அவசியம். எனவே விடயத்தில் வலி. தென்மேற்கு பிரதேச சபை தலைவர் அ.ஜெபநேசன் அக்கறையுடன் செயற்பட வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-50)

# 752 வழித் தடத்தில் விரைவில் சிற்றூர்திச் சேவைக்கு ஏற்பாடு

வடமராட்சி, ஜூன் 10

பருத்தித்துறையிலிருந்து வல்வெட்டித்துறை, தொண்டமனாறு, இடைக்காடு, தம்பாலை, அச்சுவேலியூடாக யாழ்ப்பாணத்துக்கு 752 ஆம் இலக்க வழித் தடத்தில் பஸ்சேவை ஒன்றை வடமராட்சி சிற்றூர்திச் சேவைச் சங்கம் விரைவில் ஆரம்பிக்கவுள்ளது.

போர் நடைபெற்ற காலத்திலிருந்து இன்றுவரை இப் பாதையில் இ.போ.சபையோ தனியார் மினிபஸ் சங்கமோ பஸ் சேவைகளை நடத்தவில்லை. இதனால் வடமராட்சியின் கரையோரப் பகுதி மக்களும், வலிகாமம் கிழக்கின் அச்சுவேலி, பத்தமேனி, தம்பாலை, இடைக்காடு, வளலாய் ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்களும் போக்குவரத்துக்களை மேற்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வந்தார்கள்.

யாழ். குடாநாடு வழமைக்குத் திரும்பிய பின்னர் இப்பாதை ஊடாக பஸ் சேவை ஒன்றை ஆரம்பிக்குமாறு இப்பாதையில் பயணிக்கும் பயணிகள் சார்பாக இ.போ.ச. தனியார் சங்கம் ஆகியவற்றிடம் கோரிக்கைகள் விடப்பட்டிருந்தன.

இதே கோரிக்கையை வல்வெட்டித்துறை நகர சபையும் சபையில் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி விடுத்திருந்தது.

போதிய பஸ்கள் இன்மையால் பருத்தித்துறை இ.போ.ச டிப்போவால் இந்தப் பாதையில் பஸ் சேவையை ஆரம்பிக்க முடியாத நிலையில், இப்பாதை ஊடாக பஸ்சேவை ஒன்றை உடனடியாக ஆரம்பிக்குமாறு யாழ். அரச அதிபர் வடமராட்சி சிற்றூர்திச் சங்கத்துக்குப் பணித்துள்ளார்.

பருத்தித்துறையிலிருந்து வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி ஊடாக யாழ்ப்பாணத்துக்கு 751 ஆம் இலக்க வழித்தடங்களில் சேவையில் ஈடுபடும் மினிபஸ்களில் இரு பஸ்களை சுழற்சி முறையில் காலைமுதல் மாலைவரை இரு வழிகளிலும் தொடர்ச்சியாக சேவையில் ஈடுபடுத்துமாறு யாழ். அரச அதிபர் தெரிவித்துள்ளார். (ம-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொற்றா நோய்களைக் கண்டறிய கட்டுநாயக்காவில் புதிய பிரிவு

கொழும்பு,ஜூன் 10

புலம்பெயர்ந்த இலங்கைத் தொழிலாளர்கள் மத்தியில் காணப்படக்கூடிய தொற்றா நோய்களைக் கண்டறிவதற்காக கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் விசேட மருத்துவ பிரிவொன்று ஸ்தாபிக்கப்படவுள்ளது.

விமான நிலையத்தில் ஏற்கனவே உள்ள மருத்துவப் பிரிவுக்கு மேலதிகமாக இந்த விசேட பிரிவு அமைக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சின் பேச்சாளர் யூ.ஜி. வன்னிநாயக்க கூறினார்.

''ஏற்கனவே, தொற்று நோய்களைக் கண்காணிப்பதற்கான பிரிவொன்று விமான நிலையத்தில் உள்ளது. இந்தச் சேவையை நீடிப்பதற்காக நாம் தொற்றா நோய்களுக்கானபிரிவொன்றை ஆரம்பித்துள்ளோம்'' என அவர் கூறினார். (த)

# இலங்கை அகதிகள் மூவர் ஆஸ்திரேலியாவில் கைது

கான்பரா,ஜூன் 10

இலங்கை அகதிகள் மூவர் ஆஸ்திரேலியாவில் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆஸ்திரேலியாவுக்கான பாதுகாப்பு அச்சுறுத்தல் தொடர்பில் உளவுத்துறை மேற்கொண்ட நடவடிக்கைகளின் போதே இந்த மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில்ஒருபெண்ணும் இரண்டு ஆண்களும் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மெல்பேர்ன் மற்றும் சிட்னி நகரங்களில் வைத்து இரு ஆண்களும் பேர்த் நகரத்தில் வைத்துப் பெண்ணும் கைது செய்யப்பட்டுள்ளதாக உளவுத்துறை தெரிவித்துள்ளது.

இந்த மூன்று நபர்களும் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்ட அதேவேளை ஆஸ்திரேலியாவில் ஏற்கனவே 51 பேர் தடுப்புக் காவலில் உள்ளனர். இவர்களை மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்பும் பட்சத்தில் அவர்கள் ஆபத்துக்களை சந்திக்கக் கூடும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (த)

## பொன்சேகாவின் பாதுகாப்புக்கு...

01↘ டுள்ளது. எதிர்க்கட்சிகள் கொண்டு வரவிருந்த பொன்சேகாவின் உரிமைகளை மீள வழங்குமாறு கோரும் நாடாளுமன்ற யோசனையைப் பொன்சேகா எதிர்த்தமையானது அவரது சிறந்த நன்னடத்தை எனக் கருதியே இந்தப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. (த)

## அகதிகள் கேரளா...

01↘ ஸாரினால் கண்டுபிடிக்கப்படாமல் இருப்பதற்கு வாய்ப்பில்லை. கேரளாவுக்கு அகதிகள் செல்வதற்குத் தமிழகப் பொலிஸார் அனுமதிக்கிறார்கள் எனத் திடமாக நம்புகிறோம்' என புலனாய்வுப் பணியக சிரேஷ்ட அதிகாரி ஒருவர் கூறினார்.

இலங்கை அகதிகளைக் கேரளக் கரையோரத்திலிருந்து ஆஸ்திரேலியாவுக்குச் சட்டவிரோதமாக அழைத்துச் செல்லும் குழுவைச் சேர்ந்தவர் எனக் கூறப்படும் கண்டியைச் சேர்ந்த செந்தூரன் (வயது-38) என்பவரை இந்திய புலனாய்வுப் பணியக அதிகாரிகள் விசாரித்ததன் பின்னர், இந்தச் சந்தேகம் மேலும் அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

'இந்த விடயம் குறித்து நாம் தமிழகப் பொலிஸாருக்குத் தெரிவித்துள்ளோம். தமிழகப் புலனாய்வுப் பிரிவின் கண்காணிப்புக்கு அகப்படாமல் இந்த அகதிகள் கேரளாவுக்கு வர முடியும் என நாம் நம்பமுடியாது' என இந்திய மத்திய புலனாய்வுப் பிரிவு அதிகாரி தெரிவித்தார்.

கடந்தவாரம் கேரளாவிலிருந்து சட்டவிரோதமாக படகுகள் மூலம் பயணம் செய்ய முயன்றதாக கூறப்படும் 151 இலங்கை அகதிகளை கேரளப் பொலிஸார் கைது செய்தமை குறிப்பிடத்தக்கது. (த)

## விகாரைகள் அமைப்...

01↘ அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த காலங்களில் இடம்பெற்ற சம்பவங்களால் வடக்கு மற்றும் கிழக்குப் பிராந்தியங்களில் உள்ள கிராமங்களில் அதிக அளவிலான பௌத்த விகாரைகளைத் தரிசிக்க முடியாத நிலைமை இருந்தது. அத்துடன் அவை சேதமடைந்த நிலையிலும் இருந்தன.

இந்த நிலை இராணுவத்தினரின் முயற்சியினால் மாற்றப்பட்டது. இப்போது அவற்றை நாங்கள் மரபுரிமையுடன் பாதுகாக்கும் நடவடிக்கைகளை எவராலும் தடுக்க முடியாது. தற்போது அவை புனரமைக்கப்பட்டுவருகின்றன.

அதற்காக ஏற்படும் எந்த விதமான சவால்களையும் நாம் எதிர்கொள்வோம். குறிப்பாகப் பௌத்தன் என்ற முறையில் விகாரைகளைக் கட்டியெழுப்புவதற்கான சகல நடவடிக்கைகளையும் என்னால் மேற்கொள்ள முடியும்.

அரசின் இந்த நடவடிக்கைகளுக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும். இதன் மூலம் எமது மரபுரிமைகளை நாங்கள் பாதுகாக்க முடியும்-என்றார் அவர். (த)

## நவநீதம்பிள்ளை மீது இலங்கை...

01↘ சுக்கு இல்லை என அந்த அமைச்சின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்டமைகுறித்து மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் உத்தியோகஸ்தர்களுக்கு அதன் ஆசிய பசுபிக் பிரிவின் தலைவர் ரோய் மங்கோவன் அனுப்பிய மின்னஞ்சல் குறித்தே அவர் இவ்வாறு கூறினார்.

இதேவேளை, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கே.அமுனுகம இது தொடர்பாக கூறுகையில், மங்கோவனால் அனுப்பப்பட்ட கடிதத்தின் உண்மைத் தன்மை மற்றும் தாக்கங்கள் குறித்து வெளிவிவகார அமைச்சு ஆராய்வதாகவும் இது தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை குறித்து தீர்மானம் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார்.

இலங்கைக்கு எதிரான அமெரிக்காவின்பிரேரணையை நிறைவேற்றுவதில் மிதமிஞ்சிய ஆதரவை வழங்கியதன் மூலம், தனக்கு வழங்கப்பட்ட ஆணையை நவநீதம்பிள்ளை மீறிவிட்டார் என ஐ.நாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிட பிரதிநிதி தமரா குணநாயகம் கடிதமொன்றில் தெரிவித்துள்ள நிலையில் வெளிவிவகார அமைச்சு மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டவுடன் மங்கோவன் எழுதிய கடிதத்தில், இத்தீர்மானத்தை நிறைவேற்றுவதற்காக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலக முக்கிய உறுப்பினர்கள் பலர் வழங்கிய பங்களிப்புகளுக்காகப் பாராட்டு தெரிவித்திருந்தார்.

இந்தக் கடிதத்தை சுட்டிக்காட்டிய தமரா குணநாயகம், ஐ.நா. பொதுசபையின் 48/148 தீர்மானத்தால் மனித உரிமைகள் ஆணையாளருக்கு வழங்கப்பட்ட பணியாணைக்கு முரணாக ஆணையாளர் நவநீதம்பிள்ளை நடந்ததால் உருவாகியுள்ள நிலைமைக்கு விளக்கம் அளிக்கும்படி கோரியிருந்தார். (த)

## மாதகல் மேற்குக்....

01↘ கடற் பகுதியிலேயே தொழில் செய்யத் தடைசெய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பௌத்த விகாரை அமைக்கப்பட்டுள்ள பகுதியைப் புனிதப் பிரதேசமாக மாற்றும் நடவடிக்கையில் கடற்படையினர் ஈடுபட்டுள்ளதாகவும் கடற்றொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாகவே கடற்றொழில் செய்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் கூறுகின்றனர். பௌத்த விகாரையில் நின்று கடலைப் பார்க்கும் போது கடல் தெரியும் தூரம் வரை கடற்றொழில் செய்ய முடியாது என கடற்படை புதிய நடைமுறையை கொண்டுவந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இதன் காரணமாக வீச்சுவலைத் தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள சுமார் 30க்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு வருமான இழப்பு ஏற்பட்டுள்ளதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

வீச்சு வலைத் தொழிலுக்கு ஏற்ற இடங்களில் ஒன்றாகிய மாதகல் மேற்குப் பகுதியில் கடற்றொழில் செய்வதற்குக் கடற்படை அனுமதி மறுத்துள்ளமையானது அந்தப் பகுதி மீனவர்களின் வாழ்வாதாரத்தை சீரழிக்கும் செயலாகும் என வடமாகாண கடற்றொழிலாளர்களின் கூட்டமைப்பின் தலைவர் எஸ்.தவரட்ணம், மாதகல் கிராமிய கடற்றொழில் சங்க தலைவர் என்.சுப்பிரமணியம் ஆகியோர் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை கடந்த வைகாசிப் பௌர்ணமி தினத்தன்று தென்னிலங்கையிலிருந்து சுமார் 15க்கும் மேற்பட்ட பஸ்களில் வந்து இறங்கிய தென்னிலங்கை மக்கள் மாதகல் மேற்கில் அமைக்கப்பட்டு வரும் விகாரையில் சமய வழிபாடுகளை மேற்கொண்டுள்ளனர். அத்துடன் கடற்கரையோரமுள்ள மீனவர்களுக்கான இளைப்பாறும் மண்டபம் உள்ளிட்ட பொது இடங்களில் அவர்கள் தங்கியிருந்து சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த-3)

## போர்க் குற்ற ஆதாரங்கள்...

01↘ துள்ளார். இறுதிப் போரின் போது இலங்கைப் படைத்தரப்பினரால் மேற்கொள்ளப்பட்ட சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமானச் சட்டங்களுக்கு எதிரான போர் மீறல்கள் தொடர்பில் தமக்கு புதிய வீடியோ மற்றும் புகைப்பட ஆதாரங்கள் கிடைத்துள்ளதாக லண்டனில் இருந்து வெளியாகும் 'தி இன்டிபென்டன்ட்' பத்திரிகை கடந்த 07ஆம் திகதி செய்தி வெளியிட்டிருந்ததுடன், அது தொடர்பான ஆதாரங்களையும் வெளியிட்டிருந்தது.

தமிழ் மக்கள் நீதிக்குப் புறம்பான வகையில் எந்தளவுக்குச் சித்திரவதை செய்யப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என்பதை இந்த ஆதாரங்கள் வெளிப்படுத்துகின்றன என இந்த ஊடகம் சுட்டிக்காட்டியிருந்தது.

இந்த நிலையில், இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ லண்டனுக்குப் பயணம் செய்திருந்த வேளையில் அவருக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் நோக்குடன் பரப்புரைகளை மேற்கொள்வதற்காக இந்த வீடியோக்கள்,புகைப்படங்கள் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் பந்துல ஜயசேகர கூறியுள்ளார்.

அத்துடன், இறுதிக்கட்டப் போரின் போது தமிழ் மக்கள் மீது படைத்தரப்பினர் தாக்குதல்களை மேற்கொண்டதாகக் காட்டி இலங்கை அரசுக்கும், படைத்தரப்பினருக்கும் களங்கத்தை ஏற்படுத்தும் நோக்குடன் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களினால் இத்தகைய வீடியோக்கள் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டு வருவதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இத்தகைய போலியான வீடியோக் காட்சிகளைத் தயாரித்து வெளியிடுவதிலும், பரப்புரைகளை மேற்கொள்வதிலும் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் நிபுணத்துவம் பெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது இலங்கைப் படைத்தரப்பினரால் போர்க்குற்றங்களும், மனித உரிமை மீறல்களும் மேற்கொள்ளப்பட்டிருந்தமையை ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் நியமித்த நிபுணர்கள் குழு உறுதிப்படுத்தியிருந்தது.

அத்துடன், இப்போரின் போது இருதரப்பினராலும் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சுயாதீனமான சர்வதேச விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என ஐ.நா நிபுணர்கள் குழு வலியுறுத்திருந்தது. அதேவேளை, இலங்கைப் படைத்தரப்பினரால் மேற்கொள்ளப்பட்ட இந்தப் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச மனித உரிமை அமைப்புகளும், சனல் 4 தொலைக்காட்சியும் ஆதாரங்களை வெளியிட்டிருந்தன.

இந்த ஆதாரங்கள் உண்மையானவை என ஐ.நாவின் தடயவியல் நிபுணர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர். ஆனால் இந்த ஆதாரங்கள் எல்லாம் போலியானவை என்றும், உண்மைக்குப் புறம்பானவை என்றும் இலங்கை அரசு தொடர்ச்சியாக மறுத்திருந்தது.

அதனைப் போன்றே 'இன்டிபென்டன்ட்' பத்திரிகை கடந்த 07ஆம் திகதி வெளியிட்டிருந்த புதிய போர்க்குற்ற ஆதாரங்களும் உண்மைக்குப் புறம்பானவை என வழமை போல இலங்கை மறுத்துள்ளது. (த)

## வவுனியா பட்டதாரிகள்...

01↘ கிளிநொச்சி மாவட்டங்களிலும் நிறைவுபெற்றுள்ளதுடன் முல்லைத்தீவு மாவட்டத்தில் நாளையும், நாளை மறுதினமும் நடைபெறவுள்ளன. ஆனால் வவுனியா மாவட்டத்தில் இதுவரை எந்தவித அறிவித்தல்களும் வழங்கப்படாமையானது அதிகாரிகளின் அசமந்தப் போக்கா? அல்லது ஏதேனும் பின்புலங்கள் உண்டா? என்ற கேள்வியை எழுப்புகிறது. இதுவரை இதுகுறித்த எந்தவித அறிவித்தல்களும் வழங்கப்படாததை இட்டு நாம் கவலையடைகின்றோம்.

பல்வேறு கஷ்டங்கள், இடையூறுகள் மத்தியில் 4 வருட பட்டப்படிப்பை ஆறு, ஏழு வருட காலத்தில் தாமதமாக நிறைவு செய்து நீண்டகாலமாக வேலையற்று இருக்கும் நிலையில் உள்ள பட்டதாரிகளின் கஷ்டங்களையும் எதிர்காலத்தையும் கருத்தில் கொண்டு நேர்முகப் பரீட்சையை மிக விரைவாக நடத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நடைபெறும் நேர்முகப் பரீட்சையில் எதுவித அரசியல் தலையீடுகளோ, பாரபட்சங்களோ காட்டப்படாமல் பட்டதாரிகள் எனும் ஒரே பார்வையில் வேலைவாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும். இதில் அரசியல் தலையீடுகளுக்கு அமைய பாரபட்சமான முறையில் நியமனம் இடம்பெறுமாயின் அனைவரும் அணிதிரண்டு நியாயம் வேண்டிப் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டிய நிலை ஏற்படும். - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5-400)

## பட்டதாரிப் பயிலுநர்...

01↘ பும் பட்டியலில் உள்ளவர்களுக்கு உடனடியாக நேர்முகத் தேர்வு வைக்கும்படி முல்லை மாவட்ட அரச அதிபர் ந.வேதநாயகன் மிரட்டப்பட்டார் என்றும் உதயன் அறிந்தது.

நேற்றைய நேர்முகத் தேர்வுக்கு 50 பேர் அழைக்கப்பட்டிருந்த போதும் 40 பேர் வரையிலானோர் கலந்து கொண்டிருந்தனர். ஏனையோர் திடீர் அழைப்புக் காரணமாகப் பங்கேற்க முடியாமல் போய்விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

நாடளாவிய ரீதியில் இலங்கை அரச சேவைக்கு ஆள்சேர்க்கும் முகமாக வேலையற்ற பட்டதாரிகளுக்கு பட்டதாரிப் பயிலுநர் நியமனம் வழங்கபடுவதற்கான நேர்முகத் தேர்வு அந்தந்த மாவட்டச் செயலகங்களில் நடைபெற்று வருகின்றன.

இதன் அடிப்படையில் முல்லைத்தீவு மாவட்ட பட்டதாரிகளுக்கான நேர்முகத் தேர்வு நாளை திங்கட்கிழமையும், நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமையும் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளதாக அரச அதிபர் ஊடாக சகல பட்டதாரிகளுக்கும் கடிதம் அனுப்பப்பட்டிருந்தது.

இந்த நிலையில் நேற்றைய தினம் ஒரு தொகுதி பட்டதாரிகளுக்கு இரகசியமாக நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டதை அடுத்து ஏனைய பட்டதாரிகள் கதிகலங்கிப் போயினர். என்ன நடக்கிறது என்று அறிய அங்கும் இங்குமாக அலைந்து அந்தரப்பட்டனர்.

அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் முல்லைத்தீவு மாவட்ட அமைப்பாளர் எனக் கூறிக் கொள்ளும் விஜிதன் என்பவர் சில பட்டதாரிகளுக்கு தொலைபேசி மூலம் நேற்று முன்தினம் தொடர்பு கொண்டு ''விசேடமாக உங்களுக்கு நேர்முகத் தேர்வு நடைபெறவுள்ளது'' என அறிவித்து அதன்படி நேற்றைய நேர்முகத் தேர்வுக்குச் சமுகமளிக்குமாறு கூறியிருந்தார்.

இந்தப் பட்டியலில் அடங்கியிருந்தவர்கள் மத சார்பு ரீதியில் தெரிவு செய்யப்பட்டிருந்தார்களா என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை. எனினும் ஏனைய பட்டதாரிகள் மத்தியில் அவ்வாறான பலத்த சந்தேகம் நிலவியது.

முல்லைத்தீவு மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர், ஒட்டுசுட்டான் பிரதேச செயலர், ஒட்டுசுட்டான் பிரதேச [illegible] ஆகியோர் நேர்முகத் தேர்வை நடத்தினர்.

அமைச்சர் ரிஷாத் பதியுதீனால் வழங்கப்பட்ட 50 பேர் கொண்ட பெயர்ப் பட்டியலுக்கு நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டுள்ளதாகவும், பட்டதாரிகளிடமிருந்து ஆவணங்களின் பிரதிகளை மட்டும் பெற்றுவிட்டு அவர்களைத் திருப்பி அனுப்பியதாகவும் நேர்முகத் தேர்வில் கலந்து கொண்ட பட்டதாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேபோன்றே யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிலும் பட்டதாரி பயிலுநர் நியமனங்களில் அரசியல் புகுந்து விளையாடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. பட்டதாரி நியமனம் வழங்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டு ஒரு தொகுதியினரின் பெயர்கள் அடங்கிய பட்டியல் ஒன்று [illegible] செயலகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் உதயனுக்கு அறிய வந்தது. (உ-த-10-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலை எண்ணெய்க் குதங்களை இந்தியாவிடமிருந்து பறிக்கிறது இலங்கை

கொழும்பு,ஜூன் 10

திருகோணமலையில் லங்கா இந்தியன் எண்ணெய் நிறுவனத்துக்குக் குத்தகைக்கு விடப்பட்டுள்ள99எண்ணெய்க் குதங்களையும் இலங்கை அரசு மீளப்பெறவுள்ளதாக உயர்மட்ட வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

திருகோணமலையில் அமைந்துள்ள இந்த எண்ணெய்க் குதங்களை கடந்த 2002ஆம் ஆண்டு இலங்கைப் பெற்றோலிய அமைச்சு, 33 ஆண்டு குத்தகைக்கு லங்கா இந்தியன் எண்ணெய் நிறுவனத்துக்கு வழங்கியிருந்தது.

ஐ.தே.க ஆட்சிக்காலத்தில் செய்து கொள்ளப்பட்ட இந்த உடன்பாட்டை நிறுத்தி விட்டு, எண்ணெய்க் குதங்களை மீளப்பெறுவது குறித்து இலங்கை அரசு ஏற்கனவே சட்ட ஆலோசனைகளில் ஈடுபட்டுள்ளது.

இந்த எண்ணெய்க் குதங்கள் அமைந்துள்ள காணி திருகோணமலை அரசஅதிபர் செயலகத்துடன் இணைந்தது. தமக்குச் சொந்தமாக இல்லாத காணியில் அமைந்துள்ள எண்ணெய்க் குதங்களைக் குத்தகைக்கு விடும் உடன்பாட்டில் இலங்கைப் பெற்றோலியத்துறை அமைச்சு கையெழுத்திட முடியாது என்று இலங்கை அரசின் உயர்மட்ட அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

இதனால் இந்த உடன்பாட்டை நிறுத்தி விட்டு எண்ணெய்க் குதங்களை மீளப் பெறுவது குறித்து ஆராயப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.அத்துடன் இந்த எண்ணெய்க் குதங்கள் பொருத்தமான முறையில் வழங்கப்படவில்லை என்றும் பெற்றோலியத் துறை அமைச்சு கருதுகிறது.

அதேவேளை, இந்த விவகாரம் தொடர்பாக தாம் எதையும் அறியவில்லை என்று லங்கா இந்தியன் எண்ணெய் நிறுவன முகாமைத்துவப் பணிப்பாளர் கூறியுள்ளார்.

புதிய முன்னேற்றங்கள் குறித்து எமக்குத் தகவல் தரப்படவில்லை. நாம் ஏற்கனவே இந்த எண்ணெய்க் குதங்களை புதுப்பிக்கப் பெருமளவு பணத்தைச் செலவிட்டுள்ளோம். என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதற்காக, லங்கா இந்தியன் எண்ணெய் நிறுவனம் சுமார் 12 மில்லியன் டொலர் வரை செலவிட்டுள்ளதாக தெரியவருகிறது. (த)

## மர்மப் பொருள் குறித்து அதிக அவதானம் தேவை

### பொலிஸார் கோரிக்கை

கொழும்பு,ஜூன் 10

வடக்கு-கிழக்கில் சந்தேகத்திற்கிடமான, மர்மப் பொருள்கள் குறித்துப் பெற்றோரும், பெரியோரும் அவதானமாக இருக்க வேண்டும் எனவும், அவர்கள் தமது குழந்தைகளை விழிப்புடன் கண்காணிக்க வேண்டும் எனவும் பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அண்மைக் காலங்களில் வடக்கு-கிழக்கில் ஆறு, குளம், களப்பு, கடற்கரை, காட்டுப் பகுதிகளில் மர்ம பொருள்கள் வெடித்ததனால் பலர் உயிரிழந்ததுடன் சிலர் காயமடைந்த சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

சந்தேகத்துக்கு இடமான பொருள்களைக் கையிலெடுத்துச் சோதனைக்குட்படுத்துகின்றமையே இவ்வாறான விபத்துக்களுக்கு காரணமாக அமைந்துள்ளன. ஏற்கனவே அவ்வாறான மர்மப் பொருள்கள் தொடர்பில் பொதுமக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும்.

அத்தோடு அவ்வாறான பொருள்களை கண்டால் உடனடியாக அருகிலுள்ள பொலிஸ் தலைமையகத்துக்கோ அல்லது படைத்தளங்களுக்கோ தெரியப்படுத்த வேண்டும் என்று பொலிஸ் பேச்சாளர் அஜித் றோகன் கேட்டுள்ளார்.

இவ்வாறான மர்மப் பொருள்கள் வெடித்ததில் அதிகமாகச் சிறுவர்களே பலியாகியுள்ளனர். ஆகையால் பெற்றோர்களும் ஆசிரியர்களும் இந்த விடயம் தொடர்பாக சிறுவர்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். அதாவது சிறுவர்கள் அவ்வாறான மர்ம பொருள்களைக் கண்டால் உடனடியாகத் தமது பெற்றோருக்குத் தெரியப்படுத்துமாறு அவர்களை வலியுறுத்த வேண்டும் எனவும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (த)

## மழலைகள் விழா

யாழ்ப்பாணம்,ஜூன் 10

வலி.மேற்குப் பிரதேச சங்கானைக் கல்விக்கோட்ட முன்பள்ளிச் சிறார்களின் மழலைகள் விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு யாழ். வட்டு. இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

ஆசிரியர் சங்கத் தலைவி திருமதி சத்தியசீலன் சிவரஞ்சினி தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தேசிய கல்வியியற் கல்லூரி இணைப்பாளர் பா.தனபாலன் கலந்து கொள்வார். (16)

## அடுத்த ஆண்டில் ஜனாதிபதித் தேர்தல்

### ஆராய்கிறார் மஹிந்த

கொழும்பு,ஜூன் 10

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தற்போதைய பதவிக் காலம் முடிவடைவதற்கு முன்னர் அடுத்த ஆண்டில் திடீர் ஜனாதிபதித் தேர்தலொன்றை நடத்துவது குறித்து அரசின் கவனம் திரும்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைய ஓகஸ்ட் மாதத்தில் கலைக்கப்படவுள்ள வடமத்திய மற்றும் சப்பிரகமுவ மாகாண சபைகளின் தேர்தல்கள் நடத்தி முடிக்கப்பட்டதும் 2013 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதமளவில் அனைத்து மாகாண சபைகளுக்குமான தேர்தலை நடத்தி விட்டுப் பின்னர் திடீர் ஜனாதிபதித் தேர்தலொன்றை அறிவிப்பது தொடர்பில் அரசின் கவனம் திரும்பியுள்ளதாகக் கூறப்படுகிறது.

கடந்த தினங்களில் இது தொடர்பான சட்ட ஆலோசனைகளை ஜனாதிபதி பெற்றுக்கொண்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

18 ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு அமைய முதல் தடவை ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டு நான்கு ஆண்டுகள் கடந்த பின்னர் இரண்டாவது தடவை ஜனாதிபதித் தேர்தலை அறிவிக்க ஜனாதிபதிக்கு அதிகாரம் உள்ளது மூன்றாவது தடவை ஜனாதிபதித் தேர்தலை அறிவிக்கும் காலவரையறை அதில் உள்ளடக்கப்படவில்லை என்பதால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஜனாதிபதித் தேர்தலை அறிவிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்குச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சட்டவல்லுனர்களின் இந்த சட்ட ஆலோசனைகளைப் பெற்றுக்கொண்டுள்ளதன் பின்னரே ஜனாதிபதித் தேர்தல் முடிவு பற்றி ஜனாதிபதி முடிவு எடுத்துள்ளதாகவும் தெரியவருகின்றது. (த)

## தெஹிவளையில் மிருகங்களின் தலைகள் மாயம்

கொழும்பு, ஜூன் 10

தெஹிவளையிலுள்ள தேசிய மிருகக் காட்சிசாலையின் அதிகுளிரூட்டிகளில் வைக்கப்பட்டிருந்த சிங்கம், ஜாகுவார், மற்றும் சிறுத்தை ஆகிய மிருகங்களின் தலைகள் காணாமற் போயுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தி வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் தலைகள் காணாமற்போனதை தேசிய மிருகக் காட்சி சாலையின் பணிப்பாளர் பஷ்வர குணரட்ன உறுதிப்படுத்தி உள்ளார்.

ஊழியர் ஒருவரிடமிருந்து இது தொடர்பான தகவல் கிடைத்தது. நான் உடனடியாக செயற்பட்டு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளேன். இவ்விடயத்தை ஆராய்வதற்காக அமைச்சும் தனியான பிரிவொன்றை செயற்படுத்தி உள்ளது என அவர் கூறினார்.

உடனடிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக மிருகக் காட்சிசாலையில் ஊழியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இது தொடர்பாக நாம் மேலதிக விசாரணை நடத்தி எவ்வளவு காலமாக இத்தகைய நடவடிக்கை இடம்பெறுகிறது என்பதை அறிவதுடன் காணாமற் போன பொருள்களை கண்டுபிடிக்க விரும்புகிறோம் எனவும் அவர் தெரிவித்தார்.

## தமிழ் மக்களுக்கு அரசியல் கைதிகள் அவசர கடிதம்

கொழும்பு, ஜூன் 10

தமது விடுதலையை வலியுறுத்தி தமிழ் மக்கள் ஒன்று திரண்டு ஆதரவு வழங்க வேண்டும் என தமிழ் அரசியல் கைதிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பொது அமைப்புகள், பல்கலைக்கழகங்கள், வர்த்தக சம்மேளனங்கள், மனித உரிமை அமைப்புக்கள் மற்றும் பொது அமைப்புகள் ஊடாக தமிழ் மக்கள் அரசியல் கட்சிகளுடன் ஒன்று திரண்டு தமது விடுதலைக்காக குரல் கொடுக்க வேண்டும் என கைதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பிலான கடிதம் ஒன்றை நீண்ட நாள்களாக சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகள் தமிழ் மக்களுக்கு எழுதியுள்ளனர். நீண்டகாலமாக எதுவித விசாரணையும் இன்றியும் காரணம் இன்றியும் தடுத்து வைத்திருக்கும் எம்மை விடுதலை செய்யக்கோரி பொறுப்பு வாய்ந்த அமைப்புகள் ஊடாக சாத்வீக வழியில் போராட வேண்டும் என அரசியல் கைதிகள் தமது கோரிக்கையை தமிழ் மக்கள் மத்தியில் முன்வைத்துள்ளனர். (10)

## மலையக சிறார்களிடத்தே அதிகளவு போசாக்கின்மை

கொழும்பு, ஜூன் 10

போஷாக்கு குறைவான சிறுவர்களின் எண்ணிக்கையில் மலையக சிறார்களின் பங்கே அதிகளவில் காணப்படுவதாக குழந்தைகள் மருத்துவம் தொடர்பான நிபுணரும் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் முன்னாள் தலைவருமான பேராசிரியர் ஹரேந்திர டி சில்வா கூறியுள்ளார்.

மலையக சிறார்களிடத்தில் காணப்படும் அளவுக்கதிகமான போஷாக்கின்மை பிரச்சினைக்கு அங்கு எடை குறைந்த குழந்தைகளின் பிறப்பு வீதம் அதிகளவில் இருப்பது முக்கிய காரணம் என்றும் அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

தேசிய மட்டத்தில் 20 வீதக்கும் அதிகமாக இருக்கின்ற வளர்ச்சி குன்றிய சிறார்களின் எண்ணிக்கை மலையக தோட்டப்புறங்களில் 32 வீதமாக காணப்படுவதாகவும் தெரிவித்துள்ள பேராசிரியர் ஹரேந்திர டி சில்வா, இந்த நிலைமையே பல ஆண்டுகளாக நீடிப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

தோட்டப் புறங்களில் நல்ல, சத்துள்ள உணவு கிடைப்பதற்கான வழிவகைகளை உத்தரவாதப்படுத்தக் கூடிய உணவுப் பாதுகாப்புக்கான சாத்தியக்கூறுகள் குறைவாகக் காணப்படுகின்றமையே சிறார்களிடத்தில் அதிகரித்த போஷாக்கின்மைக்கு காரணம் என்று ஹரேந்திர டி சில்வா கூறுகிறார்.

தோட்டத் தொழிலில் கிடைக்கும் மாதாந்த வருமானத்தில் நல்ல உணவுக்காக ஒதுக்கும் பணத்தின் அளவு குறைகின்றமையும் வருமானத்தில் பெரும்பகுதி குடிப்பழக்கத்துக்காக செலவிடப்படுகின்றமையும் முக்கிய பிரச்சினைகள் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

தோட்டப்புறங்களில் மக்களின் கல்வியறிவு மட்டத்தை அதிகரிப்பது, குடியிருப்புகளின் தரத்தை முன்னேற்றுவது, மருத்துவ வசதிகளை இலகுவில் அடையக்கூடிய வசதிவாய்ப்புகளை உறுதி செய்வது போன்ற விடயங்களில் அதிகாரிகள் கூடுதல் கவனம் செலுத்துவது அவசியம் என்றும் பேராசிரியர் ஹரேந்திர டி சில்வா தெரிவித்தார். (10)

## தென்மராட்சியிலும் 300 ஏக்கர் நிலம் பறிபோகிறது

511ஆவது படையணியின் தேவைக்கு மட்டுமானது என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பகுதிகளில் நிலைகொண்டுள்ள ஏனைய படையணிகளின் பயன்பாட்டில் உள்ள வேறு காணிகளும் இதே போன்று அபகரிக்கப்பட உள்ளன.

இதேவேளை, இராணுவத்தினர் கோரும் காணிகளில் பெரும்பாலானவற்றை - அரச திணைக்களங்கள், அலுவலகங்கள், கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றுக்கு சொந்தமான காணிகளை - வழங்குவதா இல்லையா என்று இறுதி முடிவு எடுக்கும் அதிகாரத்தையும் அந்தந்த பிரதேச செயலர்களே கொண்டிருக்கின்றனர் என்று கொழும்பிலுள்ள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

''பிரதேச செயலர்கள் உறுதியாக மறுக்கும் பட்சத்தில் படையினரால் அந்தக் காணிகளைப் பெறமுடியாது. சட்டத்தில் அதற்கு இடமில்லை. மீறி காணிகளை அபகரிப்பதாயின் அனைத்தையும் நாடாளுமன்றத்தின் அனுமதியுடன்தான் சுவீகரிக்க முடியும்'' என்று அந்த அதிகாரி தெரிவித்தார். (உ-5-9)

பறிபோகும் 300 ஏக்கர் நிலங்களின் விவரம்

| காணி | அரசு/ தனியார் | பிரதேச செயலகம் | அளவு |
|---|---|---|---|
| மிருசுவில் | அரசு | தென்மராட்சி | 4 ஏக்கர் |
| வரணி | அரசு | தென்மராட்சி | 2.5 ஏக்கர் |
| காப்பத்து | அரசு | தென்மராட்சி | 1.5 ஏக்கர் |
| சம்பாவெளி | அரசு | தென்மராட்சி | 62 ஏக்கர் |
| கோயிலாக்கண்டி | தேசிய வீடமைப்பு அதிகாரசபை | தென்மராட்சி | 6 ஏக்கர் |
| கேரதீவு | அரசு | தென்மராட்சி | 5 ஏக்கர் |
| நாவற்குழி | அரசு | தென்மராட்சி | 1 ஏக்கர் |
| புத்தூர் மேற்கு | அரசு | வலி.கிழக்கு | 3 ஏக்கர் |
| கல்வயல் | அரசு | தென்மராட்சி | 27 பேர்ச் |
| கோயில்குடியிருப்பு | அரசு | தென்மராட்சி | 1 ஏக்கர் |
| மிருசுவில் | தனியார் | தென்மராட்சி | 2.5 ஏக்கர் |
| கொடிகாமம் | தனியார் | தென்மராட்சி | 40 பேர்ச் |
| கொடிகாமம் | தனியார் | தென்மராட்சி | 30 பேர்ச் |
| கொடிகாமம் | மாவீரர் துயிலும் இல்லம் | தென்மராட்சி | 5 ஏக்கர் |
| வரணி | தனியார் | தென்மராட்சி | 6 ஏக்கர் |
| வரணி வடக்கு | தனியார் | தென்மராட்சி | 55 பேர்ச் |
| யாக்காடு | தனியார் | தென்மராட்சி | 1 ஏக்கர் |
| மந்துவில் கிழக்கு | தனியார் | தென்மராட்சி | 80 பேர்ச் |
| இயற்றாலை | தனியார் | தென்மராட்சி | 40 பேர்ச் |
| இயற்றாலை | புலிகளின் முன்னாள் பயிற்சி | தென்மராட்சி | - |
| மாசரி வடக்கு | முகாம் | தென்மராட்சி | 1 ஏக்கர் |
| கெற்பேலி | தனியார் | தென்மராட்சி | 2.5 ஏக்கர் |
| எழுதுமட்டுவாழ் | தனியார் | தென்மராட்சி | 34 ஏக்கர் |
| மிருசுவில் | தனியார் | தென்மராட்சி | 1 ஏக்கர் |
| உசன் | தனியார் | தென்மராட்சி | 1.5 ஏக்கர் |
| எழுதுமட்டுவாழ் | தனியார் | தென்மராட்சி | 1 ஏக்கர் |
| கச்சாய் | தனியார் | தென்மராட்சி | 1 ஏக்கர் |
| ஒட்டுவெளி | தனியார் | தென்மராட்சி | 6 ஏக்கர் |
| எழுதுமட்டுவாழ் | தனியார் | தென்மராட்சி | 10 ஏக்கர் |
| எழுதுமட்டுவாழ் | தனியார் | தென்மராட்சி | 8 ஏக்கர் |
| நுணாவில் | தனியார் | தென்மராட்சி | 4.332 ஹெக்டேயர் |
| நுணாவில் | தனியார் | தென்மராட்சி | - |
| நுணாவில் | தனியார் | தென்மராட்சி | - |
| தனங்களப்பு | தனியார் | தென்மராட்சி | 1ஏக்கர் |
| நுணாவில் மத்தி | தனியார் | தென்மராட்சி | 6 ஏக்கர் 1 றூட் 272 பேர்ச் |
| கைதடி | தனியார் | தென்மராட்சி | 1.5 ஏக்கர் |
| இராமாவில் | தனியார் | தென்மராட்சி | 35 ஏக்கர் |
| கைதடி வடக்கு | தனியார் | தென்மராட்சி | 1 ஏக்கர் |
| இராமாவில் நலன்புரி நிலையம் | தனியார் | தென்மராட்சி | 31 ஏக்கர் |
| தம்பு தோட்டம் | தனியார் | தென்மராட்சி | 34 ஏக்கர் |
| கனகம்புளியடி | தனியார் | தென்மராட்சி | 3 ஏக்கர் |
| மீசாலை | தனியார் | தென்மராட்சி | 3 ஏக்கர் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோட்டார் சைக்கிள் விபத்தில் வயோதிபப் பெண் சாவு

யாழ்ப்பாணம், ஜூன்10

வல்வெட்டித்துறை மயிலியதனைப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 5.30 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வயோதிபப் பெண் மோட்டார் சைக்கிளிலிருந்து தவறி விழுந்து பரிதாபகரமாக உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தில் யாழ்ப்பாணம் பிறவுண் வீதியைச் சேர்ந்த சண்முகசுந்தரம் அன்னபூரணம் (வயது-64) என்பவரே உயிரிழந்தவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது:

யாழ்ப்பாணத்திலிருந்து வல்வெட்டித்துறையிலுள்ள தனது உறவினர் வீட்டுக்கு குறித்த பெண் சென்றுள்ளார். வல்வெட்டித்துறையில் பஸ்ஸை விட்டு இறங்கி தனது உறவினர் ஒருவருடன் மயிலியதனை நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்தார். இந்த நிலையில் மோட்டார் சைக்கிளில் இருந்தவர் தவறி விழுந்துள்ளார்.

தலையில் படுகாயமடைந்த அவர், உடனடியாக வல்வெட்டித்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். எனினும் அங்கு அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

சடலம் பிரேத பரிசோதனையின் பொருட்டு வல்வெட்டித்துறை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

(10-15-8)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

| தோற்றம்: | | மறைவு: |
|---|---|---|
| 03 ★ 12 ★ 1936 |  | 11 ★ 05 ★ 2012 |

### அமரர் சுப்பிரமணியம் செல்லக்கண்டு

"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வாரைப் பொறுத்தல் தலை"

என பொறுமைக்கு இலக்கணமாய் வாழ்ந்து இறைவனடி சேர்ந்த எம் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

34/1, கலைமகள் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம். (19158)(14.34)

குடும்பத்தினர்.

### மணமகள் தேவை

இந்து வேளாளர், 1981 புனர்பூசம் 2ஆம் பாதம், UK PR. 1975 பரணி நட்சத்திரம் UK Citizen உடைய மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு
UK - 00447831040046
(19171)(14.34)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் செல்லையா மகேஸ்வரன் (ஜப்பான்)

| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 22★11★1959 | 23★05★2011 |

ஆண்டு ஒன்று ஆன போதும்
ஆறவில்லை எம் துயரம்
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவலைகள் - எம்
நெஞ்சை விட்டு அகலாது

அன்னாரின் முதலாம் ஆண்டு நிறைவையொட்டி அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

கன்னாதிட்டிச் சந்தி
(பாரத் ஸ்ரூடியோ லேன்)
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (19167)(14.34)

குடும்பத்தினர்.


## Diploma in Mobile Phone Repairing

(சகலவகையான கைத்தொலைபேசிகளையும் மிகக்குறுகியகாலத்தில் நீங்களே திருத்துவதற்கான சுயதொழில் வாய்ப்பு கற்கைநெறி)

## Mobile phone repairing Service Course

Learn from Professional Industry Experts

- How to Repair ?
- How to survive in Repair Business ?
- How to get jobs within 3 months ?
- How to Earn Money ?
- How To Create your own Service centre ?

100% JOB ASSISTANCE

Brands We Serve(repair & unlocking)

NOKIA Connecting People, BlackBerry, SAMSUNG, MOTOROLA, Sony Ericsson, LG



(சி-557)

Mobile Repair Syllabus (பாடப்பரப்பு) :-
- Models of Mobile Phones
- Mobile Phone Parts Problems
- Mobile Phone Trouble shootings & Web
- Mobile Phone Unlocking & Flashing
- Mobile Phone Parts Identification
- Mobile Phone IC's & Functions
- How to change Mobile phone IC's
- Special Softwere Codes & Test Point & Etc.

குறிப்பு :- நெல்லியடியில் மட்டும் இவ் வகுப்புக்கள் மாலை 5 மணிக்கு நடைபெறும். வகுப்புக்கள் பற்றிய மேலதிக விபரங்கள் பெற்றுக் கொள்ள 0777 110 862 எனும் தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளவும். அரச அங்கீகாரம் உள்ள சான்றிதழ் வழங்கப்படும்.

கீழ்வரும் இடங்களில் ஆரம்பம் :- (ஒவ்வொரு மாதமும் பல பிரிவுகள் ஆரம்பம்)

| நெல்லியடியில் - (வதிரி சந்தி) | யாழ்ப்பாணத்தில் | மானிப்பாயில் |
|---|---|---|
| உல்லியனொல்லை அம்மன் கோவில் முன்பாக (இல - 208/23) T.P No :- 0777 110 862 | UNI - ICT Campus (PVT) Ltd No:-83, Palaly, Road Kantharmadam,Jaffna | UNI - ICT Education (PVT) Ltd Jaffna Road, Manipay. T.P :- 021 7429325 / 0777110862 |


# மாணவர்களுக்கு நிதி உதவி

யாழ்ப்பாணம், ஜூன்10

பிரான்ஸ் வாழ் கைதடி ஒன்றியத்தின் அனுசரணையில் கைதடி மக்கள் நலன் பேணும் நட்புறவுக் கழகத்தின் ஏற்பாட்டில் கைதடியில் உள்ள வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மாணவர்களுக்கான நிதியுதவி வழங்கல் மற்றும் பல்கலைக்கழகத்துக்குத் தகுதி பெற்ற மாணவர்களுக்கான பரிசில் வழங்கல் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கைதடி கலைமாணி வித்தியானந்தா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பிரான்ஸ் வாழ் கைதடி ஒன்றியத்தின் போசகர் சி.தங்கத்துரை கலந்துகொள்வார். (283)

# பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன்10

புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க வருடாந்த ஒன்று கூடலும் பொதுக்கூட்டமும் இன்று காலை 9 மணிக்கு பழைய மாணவர் சங்கத் தலைவர் இ.இராஜமகேந்திரம் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

(03)

### சாரதி தேவை

கூலர் வாகனம் செலுத்தக்கூடிய மற்றும் வியாபார நிறுவனங்களுக்கு ஐஸ்கிறீம் விநியோகித்து பொறுப்புடன் விற்பனை நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடிய A தர சாரதி அனுமதிப் பத்திரமுள்ள சாரதி தேவை.

தொடர்புகளுக்கு : 077 1566661

(19164)(14-8)

### பார்மசிப் பொருள்கள் விற்பனைக்கு

வடமராட்சியில் பார்மசிக்கு தேவையான பொருள்கள் விற்பனைக்கு உண்டு. தேவையுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

(சி/559) (15-14) 0721380919

### பணிப்பெண் தேவை

யாழ். நகரிலுள்ள வீட்டில் தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய பெண் தேவை. (சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

(19163)(14-8) தொடர்பு : 077 4771588

### தவறிவிட்டது

மரியநாதன் - கொன்சன்றீகன் (832402001 V) என்பவருடைய தேசிய அடையாள அட்டை சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியன நெடுந்தீவு பொலீஸ் நிலையத்திற்கும், துறைமுகத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0772247645 என்னும் இலக்க தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளவும்

(19168)(14-8)

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள (ரொபின்) வோட்டர் பம் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு : 077 0517494

(19165)(14-8)

### தேவை

பார்மசி ஒன்றுக்கு முன் அனுபவம் உள்ள (ஆண்/பெண் இருபாலாரும்) வேலையாள்கள் தேவை.
(பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம்)

(19166)(14-8) T.P : 077 2208170

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னம்மா தம்பிஐயா



யாழ்ப்பாணம், திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், நாவற்குழியை வதிவிடமாகவும், தற்போது மட்டக்களப்பு, தாமரைக்கேணியை வாழ்விடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா தம்பிஐயா நேற்று முன்தினம் (08.06.2012) வெள்ளிக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை - பாக்கியம் தம்பதியரின் மூத்த புதல்வியும், காலஞ்சென்ற பத்மநாதன் (ஓய்வுபெற்ற வன இலாகா பிராந்திய அதிகாரி), செல்வி இலட்சுமி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற சின்னையா தம்பிஐயாவின் அன்பு மனைவியும், சிவானந்தராஜா (ஓய்வு பெற்ற நீர்ப்பாசன பொறியியலாளர், வவுனியா), காலஞ்சென்ற பரமேஸ்வரி குருச்சந்திரன், இலட்சுமணன் (ஓய்வுபெற்ற தொழில் ஆணையாளரும், பிராந்திய முகாமையாளர் இலங்கை கட்டுமான தொழில் சமாசம்), சிவநாதன் (ஓய்வுபெற்ற தபால் அதிபர் - ஆஸ்திரேலியா), சிவலிங்கம் (ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர் - உள்ளூராட்சித திணைக்களம் - யாழ்ப்பாணம்), ஈஸ்வரி சண்முக லிங்கம் (ஈஸ்ரன் முகாமையாளர், முகவர் தபாலகம் - மட்டக்களப்பு), Dr. சிவபாலன் (ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற சிவஞானசேகரம் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற சௌந்தரராணி, குருச்சந்திரன், தவமலர், கமலாதேவி (ஆஸ் திரேலியா), பத்மராணி, காலஞ்சென்ற சண்முகலிங்கம் (பிரதம லிகிதர், உள்ளூராட்சி திணைக்களம், செட்டிக்குளம்), சாளினி (ஆஸ்திரேலியா), இந்திராகாந்தி (கனடா), இராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற மோகன்ராஜ் (பொறியியலாளர், நீர்பாசனத் திணைக்களம்), அழகன்ராஜ் (லண்டன்), மகேந்திரராஜ் (கண்ணன் - ஆஸ்திரேலியா), திலகன்ராஜ் (லண்டன்), ரகுசங்கர் (பிரான்ஸ்), காலஞ்சென்ற ரவிசங்கர், புவிசங்கர் (பிரான்ஸ்), Dr. இந்துமதி, Dr. விக்னராஜ் (ஆஸ்திரேலியா), Dr. துஷ்யந்தி இலட்சுமணன் (மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை), Dr. கவிதா, Dr. லக்ஷ்மன் (ஆஸ்திரேலியா), சங்கீதா, ஜோனி (ஆஸ்திரேலியா), மயூரன் (ஆஸ்திரேலியா), மகிந்தன் (ஆஸ்திரேலியா), சஞ்ஜீவன் (ஜனசக்தி - கல்முனை), சிவந்தி (ஆஸ்திரேலியா), சிவானி (ஆஸ்திரேலியா), சுபாஷினி, தர்ஷன் (சவுதி அரேபியா), தனுஷன், சாரங்கன், நிலுஜா, நிரோஜன் (கனடா), செந்தூரன் (கனடா) ஆகியோரின் பேர்த்தியும், ஜதுஷன் (லண்டன்), திவ்யா (லண்டன்), தாயகன் (ஆஸ்திரேலியா), காவியா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மட்டக்களப்பு, இல. 06, தாமரைக்கேணி, 2ஆம் குறுக்கு வீதியில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக இன்று (10.06.2012) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.30 மணியளவில் கள்ளியங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அரசடி அம்மன் வீதி,
திருநெல்வேலி. (19170)(14.34)

தகவல் :
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## அரபு வசந்தம் மலர்வதற்கு எகிப்தின் தேர்தல் கைகொடுக்குமா?

ஐயாயிரம் வருடங்களுக்கு மேற்பட்ட எகிப்திய வரலாற்றில், அந்நாட்டு மக்கள் முதல் தடவையாகத் தமது ஜனாதிபதியைத் தெரிவுசெய்வதற்காக வாக்களித்துள்ளனர்.

1952 ஆம் ஆண்டு இராணுவப் புரட்சி மூலம் மன்னர் பாரூக்கின் ஆட்சி எகிப்தில் கவிழ்க்கப்பட்டு, 1953இல் அப்துல் நாஸர் பதவிக்கு வந்தார். அதன்பின்னர். மன்னர் ஆட்சி நாடுகளுக்கு எதிராக அரபு உலகில் உண்டான எழுச்சி, ஈராக் உட்பட பல நாடுகளினதும் மக்கள் அடக்குமுறையில் இருந்து தாம் விடுபட்டதாகவே கருதினர். ஆனால், அவை சர்வாதிகார ஆட்சிகளாக உருவெடுத்து, பல தசாப்தங்களாக அவர்களைக் கடுமையான அடக்குமுறைகளுக்குள் கொண்டுவந்தன. மன்னர் ஆட்சிக் காலத்தை விட மோசமான நிலைக்குள் மக்கள் தள்ளிவிடப்பட்டனர்.

இத்தகைய நிலையில், டுனிஷியாவில் ஏற்பட்ட அரபு வசந்தம் எனப்படும் மக்கள் எழுச்சி ஜனாதிபதி பென் அலியின் ஆட்சியைக் கவிழ்த்தது. எகிப்திலும் லிபியாவிலும் சிரியாவிலும் கிளர்ச்சிகள் ஏற்பட்டு ஹொஸ்னி முபாரக் எகிப்தில் சிறைப்பிடிக்கப்பட்டு தற்பொழுது ஆயுள் தண்டனையை எதிர்நோக்கி உள்ளார். கேணல் கடாபி லிபியாவில் படுகொலை செய்யப்பட்டார். முற்றிலும் எதிர்பாராத நிகழ்வுகள் அரபு உலகில் இடம்பெற்றன.

எனினும், சிரியாவில் ஜனாதிபதி அசாத் கடுமையான அடக்குமுறைகளை மக்கள் மீது ஏவி தொடர்ந்து அதிகாரத்தில் இருந்து வருகிறார். ஐ.நா.பாதுகாப்புச் சபையில், ரஷ்யா தனது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்துவதால் ஆட்சிக் கவிழ்ப்பு இதுவரை சாத்தியப்படவில்லை.

மத்திய கிழக்கில் நிரந்தர சமாதானம் ஏற்படுவதற்கு, எகிப்து ஒரு முக்கிய, பிரதான கூறாகக் கருதப்படுகிறது. எகிப்தில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலை அமெரிக்கா உட்பட மேற்கு நாடுகளும் இஸ்ரேலும் மிகவும் உன்னிப்பாக அவதானித்து வருகின்றன.

முதலாவது கட்டத் தேர்தல் கடந்த மாதம் நடைபெற்று முடிந்த நிலையில், இன்றும் நாளையும் நடைபெற உள்ள இரண்டாம் கட்டத் தேர்தலில் முஸ்லிம் சகோதரத்துவ கட்சியின் வேட்பாளர் மொஹமட் மோர்சி, ஹொஸ்னி முபாரக் ஆட்சிக் காலத்தில் கடைசியாகப் பிரதமராக இருந்த அஹ்மட் ஷாபிக் ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் முபாரக்கின் ஆட்சி கவிழ்க்கப்பட்டு எகிப்திய இராணுவம் ஆட்சியைப் பொறுப்பேற்றபோது, 90 நாள்களில் தேர்தலை நடத்துவதாக மக்களுக்கு அது வாக்குறுதி அளித்தது. எனினும், கடந்த மாதமே ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டிருப்பது இராணுவத்தின் அதிகாரம் எகிப்தில் தொடர்ந்து இருப்பதற்கான சமிக்ஞையாகக் கருதப்படுகிறது.

1979 ஆம் ஆண்டு எகிப்து, அமெரிக்கா, இஸ்ரேல் ஆகிய மூன்று நாடுகளும் செய்துகொண்ட காம்ப் டேவிட் ஒப்பந்தம் வரை, இஸ்ரேலுடன் பகைமைப் போக்கை எகிப்து கொண்டிருந்ததால் சோவியத் யூனியனின் உதவியுடன் மிகவும் பலம் பொருந்திய இராணுவம் ஒன்றை வைத்திருந்தது. காம்ப் டேவிட் ஒப்பந்தம் மூலம் சினாய் பாலைவனத்தை இஸ்ரேல் எகிப்திடம் திருப்பி ஒப்படைத்தது. எகிப்தில் இருந்து, சந்தை விலையிலும் குறைந்த விலையில் இஸ்ரேலுக்கு எரிவாயு அனுப்பப்படுகிறது. ஆகவே, எகிப்தில் ஆட்சிக்கு வரும் புதிய ஜனாதிபதி முன்னைய ஒப்பந்தங்களைப் புறக்கணிக்கும் நிலைமை உருவாகக்கூடாது என்பதில் அமெரிக்கா அதிக அக்கறை காட்டுகிறது.

லிபியாவில் இடம்பெற்ற மக்கள் எழுச்சிக்கும் சிரியாவில் தற்பொழுது இடம்பெற்றுவரும் மக்கள் எழுச்சிக்கும் அமெரிக்காவின் முழு ஆதரவு உண்டு. எகிப்தில் முபாரக்கிற்கு எதிரான கிளர்ச்சி வலுவடைந்தபோது, அமெரிக்கா கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவு தெரிவித்து முபாரக்கைக் கைவிட்டது.

மத்திய கிழக்கில் ஆட்சி மாற்றம் மூலம் பதவிக்கு வரும் அரசுகள் இஸ்ரேலுடன் பகைமை அற்ற போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றே அமெரிக்கா விரும்புகிறது. 1967 ஜூன் யுத்தத்தின் போது மத்திய கிழக்கில் இஸ்ரேலுக்குச் சவாலாக இருந்த நாடுகள் எல்லாம் இன்று நலிவடைந்துவிட்டன. அந்த யுத்தத்தில் கோலான் குன்றுகளை இஸ்ரேலிடம் இழந்த சிரியா மட்டும் தொடர்ந்து இஸ்ரேலுக்கு எதிராக இயங்கி வருகின்றது. சிரியாவிலும் ஆட்சிக் கவிழ்ப்பு இடம்பெற்றால் அச்சுறுத்தல்களில் இருந்து இஸ்ரேல் விடுபட்டுவிடும் என்று அமெரிக்கா எதிர்பார்க்கிறது.

எது எப்படியாக இருப்பினும், மத்திய கிழக்கில் மக்களை மதியாது ஆட்சி செய்துவரும் சர்வாதிகாரத் தலைமைகளுக்கு அரபு வசந்தம் ஒரு பாடமாக இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு பரந்தளவில் மேலோங்கி நிற்கிறது.

# மாநகர எல்லைக்குள் வழிபாட்டுத் தலம் முதல்வரின் அனுமதி பெற்றே நிறுவலாம்

### சட்டவிரோதமாக அமைத்தால் தடுக்கலாமாம்

யாழ்ப்பாணம், ஜூன் 10

புதிய மத வழிபாட்டுத் தலங்களை நிர்மாணிப்பதற்குத் தனது அறிவுரை, பரிந்துரைகளைப் பெற்றே அமைக்க முடியும்- இவ்வாறு யாழ்.மாநரசபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா அறிவித்துள்ளார்.

புத்தசாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சின் 02.09. 2011 ஆம் திகதி சுற்றறிக்கையின் பிரகாரம் எந்தவொரு மதவழிபாட்டுத் தலத்தையேனும் நிர்மாணிக்கும்போது அமைச்சின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

அமைச்சில் இந்த அனுமதியைப் பெறுவதற்கு முதலில் குறிப்பிட்ட பிரதேசத்தில் பிரதேச செயலர், பிரதேச சபைத் தலைவர் ஆகியோரின் அனுமதியைப் பெறவேண்டும்.

இதனடிப்படையில் யாழ்.மாநகர சபை எல்லைக்குள் வழிபாட்டுத் தலங்களை நிறுவுவதாயின் மாநகர முதல்வரின் அனுமதி தேவை.

சட்டவிரோதமாக நிர்மாணிக்கப்படும் மதம் சார்ந்த அமைப்புப் பணிகளைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

இதற்கு அந்தப் பகுதி கிராம அலுவலர்கள் தமது பங்களிப்பை வழங்க வேண்டும் என்றும் முதல்வர் செய்திக் குறிப்பொன்றில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தமிழர் பகுதிகளில் திடீர் திடீரென அமைக்கப்படும் புத்தர் சிலைகள் தொடர்பாக அண்மையில் பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ள நிலையில் அவைகளும் அந்தந்தப் பகுதி பிரதேச, பிரதேச சபைத் தலைவர்களின் அனுமதி பெறப்பட்டு அமைக்கப்பட்டுள்ளனவா என்று பொதுமக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (ஒ-16)

## சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் ஸ்கானிங் சேவை ஆரம்பம்

தென்மராட்சி, ஜூன் 10

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் ஸ்கான் வைத்திய சேவையும் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் ஸ்கான் பரிசோதனை வைத்திய நிபுணர் வாரத்தில் ஒருநாள் நோயாளர்களை பரிசோதனை செய்து சிகிச்சையளிப்பார்.

இதேவேளை சாவகச்சேரி வைத்தியசாலையில் கடமையாற்றும் பொது வைத்திய நிபுணர்கள் சிபார்சு செய்யப்படும் நோயாளர்களுக்கும் பொது வைத்திய நிபுணரின் விடுதியில் தங்கியிருப்போருக்கும் ஸ்கான் பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் முயற்சியால் இரு வைத்திய நிபுணர்களின் சேவை சாவகச்சேரி வைத்திய சாலைக்கு கிடைத்துள்ளது. தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி, வடமராட்சி கிழக்கு, பூநகரி, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த நோயாளர்கள் வருகை தந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். (ம-9)

## நெல்சிப் திட்டங்களை பார்வையிட உலக வங்கிக் குழு

யாழ்ப்பாணம், ஜூன் 10

நெல்சிப் அபிவிருத்தித் திட்டங்களைப் பார்வையிடுவதற்காக உலக வங்கிக் குழு அடுத்தவாரம் யாழ். வருகிறது.

யாழ். மாவட்டத்தில் உள்ள 16 உள்ளூராட்சி சபைகளின் கட்டம் இரண்டு அபிவிருத்தித் திட்டங்களை இந்தக் குழு பார்வையிடும் என்று தெரிவிக்கப்பட்டது. இதில் ஆலோசனைக் குழுக்களின் விவரம், மக்கள் குறைகேள் திட்டம், பயன்படுத்தப்பட்ட மற்றும் பயன்படுத்தப்படாத விவரங்கள் அத்துடன் திட்ட மதிப்பீடு, திட்ட வரைபுகள், குறிப்பேட்டு புத்தகம் கண்காணிப்புக் குழு அங்கத்தவர் பட்டியல் விவரங்களையும் பார்வையிடவுள்ளனர்.

இந்தக் குழுவினருடன் கொழும்பு நெல்சிப் கணக்குப்பகுதி, கணக்காய்வு பகுதி அதிகாரிகளும் வருகை தரவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ம-50)

## குருதிக் கொடையாளர் கௌரவிப்பு

கைதடி, ஜூன் 10

யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியால் வருடாந்தம் நடத்தப்பட்டு வரும் குருதிக் கொடையாளர் கௌரவிப்பு விழா இம்முறை எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் பவானி பசுபதிராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வின் முதன்மை விருந்தினர்களாக யாழ்.போதனா வைத்தியசாலை ஓய்வு நிலை வைத்திய நிபுணர்களான மருத்துவர் ஆர்.கணேசமூர்த்தி அவரது பாரியார் மருத்துவர் திருமதி ஜே.கணேசமூர்த்தி ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த சத்திரசிகிச்சை நிபுணர் மருத்துவர் எஸ்.ரவிராஜ், புற்றுநோய் சிகிச்சை நிபுணர் மருத்துவர்என்.ஜெயகுமாரன், மகப்பேற்று மற்றும் பெண் நோயியல் சத்திரசிகிச்சை நிபுணர் மருத்துவர் கே.முகுந்தன், யாழ். தாதியர் பயிற்சிக் கல்லூரி அதிபர் செல்வி வல்லிபுரநாதன் ஆகியோரும் கௌரவ விருந்தினராக யாழ்ப்பாணம் இலங்கை வங்கி விரிவாக்கற் கிளை முகாமையாளர் ரி.கோணேசநாதனும் கலந்துகொள்வர்.

இந்த நிகழ்வில் குருதிக் கொடையாளர்கள் பலர் கௌரவிக்கப்படுவதுடன் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ம-288)

# சட்டவிரோத மின்சாரம் பெற்றவர்களிடம் 5 மாதங்களில் ரூ. 11.6 மில்லியன் வசூல்

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ்.மாவட்டத்தில் கடந்த 5 மாதங்களில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற 259 பேர் மின்சார சபைக்கு 11.6 மில்லியன் ரூபா அபராதம் செலுத்தியுள்ளனர் என்று மின்சார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.மின்சார சபையுடன் பொலிஸார் இணைந்து நடத்திய தேடுதலின்போது சட்டவிரோத மின்பாவனையாளர்கள் சிக்கியுள்ளனர்.

ஜனவரி மாதம் 180 பேர் சட்டவிரோத மின்சாரம் பெற்றுள்ளனர். இவர்களில் 174 பேருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டது. இந்த 180 பேரிடமிருந்து 8.5 மில்லியன் ரூபா அபராதம் பெறப்பட்டுள்ளது.

பெப்ரவரி மாதம் 44 பேர் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றுள்ளனர். இவர்களில் 10 பேருக்கு வழக்குத் தொடுக்கப்பட்டது. இந்த 44 பேரிடமிருந்து 0.778 மில்லியன் ரூபா அபராதமாகப் பெறப்பட்டது.

மார்ச் மாதம் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற 8 பேருக்கு 1.17 மில்லியன் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

மே மாதம் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற 13 பேரில் 8 பேருக்கு வழக்குத் தொடரப்பட்டது. 13 பேரிடமிருந்தும் 0.713 மில்லியன் ரூபா அபராதமாகப் பெறப்பட்டது.

சட்டவிரோதமாக மின்சாரம் பெறுவோர் சுன்னாகம், பருத்தித்துறை ஆகிய பிரதேசங்களிலேயே அதிகமாக உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

சட்டவிரோதமாக மின்சாரம் பெற்று அபராதம் செலுத்திய பின்னரும் மீண்டும் மீண்டும் அந்தத் தவறை மேற்கொண்டு வருவதால் பெரும் சிரமத்தை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பிலிருந்து வந்த மின்சார சபையின் விசேட குழு சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற பலரைக் கைது செய்தது. சட்டவிரோதமாக மின்மானியை பயன்படுத்தியோர் மின் கம்பங்களிலிருந்து மின்சாரம் பெற்றோர் இதில் அடங்குவர்.

தற்போது இவ்வாறு சட்டவிரோதமாக மின்சாரம் பெறும் வீடுகளில் மின் வயர்கள், மின்மானிகள் யாவும் வெளியில் கண்பார்வைக்குத் தெரியும் வகையில் வைக்கப்பட்டுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-13)

**சட்டவிரோதமாக மின்சாரம் பெறுவோர் என்று இனங்காணப்பட்ட வீடுகளில் மின் வயர்கள், மின்மானிகள் யாவும் வெளியில் கண்பார்வைக்குத் தெரியும் வகையில் வைக்கப்பட்டுள்ளன.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குளக்கட்டில் 'குடிமக்கள்' கும்மாளம் மறைவிடங்களில் காதல் களியாட்டம்

## தாண்டிக்குளத்தை தாண்டிச்செல்ல மக்கள் தயக்கம்

வவுனியா, ஜூன் 10

தாண்டிக்குளம் குளக்கட்டுப் பகுதியில் கலாசார சீரழிவுகள், சட்டவிரோத மது பாவனை என்பன அளவுக்கதிகமாக இடம்பெற்று வருவதால் அந்தப்பகுதியால் போக்குவரத்தில் ஈடுபடுவோர் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். -கண்டி வீதியில் இருந்து பூந்தோட்டத்துக்கான போக்குவரத்து மார்க்கமாகக் காணப்படுவது தாண்டிக்குளம் குளக்கட்டுப் பகுதியாகும். இதன் மூலம் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் அரச அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் என்போர் வவுனியா நகரப் பகுதிக்கான போக்குவரத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

முற்பகல் 10 மணி முதல் சாராயம், பியர் போன்ற மது பானங்களுடன் இந்தப் பகுதிக்கு வரும் மதுப்பிரியர்கள் நீண்ட நேரமாக அதில் இருந்து கண்மண் தெரியாமல் மது அருந்தி வருவதுடன் போதை தலைக்கேறியதும் மக்கள் போக்குவரத்தில் ஈடுபடும் பாதைக்குக் குறுக்காக அமர்ந்திருந்து இடையூறு விளைவிக்கின்றனர்.

**யாழ். –கண்டி வீதியில் இருந்து பூந்தோட்டத்துக்கான போக்குவரத்து மார்க்கமாகக் காணப்படுவது தாண்டிக்குளம் குளக்கட்டுப் பகுதியாகும்.**

அதுமட்டுமல்லாது மதுபோதை தலைக்கேறிய நிலையில் பயன்படுத்தக்கூடாத கேவலமான வார்த்தைகளையும் பாவிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இந்தக் குளப் பகுதியிலுள்ள சில மறைவான இடங்கள் இளைஞர், யுவதிகள் ஒன்று கூடும் இடமாகக் காணப்படுகின்றது. குறிப்பாக மாலை நேரங்கள் மற்றும் சனி, ஞாயிறு தினங்களில் இவர்கள் தங்கள் காதல் லீலைகளில் ஈடுபடுவதாகவும் இதனால் இந்த வீதியால் செல்லும் மாணவ, மாணவிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இது விடயத்தில் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பெயர் கூறவிரும்பாத அரச அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார். (க)

### வவுனியா தெற்கு மாகாண மட்ட போட்டிக்குத் தெரிவு

வவுனியா, ஜூன் 10

வவுனியா மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டு வினாடி வினாப் போட்டியில் வவுனியா தெற்கு வலயம் வெற்றி பெற்று மாகாணப் போட்டிக்குத்தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

இந்தப் போட்டிகள் கடந்த 5 ஆம் திகதி வவுனியா புதுக்குளம் மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றன.

இதில் வவுனியா தெற்கு வலயத்தில் இருந்து இரு அணிகளும், வவுனியாவடக்கு வலயத்திலிருந்து இரு அணிகளும் போட்டியிட்டன.

இதில் வவுனியா தெற்கு வலயத்தைச் சேர்ந்த இரு அணிகளுமே இறுதிப் போட்டிக்குத் தெரிவாகி மாகாண மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளன என வவுனியா தெற்கு கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.எம். சுபைர் தெரிவித்தார். (க-400)

### யார் செய்த குற்றம்...?



பூநகரியில் குடிதண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவும் இந்த வேளையில் சாரதி இல்லாததால் பூநகரி மகாவித்தியாலயத்தில் 'தவம்' கிடக்கும் தண்ணீர் பவுஸர். (18)

## பூநகரியில் நிறைவு பெற்றது மக்களின் மீள்குடியமர்வு

### பிரதேச செயலர் தெரிவிப்பு

அக்கராயன், ஜூன் 10

கிளிநொச்சி மாவட்டம் பூநகரியில் மீளக் குடியமர்வு நிறைவு பெற்றிருப்பதாக பூநகரிப் பிரதேச செயலர் கே.எஸ்.வசந்தகுமார் தெரிவித்துள்ளார்.

பூநகரிப் பிரதேச செயலக பிரிவின் மீளக்குடியமர்வு தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தற்போது 6 ஆயிரத்து 347 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளன. 2 ஆயிரத்து 200 வரையான வீடுகள் கிடைக்கப்பெறுமாயின் இங்குள்ள அனைவருக்கும் வீடுகளை வழங்க முடியும். கிராமங்கள் உவராக மாறி வருவது பெரும் சவாலாக உள்ளது. உவர் ஆபத்திலிருந்து கிராமங்களைக் காப்பாற்ற வேண்டுமாயின் நீளமான மண் அணைகள் அமைக்கப்பட வேண்டும். சில இடங்களில் மண் அணைகள் அமைக்கும் பணிகள் இடம்பெறுகின்றன.

எமது அனுமதியின்றிப் பூநகரியில் இருந்து மணல், மரங்கள் என்பன களவாகக் கொண்டு செல்லப்படுவதாக அறிகிறோம்.

ஆனால் பிரதேச செயலகம் அனுமதி எதையும் வழங்கவில்லை. ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் பிரகாரமே மணல், மரங்கள் ஏற்றிச் செல்லப்படுவது தொடர்பான விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க-18)

### ஆசிரியர் பற்றாக்குறை இல்லாத பாடசாலையாகப் பூநகரி ம.வி.

கிளிநொச்சிக் கல்வி வலயத்தில் ஆசிரியர் பற்றாக்குறை இல்லாத பாடசாலையாகப் பூநகரி மகா வித்தியாலயம் விளங்குவதாகத் தெரிய வருகின்றது.

இங்கு 58 ஆசிரியர்கள் பணியில் உள்ளனர். இந்தப் பாடசாலையில் ஒரே ஒரு நிரந்தரக் கட்டடமே உள்ளது. அநேகமான வகுப்புக்கள் தகரப்பந்தல், ஓலைக் கொட்டகைகள் என்பவற்றின் கீழ் இயங்குகின்றன.

இந்தப் பாடசாலையின் முக்கிய பிரச்சினையாக குடிதண்ணீர் விளங்குகின்றது. நீர்விநியோகத்தை நம்பியே பாடசாலை உள்ளது. இங்கு அமைக்கப்பட்டிருந்த தற்காலிக் கற்றல் வகுப்பறைகள் கடும் காற்றினால் பிடுங்கி எறியப்பட்ட நிலையில் காணப்படுகின்றன. 835 மாணவர்களைக் கொண்ட பூநகரி மகாவித்தியாலயம் பூநகரி கல்விக் கோட்டத்தில் முதன்மைப் பாடசாலையாக விளங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)

## சமூக அமைப்புகளின் ஒன்றியம் கல்வி அபிவிருத்திக்கு நிதியுதவி

### பெற்றோரை இழந்தோர் பயன்பெறுவர்

வவுனியா, ஜூன் 10

இடம்பெயர்ந்து மீளக் குடியமர்ந்துள்ள குடும்பங்களின் கல்வி அபிவிருத்திக்கென செட்டிகுளம் சமூக அமைப்புக்களின் ஒன்றியத்தால் மாதாந்தம் நிதி உதவி வழங்கப்படவுள்ளது.

கடந்த போர் இடர்களின் போது இடம்பெயர்ந்து பின் மீளக்குடியமர்ந்த குடும்பங்களில் தந்தை, தாய் ஆகியோரை இழந்த நிலையில் கல்வி கற்கும் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் முகமாகவே இந்த நிதி உதவி மாதாந்தம் வழங்கப்படவுள்ளது.

செட்டிகுளம் பிரதேச செயலகத்தின் சமூக சேவைகள் திணைக்களத்தின் அனுசரணையுடன் மெனிக்பாம், ஆனந்தகுமாரசாமி, கதிர்காமர் நலன்புரிப் பாடசாலைகளில் தற்போது கல்வி கற்றுவரும் மாணவர்களுக்கே இந்த நிதி வழங்கப்படவுள்ளது.

அதன் முதற்கட்டமாக கதிர்காமர் நலன்புரி முகாமைச் சேர்ந்த சுமார் 90 மாணவர்களுக்குத் தலா 500 ரூபா வீதம் நேற்று இந்த நிதி வழங்கப்பட்டது.

கதிர்காமர் நலன்புரி நிலையத்தின் கிராம சேவையாளர் எஸ். விஜயகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் செட்டிகுளம் சமூக அமைப்புகளின் ஒன்றியத்தினர் மாணவர்களுக்கான நிதி உதவிகளைப் பணமாக வழங்கினர்.

அதேபோல ஆனந்தகுமாரசாமி முகாமிலும் பணம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-400)

## சட்டவிரோத மதுபான விற்பனையாளருக்கு தண்டமும் சிறைத்தண்டனையும் விதிப்பு

கிளிநொச்சிப் பகுதியில் கசிப்பு மற்றும் அரச சாராயம் விற்பனை செய்த பலர் கைது செய்யப்பட்டுத் தண்டம் அறவிடப்பட்டதுடன் சாதாரண சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

**கசிப்பு மற்றும் அரச சாராயம் விற்பனை செய்த பலர் கைது செய்யப்பட்டுத் தண்டம் அறவிடப்பட்டதுடன் சாதாரண சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.**

கடந்த முதலாம் திகதி கிளிநொச்சி புதுமுறிப்புப் பகுதியில் இரண்டு போத்தல் கசிப்பை தனது உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட ஒருவருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்றாம் திகதி மேற்படி பகுதியில் எட்டுப் போத்தல் கசிப்புத் தயாரிப்பதற்கான கோடாவை வைத்திருந்த குறித்த சந்தேக நபர் சுற்றவாளி என நீதிமன்றத்தில் தெரிவித்தார். இதனையடுத்து ஒரு லட்சம் பெறுமதியான ஆள்பிணையில் செல்ல இவருக்கு அனுமதி வழங்கப்பட்டது.

கடந்த 3 ஆம் திகதி அரச சாராயம் ஒரு போத்தலைப் பொலிஸார் ஒருவருக்கு ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்ய முயன்ற ஒருவருக்கு 5 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி இராமநாதபுரம் பகுதியில் கடந்த 4 ஆம் திகதி 555 மில்லி லீற்றர் கசிப்பைத் தனது உடைமையில்வைத்திருந்தஒருவர்கைது செய்யப்பட்டு அவருக்கு 5 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன் ஏற்கனவே இவர் மீது குற்றச்சாட்டுகள் உள்ளதால் இரண்டு மாத சாதாரண கட்டாய சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

இதைவிட கிளிநொச்சி அக்கராயன்குளம் பகுதியில் 17 போத்தல் கோடாவை வைத்திருந்த வயோதிபப் பெண் ஒருவர் கைதுசெய்யப்பட்டு மன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டதையடுத்து 15 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. (க-6)

### அக்கராயனில் நூல் நிலையத்தை அமைக்குமாறு கோரிக்கை

அக்கராயன், ஜூன் 10

கிளிநொச்சி அக்கராயன் பகுதியில் நூல் நிலையம் ஒன்றை அமைக்குமாறு இங்குள்ள மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அக்கராயனில் கிளிநொச்சி இடம்பெயர்வுக்கு முன்னர் கரைச்சிப் பிரதேச சபையின் நூல் நிலையம் இயங்கி வந்தது. ஆனால் கிளிநொச்சியில் மக்கள் மீளக்குடியமர்ந்தவுடன் இந்த நூல் நிலையம் மூடப்பட்டது. தற்போது இங்கு வசிக்கும் மக்கள் பத்திரிகைகள், நூல்கள் என்பவற்றைப் படிப்பதற்கான சூழல் இல்லாத நிலை காணப்படுகிறது.

எனவே அக்கராயன் பகுதியில் நூல் நிலையம் ஒன்றை அமைக்குமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதேவேளை ஸ்கந்தபுரம் நூலகம் பிற்பகல் 3.30 மணியுடன் மூடப்பட்டு விடுகிறது என்று வாசகர்கள் குறைகூறுகின்றனர். (க-18)

## துணுக்காய் வலயம் தற்போது கல்வி அபிவிருத்தியில் முன்னேற்றம்

### பணிப்பாளரை பாராட்டுகிறார் பிரதேச செயலர்

அக்கராயன், ஜூன் 10

புதிய கல்விப் பணிப்பாளர் பொறுப்பேற்ற பின்னர் துணுக்காய் கல்வி வலயத்தின் கல்வி அபிவிருத்தியில் பெரும் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளதாகத் துணுக்காய் பிரதேசசெயலர் சி.குணபாலன் தெரிவித்துள்ளார்.

துணுக்காய்ப் பிரதேச செயலக பிரிவின் கல்வி நிலவரங்கள் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

துணுக்காய்ப் பகுதிப் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை இருந்த போதிலும் இடமாற்றம் பெற்று பல ஆசிரியர்கள் வருகை தந்துள்ளனர். கிராமப்புற பாடசாலைகளில் ஆசிரிய விடுதிகள் இல்லாதது பெரும் குறையாக உள்ளது. கோட்டைகட்டியகுளம், தேறாங்கண்டல் ஆகிய பாடசாலைகளில் ஆசிரிய விடுதிகள் அமைக்கப்பட்டு வருகின்றன எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள்

தருவது வித்தியா

## உங்களுக்கு எப்படி?

**மேடம்:** சொன்ன சொல்லைக் காப்பாற்றுவீர்கள். பிள்ளைகளை புதிய பாதையில் வழி நடத்துவீர்கள். பிரியமானவர்களுக்காக சிலவற்றை விட்டுக்கொடுப்பீர்கள். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள். உத்தியோகத்தில் மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரைகள் வழங்குவர். சாதிக்கும் நாள்.

**இடபம்:** கடந்த இரண்டு நாள்களாக இருந்த சோர்வு நீங்கி சுறுசுறுப்பாவீர்கள். குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். உத்தியோகத்தில் அமைதி நிலவும்.

**மிதுனம்:** தெளிவான முடிவுகள் எடுக்க முடியாமல் குழம்புவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்கள் உங்கள் நிறை, குறைகளை எடுத்துச் சொன்னால் கோபப்படாதீர்கள். உங்கள் மீது சிலர் வீண்பழி சுமத்துவார்கள். வியாபாரத்தில் வேலையாள்களை பகைத்துக் கொள்ளாதீர்கள். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். சகிப்புத் தன்மை தேவைப்படும் நாள்.

**கடகம்:** நீண்ட நாள்களாக எதிர்பார்த்த காரியங்கள் இன்று முடியும். மனைவி வழி உறவினர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். திருமணப்பேச்சு வெற்றியடையும். வியாபாரத்தில் எதிர்பாராத தனலாபம் உண்டு. உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். திறமைகள் வெளிப்படும் நாள்.

**சிங்கம்:** எதிர்பாராத பண வரவு உண்டு. பழைய உறவினர், நண்பர்களால் பயனடைவீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிட்டும். வழக்கில் சாதகமான தீர்ப்பு கிடைக்கும். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்கும்படி நடந்துக் கொள்வீர்கள். தொட்டது துலங்கும் நாள்.

**கன்னி:** புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். பிள்ளைகளிடம் குவிந்துக் கிடக்கும் திறமைகளை இனம் கண்டறிந்து வளர்ப்பீர்கள். நீண்டநாள் பிரார்த்தனைகள் நிறைவேறும். வியாபாரத்தில்சில சூட்சுமங்களைப் புரிந்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் புதிய வாய்ப்புகள் தேடிவரும்.

**நாளை**

வைகாசி 29 திங்கட்கிழமை 11.06.2012
திதி: ஸப்தமி காலை 08.40 வரை
நட்சத்திரம்: சதயம் காலை 07.53 வரை
சுபநேரம்: 11.52- 01.22 வரை
ராகு காலம்: 07.22- 08.52 வரை

**துலாம்:** சில வேலைகளை விட்டுக் கொடுத்து முடிப்பீர்கள். தாயாரின் உடல் நலத்தில் கவனம் தேவை. எவ்வளவு பணம் வந்தாலும் பற்றாக்குறை நீடிக்கும். வியாபாரத்தில் கடினமாக உழைத்து இலாபம் பெறுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். புதிய அனுபவம் கிட்டும் நாள்.

**விருச்சிகம்:** துணிச்சலான முடிவுகள் எடுப்பீர்கள். உடன் பிறந்தவர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள். அரசால் ஆதாயம் உண்டு. சொத்துச்சிக்கலில் ஒன்று தீரும். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களைக் கற்றுக்கொள்வீர்கள். வெற்றிக்கு வித்திடும் நாள்.

**தனுசு:** இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். ஆடை, ஆபரணம் சேரும். நட்பு வட்டம் விரிவடையும். வியாபாரத்தில் வேலையாள்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் புதிய அதிகாரி உங்களை மதிப்பார். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**மகரம்:** தேவையற்ற அலைச்சலுக்கு ஆள்படுவீர்கள். அவசரப்பட்டு அடுத்தவர்களை விமர்சிக்க வேண்டாம். சிலர் உதவுவதைபோல் உபத்திரவம் தருவார்கள். வியாபாரத்தில் ஒப்பந்தங்கள் தள்ளிப்போகும். உத்தியோகத்தில் அதிகாரிகளால் அலைகழிக்கப்படுவீர்கள். எதிர்பார்ப்புகள் தாமதமாகி முடியும் நாள்.

**கும்பம்:** யாருக்கும் பணம், நகை வாங்கிக் கொடுப்பதில் ஈடுபட வேண்டாம். சகோதர வகையில் அலைச்சல் இருக்கும். வாகனம் பழுதாகும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களிடம் நயமாகப் பேசுங்கள். உத்தியோகத்தில் மேலதிகாரியை அனுசரித்துப்போக வேண்டும். போராடி வெல்லும் நாள்.

**மீனம்:** உங்கள் அணுகுமுறையை மாற்றிக்கொள்வீர்கள். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். நம்பிக்கைக்குரியவர்களை ஆலோசித்து சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்களைத் தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். சிறப்பான நாள்.

# சுடோக்கு


## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | | | | 4 | | | 8 | 5 |
| | | | 7 | 6 | | | | |
| | 4 | | | | 8 | 7 | 9 | 6 |
| 2 | | | | | 1 | 8 | | |
| | 7 | 1 | 3 | | 5 | 6 | 4 | |
| | | 8 | 4 | | | | | 1 |
| 6 | 2 | 7 | 8 | | | | 1 | |
| | | | | 3 | 6 | | | |
| 1 | 9 | | | 7 | | | | 8 |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 5 | 8 | 4 | 3 | 2 | 1 | 9 | 7 |
| 9 | 1 | 4 | 8 | 7 | 6 | 2 | 3 | 5 |
| 2 | 3 | 7 | 9 | 5 | 1 | 8 | 4 | 6 |
| 7 | 2 | 5 | 6 | 4 | 9 | 3 | 1 | 8 |
| 4 | 8 | 1 | 5 | 2 | 3 | 7 | 6 | 9 |
| 3 | 9 | 6 | 7 | 1 | 8 | 4 | 5 | 2 |
| 8 | 7 | 9 | 1 | 6 | 4 | 5 | 2 | 3 |
| 5 | 4 | 3 | 2 | 9 | 7 | 6 | 8 | 1 |
| 1 | 6 | 2 | 3 | 8 | 5 | 9 | 7 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



நல்லூர் வீரமாகாளி அம்பாள் ஆலயத் திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. கொடியேறிய பின் சுவாமி வெளிவீதியுலா வந்தார். (ம-7)

# மண்டைதீவு கொடூரத்தின் நினைவு

**மண்டைதீவுக் கடலில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்ட குருநகர் மீனவர்கள் 31 பேர் கடற்படையால் படுகொலை செய்யப்பட்டு இன்றுடன் 26 வருடங்கள் நிறைவாகின்றன.**

எம்.ஜி. சீலன்

குருநகரில் இருந்து கரைவலைத் தொழில் செய்வதற்காக மண்டைதீவுக் கடற்பரப்புக்குத் தமது தூயஒளி படகில் சென்றபோது ரோந்து சென்ற இலங்கைக் கடற்படையால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்ட 31 அப்பாவி மீனவர்களின் 26ஆவது வருட நினைவுநாள் இன்றாகும். இத்துயரம் நிறைந்த வரலாற்றுச் சம்பவம் 1986 ஆம் ஆண்டு ஜூன் 10 ஆம் திகதி அதிகாலை நடைபெற்றது.

இந்தச் சம்பவத்தின்போது குருநகரைச் சேர்ந்த அப்பாவி மீனவர்களான கி.இஸ்தாக்கி (வயது-54), பேதுறு செபதேயு சேவியர் (வயது-62), பற்றிக் டோனாஸ் (வயது-60), டோனாஸ் மவுண்ட் (வயது-38), டோனாஸ் டியுக் (வயது-18), எமலியுஸ் மக்ஸ்மஸ் ஈஸ்வரன் (வயது-18), மனவல் மரியநாயகம் (வயது-35), சுப்பிரமணியம் கோபாலகிருஷ்ணன் (வயது-28), அருளானந்தம் பெனடிக்ற் வேனா (வயது-50), பெனடிக் பவியன்(வயது-28), பெனடிக்ற் மாசிலா (வயது-26), பெனடிக்ற் அலிஸ்ரன் (வயது-28), பங்கிராஸ் கமலஸ் (வயது-30), பங்கிராஸ் யூலியஸ் (வயது-32), பங்கிராஸ் தவம் (வயது-25), தமியான் உதயகுமார் (வயது-16), முடியப்பு ராசகுமார் (வயது-33), யோன் ஜோர்ஜ் (வயது-56), மனவல் பயஸ் (வயது-60), ஆசீர்வாதம் அந்தோனிப்பிள்ளை (வயது-70), ஞானப்பிரகாசம் ஜெயபால் (வயது-16), ஞானப்பிரகாசம் ஜெயகாந்தன் (வயது-14), அருளானந்தம் டொமினிக் பொனிபஸ் (வயது-60), அன்ரன் ஷெல்டன் லொயிற் (வயது-21), மனவல் பற்றிக் (வயது-60), சவிரியான் யேசுராசா நிக்ஸன் (வயது-12), முத்துச்சாமி (வயது-30), முத்தையா சாமிநாதன்(வயது-60), அந்தோனிப்பிள்ளை பறுநாந்து(வயது-60), பெனடிக்ற் ரமேஸ் (வயது-18), மற்றும் மண்டைதீவைச் சேர்ந்த இளைஞன் ஒருவனும் கடற்படையினரால் வெட்டியும் குத்தியும் படுகொலை செய்யப்பட்டு தூயஒளி படகினுள் அநாதரவாகப் போடப்பட்ட நிலையில் மீட்கப்பட்டு குருநகர் இறங்கு துறைக்குக் கொண்டுவரப்பட்டனர்.

மீனவர்கள் தொழில் செய்வதற்கு அன்பும் ஆதரவும் பாதுகாப்பும் வழங்கவேண்டிய எமது தேசத்தின் பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்த கடற்படையினர் அடிமைப்பட்ட இனம் என்ற நினைவில் கடற்பரப்பில் கொன்று குதறியதைக் குருநகர் மக்கள் காலம் பூராகவும் நினைவில் வைத்திருக்கிறார்கள்.

இந்த 31 பேரது சடலங்களையும் ஒன்றாக யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் வரிசையாக அடக்கம் செய்து கல்லறைகள் அமைத்துள்ளனர்.

இவர்களது நினைவு குருநகர் மக்கள் மட்டும் நினைவு கூர்ந்தாலும் போதாது இலங்கையிலுள்ள தமிழர்களும் உலகெங்கிலும் உள்ள தமிழர்களும் வரலாற்றில் நினைவுகூர வேண்டும் என்பதற்காக குருநகர் சனசமூக நிலையத்தின் முன்பாக ஒரு நினைவுத் தூபியையும் அமைத்துள்ளனர். இவர்களது நினைவாக குருநகர் புனித சூசையப்பர் கழகம் வருடாவருடம் யாழ். கழகங்கள் பங்குபற்றும் நொக்கவுட் முறையிலான உதைபந்தாட்டப் போட்டியையும் நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மருத்துவ முகாம்

தென்மராட்சி, ஜூன் 10

மட்டுவில் வடக்கு சந்திரமௌலீச வித்தியாலயத்தில் நேற்று படையினரின் ஏற்பாட்டில் மருத்துவ சிகிச்சை முகாம் நடத்தப்பட்டது. சிசிச்சை முகாமில் தென்னிலங்கை மற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வைத்திய அதிகாரிகள் சிகிச்சை வழங்கியதுடன் மருத்துவ பரிசோதனைகளும் நடத்தப்பட்டன. அனைத்து சிகிச்சைகளும் மேற்கொள் [illegible] மட்டுவில், சரசாலை போன்ற இடங்களைச் சேர்ந்தநூற்றுக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர். (ம-9)

## கும்பாபிஷேகம்

தென்மராட்சி, ஜூன் 10

சாவகச்சேரி செருக்கல் பதி பிள்ளையார் ஆலய வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட வள்ளி, தெய்வானை சமேத முருகன் ஆலய கும்பாபிஷேகம் இன்று காலை 6.30 மணிக்கு இடம்பெறும்.

கும்பாபிஷேகக் கிரியைகள் பண்டிதர், கலாநிதி சிவஸ்ரீ ஜெகதீஸ்வரக்குருக்கள் தலைமையில் நடைபெறும். (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாவது ஆண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில்
07.03.1939

ஆண்டவன் அடியில்
11.06.2011

அமரர் நடராசா கனகசேகரன் (கலிக்கற்)

(JP). Retd R.O. the Finance Company, Jaffna.

ஆண்டு ஒன்றல்ல, எத்தனை ஆனாலும்
நின் நினைவு என்றும் அகலாது
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறையும் தெய்வத்துள் வாழும்
உங்கள் நினைவுகளுடன் வாழும்....

இல.42/1/1, உருத்திரா மாவத்தை,
வெள்ளவத்தை.
தொ.பே.0112553372 (F/489) (2-6-9)

மனைவி, சகோதரர்கள்,
மருமக்கள்.

## 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
25.10.1985

இறப்பு
10.06.2001

அமரர் செல்வன் ஸ்ரீநிதி கபில்

கடலன்னை காவு கொண்ட என்னருமை மகனே...
ஆண்டு பதினொன்று ஆனாலும் ஆறுமா எமது துயர்..
தினமும் உன் நினைவில் கண்ணீர் காவியம்
ஆகிறது எம் மனம்....
எனதருமை மகனே உன் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

ஊரெழு கிழக்கு,
சுன்னாகம். (19185) (2-6-9)

என்றும் நினைவில்
குடும்பத்தினர்.

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
17.11.1982

உதிர்வு
15.05.2009

அமரர் சங்கரசிவம் சிவதர்சன்

ஆழ் கடலில் முக்குளித்து
நானெடுத்த முத்தே!
மூன்றாண்டு ஆனதையா - உன்னை
நான் தொலைத்து
மறப்பேனா நான் உன்னை - மறந்தால்
இல்லை நான் அன்னை
மூன்றாண்டென்ன ஏழேழு யென்மத்திலும்
நீ என் மடியின் சொத்தே!

கனகபுரம்
கிளிநொச்சி.
(19258) (45.6.9)

பெற்றோர்

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ்.மாநகரை அண்டிய பகுதிகளிலும் மற்றும் இடங்களில் நான்கு பேர் கொண்ட குடும்பத்துக்கு வீடு தேவை.
தொடர்பு:- 0772627890, 0778174907 (19023)

## கடை விற்பனைக்கு

யாழ்.மாநகர எல்லைக்குள், கஸ்தூரியார் வீதியில் கடை விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0773161409 (19085)(2&9)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1978 இல் பிறந்த பூராடம் - 1, கி.பா 28 ½ உடைய விவாகரத்துப் பெற்ற மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்பு:- 0771940059 (19063) (2-6-9)

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

மாலிசந்தி, வதிரி வீதியில் உள்ள மத்திய மகளீர் கல்லூரிக்கு அருகில் உள்ள வீதியில் 31/28 ஆம் இலக்கத்தில் அமைந்த 3 அறைகளுடன் சேர்ந்த வீட்டுடன் 4 பரப்பு 2 /17/32 குளியையுடைய காணி உடனடி விற்பனைக்குண்டு.
தொடர்பு:- இராசதுரை 0779912901 (18659) (2-6-9)

## பதவி வெற்றிடம்

பனிக்கட்டி ஆலை இயக்குநர்கள் உதவியாளருக்கான பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி
Herifage Food Pvt Ltd
651/ 2 Beacd Rd,
Kurunagar, Jaffna. (19058) (2-6-9)

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

af

**The Only Official French Language Centre in Jaffna**

*Learn French the French Way*

யாழ்ப்பாணத்தில் உள்ள Alliance Francaise de Jaffna இன் ஊடாக French மொழி வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன.
ஆர்வமுள்ள எவரும் கற்றுக்கொள்ளலாம்

வகுப்புக்கள்: சனி, ஞாயிறுகளில்...
புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.
61, Kachcheri - Nallur Road, Jaffina Phone: 021 2228093
E-mail: alliancejaffina@yahoo. com
(றக்கா வீதியும் கச்சேரி - நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடி வீடு)
மேலதிக விவரங்களை நேரில்/தொலைபேசியினூடாக பெறலாம். (19107) (45-6-7)

## கண்ணீர் அஞ்சலி




நான் கல்வி பயின்ற பாடசாலைகளான யா/ தமிழ்க் கந்தையா வித்தியாசாலை (அருளானந்தப் பிள்ளையார், கந்தரோடை) மற்றும் யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆகியவற்றின் அதிபராகவும், சிரேஷ்ட ஆசிரியராகவும் எனது மதிப்பிற்குரிய ஆசிரிய தெய்வமாகவும் இருந்து எனக்குக் கல்வி அறிவூட்டிய

அமரர் அப்புத்துரை தற்பரானந்தன் (JP)

அவர்கள் இறைபதமடைந்த செய்தியறிந்து அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன். அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் எனது ஆசிரிய தெய்வத்தின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை இறைஞ்சுகின்றேன்.

துயருறும்:
பொன்னம்பலம் சதீஸ்வரன்
பழைய மாணவன்

நுணவிராயர் கோயிலடி,
சுன்னாகம். (19095) (2-6-9)



# UK and Canadian Education Fair

**Organized by LOHOS GROUP**

### Universities participating in the fair

| | |
|---|---|
| University of East London www.uel.ac.uk | University Bedfordshire www.uel.ac.uk |
| Anglia Ruskin University www.anglia.ac.uk | University of wales, Newport www.newport.ac.uk |
| University of Worcester www.worc.ac.uk | University Of Hull www.hull.ac.uk |
| Cambridge Ruskin International College www.anglia.ac.uk/cric | University of ULSTER www.ulster.ac.uk |

### Consortium of Canadian Colleges and Universities

| | |
|---|---|
| Algonquin College, Ottawa. | North Island College, Vancouver Island |
| Sherdian College, Toronto | Columbia College, Vancouver |
| Conestoga College, Ontario | University of Waterloo, Ontario (Dubai Campus) |

**SPOT ADMISSIONS FOR SEPTEMBER 2012 INTAKE**

**POSTGRADUATE AND UNDERGRADUATE COURSES**

MBA, Architecture, Civil, Electrical, Electronic, Marine Engineering, Computing, Bio Medical Sciences, Pharmacology, Nursing, Social Sciences, Business Management, Media, Art, Education, Research and PhD.

**SCHOLARSHIPS AVAILABLE**

**DATE: Saturday 30th June 2012**
**VENUE: GALLE FACE HOTEL - LOTUS "A" ROOM**
**TIME: 11.00 A.M. TO 7.00 P.M.**

REGISTER TODAY AND MEET TOP UNIVERSITIES
CONTACT : MR.LOHO
Mobile: 0777917929 / Office 011-2577768
தமிழில் தொடர்புகளுக்கு: Dr.இந்திராணி Tel: 0773498660
Lucky Plaza Building, 4 / 7, 4th Floor, St. Anthony's Mawatha, Kollupitiya, Colombo 03.
Email: lohosgroup@sltnet.lk Website: www.lohosgroup.com
Please visit the Fair with your original certificates and a set of photocopies (T/666)

**ENTRANCE FREE**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 1968✱01✱06



மறைவு: 2009✱05✱14

அமரர்
**கதிர்காமராசா** (கர்வன்)

ஆண்டு மூன்று ஆனதோ...ஆறவில்லை என் இதயம்...
ஆறாக ஓடுகின்றதே கண்ணீர்....வற்றாத நதியாகி
ஆனந்தமாய் வாழ்ந்த நம் வாழ்வை
கொடியவன் குறிவைத்தான்...எம் கூட்டை
பிரித்துவிட்டான். பிரிந்த உயிர் மீண்டும் கிடைக்குமா
என்று தவிக்கிறது என் இதயம்... துயரில் வாழும்.......

தந்தை, தாய், மனைவி,
சகோதரர்கள், மருமக்கள்,
பெறாமக்கள், மைத்துனர்மார்,
மைத்துனிமார்.

101/1, A.V.Road
அரியாலை.

(19108-39)

## விபத்தில் காயம்

ஓடிக்கொண்டிருந்த மோட்டார் சைக்கிளின் முன் சில்லில் இருந்து திடீரென காற்றுப் போனதால் நடு வீதியில் மோட்டார் சைக்கிள் புரண்டதால் மோட்டார் சைக்கிள் சாரதி படு காயத்துக்குள்ளானார்.

கரணவாய் குஞ்சர் கடையடிச் சந்தியில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் கரணவாய் மேற்கைச் சேர்ந்த கே.யோகராசா (வயது-50) என்பவரே காயமடைந்தவராவார். முகத்திலும், காலிலும் படு காயத்துக்குள்ளான அவர் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

(ம-8)



## வாடகைக்கு

யாழ்.கன்னாதிட்டி சந்திக்கு அருகில் 1000சதுர அடி விஸ்தீரமான 2 ஆம் மாடி கட்டடம் வாடகைக்கு கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு :- 0776359587,0774002780

## விற்பனைக்கு

வவுனியா உக்கிளாங்குளத்தில்
NT LL-xxxx டிப்பர் வாகனம்
விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 0776172648,
0779571153

## விற்பனைக்குண்டு


TATA 407, சொந்தப் பாவனையில் 22000 km தூரம் ஓடிய, LH-xxxx இலக்கமுடைய லொறி லீசுடன் விற்பனைக்குண்டு.


தொடர்பு:- 0750432800

## 35 வருட காலமாக யாழ்.மக்களின்

நல்மதிப்பைப் பெற்ற
வாகன சுத்திகரிப்பு இயந்திரங்களைப்
பெற்றுக்கொள்ள

ATS ELGI









சகல இயந்திரங்களையும் உத்தரவாதத்துடன்
பெற்றுக்கொள்ள.....

**NORTH AND EAST ENGINEERING**
**JAFFNA ROAD, MANIPAY**

(மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கு அருகில்)
தொ.பே: 021 7200290
★ சகல இயந்திரங்களும் திருத்திக் கொடுக்கப்படும்.

(சி/543-39)

## Language Connection

Learn English
with a British teacher

**Academic English**
**for Professionals**
**IELTS preparation**

474, Navalar Road, Nallur, Jaffna
Call today for Details
077 8385564

## கார் விற்பனைக்குண்டு

HD-XXXX தொடரிலக்கமுடைய Mitsubishi lancer car விற்பனைக்குண்டு

தொடர்பு: 0777379283

## மலிவு விற்பனை

வெளிநாட்டில் இருந்து தருவிக்கப்பட்ட புதிதும் பாவிக்கப்பட்டதுமான குளிரூட்டி (A/C) இயந்திரங்கள் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:- passifia Cooles
இருபாலை சந்தி. 0776653875

## வாடகைக்கு

சேர் பொன் இராமநாதன் வீதியில் யாழ். பல்கலைக்கழகத்திற்கு அருகில் 4 அறைகள் கொண்ட சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு

தொடர்பு- 011 2554097
0777833807

## விற்பனைக்கு

வர்த்தக நிலையத்தில் பாவித்த தளபாடங்கள், கண்ணாடி பிற்றிங், கணினி, குளிரூட்டி (A/C) ஆகியவை விற்பனைக்கு உண்டு.

தொடர்பு :- 077 6949816



# மரண அறிவித்தல்

## திருமதி ஞானம்மா இராஜசிங்கம்

(ஓய்வுபெற்ற உப அதிபர், சண்டிலிப்பாய் வடக்கு தமிழ் கலவன் பாடசாலை)



ஆலங்குழாய் சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஞானம்மா இராஜசிங்கம் 07.06.2012 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சந்திரசேகரம்-இராசம்மா தம்பதியரின் ஏகபுத்திரியும், காலஞ்சென்றவர்களான முத்துமாணிக்கம்-சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும், முத்துமாணிக்கம் இராஜசிங்கத்தின் (இளைப்பாறிய கணக்காய்வு அத்தியட்சகர், Supdt of Audit) பாசமிகு மனைவியும், கௌரி (கனடா), கலாரஞ்ஜனி (பிரான்ஸ்), லதாரஞ்ஜனி (ஆசிரியை, சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி), டனராஜ் (Dr. யாழ். போதனா வைத்தியசாலை), ஹேமன்ரன் (ஆசிரியர், வவுனியா வெளிக்குளம் கனிஷ்ட உயர் வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயும், கோபிகிருஸ்ணா, கிருஸ்ணமூர்த்தி (தனியார் போக்குவரத்து சாரதி-788 இளவாலை), தயா, கௌரி ஆகியோரின் பாசமிகு மாமியும், துசிதா, கிருசாந், நிரோஷன், நிலக்ஷினி, நிஷிஷன், நிஷாஷினி, யுலக்ஷினி, கோகுலக்ஷன், டனுலக்ஷன், டினோஜன், சுதர்ஜன், ஹரிஷன், கிரிஷா, ரோஷன், தன்யா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் நாளை (11.06.2012) திங்கட்கிழமை காலை 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று இரங்கற் திருப்பலி பெரியவிளான் புனித யுவானியார் தேவாலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு, பூதவுடல் புனித யுவானியார் சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இராஜசிங்கம் (கணவர்),
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

ஆலங்குழாய்,
சண்டிலிப்பாய்.

(190/5-39)

# மரண அறிவித்தல்



## Dr. சிதம்பரப்பிள்ளை கந்தையா

அல்லைப்பிட்டி மூன்றாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் நவாலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட Dr. சிதம்பரப்பிள்ளை கந்தையா (DAM RIMP) நேற்று 09.06.2012 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - முத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் பாக்கியத்தின் அன்புக் கணவரும் ஞானசேகரம் இந்திராதேவி, சந்திராதேவி, இராசசேகரம், சந்திரசேகரம், ஜெயரூபன், கோமதி, ஜெய்சங்கர், சுரேஸ்குமார், உதயகுமார், நிர்மலாதேவி, சாந்தகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (10.06.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக நவாலி ஆரியம்பிட்டி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நவாலி தெற்கு (கேணியடி),
மானிப்பாய்.

(19100)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(சி/477)


## அலுவலகத்துக்கு வீடு தேவை

வதிரி கரவெட்டி எனும் முகவரியில் இயங்கிவரும் வடமராட்சி, சுருக்கெழுத்துக் கழகத்திற்கு வதிரிச்சந்தியை அண்டிய பகுதியில் சகல வசதிகளுடனான வீடு தேவைப்படுகின்றது. வீடு வாடகைக்கு கொடுக்க விரும்புவோர் கழகத்துடன் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அத்துடன் எமது கழகத்தில் தற்போது ஆரம்பித்துள்ள 3 மாத கால இலவச தட்டச்சுப் பயிற்சி நெறியில் பயில விரும்பும் மாணவர்களையும் இணைந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(19043) (45.6.9)

## பணி நயப்பும் வரவேற்பும்





பணிநயப்பு
**திரு. சு. சண்முகவடிவேல்**
(முன்னாள் கிராம அலுவலர், நீர்வேலி தெற்கு).

வரவேற்பு
**திரு. சி. தயாபரன்**
(கிராம அலுவலர், நீர்வேலி தெற்கு)

காலம்: இன்று (10.06.2012) ஞாயிறு பிற்பகல் 2 மணி
இடம்: திருமுருகன் மணி மண்டபம் நீர்வேலி.

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

விழாக்குழு
சார்பாக
தலைவர்: இ. குணநாதன்

(19047) (45.6.9)

## சட்டறிங் அடித்துக் கொடுக்கப்படும்

கட்டடத்திற்கு சட்டறிங் உடன் அடித்துக் கொடுக்கப்படும். ஒரு ஸ்குயர் ரூபா 7000/= மட்டும்

**தொடர்புகளுக்கு : 077 8167864**

(18955)(6-7-8)

## இறைச்சிக்கோழி விற்பனை

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்யப்பட்டு விற்பனையாகின்றது.சுத்தம் செய்யப்பட்ட புறொயிலர் இறைச்சி ரூ.470 மட்டுமே தினமும் காலை 6 மணி தொடக்கம் மாலை 8 மணிவரை திறக்கப்படும்

நல்லூர் பாம் சென்ரர்
#19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர் யாழ்ப்பாணம் (18767)

## காணி விற்பனைக்கு

கைதடிச் சந்தியில் இலங்கை வங்கிக்கு முன்பாக A9 வீதிக்குத் தெற்குப் பக்கமாக அமைந்துள்ள 7 1/3 பரப்பு விஸ்தீரண காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: **077 1608595, 021 3211220**

(18999)

## REALMATRIMONY யின் மணப்பந்தல்

- **1982,** உத்தராடம், Engineer, மணமகளுக்கு மணமகன் தேவை.
- **1983,** மகம், Teacher, மணமகளுக்கு மணமகன் தேவை.
- **1987,** பூரம், GAQ, மணமகளுக்கு மணமகன் தேவை.
- **1980,** சதயம், B.Com GAQ, மணமகளுக்கு மணமகன் தேவை.
- **1983,** திருவோணம், Teacher, மணமகளுக்கு மணமகன் தேவை.
- **1986,** மகம், B.B.M, மணமகளுக்கு மணமகன் தேவை.
- **1979,** ரேவதி, BSc, MBA & CMI, UK Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.
- **1976,** புணர்பூசம், Doctor, Divorced, UK PR மணமகனுக்கு மணமகள் தேவை.
- **1979,** பூரம், Engineer, Christian RC மணமகனுக்கு மணமகள் தேவை.
- **1980,** கேட்டை, Engineer UK மணமகனுக்கு மணமகள் தேவை.
- **1979,** விசாகம், Engineer மணமகனுக்கு மணமகள் தேவை.
- **1980,** ரோகினி, IT Professional மணமகனுக்கு மணமகள் தேவை.

இல.18, மல்லிகா லேன், கொழும்பு 06.
www.realmatrimony.com
E.Mail:support@realmatrimony.com
Contact : 011- 4344229

MMW (சி/676)

## வாழ்க்கையில் வெற்றி பெற நல்லதொரு தொழில்

வெளிநாடுகளில் பிரபல்யமான (குடிவகை, சொக்கலட், கேக், ஐஸ்கிறீம், PVC, பெயின்ட், ரயர், சீட், கிளவுஸ், சவர்க்காரம், பால்மா மற்றும் வாசனைத்திரவியங்கள்), தொழிற்சாலைகள், பலவற்றின் உற்பத்திகள், பொதிசெய்தல், லேபல், களஞ்சியம், நிர்வாக பிரிவுக்கும் ஆண்/பெண்

* துறைமுகத்தில் (தனியார்) பிரிவில் : (தச்சர்/ஒட்டுனர்/கன்டேனர்சாரதி/வாகன உதவியாளர் மற்றும் வேலையாள்கள்)
* விமான நிலைய (தனியார்) பிரிவில் : (சுத்தம் செய்தல்/பாதுகாப்புப்பிரிவு மற்றும் மென்ரக வாகனசாரதிகள்)
* நீண்ட கால நிர்மாண வேலைகள் : (மேசன்/தச்சு/கூரைவேலை/பெயின்ரர்/மின் இணைப்பாளர்கள், உதவியாளர்கள்)
* ஹோட்டல் சேவைகள் (சமையற்காரர்/சமையல் உதவியாளர், ஸ்ருலட், றூம்போய்ஸ்)
* பாதுகாப்புப்பிரிவு : (வங்கி/ஹோட்டல்/பாடசாலைகள்/தூதரகங்கள் என்பவற்றுக்கான பாதுகாப்பு (ஆண்/பெண்கள்)
* வாகனப் பிரிவில் : (6 Wheel, 10Wheel, டிப்பர் (ஐமுவர்) Forclift, J.C.B.ஒப்ரேடர் மற்றும் உதவியாளர்
* காரியாலயங்களுக்கான : (எழுது வினைஞர்/காசாளர்/கணக்கு உதவியாளர்/கணினி இயக்குநர் மற்றும் உதவியாளர்)

(1) 18 - 60 ஆண்/பெண் இருபாலாருக்கும் (தரம் 6 முதல் A/L வரை)
(2) ரூபா 20,000/=, 32,000/=,40,000/=,50,000/= வரையான சம்பளம்

திருமணமான, திருமணமாகாத எவரும் ஒரு தொழிற்சாலையில் உணவு மற்றும் தங்குமிட வசதிகளுடன்

**விசாரிக்க : 077 8999299**
**இணைத்துக் கொள்ளல் : அனுராதபுரத்தில் 136, பிரதான வீதி, அனுராதபுரம்**
(16875)(6-8-9)

## மரண அறிவித்தல்

திருமதி *கனகரத்தினம் செல்லம்மா* (ஆத்தை)



பெரியமதவடி, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் செல்லம்மா கடந்த (06.06.2012) புதன்கிழமை இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்தியநாதர், தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்புமகளும், காலஞ்சென்றவர்களான காசிநாதர் பொன்னுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கனகரத்தினத்தின் அன்பு மனைவியும், இரவீந்திரன் (அவுஸ்திரேலியா), வசந்தி (கொழும்பு), சுமதி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும், வானதி, க.மோகனதாஸ், இ.திருஞானசம்பந்தமூர்த்தி ஆகியோரின் மாமியும், காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், நடராசா, குலமணி, கனகரத்தினம், சிவசுப்பிரமணியம் மற்றும் அன்னம்மா (கனடா), நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச்சகோதரியும், அபிநயா, மிதுலா, ஹம்சிகா, யனுஜா, கேசிகா, சுலோசன், அனுசன், கிருத்திகா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.06.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பெரியமதவடி,
சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.
(19070)(6-7-8)

தகவல்
பிள்ளைகள்
இரவீந்திரன் (மகன்)

## நீங்கள் நீரிழிவு நோயினால் அவதிப்படுகிறீர்களா இதோ உடன் நிவாரணி

"கொத்தல கிம்பட்டுவ"
KOTHALA HIMBATU PANAYA

இந்த மருந்தின் பலாபலனை குறுகிய காலத்தில் அறிந்து கொள்ளலாம். உங்கள் அருகில் உள்ள சித்த ஆயுர்வேத டாக்டரிடம் ஆலோசித்தும் பாவியுங்கள்
சந்தைப்படுத்துவோர்:
சிவா நறுமணப் பூங்கா, 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி. 021 2222 567

(சி/296) (45.6.7)


## வீடு வாடகைக்கு உண்டு

யாழ். சுண்டுக்குளி, கொழும்புத்துறை வீதியில் விதானையார் வீதிக்கு முன்பாக சகல வசதிகளும் கொண்ட (7 Rooms + A/c) வீடு வாடகைக்கு உண்டு. (நிறுவனங்கள் விரும்பத்தக்கது).

தொடர்பு: 077 8325 839

(19076) (45.6.9)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும், நன்றி நவிலலும்



தோற்றம்
**28.01.1968**

மறைவு
**11.05.2012**

**அமரர் இராமலிங்கம் கலாநாதன்** (சிவா)

கடந்த (11.05.2012) அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் இராமலிங்கம் கலாநாதன் அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (10.06.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்வுகளிலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


அன்னாரின் மரணச் சடங்கில் கலந்துகொண்டோருக்கும், அவரது மறைவுச் செய்தியறிந்து பல வழிகளிலும் அனுதாபங்களை தெரிவித்தோருக்கும், உதவி புரிந்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(தயவுகூர்ந்து இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

"சிவன் இல்லம்"
உடுவில் தெற்கு, சுன்னாகம்.

**குடும்பத்தினர்**

(19061) (45.6.9)

(சி/669)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்கள் நிறுவனத்துக்கு, தொழில் நிலையத்துக்கு காரியாலயத்துக்கு ஆண், பெண் ஊழியர்கள் தேவையா?

காரியாலயங்களுக்கு: எழுதுவினைஞர், கணக்கு உதவியாளர், காசாளர், கணினி இயக்குநர் உட்பட எல்லா விதமான காரியாலய சேவையாளர்கள்
தொழிற்சாலைகளுக்கு: உற்பத்தி/பொதி செய்தல்/சேல் பிரிவுக்கு ஆண், பெண் வேலையாள்கள்
பாதுகாப்பு பிரிவு: பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்
நீண்டகால நிர்மாணம்: தச்சு/மேசன்/சட்டறிங்/பெயின்ரர்/டயில்ஸ் பொருத்துவோர் மற்றும் உதவியாளர்
ஹோட்டல்களுக்கு: சமையல்காரர்/ஸ்ரவுட்/சமையல் உதவியாளர்/ மேற்பார்வையாளர்/றூம் போய்ஸ்
போக்குவரத்து பிரிவு: 6 wheel, 10 wheel சைமோர் உட்பட எல்லாவிதமான பிறவாகன சாரதிகள் உட்பட JCB, Forclipt, wheelorder, Scawaoa ஒபரேடர் மற்றும் உதவியாளர்கள் உட்பட உங்கள் தேவைகளுக்கேற்றவாறு எல்லா வேலையாள்களை நம்பிக்கையான முறையில்உங்கள் இடத்துக்கே வழங்குவோம்.

விவரங்களுக்கு:071 3460295, 025 4983642,
N.T.S. Pvt LTD, இல.136, மெயின்வீதி, அநுராதபுரம். (16876) (6,9,10)

## விழிநீர் அருவி சொரியும் பதினோராம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 16 ★ 02 ★ 1977
உதிர்வு 27 ★ 05 ★ 2001
திதி: ஷஷ்டி (10.06.2012)

### அமரர் பஞ்சரத்தினம் ஜனார்த்தனன்

அன்புச் செல்வனே
நீ மீண்டும் வருவாய் என
உன் உறவுகள் விழிமேல் விழி
வைத்து காத்திருக்கின்றன...
சிறகொடிந்த பறவையாய்
தவிக்கிறோம் நாம் ... உன்
ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கும் .. உன்

3/3, பத்திரகாளி, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
அப்பா, அம்மா, சகோதரிகள் மற்றும் மச்சான்மார், உறவினர்கள்.

## காணி விற்பனைக்குண்டு

இல. 71/21, புங்கன்குளம் வீதியில் அமைந்துள்ள (2 ½) பரப்பு வெற்றுக்காணி உடன் விற்பனைக்குண்டு.
(தரகர் தேவையில்லை)
தொடர்புக்கு: 0771606332 (19044) (6,9,10)

## இருபத்தைந்தாம் ஆண்டு நினைவுப்பிரார்த்தனை



இறைவனின் படைப்பு 03 * 05 * 1956
இரக்கமற்றவர்களின் பறிப்பு 18 * 05 * 1987

திதி: 10.06.2012

### திருமதி ஜெயந்தி தேவி யோகேஸ்வரன்

(முன்னாள் ஆசிரியர், உருத்திரபுரம் மகா வித்தியாலயம், கிளிநொச்சி)

யாழ். கோப்பாயில் பிறந்து குல மகளாய்
வாழ்ந்து நல்லாசிரியராய் பணியாற்றி
கடமைக்குச் சென்றவேளை - ஆனையிறவில்
உம்மை காலனிடம் பறிக்கொடுத்தோம்
இரக்கமுள்ள இனிய தாயே இனி
எப்பிறப்பில் உமைக் காண்போம்
வழிபாடு செய்து வணங்குவதை விட
எமக்கு வழி ஏது?

இல. 7/8, நகராட்சி மன்ற வீடமைப்புத்திட்ட வீதி, இலிங்கநகர், திருகோணமலை.
தொ.இல:077-0797917
கணவர், பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்,
தகவல்: வி.யோகேஸ்வரன். (ச/324) (6,9,10)

## வேலையாள்கள் தேவை

கோழிப்பண்ணையில் பணி புரிவதற்கு பின்வரும் வேலையாள்கள் தேவை. ஆர்வம் உள்ளவர்கள் நேரில் வரவும்.
சிட்டை எழுதுநர் (Bill Clerk), (பெண்)-01
கூடு பராமரிப்பாளர்கள் (பெண்கள்) - 02
கூடு பராமரிப்பாளர் (ஆண்) - 01
இரவுக் காவலாளி (ஆண்) - 01
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

வீனஸ் பாம் விற்பனை நிலையம்
இல.20, அரசடி வீதி, தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம்.

வீனஸ் பாம்
முத்து தம்பி ம.வி
வடக்கு ஒழுங்கை, கலாசாலை
திருநெல்வேலி. (19039) (6,9,10)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். பல்கலைக்கழக பாதுகாப்புத் திணைக்களத்தில் 09.03.1990 இல் இருந்து பாதுகாப்பு உத்தியோகத்தராக இருபத்தி இரண்டு (22) வருடங்கள் சேவையாற்றி இன்று (10.06.2012) ஓய்வுபெறும் எமது சங்க அங்கத்தவர்

### திரு. நாகமணி பிறின்ஸ் நவநேசன்

அவர்களுடைய சேவையைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் தமது ஓய்வுக்காலத்தில் குடும்பத்துடன் சீரும் சிறப்புடன் பல்லாண்டு காலம் வாழ மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாதுகாப்புத்திணைக்களம், யாழ்.பல்கலைக்கழகம்.
(19071) (6,9,10)

வாழ்த்துவோர்:
பாதுகாப்பு உத்தியோகத்தர் நலன்புரி சங்கம்.

## நீங்கா நினைவில் மூன்றாம் ஆண்டு



மலர்வு 17*01*1949
உதிர்வு 14*06*2009


### அமரர் வெற்றிவேலு சாந்தலிங்கம்

திதி: 10.06.2012


ஆண்டுகள் மூன்றும் அகன்றாலும்
ஆறாது எம் மன வேதனை
நீங்கள் வேண்டும் என்று
தினந்தேடும் எங்கள்
வேதனைகள் தீருவது எப்போது
உயிராயும் உறவாயும்
உலாவி வரும் வேளையிலே
பறித்தாரே எம்மை விட்டு காலன் அவன்.


த.மு: 84, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
நிர.மு: 3ஆம் வட்டாரம், அல்லைப்பிட்டி.
குடும்பத்தினர் (C533) (6,9,10)



# TELESONIC Air Power


TL- 1611

**Wall Fan**
Soft Touch Tilting Angle Adjustable
3 speed Choices
Oscillation Controlled By Double-line Pull Switch

TL- 2040
**Industrial Fan**
Large Air Volume at Low Noise
Strong Motor for Long Service Life
3 Speeds and Adjustable Oscillation Angle
Available Sizes 20", 26", 30"
12 Months Warranty on Motor


**Summer King**
Double Ball Bearings Motor
Well Balanced Blades For Quiet Operation
16 - Pole Powerful Motor
Embossed SLS Logo On Motor Cover
Hum-Free Electronic Regulator
24 Months Warranty on Motor
Available Sizes 36" 56"

TL- 1224
**Box Fan**
12" Blades
Complete Plastic Body For Easy Maintenance
Low Energy Consumption
12 Months Warranty On Motor



**Exhaust Fan**
Available Sizes 8", 10", 12"
12 Months Warranty On Motor
TL- 1632

**Floor Fan**
Available Sizes 12", 16", 18", 20"
Built-in Over Load Protecting Device For Safe Operation
Aluminium Blade For Powerful Wind
Ideal For Home, Office, Hotel, Store & So On
12 Months Warranty On Motor

TL- 1216FF

**Stand Fan**
3 Speed Oscillating Option
Low Energy Consumption 60 w
16" Rust Free Blades
12 Months Warranty
Spares Freely Available
TL- 1674




**Cabin Fan**
16" Rust Free Blades
3 Speed Oscillating option
Low Energy Consumption 50 w
12 Months Warranty
Spares Freely Available
TL- 16130F

**Table Fan**
3 Speed Oscillating Option
Low Energy Consumption 50 w
16" Rust Free Blades
12 Months Warranty
Spares Freely Available

TL- 1603

விலை 3275/= இலிருந்து

A Lifetime Of Refreshing Air

Jaffna : - Selva Electricals - 0777 113 884 / Sundharson Manipai - 021-2 255 136 / Midea Electro Mart - 0777 238 542 / Minnila Electricals - 0778 392 107
Trincomalee / Batticaloa :- Burhans - 0776 703 175 / Eastern Electronics - 0772 291 356 / Mega Electricals - 0779 598 383 / Mubarak Traders - 0777 489 843

ஏக விநியோகஸ்தர்
**TELESONIC INTERNATIONAL**
இல 18, டேசி விஜய மாவத்தை (ரீப்ளிகேசன் வீதிக்கு முகப்பாக), கொழும்பு-04.
Tel: 2 50 8160-2 Fax: 2 50 1726 E-mail: info@telesonicintl.com
Mr. Croos :- 077 3 424 191 / 071 4 414 048
(C/667)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வைத்திய ஆலோசனை நிலைய இடமாற்றம்

இல.14 மணிக்கூட்டு வீதியில் அமைந்துள்ள லம்போ கிளினிக் 11.06.2012 முதல் ஆஸ்பத்திரி வீதி வெளிநோயாளர் பிரிவுக்கு முன்பாக (MOTHER CARE CLINIC) அருகில் இடமாற்றப்படவுள்ளது.

பொது வைத்திய நிபுணர் டாக்டர் திருமதி எஸ். நாகேந்திரன் அவர்கள் தினமும் நோயாளர்களை காலை 9.00 மணியிலிருந்து 12 மணி வரையும் பார்வையிடுவார். ஏனைய வைத்திய நிபுணர்களின் ஆலோசனைகளும் மாலை 4 மணிக்குப் பின் வழங்கப்படும் முற்பதிவுகளை மேற்கொள்வதற்கு (0777220721) தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொள்ளவும்.

நிர்வாகம்
LAMBO CLINIC

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 03 ★ 06 ★ 1954



மறைவு 23 ★ 05 ★ 2011

### அமரர் செல்லத்துரை ஜெயபாலன்

*ஓர் ஆண்டு ஆனதுவோ*
*உங்கள் முகம் கண்டு*
*ஆறவில்லை நம் இதயம்*
*அன்பும் பாசமும் நிறைந்த*
*பொக்கிஷம் நீங்கள்*
*நித்தம் புலம்புகின்றோம்*
*உங்கள் திருமுகம் காணாமல்*
*ஆறவில்லை எங்கள் துயர்.*

உங்கள் பிரிவால் துயருறும்:

அருளானந்தபிள்ளை ஜெயராணி (ஜெயா)
புது வீதி, கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

ஸ்ரீகாந்தன் ஜெயரஞ்சிதமலர் (ரஞ்சி)
''அபிராமி இல்லம்'',
மானிப்பாய் வீதி,
ஆறுகால்மடம்.

(19087)

## மரண அறிவித்தல்

### திருமதி மேரி றெஜினா பிரான்சிஸ் (அழகம்மா)



வவுனியாவைச் சேர்ந்த திருமதி மேரி றெஜினா பிரான்சிஸ் (அழகம்மா) லண்டனில் 29-05-2012 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சவிரிமுத்து முதலியார் வேந்தக்கோன் - அக்னெஸ் அம்மா தம்பதியரின் சிரேஸ்ட புத்திரியும், காலஞ்சென்ற மிருசுவிலைச் சேர்ந்த லிகோரி பிரான்சிஸ் (இளைப்பாறிய தலைமை ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், ஜெயராஜா, பத்மினி, விமலா, றஜனி, றாகினி, யோகினி, சுலோஜினி ஆகியோரின் அன்புத் தாயும், அருட். சகோதரி மிரியம் (தி.கு.க) பொன்றோஸ் மரியாம்பிள்ளை, காலஞ்சென்றவர்களான துரைராஜா, பொன்ராஜா, கிறேஸ், இராஜக்கோன், செபரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், பிராங்கா, மைக்கல், வெஸ்லி, தவராஜா, அருமைதாஸ், வலன்ரைன், தோமஸ் ஆகியோரின் அன்பு மாமியும், சூரியா, மதி, யாழினி, அன்ரனி, சூசானா, நிறோசன், நிலோமா, றமணி, றதினி, யோசவ், நீக்கலஸ், பிரான்சிஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், றைலீனின் அன்புப் பூட்டியும், முத்துதுரைராஜா, பி.ஜே.இராஜா, காலஞ்சென்றவர்களான அருட்.சகோதரர் பத்திநாதர் (C.R), பாக்கியநாதர், திரேசாமலர், செசீலியா, மரியாம்பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 13-06-2012 நண்பகல் 12 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, மரியாள் சேமக்காலை, வெம்லி, லண்டனில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(C-529)

### முன்பள்ளிகளின் விளையாட்டு விழா

தென்மராட்சிப் பிரதேச முன்பள்ளிகளின் குடும்ப வலய மட்ட விளையாட்டு விழா நேற்று சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெற்றது.

சாவகச்சேரி, கைதடி, வரணி, கொடிகாமம், கச்சாய், மட்டுவில் ஆகிய முன்பள்ளிக் குடும்பங்களைச் சேர்ந்த சிறார்கள் போட்டிகளில் கலந்து கொண்டனர்.

வலய மட்ட போட்டியில் முதலிடம் பெற்ற மாணவர்கள் யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ள மாவட்ட மட்டப் போட்டியில் பங்குபற்றவுள்ளனர்.

தென்மராட்சி கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.பாக்கியராசா தலைமையில் நடைபெற்ற விளையாட்டு விழாவில் தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி, உதவிக் கல்விப் பணிப்பாளர்களான க.சின்னத்துரை, த.சிவகுமார், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

(ம-9)

### உணவகங்கள் கண்காணிப்பு

குருநகர், ஜூன் 10

குருநகர் பொதுச் சுகாதார பரிசோதகர் பகுதியில் உள்ள உணவகங்களை கண்காணித்து அவற்றின் சுகாதார நிலைகளின் படி தரப்படுத்தும் நடவடிக்கை துரிதமாக நடைபெற்று வருவதாக யாழ்.மாநகரசபையின் குருநகர் பகுதிக்கான பொதுச் சுகாதார பரிசோதகர் ஜே.ராஜா தெரிவித்தார்.

குருநகர் பகுதியில் உள்ள 12 தேநீர்ச் சாலைகளில் 8 தேநீர்ச் சாலைகள் ''பி'' தரத்திலும் 4 தேநீர்ச்சாலைகள் ''சி'' தரத்திலும் தரப்படுத்தப்பட்டுள்ளதுடன் 'பி'தரத்தில் ஒரு வெதுப்பகமும் இயங்கி வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ம-51)


### காணி தேவை

பொன்னாலை - கீரிமலைக்கு இடைப்பட்ட பிரதேசம் மற்றும் எழுதுமட்டுவாள் பகுதிகளில் காணி தேவை.

தொடர்புகளுக்கு: 0777 998863

### கார் விற்பனைக்கு

300- XXXX இலக்க Nissan Super Sallon கார் விற்பனைக்குண்டு

தொடர்பு: 0772299931

### வாடகைக்கு

பலாலி வீதியில் பரமேஸ்வராச் சந்திக்கு அருகில் கடை வாடகைக்கு உண்டு

(19113) தொடர்பு : 021 2226402

### காணி தேவை

யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட பகுதியில் 1 பரப்பு or 1½ பரப்பு காணி தேவை. விற்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு- 0772288218, 0770365988
(கோவில்வீதி, கச்சேரி நல்லூர் வீதி விரும்பத்தக்கது)
(19077)

### விற்பனைக்கு

சிறுகைத்தொழில் முயற்சியில் ஆர்வம் உள்ளவர்களுக்கு!
* கொங்கிறீற்கல் இயந்திரம் (HEAVY DUTY MACHINE) (3மாதங்கள் பாவித்த நிலையில்)
* 500 பலகைகள்
* சீற், மரங்கள் மற்றும் ஏனைய உபகரணங்களுடன்
* HERO HONDA GLAM OUR (WA-XXXX)

தொடர்புகளுக்கு- 0770294160 (19083)

### காணி விற்பனைக்கு

*இருபாலைச் சந்திக்கு அருகில் பருத்தித்துறை வீதியில் அமைந் துள்ள 2 ¼ பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.*

*தொடர்புகளுக்கு:0776446557 (19123)*

### திருமண சேவை

சுலபமான சுய தெரிவு முறையில் மணமக்களைத் தெரிவு செய்ய செவ்வாய், வியாழன் தவிர்ந்த மற்றைய நாள்களில் முற்பகல் 11.00-1.00 மணிக்குள் வேல் அமுதனிடம் விவரங்களை விசாரித்தறிக.
தொடர்பு:- 3-3, Medro Apartment, 55 th Lane, Wellawatte, Colombo - 06.
T.P. 0114873929/0112360488

### நீர்கொழும்பில் வீடு விற்பனைக்கு

சர்வதேச பாடசாலைக்கு அண்மையில் அழகிய வீடு *A/C Room fully Tiled, Lands caped Garden* 20 பேர்ச் (2 பரப்பு) சகல இனத்தவரும் வாழும் அமைதியான சூழல்.
தொடர்புகளுக்கு 0777492991 (19106)

### வேலை வாய்ப்பு

அதிகம் சம்பாதிக்க ஆசையா?
வாழ்க்கையில் சாதிக்க விருப்பமா?
நிரந்தர வேலை வேண்டுமா?
கீழ்வரும் விளம்பர இலக்கத்துக்கு தங்களது சுயவிவரக் கோவையை தொடர்பு இலக்கத்துடன் சமர்ப்பிக்கவும்.
விளம்பர இல-4365 பே/ப-உதயன்
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

### வீட்டுடன் காணி விற்பனைக்கு

ஊரெழு பலாலி வீதியில் மேற்குப் புறமாக திலீபன் வீதியில் உள்ள 2ஆவது காணி 7½ பரப்பு வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு- 0778455437 (19094)

### விற்பனைக்கு

புதிய நல்ல நிலையிலுள்ள சிறிய லைற் (இயந்திர இல.MD90E-2122817) NP HC 3677 இலக்கமுடைய MD - 90 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு
(19089) தொடர்புக்கு : 077 6620341

### MITSUBISHI FREEZER TRUCK

Model: PA-FE82DEV



- Green / White Diesel, 2006
- Cabin Length : 14.5 feet
- Engine Capacity: 4890 CC
- unregistered

Call 0714 239 502

651/31, Sir Oliver Gunathilake Gardens, off Elvitigala Mw, Narahenpita. (Road opposite Lanka Hospital)

giz Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit (GIZ) GmbH

## SRI LANKAN-GERMAN DEVELOPMENT COOPERATION

## VACANCIES

The Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit (GIZ) is an international cooperation enterprise for sustainable development with worldwide operations. As a federally owned enterprise, we support the German Government in achieving its objectives in the field of international cooperation for sustainable development. GIZ drives projects that support Sri Lanka's development objectives and works with stakeholders from across the spectrum in the government, public and private sectors. GIZ ensures that its solutions are innovative, humanitarian and economically viable and sustainable in the long term.

The programme Education for Social Cohesion (ESC) is jointly carried out by the Ministry of Education (MoE), the Ministry of Health (MoH) and the National Institute of Education (NIE) with the Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit (GIZ). The overall objective of the ESC programme is to support measures in education and psycho-social care which enable children, youths, their families and communities to live together peacefully in a multi-ethnic and multi-lingual society. The programme supports the MoE, the MoH, the NIE and the Provincial Education Offices in the Northern and Eastern Provinces as well as in the plantation sector provinces (Uva, Sabaragamuwa and Central Provinces) in improving and expanding their range of services.

GIZ-ESC project invites applications from dynamic and committed professionals for the positions of:

### Assistant to Senior Subject Matter Specialist - Language Education

A. **Sphere of responsibility**
Under the guidance of the Senior Subject Matter Specialist, conduct and support teacher training; provide technical support to the curriculum reform process; document and report; support the implementation of the program, prepare monitoring reports; conduct regular meetings with stakeholders.

B. The detailed job description can be obtained from **giz-hrsrilanka@giz.de**

C. **Required qualifications, competences /skills and experience**
- University degree;
- 5 years professional experience preferably in the field of development activities;
- Documented experience in report writing, monitoring and data analysis;
- Good command of English, Sinhala and Tamil both verbally and in writing.

### Project Finance Officer (Trincomalee)

A. **Sphere of responsibility**
Perform professional accounting and administrative work in maintaining GIZ's accounting and budgeting functions and responsibilities while observing the organisational Rules and Regulations.

B. The detailed job description can be obtained from **giz-hrsrilanka@giz.de**

C. **Required qualifications, competences/skills and experience**
- CIMA / ICA / ACCA part qualification;
- 5+ years of professional experience with International Organizations or non-Governmental sector;
- Strong computer Skills (Ms office);
- Excellent command of English and Tamil (knowledge of Sinhala advantageous)

Applications must include a cover letter together with an updated CV including email & telephone contacts of two professional referees and email to giz-hrsrilanka@giz.de or mail to the Human Resource Unit, GIZ-Colombo, No. 5 Jawatte Avenue, Colombo 5, **before cob 20 June 2012.**

*We thank all applicants but only the candidates who meet all the listed criteria will be invited for an interview/test.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கர் மூலம் ஹுவாவே தயாரிப்பு இலங்கையில் புதிதாக அறிமுகம்

சிங்கர் ஸ்ரீலங்கா மூலம், அண்ட்ரொயிட் தொழில்நுட்பத்தில் அமைந்த ஹுவாவே ஸ்மார்ட் போன் வகைகளும், பாட் வகையும் இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. உலகப்புகழ் பெற்ற ஹுவாவே ஸ்மார்ட் போன் வகைகள் மற்றும் பாட் வகையை இலங்கையில் இறக்குமதி செய்து விநியோகிக்கும் அங்கீகாரத்தை சிங்கர் பெற்றுள்ளது. இந்த அறிமுக நிகழ்வு நேற்று வியாழக்கிழமை கொழும்பு பார்க் ஸ்ரீட் மிவ்ஸில் இடம்பெற்றது. ஹுவாவே ஸ்ரீலங்கா தயாரிப்புகளின் வர்த்தக நாம தூதுவராக பிரபல சிங்கள தொலைக்காட்சி நாடகங்கள் மற்றும் திரைப்பட நடிகரான சாரங்க திசாசேகர நியமிக்கப்பட்டுள்ளார்.

தொலைத் தொடர்புகள் மற்றும் மொபைல் சாதனங்கள் தயாரிப்பில் சர்வதேச ரீதியில் பிரபல்யம் பெற்ற ஹுவாவே, இலங்கையில் தனது புதிய ரக ஸ்மார்ட் போன் வகைகள், மீடியா பாட் மற்றும் மொபைல் போன் வகைகள் சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், இதன் மூலம் இளைஞர்களிடையே ஸ்மார்ட் போன் புரட்சியை ஏற்படுத்தவும் திட்டமிட்டுள்ளது. இந்த அறிமுக நிகழ்வில் 7 விதமான ஸ்மார்ட் சாதனங்கள் வெளியிடப்பட்டிருந்தன. இவற்றில் அண்ட்ரொயிட் ஜின்



ஜர்பிரெட் தொழில்நுட்பத்தில் அமைந்த ஹுவாவே அக்செண்ட் ரக 3 தொலைபேசிகள், ஐஸ்கிறீம் சான்ட்விச் தொழில்நுட்பத்தில் அமைந்த 2 தொலைபேசிகள், ஹுவாவே ஹொனர் ஸ்மார்ட் போன் மற்றும் ஹுவாவே ட்ப்லெட் பீசியான மீடியாபாட் போன்றன உள்ளடங்குகின்றன.

புதிதாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள ஸ்மார்ட் போன்கள் மற்றும் மீடியாபாட் என்பன, Wi&Fi, 3G HSPA தொழில்நுட்பத்திறன் கொண்டு அமைந்துள்ளதால், வேகமான இணையச் சேவைகளை பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் தொடு திரையுடனான தொழில்நுட்பத்திறனையும் கொண்டுள்ளன. கண்கவர் வடிவங்களில் இவை அமைந்துள்ளதுடன், அனைத்துவிதமான அப்ளிகேசன்களையும் இயக்க அவசியமான ஜாவா போன்ற மென்பொருள் கட்டமைப்புகளையும் கொண்டுள்ளன.

இலங்கையின் இளம் தலைமுறையை கவரும் வகையில், இந்த ஹுவாவே ஸ்ரீலங்காவின் வர்த்தக நாம தூதுவராக பிரபல நாடக மற்றும் திரைப்பட நடிகரான சாரங்க திசாசேகர நியமிக்கப்பட்டுள்ளார். இவர் பிரிட்டனின் நோர்த்தம்பிரியா பல்கலைக் கழகத்தின் இளமாணிப்பட்டம் பெற்றுள்ளதுடன், அண்மையில் இடம்பெற்ற ரைகம் தொலைக்காட்சி விருதுகள் நிகழ்வில், பிரபல்யம் பெற்ற நடிகருக்கான விருதை வென்றிருந்தார், கடந்த ஆண்டும் இவர் இந்த விருதை வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

# சிலோன் ஒக்சிஜனின் புதிய இணையத்தளம்

லீண்டா குரூப்பின் உறுப்பினரான சிலோன் ஒக்சிஜன் உத்தியோகபூர்வமாக தனது கம்பனியின் புதிய இணையத் தளமான www.linda.lk என்பதை கம்பனியின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள மட்டக்குளியில் ஆரம்பித்து வைத்தது.

மிகவும் எதிர்பார்க்கப்பட்ட இவ்விணையத்தளத்தை ஆரம்பித்து வைத்த சிலோன் ஒக்சிஜன் கம்பனியின் பிரதான நிறைவேற்று அதிகாரி நிறன் பீரிஸ் குறிப்பிடுகையில், இது கம்பனியின் சரித்திரத்தில் ஒரு மைல்கல் எனவும் தற்போது அதிகளவு கேட்போர்களை அடையக் கூடியதாகவுள்ளது எனவும் கூறினார்.


இப் புதிய இணையத்தளத்தின் மூலம் இலங்கை... தற்போதுள்ள புதிய வாடிக்கையாளர்களை மட்டுமன்றி அதன் தாய் கம்பனி மூலம் கம்பனியின் பல்வித உற்பத்திப் பொருட்களையும் சேவைகளையும் அறிவிக்க முடியும்.

லிண்டா குரூப் உலகின் பல பாகங்களிலும் 100 க்கு மேற்பட்ட நாடுகளில் செயற்படுகிறது. நாட்டின் துரித உட்கட்டமைப்பு அபிவிருத்தி, பொருளாதார வளர்ச்சியில் பல சர்வதேச கம்பனிகள் இலங்கையில் மூலதனமிடுகின்றன. அவர்களுக்கு சிலோன் ஒக்சிஜன் போன்ற முன்னோடி, சர்வதேச தரத்தைக் கடைப்பிடிக்கும் நம்பிக்கையான வாயு வழங்குனர் தேவைப்படுகிறது என பீஸ் கூறினார்.

எமது செயற்பாடுகளில் பாதுகாப்பு முக்கிய இடம் வகிப்பதால் வாயுவை பாதுகாப்பாக கையாளுவதற்கான அறிவுரைகள் போன்றவை பற்றி விரிவான தகவல்களை எமது வாடிக்கையாளர்கள் இவ் இணையத்தளத்தில் பார்வையிடலாம் என பீரிஸ் கூறினார்.

சிலோன் ஒக்சிஜன் தனது தாய்க் கம்பனியான லிண்டா குரூப்பின் ஒத்துழைப்புடன் நாட்டில் கைத்தொழில் வைத்தியத்துறை வாய்ப்புக்களை வழங்கும் ஒரு முன்னோடி நிறுவனமாகும். மதிப்புக்குரிய எமது வாடிக்கையாளர்களுக்கு புதுமையான தீர்வுகளை வழங்கி அதனால் உன்னத விளைவுகளை ஏற்படுத்த நாம் கடமைப்பட்டுள்ளோம் எனப் பீரிஸ் குறிப்பிட்டார். (த)

# நவீன வசதிகளுடன் இயங்கும் வோல்ட்ரிம் தேயிலை ஆலை




தேயிலை உற்பத்தியில் பல்வேறு நவீன நுட்பமுறைகள் தற்காலத்தில் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன. இலங்கையை பொறுத்தமட்டில் பெருந்தோட்ட கம்பனிகளின் மூலம் நிர்வகிக்கப்படும் பகுதிகளில், மிக அண்மையில் கட்டப்பட்ட தேயிலை தொழிற்சாலையாக வட்டவளை பிளான்டேஷன் கம்பனியை சேர்ந்த வோல்ட்ரிம் தேயிலை தொழிற்சாலை அமைந்துள்ளது.

தெற்காசியப் பிராந்தியத்தில் அமைந்துள்ள மிகச் சிறந்த தேயிலை தொழிற்சாலையாகக் கருதப்படும் இந்த வோல்ட்ரிம் தேயிலை தொழிற்சாலையின் செயற்பாடுகளை நேரில் சென்று பார்வையிடுவதற்கான வாய்ப்பு அண்மையில் பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனத்தின் ஊடாக ஊடகவியலாளர் குழுவொன்றுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருந்தது.

லிந்துல பிரதேசத்தில் அமைந்துள்ள இந்த வோல்ட்ரிம் தொழிற்சாலை 2010ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17ஆம் திகதி நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

இந்தத் தொழிற்சாலையின் மேற்பார்வை நடவடிக்கைகளை வட்டவளை பிளான்டேஷன் கம்பனியின் பொது முகாமையாளர் பினேஷ் என்.பனன்வில மற்றும் சிரேஷ்ட முகாமையாளர் எம்.எஸ்.ஏ.அக்பர் ஆகியோர் மேற்கொண்டு வருகின்றனர்.

# எக்ஸ்போலங்கா ஹோல்டிங்ஸ் இலாபமாக ரூபா 1.23 பில்லியன்

இலங்கையின் முன்னணி ஆண்கள் ஆடை நிபுணத்துவ நிறுவனமான ஹமீடியா, மூன்றாம் தலைமுறையைச் சேர்ந்த மணமகன்களுக்கு ஆடை அணிவிப்பதையிட்டு தன்னளவில் பெருமிதம் கொள்கின்றது.

1949ஆம் ஆண்டில் செயற்பாடுகளை ஆரம்பித்த ஹமீடியா, கடந்த பல வருட காலமாக பரிமாண வளர்ச்சி கண்டு நாட்டின் மிகவும் எதிர்பார்ப்பைப் பெற்ற மணமகன்களுக்கான ஆடை வழங்குனராக முதலிடத்தைப் பிடித்துக் கொண்டுள்ளது. ஹமீடியா நிறுவனத்தின் உற்பத்திகள் மணமகன்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதல்ல. மாறாக, எந்தவொரு நிகழ்வுக்குமாக ஆண்களை தயார்ப்படுத்தும் ஆற்றலை இந்தநிறுவனம் தன்னகத்தே கொண்டுள்ளது.

ஆண்களின் நவநாகரிகம் மற்றும் ஆடை வழங்கல் மூலமான தனது பயணத்தில் இந்த நதி மூலத்தினை அடையாளமிடும் விதத்தில் ஹமீடியா நிறுவனமானது, தையல் நேர்த்தியின் அவசியத்தை உட்பொதித்துள்ள புதுமையான ஒரு பிரசாரத்துடன் - திருமணங்களின் மாதமான ஜூன் மாதத்தை கொண்டாடுகிறது.

மூன்று தலைமுறைகள் - வாழ்ந்து கொண்டிருக்கும் பாரம்பரியம்...' என மிகப் பொருத்தமான தொனிப் பொருளைக் கொண்டமைந்துள்ள இப்பிரசாரமானது மூன்று உள்ளடக்கங்களை கொண்டுள்ளதுடன் தையல் கலைஞரால் தைக்கப்பட்ட ஆடைகள், ரெடிமேட் ஆடைகள் மற்றும் திருமணத்திற்கான தயார்படுத்தல்சார் தீர்வுகள் போன்றவற்றை மையமாகக் கொண்டதுமாகும்.

ஹமீடியா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் பௌசுல் ஹமீட் கூறுகையில், 'இலங்கையைப் பொறுத்தவரை கிட்டத்தட்ட 90 வீதமான மணமகன்கள் தமது திருமண நாளின் கடைசி நேரம் வரைக்கும் தமது ஆடைகளைத் தெரிவு செய்யாமல் காத்திருக்கின்றனர் என்ற மனம் வருந்தத்தக்க தகவல் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இருந்து மீண்டும் ஒரு தடவை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது' என்றார்.

## பொருளாதார நெருக்கடியை கப்ரால் ஏற்றுக்கொண்டார்

நிர்ணயிக்கப்பட்ட பொருளாதார இலக்கை இவ்வருடம் அடைய முடியாது என இலங்கை மத்திய ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார். இலங்கை மத்திய வங்கியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்தாண்டுடன் ஒப்பிடும் போது இவ்வருட பொருளாதார வளர்ச்சி வீழ்ச்சியடைந்துள்ளது. வருட இறுதியில் இந்த நிலை மேலும் வீழ்ச்சியடையும் என அவர் கூறினார். இது குறித்து மேலும் விளக்கமளித்த ஆளுநர்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது 1.1 வீதமாக பொருளாதார வளர்ச்சி (8.3 வீதத்திலிருந்து 7.2 வீதமாக வீழ்ச்சி) வீழ்ச்சியடைந்துள்ளது. பண வீக்கம் 7 வீதமாக அதிகரித்துள்ளது. இவ்வருட இறுதியில் இது மேலும் அதிகரிக்கும். இந்த நிலையில், இறக்குமதியைக் கட்டுப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில், இவ்வருடம் 20.9 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு வெளிநாட்டு இறக்குமதி வரையறுக்கப்படுகிறது என குறிப்பிட்டார். (த)

# ஒறிபிளேம் யாழ்.மண்ணில் வெற்றிநடை போடுகிறது

சுவீடன் நாட்டில 1967 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஒறிபிளேம் நிறுவனம் இன்று உலகளாவிய ரீதியில் தனது 45 ஆவது ஆண்டு நிறைவை, வெற்றிகரமாக கொண்டாடிக் கொண்டிருக்கிறது.

இலங்கையில் தனது கிளையை 1997 ஆம் ஆண்டு ஆரம்பித்து இன்று வடபகுதிமக்கள் நலன் கருதி, தனது 5 ஆவது கிளை நிறுவனத்தை யாழ்ப்பாணத்தில் கடந்த 2010 ஆம் ஆண்டு ஆரம்பித்து, மிகவும் குறுகிய காலத்தில் வெற்றி நடை போட்டுக் கொண்டிருக்கிறது.

''பொதுமக்களது கனவை நனவாக்குவதை'' பிரதான நோக்கமாகக் கொண்டிருக்கும் ஒறிபிளேம் நிறுவனம் இன்று உலகளாவிய ரீதியில் 3.8 மில்லியன் பொது மக்களதும், இலங்கையில் 15,000 பொது மக்களதும், யாழ்ப்பாணத்தில் மிகவும் குறுகிய காலத்தில் 2500க்கும் மேற்பட்ட பொதுமக்களதும் கனவுகளை நிறைவேற்றியுள்ளது, என்பதில் பெருமிதம் அடைகிறது.

பொதுமக்களுக்காக உருவாக்கப்பட்ட இந்த நிறுவனம் பொது மக்களது வாழ்க்கை அழகாகத் திகழ! பணம் சம்பாதிக்க! வினோதமடைய!!! போன்ற மூன்று வழிகளில் மாற்றி அமைக்கிறது.

### அழகாகத் திகழ

இயற்கையில் தயாரிக்கப்பட்ட 650 க்கும் மேற்பட்ட அழகு சாதன உற்பத்திப் பொருள்களை ஒவ்வொரு வயதினருக்கும், ஒவ்வொரு சருமத்திற்கும் ஏற்ற வகையில் தயாரித்து விநியோகிப்பதோடு ஆண், பெண் மற்றும் குழந்தைகளுக்கு ஏற்ற வகையில் தரம் பிரித்து வழங்கியும் வருகிறது.

[illegible] 1500இற்கு மேற்பட்ட [illegible]க்கு அழகுக் கலைப் [illegible] இலவசமாக வழங்கி [illegible] சான்றிதழ்களையும் வழங்கியுள்ளது. அத்துடன் அவர்கள் சொந்தமாக அழகுக் கலை நிலையங்களை அமைப்பதற்கு உதவிகளையும் செய்துள்ளது.

### பணம் சம்பாதிக்க

2500 மேற்பட்ட பொதுமக்கள் இன்று யாழ்ப்பாணத்தில் இணைந்து சராசரி வருமானமாக ரூபா 10000 ஐ யும் அதிகூடிய வருமானமாக ரூபா 45,000 வரையும் உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். (ஒறிபிளே [illegible] கூடிய சந்தர்ப்பம் உண்டு.) தமிழர்கள் பொருளாதார நிலையில் சிறந்த இடத்தைப் பெற்றிருக்கிறார்கள் என்பதை நினைக்கையில் பெருமையாக உள்ளது.

### வினோதம் அடைதல்

வாழ்க்கையில் நாம் இழந்த சந்தோஷத்தையும் பல புதிய நண்பர்களையும், பல புதுவித அனுபவங்களையும் ஒறிபிளேம் ஊடாக பெற்றுக் கொள்ளலாம். உள்ளூரில் பல இடங்களுக்குச் சென்று வருவதோடு ஒரு வருடத்துக்கு ஒரு தடைவை இலவச வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொள்ளும் அரிய சந்தர்ப்பமும் கிடைக்கும்.

யாழ்.வாழ் பொதுமக்களே, ஒறிபிளேம் சுவீடன் நாட்டின் நிறுவனம் உங்களுக்காக உருவாக்கப்பட்ட நிறுவனம். இந்நிறுவனத்தில் இணைந்து கொண்டு உங்கள் வாழ்க்கையை மாற்றியமைத்துக் கொள்ளுங்கள். அழகாகத் திகழ, பணம் சம்பாதிக்க, வினோதமடைய என்ற முறையில் கொள்ளுங்கள்.

இன்று முதல் தடவையாக ஒறிபிளேம் நிறுவனம் யாழ்.மண்ணில் பிரமாண்டமான முறையில் மாபெரும் கண்காட்சியை எதிர்வரும் யூன் 10ஆம் 11 ஆம் திகதிகளில் காலை 9.30 மணி முதல் மாலை 6.30 மணிவரை யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடாத்த உள்ளது. இக்கண்காட்சியில் விற்பனைக் கூடமும் இடம்பெறும். இக்கண்காட்சியை குடும்ப சகிதம் வந்து கண்டுகளியுங்கள். அன்றைய தினம் இணைபவர்களுக்கு இலவச அழகுக் கலைப்பயிற்சியில் கலந்து கொள்ளும் சந்தர்ப்பமும் உண்டு. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்தியசுகத்தை நோக்கி...

உதயன் வைத்தியமலர் 69

## அடிமையாகவே அழிந்து போவதா?

புகைக்கும் குடிக்கும் அடிமையானோம்
பொல்லாத போதைக்கு அடிமையானோம்
இயற்கை உணவுகளை வெறுத்தொதுக்கி
இரசாயன உணவுகளுக்கு அடிமையானோம்
சோற்றுக்கும் புட்டுக்கும் அடிமையானோம்
சொட்டும் பகட்டுக்கும் அடிமையானோம்
செந்தமிழ் உணர்வுகளை மிதித்து நிற்கும்
செருப்புக்கு செருப்பாகி அடிமையானோம்
இனிக்கும் உணவுக்கு அடிமையானோம்
''இன்னா செய்தார்க்கும்'' அடிமையானோம்
தொலையாத தொல்லையாய் தொடர்ந்துவரும்
தொலைக்காட்சித் தொடர்களுக்கும் அடிமையானோம்
அஞ்சிற்கும் பத்திற்கும் அடிமையானோம்
வஞ்சகர் புத்திக்கும் அடிமையானோம்
கஞ்சி, பால், முட்டையில் சலிப்படைந்து
சத்துமா பேணிகளுக்கு அடிமையானோம்
உயிர்குடிக்கும் சோடாவுக்கு அடிமையானோம்
உழைக்காமல் உட்கார்ந்து அடிமையானோம்
தலை நிமிர்ந்து தன்மானம் காத்தநாமே
தலையாட்டித் தலையாட்டி அடிமையானோம்
அடிமைத் தளைகள் அவிழ்படட்டும்
அடக்க நினைப்பவை அறுபடட்டும்
தூக்கம் மறந்து துயர் குடிக்கும்
துயர வரலாறு துடை படட்டும்.

**சி.சிவலிங்கநாதன்**
வைத்திய நிபுணர்,
யாழ்.போதனா வைத்தியசாலை.

## சிறுநீரைக் கட்டுப்படுத்துவது சிரமமா?

**கேள்வி:**- எனக்கு வயது 55, மூன்று பிள்ளைகள் உள்ளனர். நீரிழிவு நோயாளியான நான் சிறு நீரை அடக்க முடியாது அவதிப்படுகிறேன். சிரிக்கும்போது, இருமும் போது கட்டுப் பாடில்லாமல் சிறுநீர் கசிகிறது. தங்களின் ஆலோசனையை எதிர்பார்க்கிறேன்.

**பதில்:**- பலமாகச் சிரித்தல், இருமுதல், தும்முதல் மற்றும் பாரம் தூக்குதல் போன்ற உடற் செயற்பாடுகளின்போது சிறுநீர்ப் பையினுள் உள்ள சிறுநீரின் அமுக்கம் சிறுநீர் வழியிலுள்ள அமுக்கத்தை விட அதிகரிக்கும்போது கட்டுப்பாடின்றி சிறுநீர் வெளியேறல் சிறுநீர் அடங் காமை (Stress Incontinence) எனப்படும். இந்தப் பிரச்சினை பெண்களையே பெருமளவில் பாதிக் கின்றது. இந்தப் பிரச்சினை 40 வயதுக் குட்பட்டோரில் 2 வீதமானோரையும் 40 வயதுக்கு மேற்பட்ட பெண்களில் ஏறத்தாழ 20 வீதமானோரையும் பாதிக்கிறது. அநேகமான பெண்கள் வெட்கம் காரணமாக இது சாதாரண தொழிற்பாடு எனப் பிழையாக நினைப்பதன் காரணமாக வைத்திய சிகிச்சை பெறத் தவறி விடுகின்றனர். சிறுநீர் வழி (Urethra) கீழிறங்குவதாலும் சிறுநீர் வழியிலுள்ள அமுக்கம் சிறுநீர்ப் பையினுள் உள்ள அமுக்கத்தைவிடக் குறைவதாலும் இந்தப் பிரச்சினை ஏற்படுகின்றது.

பிறப்புரிமைக் குறைபாட்டால் சிறுநீர்ப்பைக் கழுத்தையும் சிறுநீர் வழியையும் தாங்கி வைத்தி ருக்கும் இழையங்களின் பலமிழப்பு, பிரசவத்தின்போது ஏற்படும் இடுப்புக்குழியின் தளத்தி லுள்ள தசைகளில் ஏற்படும் சேதம், மற்றும் நரம்பு துண்டிக்கப்படுதல், கர்ப்பம் தரித்தல், மாத விடாய் நிறுத்தத்தின்(Post menopause) போது ஏற்படும் இழையங்களின் இழப்பு, இடுப்பென்பில் ஏற்படும் முறிவு, யோனி வழிச் சத்திரசிகிச்சை, உடற்பருமன் அதிகரிப்பு, சிலமருந்து வகைகள் போன்றவை சிறுநீர் அடங்காமைக்குரிய காரணிகளாகின்றன. சிறுநீர் வழி கிருமித்தொற்று, அதிகரித்த இருமலும் தும்மலும், புகைத்தல், நீரிழிவு நோய், அதிகரித்த மது மற்றும் கோப்பி பாவனை, மருந்துகள் (Diuretics), ரெனிஸ், ஓடுதல் போன்ற விளையாட்டுக்கள், சுவாசப்பை நோய்கள்,நரம்பியல் நோய்கள், வயதாகுதல் போன்றவை இந்தப் பிரச்சினையை மேலும் மோசமாக்குகின்றன. சிறுநீர் அடங்காமையானது இருமல், தும்மல், தேகப் பயிற்சி, உடலுறவு நீண்டநேரம் நிற்றல், பாரம் தூக்கல் போன்ற செயற்பாடுகளின்போது கட்டுப் பாடின்றி சிறுநீர் வெளியேறும் பிரச்சினையாகும். சிறியளவில் வெளியேறும் சிறுநீர் பெண்களுக்கு அசெளகரியத்தையும் துர்மணத்தையும் ஏற்படுத்திவிடுகிறது.

சிறுநீர் கழிக்க வேண்டுமென்ற ஆவல் இல்லாதபோது எமக்கு உணரக்கூடியதாக சிறுநீர் வெளி யேறும். இந்தப் பிரச்சினை தோல் அழற்சி, மன அழுத்தம்,வெட்கம், வேலைக்குழப்பம், தனி நபர் உறவுப் பிரச்சினை மற்றும் பாலியற் சிக்கல்களைத் தோற்றுவிக்கலாம்.

சிறுநீர் அடங்காமையை எவ்வாறு குணப்படுத்தலாம் என்று பார்ப்போம்.

**பழக்க வழக்க மாற்றங்கள்-**

புகைத்தலை நிறுத்த வேண்டும், கோப்பி, மதுபானங்களைத் தவிர்த்தல், சிறுநீர் நாளேட் டைப் பேணல், தேவையான அளவுக்கு மேலதிகமாக நீராகாரங்கள் எடுப்பதைத் தவிர்த்தல், அடிக்கடி சிறுநீர் கழித்தல், துள்ளுதல், ஓடுதல் போன்ற செயற்பாடுகளைக் குறைத்தல், ஒவ்வொரு நாளும் ஒழுங்காக மலங்கழித்தல், நிறை குறைத்தல், நீரிழிவு நோயாளியின் குருதி வெல்ல மட்டத்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருத்தல்.

இடுப்புக் குழித் தளத் தசைப் பயிற்சி (Pelvic Floor Exercise) சிறுநீர்க் கசிவைக் கட்டுப் படுத்தும். இதை வைத்திய ஆலோசனையின்படி செய்தல் நலம். மின்சாரத் தூண்டுதல் சிகிச்சை (Electraical Stimulation Therapy) தசைநார் சுருங்கி விரியும் தன்மையைக் கூட்டும்.

குறைந்த, நடுத்தர அளவு பிரச்சினைக்கு மருந்துகள் தீர்வை அளிக்கக் கூடியன. இந்த மருந்து களை வைத்திய ஆலோசனையின்படியே பாவித்தல் வேண்டும்.

மேற்கூறிய முறைகள் பயனளிக்காவிடத்து சத்திரசிகிச்சை முறையை நாடலாம்.

**சிறுநீர் அடங்காமையைத் தவிர்க்கும் முறைகளாவன**

பிரசவத்தின் போதான தசைகளின் சேதத்தைத் தவிர்த்தல், உடல்நிறையைப் பேணல், நீரிழிவு, சுவாசப்பை நோய்களை வராது பேணுதலும் கட்டுப்பாட்டில் வைத்திருத்தலும், இடுப்புக் குழித் தளத் தசைப் பயிற்சிகளை அனைத்துத் தாய் மாரும் மேற்கொள்ளல்.

சிறுநீர் அடங்காமையை மறைக்காது வைத் திய ஆலோசனையின்படி சிகிச்சை பெறுவ தன் மூலம் சுகதேகியாக வாழலாம்.

**மருத்துவர் [illegible]**
**யாழ்.போதனா வைத்தியசாலை.**

உதயனின் இந்த வைத்தியமலர் யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவுச் சிகிச்சைப் பிரிவால் தொகுத்து வழங்கப்படுகிறது. மலர் சம்பந்தமான உங்கள் அபிப் பிராயங்களையும் மருத்துவம் சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் - நித்திய சுகத்தை நோக்கி..., நீரிழிவு சிகிச்சை நிலையம், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். உங்கள் வினாக்களும் அதற்கான பதில்களும் இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.

## பாலுடன் நீரும் வேண்டாம்

குடும்ப சுகாதாரத் தாதி:- ''பிள்ளைக்கு எவ்வளவு நேரத்துக்கு ஒருதரம் பால் குடுக்கிறீங்கள் அம்மா? நிறை நல்லாக் குறைஞ்சு போச்சு....''

தாய் :- ''அழுகிற நேரத்தில் அதிகமாகப் பால்தான் குடுக்கிறனான். சில நேரத்தில பால் போதாம இருக்கும். அந்த நேரத்தில் கொஞ்சம் சுட்டாறின தண்ணீ இல்லாட்டி கற்கண்டுத் தண்ணி பருக்கிறனான்... கொஞ்சமாத்தான்....''

தாய்ப்பாலின் முக்கியத்துவம் பற்றியும், அதன் பயன்கள் பற்றியும் எப்போதும் பேசுகிறோம். யாவரும் அறிந்திருக்கிறோம். பிறந்த குழந்தைக்குத் தேவையான அனைத்து விதமான சத்துக்களையும் தருவதில் தாய்ப்பாலுக்கு நிகர் எதுவுமில்லை.

அதிலும் குழந்தை பிறந்த சில நாள்களுக்குள் சுரக்கின்ற 'கடும்புப்' பாலின் பயன்கள் சொல்லொணாதவை. அளவில் குறைவாகவே சுரக்கப்படுமெனினும் இந்தப் பாலிலுள்ள சிலவகையான புரதங்கள் குழந்தையின் நோயெதிர்ப்புச் சக்தியைப் பேணுவதில் மிகப் பெரும் பங்காற்றுகின்றன.

இந்த ஆரம்ப நாள்களில், குழந்தையின் உடற்தேவைகளுக்கு ஏற்ற, போதுமான அளவில் தாயின் பாற்சுரப்பு இருக்கின்றபோதிலும், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் ''பிள்ளைக்குப் பால் போதாது... அதுதான் அழுது கொண்டிருக்குது. எனக் கூறி தாய்ப்பாலுடன் இடையிடையே சுட்டாறிய நீர், கற்கண்டுத் தண்ணீர் என்பன கொடுக்கப்படுகின்றன.

ஆரம்ப நாள்களில் பாற்சுரப்பு ஒப்பீட்டளவில் குறைவாகவே இருக்கின்றது. ஆனாலும் குழந்தையின் தேவையும் குறைவாகவே இருக்கிறது. குழந்தையில் சிறுநீர் வெளியேறும் அளவு, தடவைகள், மலங்கழிக்கும் தடவைகள், பால்குடித்தபின் தொடர்ச்சியாக 1-2 மணித்தியாலங்கள் தூங்கும் தன்மை, வயதுக்கேற்ற நிறை அதிகரிப்பு என்பனவற்றை வைத்தே பாலின் சுரப்புப் போதுமானதா இல்லையா எனத் தீர்மானிக்க வேண்டும்.

அதேபோல தாயின் மார்பகங்கள் நிரம்பியதான தன்மை, குழந்தை பால் குடிக்கும்போது மறுபக்கத்தில் தன்னிச்சையாக பால் வடிதல் என்பனவும் பாற்சுரப்புத் திருப்திகரமானது என்பதை உறுதி செய்கின்றது.

இவ்வாறு இல்லாத தருணங்களில், பாற்சுரப்பு போதாதென எண்ணி நீரையோ கற்கண்டு தண்ணீரையோ, மாப்பாலையோ கொடுப்பது அநாவசியமானது. தேவையற்ற பிரச்சினைகளை உருவாக்கவல்லது. குழந்தை ஒப்பற்ற தாய்ப்பாலை பெறும் சந்தர்ப்பங்களை இழக்க வைப்பது.

குழந்தையின் உணவுக் கால்வாய்த் தொகுதியில் சுரக்கப்படும் பதார்த்தங்கள் தாய்ப்பாலை இலகுவாக செரிமாணம் செய்ய ஏற்றனவாக உள்ளன.

மேலும் இந்தத் தொகுதியில் காணப்படுகின்ற உடற்றொழிற்பாடுகளில் பங்கெடுக்கின்ற நுண்ணுயிரிகளின் கட்டமைப்பு, தாய்ப்பால் மட்டும் கொடுக்கப்படும்போது குழப்பமடையாது பாதுகாக்கப்படுகின்றது. தாய்ப்பால் தவிர்ந்த ஏனைய பதார்த்தங்களை அறிமுகப்படுத்தும்போது, இந்த நுண்ணுயிரிக் கட்டமைப்பு குழப்பப்படுகின்றது.

இதனால் குழந்தையில் சமிபாடு, அகத்துறிஞ்சல் என்பனவற்றில் பாதிப்புகள் ஏற்படலாம். அத்துடன் உணவூட்டும் சாதனங்கள் மேற்கூறிய பிரதியீட்டுப் பதார்த்தங்கள் என்பனவற்றுடன் சூழலிலுள்ள நுண்ணங்கிகள், கிருமிகள் என்பன குழந்தையின் உணவுக் கால்வாய்த் தொகுதியைச் சென்றடையவும் வழிவகுக்கின்றன. வாந்தி, வயிற்றோட்டம், அஜீரணம் என்பன ஏற்படக் காரணமாகின்றன.

குழந்தை பிறந்த ஆறுமாதங்களுக்கு முற்றுமுழுதாகத் தாய்ப்பாலே வழங்கப்படுவது பரிந்துரைக்கப்படுகிறது. சுட்டாறிய நீர், கற்கண்டுத் தண்ணீர், பழச்சாறு போன்ற பதார்த்தங்கள் எதுவுமற்ற தனிப்பட்ட தாய்ப்பால் வழங்கலே இங்கு குறிப்பிடத்தக்கது.

கலோரிப் பெறுமானம் குறைந்த, குழந்தையின் உடல், மூளை வளர்ச்சிக்கு உகப்பான எந்தப் பதார்த்தங்களும் அற்ற இத்தகைய பிரதியீடுகளால் குழந்தை பெறக்கூடிய தாய்ப்பாலின் அளவு குறைகிறது. குழந்தை பெறும் போஷணையின் அளவும் குறைகிறது.

குழந்தையின் பசியுணர்வைக் குறைப்பதனால் தானாகப் பாலைக் குடிக்கும் ஆர்வம் குறைகிறது. இது இறுதியாகப் பாற்சுரப்பின் அளவைக் குறைத்து உண்மையாகவே பால் போதாத நிலையை உருவாக்குகின்றது.

எனவே குழந்தை தாய்ப்பாலைப் பூரணமாகப் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பங்களில் ஏற்படுத்தும் இடையூறுகளைத் தவிர்ப்போம். ஏனெனில் தாய்ப் பாலை எந்தப் பிரதியீடுகளாலும் இணை செய்ய முடியாது, தாயன்பைப் போலவே.

**வைத்தியர் குமுதினி கலையழகன்.**
குழந்தை நல வைத்தியர்,
விரிவுரையாளர்,
யாழ். போதனா வைத்தியசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள்கள் தேவை

யாழ்.இந்து உயர் கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த கனடா குடி உரிமைகள் உடைய 1970 விசாகம் 8 இல் செவ்வாய் பாவம் 55 உயரம் 5'8" பிரபல தொழிலதிபருக்கும், 1978 விசாகம் குற்றமற்ற பாவம் 23 உயரம் 5'7" உடைய கொம்பியூட்டர் எஞ்சினியர் மணமகன்களுக்கு படித்த அழகிய மணமகள்கள் தேவை. இலங்கை வந்துள்ளார்கள். சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது.

தொடர்புகளுக்கு:-
யாழ். 0771307185, கிளி.0776184434,
வவு.0778501013, மட்.0774494764

(18660) (2-6-9)

## German Deutch Course

ஜேர்மன் செல்வோருக்கான டொச்மொழி வகுப்பு German தூதரகத்தால் நடத்தப்படும் பரீட்சைக்கான டொச் மொழி, ஜேர்மனியில் கற்று பிரசித்தி பெற்ற ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகிறது.
T.P/0773319551
Jaffna College - 464 Hospital Road.

(19135) (2&9)

## வேலையாள் தேவை

தாவடியில் இயங்கும் இன்ரநெற் கபேக்கு Computer அனுபவம் உள்ளவர் உடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு:- 0779852409

(19131) (2-6-9)

## உலகில் தலைசிறந்த அறையில் ஐரோப்பிய நாடொன்றில் கல்வி கற்க

உங்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு......

**UKRAINE, BELARUS, CYPRUS, INDIA**

ஆகிய நாடுகளில்

மருத்துவம், பொறியியல் முகாமைத்துவம் போன்ற கற்கை நெறிகள் மிகக் குறைந்த கட்டணங்களிலும் சலுகைகளிலும் கற்க முடியும்

MEDICINE, -MD (MBS, - DENTIST, NURSING
ENGINEERING - CIVIL, AEROSPACE, COMPUTERS & more
MANAGEMENT -HOTEL, ECONOMICS & More
மற்றும் MEDICINE, ENGINAARING POST GRADUATES

இந்தியா சென்று விசா/கல்வி கற்கும் மாணவர்களுக்கு விமான பயணச்சீட்டு இலவசம்

முதல் 10 மாணவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்டு Laptop ஒன்று இலவசமாக வழங்கப்படும்

மேற்படி கற்கைகள்

- ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் உலக தரம் வாய்ந்த அங்கீகாரம்.
- ஆங்கில மொழிமூலம் (English medium)
- 100% விசா உத்தரவாதம்
- மறைமுகமான கட்டணங்கள் இல்லை
- கட்டணங்கள் அனைத்தும் விசா பெற்ற பின்னரே செலுத்துதல்
- O/L, மற்றும் A/L தகைமையுடன்
- WHO,SLMC, அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ பல்கலைகழகங்கள்
- எம் நிறுவனமூடாக கல்வி கற்கும் மாணவர்களை தொடர்பு கொள்ளும் வசதி
- குறைந்த தனிநபர் செலவு (Education Living Cost)

(18878)

தொடர்புகளுக்கு......

Ukraine International Studies
50 let Oborony Lugansk - 91045
Ukraine +380635762115, +380662083543
E-Mail Ua.Studies2006@gmail.com
Facebook -Ukraineinternational Studies

HIGHFLYING
TRAVELS & TOURS
No.312, Galle road,
Mount Lavinia, Sri Lanka.
0112733113

வவுனியா/மன்னார் 0770886393
யாழ்ப்பாணம் 0712533328
கிளிநொச்சி/முல்லைத்தீவு 0722042337

## சம்பந்தர் குருபூசை

யாழ்ப்பாணம்,ஜூன்10

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் குரு பூசை விழா இன்று காலை 8.30 மணிக்கு நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் நல்லூர் பிரதேச அறநெறிப் பாடசாலையினரும் இணைந்து நடத்தும் இந்த விழா இந்து அபிவிருத்தி உதவி உத்தியோகத்தர் திருமதி மா.அனந்த லெட்சுமி தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் விசேட சொற்பொழிவுகளும் கலைப் போட்டிகளும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (16)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி/அழைப்பும்



அமரர்
கந்தவனம்
சிறீஸ்கந்தராசா
(மாஸ்ரர்)

கண்ணின் கருமணியாய் எமைக்காத்து
இன்று கண்ணீர் மல்க விட்டுச் சென்றதேனோ?
விண்ணில் விடிவெள்ளியாய் போன பின்பும்
எங்கள் விழியில் ஈரம் தனைத் தந்ததேனோ?
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
என்றென்றும் உம் நினைப்பில் நாமிருப்போம்!!!

கடந்த 12.05.2012 இறைவனடி சேர்ந்த எம் குடும்பத்தலைவர் கந்தவனம் சிறீஸ்கந்தராசாவின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நாளை (11.06.2012) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இந்த ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

முத்துவிநாயகர் புரம்,
வலது கரை, முத்தையன் கட்டு,
ஒட்டுசுட்டான்.

(19129) (2-6-9)

- குடும்பத்தினர்.

## விற்பனைக்கு

யாழ்.திருநெல்வேலி, பலாலி வீதி, யாழ்.பல்கலைக்கழகம் ஆகிய வற்றுக்கு அண்மித்த பகுதியில் பரமேஸ்வரா வீதியில் (Compus Lane) 2 பரப்பு, 3 குளி காணி உடன் விற்பனைக்குண்டு. விலை 1 பரப்பு = 38 லட்சத்துக்கு மேல். தொடர்பு:- 0773658485

(C/681) (2-6-9)

## காணி விற்பனைக்கு

சங்குவேலி தெற்கு, மானிப்பாயில் நாற்சதுர வீட்டுடன் சேர்ந்த 7 ½ பரப்புக் காணி விற்பனைக்கு. காணியில் வருமானம் தரக்கூடிய மரங்களும் உள்ளன.
தொடர்புகளுக்கு:- 0774457188/ 0773534449

(C/682) (2-6-9)

## உடன் தேவை

கணினியில் தமிழ், ஆங்கிலம் ரைப்பிங் செய்யக் கூடியவர்களும், டிஜிற்றல் போட்டோ கொப்பி வேலை தெரிந்தவர்கள் மற்றும் பழக விருப்பமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும். (சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்)
தொடர்பு:-0754985445, 0779522444
226, இராமநாதன் வீதி,
திருநெல்வேலி. (யாழ்.பல்கலைக்கழகம் அருகில்)

(19098) (2-6-9)

## பயிற்சி வகுப்பு

அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழுடன் எயர் கன்டிஷனர் எலக்ரோனிக் எலற்றிக்கல் திருத்த வேலைக்கான பயிற்சி வகுப்பு அனுபவம் மிக்க தொழிநுட்ப வல்லுநர்களால் தொழில் முறைப் பயிற்சியுடன் விரைவில் ஆரம்பமாக உள்ளது.
தொடர்பு:- 0776653875, 0778736471, 0779877309

(19152) (2-6-9)

## விற்பனைக்கு உண்டு

இயங்கிக்கொண்டிருக்கும் நெற்கபே, Phone Shop இற்கான கருவிகள், Photo Copy இயந்திரம், Computers விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:-
இல.356, மன்னார் றோட்,
வேப்பம் குளத்தடி, வவுனியா.
T.P. 0772277012, 0247451910

(19114) (2-6-9)

உங்கள்
தராதரத்தை
உயர்த்திக் கொள்வதற்கான
அரிய சந்தர்ப்பம் !



**ஒளிமயமான எதிர்காலத்துக்கான முன்னோடிகளுடன் இணைந்திடுங்கள் !!**

**சர்வதேசத் தராதரமுடைய சான்றிதழுக்கான கற்கைநெறிகளுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்**

ICDL International Computer Driving Licence — Just 6,500/= ONLY

e - Citizen — Just 3,500/= ONLY

**ஆரம்பம் 16.06.2012 சனிக்கிழமை காலை 10.30**

காலம் : 03 மாதங்கள் / 120 மணித்தியாலங்கள்

USAID | SRI LANKA FROM THE AMERICAN PEOPLE

ASAP Accelerated Skills Acquisition Program Empowering Youth Through Career Skills

**துரித திறன்பெறுகை நிகழ்ச்சித் திட்டம்**

பாடசாலை மாணவர்களுக்கான ஆங்கில மொழித் திறன்கள், கணினித்திறன்கள் மற்றும் வியாபார தொழில் முயற்சியாண்மைத் திறன்கள் அடங்கலான கற்கைநெறி முற்றிலும் இலவசமாக நடாத்தப்படவுள்ளது.

**Photoshop CS5**

தொழில் வாய்ப்பைக் கொண்ட திறன் சார் கற்கை நெறி

காலம் : 03 மாதங்கள்

மேலதிக தகவல்களுக்கு :

GATEWAY CICT
347, Kasthuriyar Road, Jaffna
Phone : 021 567 5555 Fax : 021 222 7967
E - mail : gateway[illegible]

(C/548)

## HUMAN RESOURCE MANAGEMENT

- # Assistance in Assignments
- # Past Paper Discussions
- # Business Case Briefings
- # Individual Coaching
- # Self-study Packs
- # Flexible Time Table

(19157)

Group Classes @ CLTP Unit | Register Before 12th June

204, Brown Road, Jaffna. 077 2517223 & 077 4504746

**20% Discount for HND & ABE Students**

## மரண அறிவித்தல்

### திருமதி இலட்சுமிப்பிள்ளை கந்தப்பு (இரத்தினம்)



கரவெட்டி, குலாணையைப் பிறப்பிடமாகவும், கனடா, ரொரன்ரோவை வசிப்பிடமாகவும் தற்போது லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இலட்சுமிப்பிள்ளை கந்தப்பு கடந்த (31.05.2012) வியழக்கிழமை கலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தப்பு - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - பத்தினிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மரு மகளும், காலஞ்சென்ற கந்தப்பு அவர்களின் பாசமிகு மனைவியும், ஆறுமுகம் (குணா-லண்டன்), தனபாலசிங்கம் (தனா), புஸ்பமலர், சாரதாதேவி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும் திவ்யமலர் (கலா), சந்திரகுமாரி, காலஞ்சென்ற பரஞ்சோதி, தர்மகுலசீலன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், புவனேஸ்வரி நடராசா (லண்டன்), காலஞ்சென்றவர்களான வைரமுத்து (தியாகராசா), பாக்கியம், சிவபாதம், செல்வராஜா ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சிவநேசம் கந்தப்பு, சிவராஜா ஆகியோரின் பெரியதாயும், ஆர்த்தி, ஆதிகரன், ஆருதி, தர்மிளா, தர்மதன், ஜனனி, நேர்த்திகா, பிரதீபன், கோபின்,கரன், கோகுல் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரிகைகள் நாளை (11.06.2012) திங்கட்கிழமை காலை 7 மணியளவில் (117 RUSHDEN, Gardens, Clayhall, Ilford IGS OBN என்னும் முகவரியில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக (CITY of London Crematorium, Aldersbrook Road, Manor, Park E12 SDQ) க்கு எடுத்துச் செல்லப்படும். அன்றைய தினத்தில் (11.06.2012) குலாணை துன்னாலை மேற்கில் உள்ள அவரது இல்லத்தில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை பிற்பகல் 4 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வெளிநாட்டு தொடர்புகளுக்கு:
ஆறுமுகம் - பிரித்தானியா: + 447 832 954 281 } மகன்
தனபாலசிங்கம் - பிரித்தானியா: + 447 757 71 9649 } மகன்
புஸ்பமலர்- பிரித்தானியா: + 4420 8472 6782 } மகள்
சாரதாதேவி - கனடா: + 4416 4316091 } மகள்

குலாணை, துன்னாலை மேற்கு,
கரவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்

(இ/545) (45.6.9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தர மாணவர்களுக்கு பயிற்சி முகாம்

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ். கல்வி வலயத்தினால் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான அழகியற்பாட முகாம் நாளை தொடக்கம் 14ஆம் திகதி வியாழக்கிழமைவரை முற்பகல் 9 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை நடைபெறவுள்ளதாக யாழ். கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எஸ். சற்குணராஜா தெரிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் சித்திரபாட முகாம் யாழ். வலயக் கல்வி அலுவலகத்திலும் சங்கீதபாட முகாம் யாழ். செங்குந்தா இந்துக் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது.

இதில் யாழ். வலயத்துக்குட்பட்ட மாணவர்கள் பங்குகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (16)


## PERSONAL CLASS

இணுவிலில் வசிக்கும் 7ஆம் ஆண்டு மாணவனுக்கு English medium- Geography, Civics, Maths, Science, Health ஆகிய பாடங்களுக்கு தனிப்பட்ட முறையில் கற் பிக்க ஆசிரியர் தேவை.

(19132) தொடர்பு : 0213001432

## வாகனம் விற்பனைக்கு



TOYATA TO WNACIE LORRY
ஜப்பான் வாகனம் தட்டுமொடல் இல.
GN - xxxx Auto கியர் வாகனம்
விற்பனைக்குண்டு. லீசிங் வசதி செய்து
தரப்படும். தொடர்புகளுக்கு:- 0776580244
(19136) (2-6-9)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 55 வயதுடைய 7 இல் செவ்வாய் உள்ள தாரமிழந்த ஒரு பெண் பிள்ளையுள்ள சாதாரண தொழில் செய்பவருக்குத் தகுந்த துணை தேவை. சாதி, சமயம் எதுவும் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது. வாழ்வில் பாதிக்கப்பட்டோர், விதவைகள், அனாதைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:-0719208225
(19259) (2-6-9)


## மரண அறிவித்தல்



### திருமதி நாகேஸ்வரி அரியரத்தினம்

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி அரியரத்தினம் கடந்த (07.06.2012) வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் அரியரத்தினம் (விவசாய உத்தியோகத்தர்) அவர்களின் அன்புமனைவியும் காலஞ்சென்றவர்களான தியாகராஜா- பொன்னம்மா தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சுப்பிரமணியம் தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்றவர்களான பொன்னுச்சாமி, சண்முக நாதன் மற்றும் பரமேஸ்வரி (கனடா), வெற்றிவேலு (உசன்), காலஞ்சென்ற அரியரத்தினம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், ரோகினி, சிவகாந்தி (உப அஞ்சல்அதிபர் - மட்டுவில் தெற்கு), சிவகுமாரி (உடுவில்), சிவகாமினி (கனடா), சிவறதினி (கனடா) ஆகியோரின் அன்புத்தாயும், காலஞ்சென்ற செல்வநாதன் (முன்னாள் சாவகச்சேரி, இலங்கை வங்கி எழுதுவினைஞர்), தர்மஜெகநாதன் (உடுவில்), சிறிசந்திரகாந்தன் (கனடா), விநாயகமூர்த்தி (கணேஸ்-கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியும், துவாரகன் (பௌதிக விஞ்ஞானம் 3 ஆம் வருடம், யாழ். பல்கலைக்கழகம்), தமீரன் (யாழ்.இந்துக் கல்லூரி), டிலக்ஷனா (சாவகச்சேரி இந்துக்கல்லூரி), கம்சிகா (யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி), வினிதன் (சாவகச்சேரி இந்துக்கல்லூரி), யதுஷ் (கனடா), அபிநயா (கனடா) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.06.2012) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காந்தாளம்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

தகவல்:
அ.சிவகாந்தி (உப அஞ்சலதிபர், மட்டுவில் தெற்கு)
(147344) (6

## மரண அறிவித்தல்



### செல்வன் விதுரன் சத்தியசீலன்

(Student-University of Wales,Old Student-Royal Institute, Academy of Designer)

அச்சுவேலி தோப்பைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட விதுரன் சத்தியசீலன் 29.05.2012 அன்று வேல்ஸ்சில் அகால மரணமானார்.

அன்னார் சத்தியசீலன் (முன்னாள் தேசிய சேமிப்பு வங்கி ஊழியர்), சுரேந்தினி (முன்னாள் ஆசிரியை யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்) ஆகியோரின் செல்ல மகனும், யுகசாந்தின் அன்புத் தம்பியும், (காலஞ்சென்ற சேனாதிராஜா மற்றும் ஞானம்மா, காலஞ்சென்ற ஐயாக்குட்டி மற்றும் லீலாவதி ஆகியோரின் அன்புப் பேரனும்), சஜந்தனின் ஆருயிர் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்.
(#/683)


## பொன்வசந்தம் திருமண சேவை

- **Mr. S.Srisethuparan.** BSc, MSc (IT)
  Lecturer SLIATE
- **Dr. B.Nimalathasan,** PhD
  Senior Lecturer of Faculty of Management Studies and Commerce, University of Jaffna

For more details contact Dharshiha on 0777 285883 or dharshi.ipm@gmail.com
**Institute of Personnel Management Sri Lanka (Inc.)**
Jaffna Study Centre, No.19, People's Bank 2nd Floor, Stanley Road, Jaffna
Jaffna office will be open daily from 1.00 pm to 5.00 pm except on Mondays

**Next course commencement 24th June 2012 at 9.00am**

**IPM** Sri Lanka
The Nation's Leader in HRM

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிக சலுகைகள் வழங்கும்

# நிலையான வைப்பு

14.25% வ.பொ.வ.வீ. நிலையான வைப்பு

15.25% வ.பொ.வ.வீ. சிரேஷ்ட பிரஜை நிலையான வைப்பு

அதிக நம்பிக்கை
அதிக சலுகைகள்
அதிக பாதுகாப்பு

லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ்
(ஒரு LOLC குழுமக் கம்பனி)

லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ் பிஎல்சி
இல. 100/1 ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, ராஜகிரிய.
தொலைபேசி: 5880880, தொலைநகல்: 2865602
ஈ-மெயில்: lofin@lankaorix.com
இணையத்தளம்: www.lankaorix.com

துரித அழைப்பு
0773815602

## மீன் சாப்பிட்டால் ஞாபகசக்தி அதிகரிக்கும்; ஆய்வில் தகவல்

மீன்களில் ஒமேகா-3 என்ற கொழுப்பு அமிலம் உள்ளது. இந்த அமிலம் மனித உடலுக்கு நல்லது என்று ஏற்கனவே ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இந்த நிலையில் ஒமேகா-3 அமிலம் மனிதனின் ஞாபக சக்தியை அதிகரிக்க உதவுவதாகவும் கண்டுபிடித்து உள்ளனர். இது தொடர்பாக நியூசிலாந்தின் மஸ்கே பல்கலைக் கழக குழுவினர் ஆய்வு நடத்தினார்கள்.

176 பேரை தேர்வு செய்து வஞ்சிரம், இறால் உள்ளிட்ட பல்வேறு வகை மீன்களை 6 மாதங்களாக கொடுத்து ஆய்வுசெய்தனர். இதில் அவர்களுக்கு ஞாபக சக்தி 15 சதவீதம் அதிகரித்து இருந்தது தெரியவந்தது. மேலும் அறிவுக் கூர்மையும் ஏற்பட்டிருந்தது. எனவே மீன்கள் அதிகம் சாப்பிட்டால் அறிவுக்கூர்மை கூடும்.

மூளை சுறுசுறுப்பாக இயங்கும். மனநலம் பாதிக்கப்படுவதை தடுக்கும் என்று ஆய்வாளர்கள் கூறினார்கள். ஒமேகா-3 அமிலம் மனிதனின் உடலில் இயற்கையாகவே சுரப்பது இல்லை. மற்ற உணவுப் பொருள் களிலும் இவை இருப்பதில்லை. மீன்களில் மட்டுமே ஒமேகா-3 இருக்கிறது. எனவே மீன் சாப்பிட்டால் மட்டுமே ஒமேகா-3 கிடைக்கும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

## ஒவ்வொரு பெண்ணும் அறிந்து கொள்ளவேண்டியது




ஒவ்வொரு பெண்ணும் கர்ப்பப்பை புற்று நோயைப் பற்றி அவசியம் அறிந்து கொள்ள வேண்டும். இது ஒரு உயிர் கொல்லி நோய் ஆகும். ஒவ்வொரு வருடமும் 70 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இந்திய பெண்கள் இந்த நோயினால் இறக்கிறார்கள் என ஒரு ஆய்வு கூறுகிறது.சொல்வதற்கு கடினமாக இருந்தாலும் உண்மை இது தான்.

எனவே பெண்கள் கர்ப்பப்பை புற்று நோயை பற்றிய விழிப்புணர்வை அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது. கர்ப்பப்பை புற்று நோயை அறிவதற்கான எளிய வழிமுறைகள் உள்ளன. பாப் ஸ்மேர் எனப்படும் டெஸ்ட்டின் மூலம் கர்ப்பப்பை வாயில் உள்ள செல்களை எடுத்து பேதாலஜி ஆராய்ச்சி செய்வதன் மூலம் முன் கூட்டியே இந்த புற்று நோயை அறிந்து கொள்ள முடியும். இதற்கு நீங்கள் மருத்துவமனையில் தங்க வேண்டிய அவசியமும் இல்லை. வெளி நோயாளியாகவே வந்து செல்லுமளவிற்கு எளிதான பரிசோதனை இதுவாகும். மேலும் இந்த நோய் வருமுன் காப்பதற்கான தடுப்பூசியும் இப்போது கிடைக்கிறது. இந்த தடுப்பூசி கர்ப்பப்பை புற்று நோய்க்கான மிகச் சிறந்த தடுப்பூசிஎன்றும் தெரிவிக்கப்படுகிறது.

# ஈராண்டு நினைவில்...

அன்னையின் மடியில்: 26 . 12 . 1964

ஆண்டவன் அடியில்: 10 . 06 . 2010



## அமரர் பாலசிங்கம் பிரபாகரன்

**(நூலக ஆசிரியர், சிதம்பரக் கல்லூரி) திதி : திரயோதசி**

அன்புருவே! ஆணழகே!!
எம்மிதய வானமதியே
ஈராண்டு ஆனபோதும்
ஈரமையா உம் நினைவு
நல்லவர் மாழ்வதுவும்
தீயவர் வாழ்வதுவும்
இறையவனின் நியதியையா
நல்லவன் நீ நலம் பெற்றாய்
தீயவர் நாம் உழலுகின்றோம்

எம் கடன் செய்யப் பிள்ளை
என்றிருந்தோம் பெருமிதமாய்
உம் கடன் செய்ய வைத்தாய்
ஏங்கியே பரிதவித்தோம்
ஒவ்வோர் மனங்களிலும்
வாழுகின்றாய் உத்தமனே
உடல் தான் அங்கே உயிரிங்கே
வாழுதையா நாம் வாழும் காலம் மட்டும்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

துயருறும்:

செந்தில்பதி,
பொலிகண்டி, வல்வெட்டித்துறை.

(18658)(14.34)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 27 | 11 |
| 12 | 05 |
| 1925 | 2012 |



## அமரர் மகேஸ்வரி நடராஜா

கடந்த 11.05.2012 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவி மகேஸ்வரி நடராஜா அவர்களின் மறைவுச் செய்திகேட்டு பலவழிகளிலும் உதவிபுரிந்தவர்களுக்கும் எமக்கு ஆறுதல் கூறி அரவணைத்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் உள்நாட்டிலும், வெளி நாட்டிலிருந்தும் தொலைபேசி மூலம் அனு தாபம் தெரிவித்தவர்களுக்கும், இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும், இறுதிக்கிரியைகளை மேற்கொண்ட குருமூர்த்திகளுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்வதோடு, வீட்டுக்கிருத்திய நிகழ்வும், மதிய போசன நிகழ்வும் இன்று (10.06.2012) ஞாயிற்றுக்கிழமை 10 மணியளவில் இந்திரபதி, கச்சாய் வீதி, கொடிகாமத்தில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் அனைவரும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

'இந்திரபதி',
கச்சாய் வீதி, கொடிகாமம்.

(19021)(6.14.54)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருடாந்த நிலையான வைப்புக்கணக்கிற்கு சம்பத் வங்கி வழங்கும் அதி கூடிய வட்டி

## நிலையான வைப்பு

A.E.R. - 14%

# 14%

## சிரேஷ்ட பிரஜைகளுக்கான நிலையான வைப்பு

(55 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு) A.E.R. - 14.5%

# 14.5%

**13%** 3 மாதங்களுக்கு
6 மாதங்களுக்கு

A.E.R. 3 மாதங்களுக்கு - 13.65%, 6 மாதங்களுக்கு - 13.42%

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் 0112 30 30 50


சம்பத் வங்கி : பிச் ரேடிங்ஸ் AA-(lka)

සම්පත් බැංකුව
சம்பத் வங்கி
SampathBank

சம்பத் வங்கி PLC-PQ 144 ஸ்ரீலங்காவின் மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டும், கண்காணிக்கப்பட்டும் வரும் வர்த்தக வங்கி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஊழலுக்கு எதிராக கூட்டு 08


விலை கூடிய நாய்? 05


இடம்பிடித்தலும் அடம்பிடித்தலும் 06

மஹிந்தவின் லண்டன் பயணம் 26



சாதிக்கத் தவறும் சங்ககார 24



# சூரியகாந்தி

உதயன்

ஞாயிறு சிறப்பம்சம் 01

உதயன் 10 ஜூன் 2012 ஞாயிற்றுக்கிழமை பக்கங்கள்: இருபத்தெட்டு




# வலிகளை இறக்கி வைக்க...

■ *ஓான்யன்*

## முன்னைய ஜதீகம்

கோவலனின் கழுத்தறுந்த செய்தி கண்ணகியின் காதில் தீயாய் விழுந்தது. ஒற்றைச் சிலம்போடு தலைவிரியாய் எழுந்தாள். பாண்டிய மன்னனிடம் உண்மையை நிரூபித்து தன் சிலம்பை உடைத்தெறிந்தாள். அப்படியும் ஆறவில்லை அவள் சினமும், வலியும். அவளின் கோபக் கனலில் பற்றி எரிந்தது மதுரை. கண்முன்னே தீக்காடாக மாறிய பாண்டிய தேசத்தை விட்டு தன் வலிகளை இறக்கி வைக்க கால் போன போக்கில் நடந்து மறைந்தாள். ஒன்பது இடங்களில் குந்தியிருந்து குடி தண்ணீர் அருந்தி தன் மன வெம்மையை குறைத்துக் கொண்ட கண்ணகி பத்தாவது இடமாக வந்து சேர்ந்த இடம் வற்றாப்பளை. இடையர்களிடம் அவள் வாங்கியருந்திய நீர் எஞ்சியிருந்த அவளின் வலியையும் கோபத்தையும் இல்லாமல் செய்ய அங்கேயே கோயில் கொண்டு விட்டாள்.

[வற்றாப்பளை ஆலய வரலாறு பற்றிய செவி வழிக் கதைகளில் இருந்து]

## பின்னைய ஜதீகம்

வழமைபோல வைகாசிப் பொங்கல் வற்றாப்பளையில். பால் பொங்கி வரும் நேரம். கிழக்கு வானம் வெளுக்கத் தொடங்கியது. வானம் அதிரத் தொடங்கியது. கரும்புள்ளியாய் தோன்றிய இரும்புப் பறவை ஆலயத்தை வட்டமிட்டு, கீழிறங்கி பூமாரி பொழியத் தொடங்கியது. உலகின் கண்களுக்குக் காட்டாமல் பொத்தி வைத்திருந்த வானத்துப் பறவைகளை புலிகள் வற்றாப்பளை அம்மனுக்காக அவிழ்த்து விட்டார்கள். புலிகள் பூமாரி பொழிந்தது ஒரு நன்றிக் கடனுக்காகத்தான்.

''எந்தச் சண்டையைத் தொடங்கிறதெண்டாலும் தலைவர் வற்றாப்பளை அம்மனை கும்பிட்டுட்டே தொடங்குவார். '' போராளிகளுக்கு மட்டுமன்றி தமிழ் மக்கள் அநேகருக்கு இந்த விடயம் தெரிந்திருந்தது. அதனால் புலிகளின் குல தெய்வமாகவும் தமிழ் மக்களின் விடுதலைக் கடவுளாகவும் வற்றாப்பளை அம்மன் மாறிப் போனாள். ஆனையிறவுச் சமர், முல்லைத்தீவுத் தாக்குதல், செய் அல்லது செத்து மடி நடவடிக்கைகள், கட்டுநாயக்க வான்படைத் தளம் மீதான கரும்புலித் தாக்குதல், எல்லாளன் நடவடிக்கை என புலிகளுக்கு வாகை சூடித் தந்த எல்லாச் சமர்களும் நடப்பதற்கு முன்னர் புலிகளின் தலைவரின் பிரசன்னம் வற்றாப்பளையில் இருந்ததாகவும் மக்கள் தமக்குள் பேசிக் கொண்டார்கள். தலைவர் வற்றாப்பளைக்கு வந்தாலே ''பெடியள் பெரிசா எதையோ அடிக்கப் போறாங்கள்'' என்று சனங்கள் தாமாகவே நடக்கப்போகும் தாக்குதலைப் பற்றி எதிர்வு கூறத் தொடங்கினார்கள். அப்பாவி மக்கள் மீதான அரச படைகளின் விமானத் தாக்குதல்கள் எறிகணை வீச்சுகள் பொருளாதாரத் தடைகள், ஈவிரக்கமற்ற படை நகர்வுகள், இடப்பெயர்வுகள் என்பவற்றால் வலியில் துடித்துக் கொண்டிருந்த மக்களுக்குத் தலைவர் வற்றாப்பளைக்கு வந்து கும்பிட்டு விட்டு விட்ட செய்திதான் வலி நிவாரணியாக இருக்கும்.

'' தலைவர் வந்தபடியால கிட்டடில சண்டை தொடங்கும். இயக்கம் எப்பிடியும் திரும்ப பிடிச்சுப் போடுவாங்கள்'' போர் தந்த வலிகளை மறந்து மீள தம் தேசம் திரும்பும் நாளுக்காக காத்திருக்கத் தொடங்குவார்கள்.

## ஊழியின் நாள்களில்

வற்றாப்பளைக்கு மிகக் கிட்டவாக இருந்தும் முள்ளிவாய்க்காலில் சிக்கியிருந்தோரின் பக்கம் கண்ணகை அம்மனின் கருணைப் பார்வை கிட்டவில்லை. பெருகிவழியும் குருதியாற்றுக்குள் எல்லோரும் மூழ்கிக் கொண்டிருந்தனர். குஞ்சு, குருமன், மூப்பு என்ற பேதங்களையெல்லாம் ஒதுக்கி விட்டு சாவு எல்லோரையும் தின்னத் தொடங்கியது. கால் வைக்கும் இடமெல்லாம் சதைத் துண்டங்கள். காயமில்லா மனிதர்களைக் காண்பதே அரிதாயிற்று. உண்ணும் உணவிலும் குருதியின் நெடி. சவக் குழிகளே எல்லோரதும் தங்குமிடமாயிற்று. அழுகிக் கொண்டிருக்கும் பிணங்களுக்கு மேலே உயிரையும், தம் உறவுகளையும் காப்பதற்காக வெற்றுக் கைகளோடு எல்லோரும் விதியோடு போராடிக் கொண்டிருந்தார்கள். உயிர் பிழைப்போம் என்ற எண்ணம் அந்தக் குறு நிலத்தில் சிக்கியிருந்த எவருக்கும் இருக்கவில்லை. குண்டுகள் கொல்லாவிட்டாலும் பட்டினி கட்டாயம் கொன்றுவிடும் என்று நம்பினார்கள்.

காலம், இயக்கம், போராட்டம் எல்லாமே சிதைந்து போக நம்பிக்கைகள் வற்றிப்போன ஊழியின் நாள்களில் கடைசியில்,

''வற்றாப்பளை அம்மாளாச்சி! என்னைக் காப்பாத்தாட்டியும் என்ர பிள்ளையளையாவது நீ காப்பாத்தினால் உனக்கு நான் பிள்ளையளோட உனக்கு பறவைக் காவடி எடுப்பன்'' என்ற வேண்டுதலோடு எல்லாப் பழியையும் அம்மனின் தலையில் சுமத்தி விட்டு அந்த மணல் வெளியில் வலிகளால் துடிக்கத் தொடங்கினர்.

## வெம்மை அடங்கிய பொழுதுகள்

காலத்தைக் காற்றள்ளிப் போயிற்று. ஊழி நடந்த வெளி பூசி மெழுகப்பட்டது. எஞ்சிக் கிடந்த துருவேறிய இரும்புப் பாகங்களால் புதைகுழிகள் மூடி மறைக்கப்பட்டன. பக்கத்து நாடுகள் வீசி எறிந்த பாவம் கழுவும் பணத்தில் புதிதாக சில வீடுகளும் முளைக்க ஆரம்பித்து விட்டன. போர் உலாவிய வீதிகளும் பயணிக்க இருந்த தடையும் விலகியது. மீண்டும் வைகாசிப் பொங்கல். வற்றாப்பளை சனங்களின் தலைகளால் நிரம்பியது.

தலைகளின் கடலைப் பிரித்தபடி திரௌபதையின் துகில் போல முடிவிலியாக வந்து கொண்டே இருந்தன காவடிகளும், பறவைக் காவடிகளும். முள்ளிவாய்க்கால், நேர்த்திக் காவடிகளின் எண்ணிக்கையை பல மடங்கு அதிகப்படுத்திவிட்டது. ஊழியில் பட்ட வலியை இறக்கி வைக்க உடல்களில் இரும்பு முட்களை ஏற்றிக் கொண்டு பறந்து வந்து கொண்டிருந்தார்கள். அவர்களில் சிலர் நேர்த்தி வைத்தபடி குழந்தைகளையும் பறவைக் காவடிகளோடு தொட்டில் கட்டி இணைத்தபடி வந்தனர். நேரம் செல்லச் செல்ல காவடிகளின் எண்ணிக்கை பெருகத் தொடங்கிற்று. இறுதிப் போரில் பட்ட வலிகளுக்கு முன்னால் காவடி முள் தருகின்ற வலி தூசுதான். மனதுக்குள் அடைகாத்தபடி இருக்கும் வலிகளின் வீரியத்தை வெளியே இறக்கி வைப்பதற்கு காவடியே ஊடகமானது.

'ட்றோமா' எனப்படும் மன அழுத்தம் அல்லது மன வடு போரின் சாட்சியாக இருக்கும் மக்களிடத்தே ஏற்படுவது வழமை. கண்ணுக்கு முன்னால் நிகழ்ந்த கொடூரங்கள் அடி மனதில் உறைந்து போய் வெடித்துக் கிளம்பும் தருணத்தை எதிர்பார்த்திருக்கும்.

[23 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கக்காரன் அவசரப்படமாட்டான்

**துயரம் சுமந்தவர்களின் வலிமிகு தோத்திரங்கள் இப்போது தான் கடவுளுக்கு விளங்கியிருக்கின்றது. கடவுளின் கட்டளைப்படி அடுத்தடுத்துப் போர்க்குற்றவாளிகள் பிடிபடுகின்றனர். சிறையிலடைக்கப்படுகின்றனர். தண்டிக்கப்படுகின்றனர். தூக்கிலிடப்படுகின்றனர்.**

ஜெரா

ஒரே நேரத்தில் ஆயிரக்கணக்கான அப்பாவி உயிர்களைக் கொன்ற அல்லது கொல்வதற்கு உத்தரவு வழங்கிய சாத்தான்களுக்கு ஹேக் நீதமன்றம் சரியான விருந்து வழங்கும் வேலைத் திட்டமொன்றை முன்னெடுத்துவருகின்றது. இந்த விருந்துக் காலம் 2001 ஆம் ஆண்டுக்குப் பின்னர்தான் அதிக சூடுபிடித்தது. ஆனாலும் இந்தக் காலத்துக்குப் பின்னர் தான் மனித மாமிச உண்ணிகளின் வேட்டையாடல்களும் அதிகரித்து வந்திருக்கின்றன. அதனால்தான் அவர்கள் மீதான சர்வதேச கவனிப்புக்களும் அதிகரித்திருக்கின்றன போலும்.

செப்ரெம்பர் தாக்குதலுக்குப் பின்னர் உலக வரைபடத்திலிருக்கின்ற ஒவ்வொரு நாடும் அமெரிக்காவின் அதிக கவனத்தைப் பெற்றது. மாலைதீவு போன்ற குட்டித் தீவு கூட அக்கு வேறு ஆணிவேராகப் பிரித்தாராயப்பட்டது. மனித உரிமைகள் சட்டங்கள் அனைத்து நாடுகளையும் அளவிடுவதற்கான மிகச்சிறந்த தராசுகளாயின. தன் நலன் சார்ந்து செயற்படாத நாடுகளுக்கு எதிரான நிலுவையை அந்தத் தராசுகள் காட்டின. இதனால் இதுவரை அமெரிக்காவுக்கும் அதன் அங்கீகாரம் பெற்ற அமைப்பான ஐ.நாவுக்கும் பல சுவாரஸ்யங்கள் அந்த நாடுகளில் இருந்து கிடைத்தன. மனித உரிமைத் தராசில் நிறைகுறைவதற்கான காரணங்களைத் தடவிப் பார்த்தபோது தான் பல ஹிட்லர்கள் உருவாகியிருந்தமை தராசுக்காரர்களுக்குத் தெரியவந்தது.

சற்றும் எதிர்பார்த்திராத, உலக மூலைகளில் இருக்கின்ற குட்டித் தேசங்களிலேயே இந்த நவகால ஹிட்லர்கள் உருவாகி இருப்பதைக் கண்டு பல சமூகவியல் பேராசிரியர்களும் அவர்களைத் தலைமையாக் கொண்ட சர்வதேச தொண்டு நிறுவனதாரர்களும் மூக்கில் விரல்வைத்தனர். ஒவ்வொரு நாடுகளுக்கும் கெமராக்காரர்களுடன் பயணித்து ஆய்வுகளைப் பதிவு செய்தபோதுதான் இந்தக் குட்டித் தேசங்களில் எல்லாம் பல இனப் படுகொலைக்குழிகள் இருப்பதைக் கண்டுபிடிக்க முடிந்தது. வட ஆபிரிக்க நாடுகளிலும், கீழைத்தேய நாடுகளிலும் இருக்கின்ற பாரம்பரியத் தலைகள் தான் இத்தகைய மனிதத் தசை தின்னும் சாத்தான்களாக உருவாகியிருக் கின்றனர் என்ற உண்மையை அந்த ஆய்வுக்குழு கண்டடைந்தது.

இத்தகைய தலைவர்கள் உலகத்திற்கும் அமெரிக்காவிற்கும் ஜனநாயக முலாம் பூசப்பட்ட முகத்தைக் காட்டிக்கொண்டு உள்நாட்டு மக்களுக்கு தமது மன்னர்கால முகங்களைக் காட்டி வருகின்றனர். தமது நாடுகளில் பெரும்பான்மை மக்கள் -அதாவது ஆட்சியிலிருக்கும் மக்கள் தழுவியிருக்கும் மதம் மற்றும் மொழி உள்ளிட்ட பண்பாட்டு விழுமியங்களை ஏற்று வாழும்படி அந்த நாட்டில் வாழுகின்ற ஏனைய இனத்தவர் பணிக்கப்பட்டனர். இத்தனைக்கும் இவ்வாறான அதிகாரத்தைச் செலுத்துபவர்கள் அந்த நாட்டின் மரபுசார் ஆட்சியாளர் பரம்பரையிலிருந்து கூட வந்தவர்களாக இருக்கவில்லை. அந்த நாட்டின் எங்காவது ஒரு பின்தங்கிய பகுதியிலிருந்து வந்து இராணுவத்திலோ அல்லது அரசியல் கட்சியிலோ இணைந்து படிப்படியாக முன்னேறி சதி மூலம் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றியவர்களாகவே இருக்கின்றனர். இவ்வாறானவர்கள் திணிக்கும் அதிகாரங்களை ஏற்க மறுக்கும் சிறுபான்மை இனத்தவர்களுக்கு மரணக் குழிகள் தயாராயிருந்தன. கூட்டு இனப்படுகொலைகள் மேற்கொள்ளப்பட்டன. பெண்கள் கட்டாயத்தின் பேரில் பெரும் பான்மை இனத்து ஆட்சியாளர்களின் படைகளால் கூட்டு வன்புணர்வுக்குள்ளாக்கப்பட்டார்கள். இதனால் தீவிரமான இனச் சுத்திகரிப்பு இந்த நாடுகளில் சாத்தியமானது. சிறுபான்மையின ஆண்களும், சிறுவர்களும் கடத்தல்களுக்கும், காணமல்போதல்களுக்கும் ஆளானார்கள். பல வருடங்களுக்கு முன்னரே உலகத்தவரால் தடைசெய்யப்பட்ட ஆயுதங்களைக் கொண்டு இந்தச் சிறுபான்மை மக்கள் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றனர். கொல்லப்பட்டவர்களின் எலும்புக்கூடுகள் அதற்குத் தகுந்த சான்றாதாரங்களை வழங்குகின்றன. இவ்வளவு கொடுமைகளையும் தாங்கித் தமது உரிமைகளுக்காகப் போராடும் சிறுபான்மை மக்களை அமெரிக்காவுக்கும், ஐ.நா. உள்ளிட்ட நிறுவனங்களுக்கும் தீவிரவாதிகளாகக் காட்டுவதில் இந்த வகை ஆட்சியாளர்கள் வெற்றி பெற்று வந்திருக்கின்றனர். இதனைக் காட்டி தனது நாட்டு உண்மைப் பிரச்சினையை பல ஆண்டுகாலம் திசை திருப்பி வந்துள்ளனர். இவ்வாறான நாடுகளில் இருக்கின்ற ஆட்சியாளர்கள் ஜனாநாயக முகமூடியை அணிந்து கொண்டு 40 வருடங்களுக்கு மேற்பட்ட ஆட்சியைக் கூட தக்கவைத்திருக்கின்றனர். மன்னர் காலத்தை ஒத்த நிர்வாக நடைமுறைகளும், வாரிசு அரசியலும் தலைவிரித்தாடுகின்றன.

இது போன்ற கண்டுபிடிப்புக்களை அமெரிக்க நிறுவனங்கள் இந்த நாடுகளில் கண்டுபிடித்தன. அது அப்படியே அமெரிக்காவுக்கான அறிக்கையானது. அந்த அறிக்கையைப் படித்தபின்னர்தான் பல நாட்டுத் தலைவர்களின் பெயர்கள் சர்வதேச வாய்களில் உச்சரிக்கப்படும் நிலையேற்பட்டது. அதுவரைக்கும் அமெரிக்காவுக்கு அந்தத் தலைவர்கள் காட்டிவந்த ஜனநாயக முகச் சாயம் வெளுத்தது. அமெரிக்கா தன் முகத்தை மாற்றிக் கொண்டு களத்தில் குதித்தது. 2010க்கு பின்னர் இந்த முகமாற்றம் நிகழ்ந்தது.

அதுவரைக்கும் ஆட்சியிலிருந்த சாத்தான்களின் சொற்கேட்டு, தான் செய்த அநியாயங்களுக்கு புண்ணியம் தேட அமெரிக்கா தயாரானது. அதிலும் தன் நோக்கத்தை விட்டுக் கொடுத்து முற்றுமுழுதான - அதாவது ஒவ்வொரு சமூக பண்பாட்டுக்கும் ஏற்ற ஜனாநாயகத்தை அமெரிக்கா போதிக்கவில்லை. தனது நாடு போதிக்கின்ற, தன் நலனுக்கு தீங்குபயக்காத ஜனநாயகத்தை அமெரிக்கா போதித்தது. இதனை ஏற்காத குற்றம் புரிந்த தலைவர்கள் தண்டணைக்குள்ளானார்கள். அமெரிக்க ஜனநாயகப் புரட்சியாளர்களை அமெரிக்கா உருவாக்கியது. பல வட ஆபிரிக்க நாடுகளும் சுதந்திரம் அடைந்தன. கீழைத்தேய நாடுகளில் இந்த போதனையை ஏற்று புரட்சியை வழிநடத்தக் கூடிய சக்திகள் இன்னமும் அடையாளம் காணப்படாததால் இந்த நாடுகளின் போர்க்குற்ற சாத்தான்கள் சின்னச் சின்ன எதிர்ப்புக்களுக்கும், மத்தியில் உலாவருகின்றனர்.




வட ஆபிரிக்க நாடான பொஸ்னியாவில் 7500 முஸ்லிம்களைக் கொலை செய்த குற்றத்திற்காக அந்த நாட்டு முன்னாள் இராணுவ தளபதி ஜெனரல் ரட்கோ மிலாடிக், சேர்பியாவின் வடபகுதியில் வைத்து சர்வதேச பொலிஸாரால் 26.05.2011 அன்று கைது செய்யப்பட்டார். அவர் குற்றத்திலீடு பட்டு 16 வருடங்களின் பின் கைது செய்யப்பட்டுள்ளார். இதற்கு முன்னதாக பொஸ்னியாவின் ஆட்சியாளர் ரடோ வான் கறாட்சிக் போர்க்குற்றவாளியாக இனங் காணப்பட்டு கைதுசெய்யப்பட்டி ருந்தார். இவருக்குமான வழக்குகள் நடைபெற்று வருகின்றன.

1999 ஆம் ஆண்டு யுகோஸ்லாவாக்கியாவில் இனப்படுகொலை புரிந்த அந்த நாட்டு ஜனாதிபதி ஸ்லோபோடன் மிலோசெவிக் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டிருக்கையில் மரணமடைந்தார்.



வட ஆபிரிக்கப் புரட்சியோடு பல போர்க் குற்றவாளிகளும் மனிதாபிமான மற்ற தலைவர்களும் நீதிக்கு முன் நிறுத்தப்பட்டனர். அச்சுறுத்திக் கொண்டேயிருந்த தலைவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். அந்த வகையில் கடந்த வாரம் எகிப்தின் முன்னாள் ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக்கிற்கு ஆயுள்சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. அவரை ஆட்சி விலகக் கோரி கடந்த ஆண்டு எகிப்தியர்கள் நடத்திய ஆர்ப்பாட்டங்களின்போது 850க்கும் மேற்பட்ட பொதுமக்களைச் சுட்டுக் கொல்ல உத்தரவிட்டமைக்காக அவருக்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது.




இந்த மாதத்தின் தொடக்கப்பகுதியில் முன்னாள் லைபீரிய ஜனாதிபதி சார்ள்ஸ் ரெய்லருக்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தால் 50 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது.

இப்போது 64 வயதைக் கடக்கும் இவர் 114 வயது வரை சிறையிலிருக்க வேண்டும். 1991 ஆம் ஆண்டு தொடக்கம் 2002 ஆம் ஆண்டுவரை லைபீரியாவின் சியாராலியோன் பகுதியில் வாழ்ந்த பழங்குடியினத்தவர்களை படுகொலை செய்ய ஆயுதக் குழுவொன்றுக்கு உதவினார்.

அந்த ஆயுதக் குழு சிறுபான்மையினக் கர்ப்பிணிகளை வெட்டியது. ஆண்களை சிரச் சேதம் செய்தது. கூட்டு வன்புணர்வுகளில் ஈடுபட்டது. சிறுவர்களின் கால்களை வெட்டித் துன்பப்படுத்தியது.

இந்தக் குற்றங்களுக்காக சார்ள்ஸ் கடந்த 2006 ஆம் ஆண்டு கைதுசெய்யப்பட்டார். மூன்று வருடங்கள் விசாரித்து, 7 மாதங்கள் அவரின் வாக்கு மூலம் எடுத்து, 13 மாதங்கள் தீர்ப்புக்காக ஆலோசிக்கப்பட்டு அவருக்கு இந்தத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

ஆயினும் இந்தத் தீர்ப்புக்கு அனுசரணை வழங்காத அவர் மேன்முறையீடு செய்ய இருப்பதாக தெரிவித்துள்ளார்.



போர்க்குற்றவாளிகளாக இனங்காணப்பட்டிருக்கின்ற தலைவர்களில் மிக முக்கியமானவர் சூடானின் ஓமர் அல் பசீர். இவர் அந்த நாட்டின் தலைவராக இருக்கின்ற அதேவேளை அந்த நாட்டிலிருந்து பிரிந்து செல்வதற்காகப் போராடிய தென்சூடானிய மக்களை மிலேச்ச தனமாக படுகொலை செய்து வருகின்றார்.


1989 ஆம் ஆண்டில் இராணுவச் சதியொன்றின் மூலம் அப்போதைய பிரதமர் அல் மகதியை பதவியிலிருந்து நீக்கிவிட்டு தானே அந்தப் பதவியை ஏற்றுக் கொண்டார் பசீர். சிறிது காலத்தில் சூடானின் ஜனாதிபதிப் பதவியையும் கைப்பற்றிக் கொண்டார். சன்னி முஸ்லிம் பிரிவைச் சேர்ந்த இவர் நாட்டில் வாழும் ஏனைய முஸ்லிம்கள் மற்றும் பர், மசாலியேட், சசாவா போன்ற பழங்குடி ஆபிரிக்கர்களை வெறுக்கத் தொடங்கினார். அவர்களை இனக்கலப்பு செய்து தன்னினமாக்கிக் கொள்ள இனச் சுத்திகரிப்பை 1993ஆம் ஆண்டுகளில் தீவிரமாக முன்னெடுத்தார். இதற்கெதிராகப் போராடத் தொடங்கிய தென்சூடான் மக்களில் கிட்டத்தட்ட 3லட்சம் தொடக்கம் 5 லட்சம் வரையானவர்களைப்படுகொலை செய்தார். இப்போதும் 3லட்சம் வரையிலான சகாவா பழங்குடியினர் இவரின் தடுப்பு முகாம்களின் கீழ் சித்திரவதை செய்யப்பட்டு வருகின்றனர். பட்டினி போட்டுக் கொலைசெய்தல் இவரின் தனித்துவமான தண்டனைப் பாணியாகும். இதனையெல்லாம் அறிந்து கொண்ட சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் கடந்த 2009 ஆம் ஆண்டு இவரைப் போர்க்குற்றவாளியாக அறிவித்து பிடியாணையைப் பிறப்பித்தது. ஆனாலும் ஆபிரிக்க ஒன்றியம் அந்தத் தீர்ப்பை எண்ணெய் வணிகத் தடையைக் காரணமாகப் பயன்படுத்தி ஏற்காததால் பசீர் இன்னமும் சூடானின் தலைவராக இருந்து வருகின்றார்.

கடந்த இரண்டு வருடங்களாக ஆட்சி மாற்றத்துக்காகப் போராடிவரும் சிரிய மக்களை படுகொலை செய்து வரும் அந்த நாட்டு ஜனாதிபதி ஆசாத்தும் விரைவில் போர்க் குற்றவாளியாக அறிவிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆபாசம்
## இதைப் படிக்காதீர்கள்.



நா.ஜெகரூபன்
மனநல மருத்துவ அதிகாரி,
மாவட்ட வைத்தியசாலை.
மொறட்டுவ.

### அறிமுகம்

மனிதன் ஓவியம் வரையத் தொடங்கிய காலந்தொட்டே பாலுணர்வைத் தூண்டக்கூடிய ஓவியங்களையும் வரையத் தொடங்கினான். அச்சு ஊடகம் வளரத் தொடங்க இவ்வகையான படங்களையும் அச்சிடத் தொடங்கினான். பிற்காலத்தில் ஒளிநாடாக்கள் கண்டுபிடிக்கப்பட்டபோது அசையும் படங்களும் பாலுணர்வைத் தூண்டும் விதமாகத் தயாரிக்கப்பட்டன.

ஆபாசப் படங்கள் பல நூற்றாண்டுகளாக வெளிவந்து கொண்டிருக்கின்றன. எனினும் கணினி மற்றும் இணையத்தின் வரவைத் தொடர்ந்து பார்வையாளர்களின் எண்ணிக்கையும் பார்வையிடும் நேரமும் சடுதியாக அதிகரித்து விட்டன. இதனால் ஆபாசப்படங்கள் தொடர்பான சமூக உளநலப் பிரச்சினைகளும் அதிகரித்து விட்டன.

### ஆபாசப் படங்கள் தொடர்பான சட்டங்கள்

ஆபாசப் படங்கள் தொடர்பான சட்டங்கள் நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றன. இலங்கை உட்பட பல நாடுகளில் அரசு வழங்குகின்ற தரச்சான்றிதழுக்கமைய பத்திரிகைகள், சஞ்சிகைகள், திரைப்படங்கள் முதலியன 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு அதாவது வயது வந்தவர்களுக்கு மட்டும் என்று வெளியிடப்படுகின்றன.

ஆபாசப்படங்களை வெளியிட்ட பல இணையத்தளங்கள் இலங்கை அரசால் அண்மையில் தடைசெய்யப்பட்டன. சில நாடுகள் இறுக்கமான பல சட்டங்களைக் கொண்டிருந்த போதிலும் இந்தப் பிரச்சினையை முழுமையாகக் கட்டுப்படுத்த முடியவில்லை.

உலகில் எந்தவொரு அரசாலும் அனுமதியின்றி வெளியிடப்படுகின்ற ஆபாசப் படங்களே அதிகம் என்பதே கசப்பான உண்மையாகும்.

### மிகப் பரந்த வாணிபம்

ஆபாசப் படங்களைத் தயாரிக்கும் நாடுகளில் அமெரிக்கா முதலிடம் வகிக்கின்றது. இது பலகோடிடொலர்களை ஈட்டித் தரும் வியாபாரமாகும். அமெரிக்காவில் திரைப்படங்களைத் தயாரிக்கும் ஹொலிவூட்டில் வருடந்தோறும் 11,000 இற்கு மேற்பட்ட ஆபாசப் படங்கள் வெளியிடப்படுகின்றன. இணையத் தளங்களுக்கு ஆபாசப்படங்களை வழங்குவதிலும் அமெரிக்காவே முன்னிலை வகிக்கின்றது.

ஆபாசப் படங்களைத் தயாரிப்பதிலும் விநியோகிப்பதிலும் பல்லாயிரக் கணக்கானோர் உலகம் முழுவதும் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஈடுபட்டுள்ளார்கள் இவர்களின் ஒரே ஒரு நோக்கம் பணம் சம்பாதிப்பதாகும்.

பெரும்பாலான ஆபாசப் படங்கள் ஆண்களை நுகர்வோராக வைத்தே தயாரிக்கப்படுகின்றன. ஆனால் அண்மைக்காலமாக பெண் நுகர்வோரையும் ஈர்க்கின்ற வகையில் இந்த வர்த்தகம் வேகமாக வளர்ந்து வருகின்றது.

இணையத்தளப் பக்கங்களில் 30 வீதம் ஆனவை ஆபாசப் படங்களுடன் தொடர்பானவை இணையத்தில் நுழைகின்றவர்களில் ஒவ்வொரு செக்கனிலும் குறைந்து 30,000 பேர் ஆபாசப் பட பக்கங்களுக்கே செல்கின்றனர்.

இலங்கையில் குறைந்தது 1.7 மில்லியன் இணையத்தளப் பார்வையாளர்கள் ஆபாசப்படங்களைப் பார்வையிடுகிறார்கள் என்பது அண்மைக்காலத் தகவல் ஆகும். இது மொத்த சனத்தொகையில் 8.3 வீதம் என்பது குறிப்பிடத்தக்கது.

### பாலியல் தொடர்பான தவறான எண்ணக் கருத்துக்கள்

ஆபாசப் படங்களில் காட்டப்படுகின்ற பாலுறவு தொடர்பான காட்சிகள் இயல்பான பாலுறவிலிருந்து பலவிதங்களில் வேறுபடுகின்றன.

✸ பாலுறவின் மூலமான இன்பத்திற்கு அடிப்படையான அன்பு, புரிந்துணர்வு, பகிர்தல், விட்டுக்கொடுத்தல், மதித்தல் போன்ற குணாம்சங்களை ஆபாசப்படங்கள் கொண்டிருப்பதில்லை.

✸ முன்பின் அறிமுகமில்லாத இருவர் சந்தித்துக் கொண்ட சில செக்கன்களிலேயே இயல்பான பாலுறவில் ஈடுபடக்கூடிய வாய்ப்புக்கள் மிகக்குறைவானவை. எனினும் ஆபாசப் படங்களில் இது ஓர் இயல்பான, விரைவான நிகழ்ச்சியாகவே காட்டப்படுகின்றது.

✸ ஒளிப்பதிவு செய்யும் போது நடிகர்களுக்கு இடையூறு இல்லாமலும் அதேவேளை தேவையான உடற்பகுதிகளைத் தெளிவாகக் காட்டக்கூடிய முறையிலுமே இயக்குநரால் நடிகர்களின் நிலைகள் சொல்லித் தரப்படுகின்றன. இப்படியான படங்களைப் பார்க்கின்ற திருமணமா[illegible]கள் இப்படித்தான் உ[illegible] எல்லாத் தம்பதியினரும் பாலுறவில் ஈடுபடுவதாக நம்பும் நிலைமையே காணப்படுகிறது. ஆபாசப் படங்களில் காட்டப்படுகின்ற பல நிலைகள் ஆபத்தானவை, இயல்பாகச் செய்யமுடியாதவை, பார்வையாளர்களை வியப்பில் ஆழ்த்தவும் புதுமையாகக் காட்டவும் தயாரிக்கப்பட்டவை.

✸ மென்மையான, அதிக ஆரவாரமில்லாத தன்மைகளை ஆபாசப் படங்கள் பொதுவாகக் கொண்டிருப்பதில்லை. மாறாக அதிக இன்பத்தை அனுபவிக்க என்ற போலி விளம்பரத்தில் மிகைப்படுத்தப்பட்ட விரைவுத் தன்மையை முதன்மைப்படுத்துகின்றன.

✸ ஆபாசப் படங்களில் நடிக்கின்ற பெரும்பாலான ஆண்களும் பெண்களும் இளமையானவர்களாகவும் கவர்ச்சியான உடலமைப்பைக் கொண்டவர்களாகவும் தெரிவு செய்யப்படுகின்றார்கள். இவற்றைப் பார்க்கின்ற பலரும் தங்களது வாழ்க்கைத் துணையினதும் தோற்றத்தைப் பற்றிக் கவலைப்படுகின்ற நிலைமையும் காணப்படுகின்றது. ஆனால் நடைமுறையில் சமுதாயத்தில் வாழ்கின்ற எல்லா விதமான உடலமைப்புக்களையும் உடைய தம்பதியினரும் [illegible] முடியும் என்பதே உண்மையாகும்.



**மென்மையான, அதிக ஆரவாரமில்லாத தன்மைகளை ஆபாசப் படங்கள் பொதுவாகக் கொண்டிருப்பதில்லை. அதிக இன்பத்தை அனுபவிக்க என்ற போலி விளம்பரத்தில் மிகைப்படுத்தப்பட்ட விரைவுத் தன்மையை முதன்மைப்படுத்துகின்றன.**

### ஆபாசப் படங்களும் சில மனநோய்களும்

சில மனிதர்கள் தங்களின் பாலியல் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக பல்வேறு அரிதான விருப்பு முறைகளைக் கையாள்கிறார்கள். இவற்றில் சில மன நோய்களாக உலக சுகாதார நிறுவனத்தால் பட்டியலிடப்பட்டுள்ளன.

✸ பீடோபீலியா (PAEDOPHILIA)

சில ஆண்களுக்கு பாலியல் ரீதியான இன்பத்திற்காக பருவமடையாத சிறுவர்கள் தேவைப்படுகிறார்கள். இவர்கள் ஆண் பெண் இருபாலாரைச் சேர்ந்த சிறுவர்களையும் தங்கள் தேவைகளுக்குப் பயன்படுத்திக் கொள்கிறார்கள் இது ''பீடோபீலியா'' என்ற மனநோயகும்.

சிறுவர்களை பாலியல் தொழிலில் ஈடுபடுத்தல், மற்றும் ஆபாசப்படங்களில் நடிக்கவைத்தல் என்பன எல்லா நாடுகளிலும் குற்றமாகக் கருதப்படுகிறது.

✸ வெயேரிசம் (VOYEURISM)

யாரவது பாலுறவில் ஈடுபடுவதை ஒளிந்திருந்து பார்ப்பதில் சில ஆண்களுக்கு அதீத இன்பம் கிடைக்கின்றது. பெண்கள் குளிக்கும் போதும் ஆடை மாற்றும் போதும் இவர்கள் மறைவாக விருந்து பார்க்கவும் செய்வர். இது ''வெயேரிசம்'' என்ற மன நோயாகும்.

இவர்களில் சிலர் பொது குளியலறை, கழிப்பறை, விடுதிகளின் படுக்கையறை போன்றவற்றில் வீடியோ கருவிகளைப் பொருத்துவதன் மூலம் தமக்குத் தேவையான காட்சிகளைப் பெற்றுக் கொள்கின்றனர்.

இவற்றை ஆபாசப்பட இணையத்தளங்களுக்கு விற்கவும் செய்கின்றனர். இப்படியாகப் பதிவு செய்யப்பட்ட நிர்வாணக் காட்சிகளை இணைத்தில் பார்க்கின்ற போது அந்தக் காட்சிகளில் முகம் தெரிபவர்கள் மிகுந்த மன வேதனைக்கு ஆளாகின்றனர். இப்படியாக பதிவு செய்த படங்களை இணையத்தில் வெளியிடமுன் பயமுறுத்தி பணம் பறிக்கும் கும்பலும் உலாவருகின்றது. இதனால் பெண்கள் அச்சமின்றி கடலிலோ, விடுதிகளிலுள்ள குளியலறையிலோ குளிக்கவோ ஆடைமாற்றவோ முடியாத சூழ்நிலை இன்று நிலவுகிறது என்பது கவலையானதே.

✸ சாடோமசக்கஸிசம் (SADOMASOCHISM)

சில ஆண்களுக்கு பெண்களை உடல்ரீதியாகத் துன்புறுத்துவதன் மூலம் அதீதி பாலியல் இன்பம் கிடைக்கிறது. பெண்களைக் கட்டிவைத்தல், சாட்டையால் அடித்தல், கூரிய ஆயுதங்களால் கீறுதல் போன்ற செயல்களைச் செய்வதால் பாலியல் இன்பம் அனுபவிப்பவர்கள் ''சாடோமசக்கஸிசம்'' என்ற நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் ஆவர். இணையத்தள வாசகர்கள் அதிகம் விரும்பிப் பார்ப்பதாகச் சொல்லப்படுகின்ற இத்தகைய பாலியல் முறைகள் சாதாரண தம்பதியினரிடயே மிகவும் அரிதானவை; உயிராபத்தை விளைவிக்கக் கூடியவை.

✸ அடிமையாகுதல் (ADDICTION)

இந்த மனநோய் போதை வஸ்து, மது, சிகரெட் போலவே ஆபாசப்படங்களும் சாதாரண மனிதர்களை ''அடிமையாதல்'' என்ற மனநோய்க்கு ஆளாக்க வல்லன. இந்நோய்க்கு ஆளானவர்கள் ஆபாசப் படங்களைப் பார்க்காமல் இருக்கமாட்டார்கள் சஞ்சிகைகள், இறுவட்டுக்கள் மற்றும் திரையரங்குகளைத் தேடித் திரிவார்கள். புதிது புதிதாக வித்தியாசம் வித்தியாசமாகக் காட்சிகளைக் காணவேண்டும் என்று அலைவார்கள்.

கையில் கிடைக்கும் பணத்தின் பெரும் பகுதியை இதற்காகவே செலவழிப்பார்கள். மனதுக்கு மகிழ்வைத் தரக்கூடிய இசை, பாட்டு, விளையாட்டுக்கள் மற்றும் பொழுது போக்குகளில் ஆர்வம் காட்டாமல் இந்தப் படங்களைப் பார்க்கவே அதீத ஆர்வம் காட்டுவார்கள் பெற்றோரிடமோ பொலிஸிடமோ அகப்பட்டு எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட பின்னரும் தொடர்ந்து இத்தகைய படங்களைப் பார்க்கவே செய்வார்கள் இவர்களால் இந்த வேட்கையினைக் கட்டுப்படுத்த முடியாதிருக்கும்.

(சூரியகாந்தி 4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆபாசம்

## இதைப் படிக்காதீர்கள்.

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிலருக்கு திருமணமான பின்பும் இந்த நிலை தொடரும். இவர்களுக்கு தம்பதியினரிடையே கிடைக்கும் இன்பத்தை விட இந்தப் படங்களைப் பார்ப்பதன் மூலமே அதிக இன்பம் ஏற்படும்.

பொதுவாக ஆபாசப் படங்களைப் பார்வையிடுவோர் அதனைப் பார்க்கின்ற வேளையிலேயே சுய இன்பத்தில் ஈடுபடுவர்.

சில கணவன்மார் ஆபாசப் படங்களை தங்கள் மனைவி மாருக்கு போட்டுக் காண்பித்து அதில் காட்டப்படுவது போல் நடந்து கொள்ளுமாறு துன்புறுத்தும் நிகழ்வுகளும் பதிவாகியுள்ளன. பல குடும்பங்களுக்குள் விரிசலையும், பிரிவுகளையும் இந்த ஆபாசப் படங்கள் ஏற்படுத்தியுள்ளன என்பது கசப்பான உண்மையாகும்.

பிள்ளைகள் ஆபாசப் படங்களுக்கு அடிமையானதை பெற்றோர் அறிகின்றபோது பெற்றோருக்கு அது மிகுந்த மன உளைச்சலைத் தருகின்ற விடயமாகும்.

இப்படியாக ஆபாசப் படங்களுக்கு அடிமையாதல் என்ற நோயுடையவர்களுக்கு மனநல வைத்திய சேவை தேவைப்படும். மது மற்றும் போதைப் பொருள்களுக்கு அடிமையானவரை மீட்டெடுப்பது போல் பொருத்தமான மனநல வைத்திய சேவையின் மூலம் இவர்களையும் மீட்டெடுக்க முடியும்.

### கையடக்கத் தொலைபேசிகளும் ஆபாசப் படங்களும்

நவீன கையடக்கத் தொலைபேசிகளில் இணையத்தை நேரடியாகப் பார்வையிட முடியும். இதனால் எவரும் எவ்வித கட்டுப்பாடுமின்றி ஆபாசப் படங்களைப் பார்வையிடவும் அவற்றை தரவிறக்கம் செய்யவும் முடியும். இந்தப் படங்களை நண்பர்களின் தொலைபேசிகளுக்கு அனுப்பவும், சேமிக்கவும் முடியும்.

பாடசாலை மாணவர்களது நவீன கையடக்கத் தொலைபேசிகளில் இத்தகைய படங்கள் சேமிக்கப்பட்டிருப்பது ஆசிரியர்களால் கண்டுபிடிக்கப்படுவதும் அதிபரின் விசாரணைக்காக பெற்றோரை வரச்சொல்வதும் இன்று இலங்கையில் பல பாடசாலைகளில் நிகழ்ந்து வருகின்றது.

எஸ்.எம்.எஸ். என்ற குறுஞ் செய்திகளினூடாக ஆசிரியரை அல்லது நண்பர்களை பாலியல் ரீதியாகக் கிண்டல் அடித்தல், பாலியல் நகைச்சுவைகள் (jokes) அனுப்புதல் போன்றன கையடக்கத் தொலைபேசியின் வரவைத் தொடர்ந்து பாடசாலை மாணவரிடையே ஏற்பட்ட புதிய பொழுது போக்குகள் ஆகும்.

### வீடுகளில் ஆபாசப் படங்கள்

பெற்றோர் மற்றும் பெரியவர்கள் இல்லாத வேளைகளில் வீடுகளில் இளைஞர்களும் யுவதிகளும் தனியாகவோ அல்லது கூட்டாகவோ ஆபாசப் பட இறுவெட்டுக்களைப் பார்ப்பது மற்றும் இணையத்தைப் பார்ப்பது என்பன இலங்கையில் சாதாரணமாகிவிட்டது.

மாணவர்களிடம் இருக்கும் இறுவெட்டுக்கள் எத்தகையவை என்று பெற்றோர்கள் பொதுவாகப் பார்ப்பதில்லை. பல பெற்றோருக்கு கணினிகள் தொடர்பாகவும் இறுவெட்டுக்கள் தொடர்பாகவும் போதிய அறிவில்லை. மாறாக ஆபாசப்பட இறுவெட்டு ஒன்று அகப்பட்டால் தங்கள் பிள்ளையை அடித்து உதைப்பதும் பொருத்தமான தீர்வல்ல. பிள்ளைகளின் நண்பர்கள் யார் யார் என்பதையும் அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதையும் பெற்றோர் அறிந்திருத்தல் அவசியம்.

### கணினி மையங்களும் இறுவெட்டு விற்பனை நிலையங்களும்

இன்று நாடெங்கிலும் சிறு கிராமங்களில் கூட தனியார் கணினி மையங்கள் (Internet cafe) முளைத்து விட்டன. ஒரு மணித்தியாலத்திற்கு 30 ரூபா என்ற குறைவான கட்டணத்திற்கு தேவையான தளங்களுக்குச் சென்று பார்வையிட முடியும். பல கணினி மையங்களுக்கு இளைஞர்கள் செல்வதே எந்தவொரு இடைஞ்சலும் இல்லாமல் ஆபாசப் படங்களைப் பார்ப்பதற்கே. எப்படியாவது பணம் வந்தால் சரி என்ற இலக்கில் கணினி மையங்களின் நிர்வாகங்கள் இதனைக் கண்டும் காணாதது போல் இருக்கின்றன.

சினிமா திரைப்பட இறுவெட்டுக்கள் விற்றல் என்ற பெயரில் பல வணிக நிலையங்கள் ஆபாசப் படங்களையும் விற்பது ஒன்றும் இரகசியமல்ல. இறுவெட்டு ஒன்றுக்கு 60 ரூபா வரை குறைவான கட்டணத்தை வாங்கும் இந்த நிலையங்கள் அறிமுகமான இளைஞர் வட்டத்தினூடாக இவற்றை விற்பதும் பிடிபடுகின்ற சந்தர்ப்பங்களில் லஞ்சம் கொடுத்து தப்பிக்கொள்வதும் நாடு முழுவதும் பொதுவாக நிகழ்கின்றது.

ஆபாச இறுவெட்டுக்களை அரசுக்குத் தெரியாமல் இறக்குமதி செய்வதும் அவற்றைப் பிரதி எடுத்து நாடு முழுவதும் விநியோகிப்பதும் இவர்களுக்குப் பெரும் பணத்தை அள்ளித் தருகின்றன.

### காரியாலயங்களில் ஆபாசப்பட இணையத்தளப் பாவனை

பல அரச காரியாலயங்களிலும் தனியார் நிறுவனங்களிலும் இலவசமான இணையத்தளப் பாவனை நடைமுறையில் உள்ளது. அலுவலக நேரத்திற்குப் புறம்பான நேரங்களிலும் விடுமுறை நாள்களிலும் இந்தக் காரியாலயங்களில் ஆபாசப்பட இணையத்தளங்களைப் பார்வையிடுவது அவதானிக்கப்பட்டுள்ளது.

### ஆள்கடத்தலும் ஆபாசப் படங்களும்

பெண்களைக் கடத்தி, மயக்கமருந்து கொடுத்து, நிர்வாணப்படுத்தி, ஆபாசப்படங்களை எடுத்து அதைக்காட்டி பயமுறுத்தி பணம் கறக்கின்ற சமுதாய விரோதிகள் பல நாடுகளிலும் இருக்கிறார்கள். பணம் கொடுக்காதவிடத்து அந்தப் படங்களை இணையத் தளத்திற்கு விற்பதும் இறுவெட்டுக்களாக வெளியிடுவதும் இவர்கள் பணிகளாகும். இவர்களின் பயமுறுத்தல்களுக்குப் பயந்து தற்கொலை முயற்சிகளில் ஈடுபட்ட பெண்கள் ஏராளம். அவ்வாறே மன உளைச்சலுக்கு ஆளான பெற்றோரும் உறவினரும் ஏராளம்.

### விபசாரத் தொழிலும் ஆபாசப் படங்களும்

விபசாரத் தொழிலின் வளர்ச்சிக்கு ஆபாசப் படங்கள் மற்றும் சஞ்சிகைகள் அதிக துணைபுரிகின்றன. இளைஞர்களைக் கவரவும் தங்களது வாடிக்கையாளர்களை அதிகரித்துக் கொள்ளவும் பல விபசாரிகள் ஆபாசப் படங்களில் நடிக்கிறார்கள். இந்தப் படங்கள் வெளியாகும் சஞ்சிகைகள் மற்றும் இணையத் தளங்களைப் பார்வையிடும் இளைஞர்கள் நேரடியான அனுபவத்தைப் பெறப்போய் அவர்களின் பிடியிலிருந்து மீண்டுவர முடியாமல் பணத்தையும் வாழ்வையும் இழந்த சம்பவங்கள் பல.

ஆபாசப் படங்களில் நடிக்கின்ற பெண்களே ஆண்களைக் காட்டிலும் அதிகளவில் சம்பாதிக்கிறார்கள். பிரபலமான ஆபாசப்பட நடிகை ஒருவர் அமெரிக்காவில் ஒரு லட்சம் டொலர்களை மாதமொன்றுக்கு சம்பாதிக்க முடியும். குறிப்பிட்ட காலத்திற்கே இவர்களால் ஆபாசப் படங்களில் நடிக்க முடிகிறது. அவர்களது வருமானம் குறையும் போது பலரும் விபசாரத் தொழிலுக்கே செல்கிறார்கள். இவர்களால் ஏனைய தொழில்களைச் செய்து கொண்டு சாதாரண இல்வாழ்க்கை வாழக் கடினமாகவுள்ளது. ஆபாசப்பட நடிகைகளிடையே கொலைகளும் தற்கொலைகளும் அதிகம் என்பது அவர்களின் பரிதாபமான வாழ்வையே சுட்டி நிற்கின்றது.

### பெண்ணுரிமை அமைப்புக்களும் ஆபாசப் படங்களும்

உலகிலுள்ள எல்லா நாடுகளிலும் பெண்ணுரிமை அமைப்புக்கள் ஆபாசப் படங்களை எதிர்த்தே வருகின்றன. பெண்களை போகப் பொருளாகவும் வியாபாரப் பொருளாகவும் மட்டுமே இவை காட்டுகின்றன என்பதே இதற்குக் காரணம். ஆண் ஆதிக்கத்தின் வடிவமாகவும் பெண்களை அடிமைப்படுத்தும் செயற்பாடாகவுமே ஆபாசப் படங்கள் செயற்படுகின்றன. படித்த பெண்கள் பணத்துக்காக இந்தப் படங்களில் நடித்தல் ஆண் ஆதிக்கத்துக்கு எதிரான போராட்டங்களைப் பலவீனப்படுத்துகிறது.

### மதங்களின் நிலைப்பாடு

உலகிலுள்ள எந்த மதமும் ஆபாசப் படங்களில் நடிப்பதையோ அவற்றைப் பார்ப்பதையோ அங்கீகரிக்கவில்லை. இறுக்கமான மதக் கட்டமைப்புடைய குடும்பங்களில்கூட இளைஞர்கள் இரகசியமாக ஆபாசப் படங்களைப் பார்ப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. இதே நிலை தொடருமாயின் எதிர்காலத்தில் மதம் மற்றும் கலாசார பண்பாட்டு விழுமியங்களை பாதுகாப்பது கடினமாகிவிடும்.

கடும் சட்டங்களால் மட்டும் ஆபாசப் படங்களைக் கட்டுப்படுத்த முடியாது. இறுக்கமான மதகட்டமைப்பினால் மட்டும் இதனைச் செய்யமுடியும் என்பதும் இன்றுவரை நடைமுறையில் சாத்தியமாகவில்லை. அரசும் மத அமைப்புக்களும் எவ்வளவு இறுக்கமான தடைகளைப் போட்டாலும் நவீன தொழில்நுட்ப வளர்ச்சியானது இத்தகைய படங்களை சாமானிய மனிதர்களுக்கும் மிக இலகுவில் சேர்த்துவிடுகிறது.

சுயகட்டுப்பாட்டுடன் கூடிய சமூகமொன்றை சிறுவயது முதலே கட்டியெழுப்ப வேண்டியதன் அவசியம் பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கு பெற்றோர், பாடசாலைச் சமூகம், சமூகத் தலைவர்கள், அரசியல், சட்டம் முதலிய பல்துறையினரும் கைகோர்க்க வேண்டியவர்களாகவுள்ளனர்.

அடிப்படை பாலியல் கல்வி மூலம் பல பொய்யான விளம்பரங்களையும் மாயக்கருத்துக்களையும் களைய முடியும் என்பது கல்வியியலாளர்களின் நம்பிக்கை. எனினும் முறையான பாலியல் கல்வித் திட்டமோ அதற்குத் தேவையான பயிற்றப்பட்ட ஆளணியினரோ இல்லை என்பதே எமது நாட்டின் இன்றைய கவலையான நிலைமையாகும்.

# என்ன தான் தருவார்கள் என்று கேளுங்கள்

பரமேஸ்வரன்

இலங்கையில் ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட உயிர்களைக் காவு கொள்ளக் காரணமாயிருந்த இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக இலங்கை அரசு ஒரு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை உருவாக்கியுள்ளது.

இந்தத் தெரிவுக் குழுவில் இணைந்து இனப்பிரச்சினையைத் தீர்க்க முன்வருமாறு -வருமாறு ஜனாதிபதியும் அவரது அமைச்சர்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு பல முறை அழைப்பு விடுத்தும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அரசின் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளவில்லை.

ஜனாதிபதி எதிர்கட்சி ஊடாக அனுப்பிய தூதையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக் கொள்ளவில்லை. இதற்கிடையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு வந்தால் தனது கட்சிக்குரிய ஆசனங்கள் இரண்டை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கத் தயார் என எதிர்க்கட்சி அறிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சியின் தாராள மனப்பான்மையைப் பாராட்ட வார்த்தைகளே இல்லை. இவ்வாறு ஆளும்கட்சியும் எதிர்க்கட்சியும் மாறி மாறி அழைக்கும் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்குச் செல்ல மறுப்பது நியாயமா?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்குச் செல்லாமல் இருப்பது பற்றி பல்வேறு விமர்சனங்கள் தமிழர் தரப்புகளில் கூட முன்வைக்கப்படுகின்றன. சரி, ஜனாதிபதியினதும்,எதிர்க்கட்சித் தலைவரினதும் அழைப்பையேற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சுக்குச் சென்றால் என்ன நடக்கும். அடுத்த நாளே "இந்தாருங்கள் மிஸ்டர் சம்பந்தன் வடக்கு கிழக்கை இனிமேல் நீங்களே ஆட்சி செய்யுங்கள் "என வடக்கு கிழக்கு ஆட்சி அதிகாரத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரிடம் வழங்கி விடுவாரா மஹிந்த?

டி.எஸ். சேனநாயக்க, பண்டாரநாயக்க, டட்லி சேனநாயக்க, சிறிமா, ஜே.ஆர், யாருமே தீர்க்காமல் போன பிரச்சினையை ஒரே இரவில் மஹிந்த தீர்த்து விடுவாரா என்ன?

இலங்கை சுதந்திரமடைந்த பின் பதவி வகித்த ஜனாதிபதிகள் பிரதமர்கள் எவருமே இனப்பிரச்சினையைத் தீர்க்கும் முயற்சிகளில் இதய சுத்தியுடன் ஈடுபடவில்லை. டட்லி, பிரேமதாச போன்றவர்களைத் தவிர இலங்கையில் சிறுபான்மை இனங்களுக்கு எதிரான சட்டங்கள் நிறைவேற்றப்படும் போது மட்டும் அந்தச் சட்டங்கள் எத்தனை எதிர்ப்பு வந்தாலும் அத்தனை எதிர்ப்புக்களையும் மீறியும் 24 மணித்தியாலங்களுக்குள் அமுல்படுத்தப்படும்.

இந்திய பாகிஸ்தானிய பிரஜாவுரிமைச்சட்டம், தனிச்சிங்களச் சட்டம், இலங்கை குடியரசாகப் பிரகடனம் (சோல்பரி அரசியல் யாப்பின் 29 ஆவது தரத்தை நீக்கப்பட்டுள்ளமை) தரப்படுத்தல், பிரிவினைவாதச் தடைச்சட்டம், பயங்கரவாத தடைச்சட்டம்,அவசரகாலச்சட்டம் இவ்வாறு காலத்திற்கு காலம் சிறுபான்மையினருக்கு எதிரான சட்டங்கள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் போது மட்டும் கட்சியாளர்கள் தாம் நினைத்தவாறு சிறுபான்மையினரின் கடும் எதிர்புக்களையும் பொருட்படுத்தாமல் நினைத்தவுடன் சட்டமாக்குவர். ஆனால் சிறுபான்மையினருக்கு ஏதாவது வழங்குவதென்றால் மட்டும் "**பேச்சுவார்த்தை**".

1957 ஆண்டு தொடக்கம் இன்று வரை நடைபெற்ற பேச்சுக்களில் எந்தவித தீர்வும் எட்டப்படவில்லை. பண்டா- செல்வா பேச்சுவார்த்தை, டட்லி- செல்வா பேச்சுவார்த்தை, சிறிமா - செல்வா பேச்சுவார்த்தை, ஜே.ஆர்- அமிர் பேச்சுவார்த்தை, திம்பு- பேச்சுவார்த்தை, ஜே.ஆர்-ராஜீவ் ஒப்பந்தம், பிரேமதாசா -புலிகள் பேச்சுவார்த்தை, சந்திரிக்கா- புலிகள் பேச்சுவார்த்தை போன்றவற்றில் ஒன்றுகூட தீர்வு எட்டப்பட்ட பேச்சாக இல்லை.

டோக்கியோ, பாங்கொங்,ஒஸ்லோ,ஜெனிவா பேச்சு மூலமும் இலங்கை இனப்பிரச்சனைக்கு எதுவித தீர்வையும் எட்ட முடியவில்லை. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியமித்த பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமையிலான குழு 126 தடைவைகள் கூடியுள்ளது. இந்தப் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமையிலான குழு தனது அறிக்கையை ஜனாதிபதியிடம் கையளித்து விட்டது. இந்த அறிக்கைக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை.

இப்போது ஜனாதிபதி நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்குத் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு அழைப்பு விடுத்துள்ளார்.புலிகள் இயக்கம் அழிக்கப்பட்டு மூன்று வருடங்கள் கடந்து பின்னரும் இனப்பிரச்சினைக்குத் தான் முன்வைக்கவுள்ள தீர்வு என்ன என்பது குறித்து ஜனாதிபதி இதுவரை எதுவித சமிக்ஞையும் காட்டவில்லை . மாகாண சபையா, மாவட்ட சபையா அல்லது மணிச்சங்கர ஐயரால் முன்மொழியப்பட்ட பஞ்சாயத்தா? என்ன தீர்வை வழங்குவதற்கு ஜனாதிபதி உத்தேசித்துள்ளார்.

சர்வதேச அழுத்தங்களை சற்றுக் குறைக்கும் நோக்குடனேயே ஜனாதிபதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை பேச்சுக்கு அழைக்கிறார் என்பது சொல்லித் தெரிய வேண்டிய ஒன்றல்ல.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு வருமாறு ரணில் மூலம் தூது அனுப்பும் ஜனாதிபதி தாம் தமிழர்களுக்கு என்ன தரப் போகிறேன் என்பதை ஏன் தெரியப்படுத்தக் கூடாது.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு வருவதற்கு முன் நீங்கள் எதைத் தருவதற்கு ஆயத்தமாக இருக்கிறீர்கள். முதலில் அதைக் கூறுங்கள் பின்னர் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு வருவதைப் பற்றி யோசிப்போம் என்ற தீர்மானத்தை கூட்டமைப்பு எடுப்பதே இப்போது சிறந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



© Reuters

உலகின் மிக வேகமான மனிதனான உசைன் போல்ட், இந்த வருடத்தில் தனது மற்றொரு சிறப்பான பெறுதியைப் பதிவு செய்திருக்கிறார். ஒஸ்லோவில் நடைபெற்ற பந்தயத்தில் அவர் 9.79 செக்கன்களில் 100 மீற்றர் தூரத்தை ஓடி முடித்தார். முடிவிடத்தை அடைந்து ஓய்வுக்கு வர முதல் போல்ட் பூ நங்கை (பிளவர் கேர்ல்) ஒருத்தி மீது மோதினார் இருந்தாலும் அவர் கீழே விழுந்துவிடாமல் பிடித்தபடி இழுத்துச் சென்று தனது ஓட்டத்தை முடித்தார்.




இந்த அம்மணியின் கதை சுவாரஸியமானது. குண்டாக இருக்கிறார் என்பதால் மெலிவதற்காக 'கிக் பொக்ஸிங்' பழகப் போனார் அம்மணி. சில மாதங்களில் நல்ல பயிற்சிகளுக்குப் பின்னர் அம்மணி 'சிலிம்' ஆகிவிட்டார். நண்பிகள் ஊக்கப்படுத்த அழகு ராணிப் போட்டியிலும் கலந்து கொண்டார். இப்போது பிரிட்டனின் அழகு ராணிப் போட்டியில் கடைசிப் 10 பேரில் ஒருவராகத் தெரிவாகி இருக்கிறார். எல்லாம் இந்த 'கிக் பொக்ஸிங்'கால் வந்தது என்று பெருமைப்படுகிறார். போதாதற்கு இந்த வருட உலக 'கிக் பொக்ஸிங்' சம்பியன் போட்டியிலும் கலந்து கொள்கிறார். அதிரடி அழகிதான் என்பது இவரைத் தானோ.



இன்று அறுபதுகளுக்கு மேற்பட்ட வயதில் இருக்கும் இளைஞர்களின் கனவுக் கன்னிகளில் ஒருத்தியாக வலம் வந்து வதைத்தவர் எலிசபெத் டெய்லர். 1950களில், 'லோ கட் நெக்' சிவப்பு ஆடையில் வெள்ளை நிற தோல் போர்வையால் போர்த்தபடி வெளியான அவரது படம் அன்றைய இளைஞர்களின் பல நாள் தூக்கத்தைத் துரத்தியடித்திருந்தது. இப்போது திடீரென எலிசபெத் டெய்லரே அசப்பில் உயிருடன் மீண்டும் வந்துவிட்டது போன்று வெளி வந்த படம் பிரிட்டனை ஆட்டம் காண வைத்துள்ளது. முதல் பார்வையில் எவரும் இந்தப் படத்தில் இருப்பவர் டெய்லர்தான் என்று அடித்துச் சத்தியம் செய்வார்கள். ஆனால் மீண்டும் ஒரு தடவை உற்றுப் பார்த்தால்தால் அது டெய்லர் அல்ல லின்ட்சே லோகன் என்று தெரியும்.


லின்ட்சே



டெய்லர்

வெள்ளையாக மாறிவிடுதல் என்பதற்காக நாம் படும் பாடுகள் கொஞ்ச நஞ்சமில்லை. யாழ்ப்பாணத்தில் இப்போது மிக வேகமாக வளர்ந்து வரும் சுயதொழில்களில் ஒன்று அழகு நிலையம் அமைத்தல். வெள்ளையாகி அழகாகிவிடுவதில் இருக்கும் ஆர்வம் காரணமாக மூலைக்கு ஒன்றாக 'பியூட்டி பார்லர்'கள் பெருகி வருகின்றன. அப்படியேமுகத்தை வெண்மையாக்கிவிட என்றும் சந்தையில் ஏராளம் 'கிரீம்'களும் குவிந்து கிடக்கின்றன. இவை எல்லாம் உண்மையில் தோலை வெளுப்பாக்குகின்றனவா? என்றால் தெரியாது. எல்லாம் ஒரு நம்பிக்கையில் ஓடுவதுதான். இப்போது செல்பேசிகளுடன் சேர்த்து ஒரு மென்பொருளை அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். அதில், 'கிரீம்' பயன்படுத்தியபிறகு நீங்கள் வெள்ளையாகி இருக்கிறீர்களா இல்லையா என்பதை இலகுவில் தெரிந்து கொண்டுவிடலாம்.




சீனாவின் சின்சியாங் மாகாணத்தில் ஒரு நாள் வீதியில் திடீரெனத் தோன்றிய விசித்திரமான இந்த விலங்கைப் பார்த்து உள்ளூர்வாசிகள் அதிர்ந்துவிட்டனர். இந்த மாகாணம் அறிவியல் ஆய்வுகளுக்குப் பெயர் போன இடம். மரபணு மாற்ற ஆய்வில் பிழைத்துப்போன ஓர் உயிரினமே இது என்று உள்ளூர்வாசிகள் நம்புகின்றனர். ஆனால் இது ஒரு முடியில்லாத விலைகூடிய நாய் என்று கதை அளக்கின்றனர் சீனப் பொலிஸார்.






சிங்கப்பூரில் அண்மையில் திறக்கப்பட்ட சுற்றுச் சூழல் நட்பு பூங்கா அனைவரையும் அதிசயத்தில் ஆழ்த்தி உள்ளது. சூரிய சக்தி மின்சாரத்தைச் சேகரிப்பதற்கென்று இங்கு 'சுப்பர் ட்ரீஸ்' எனப்படும் செயற்கை மரங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. பார்ப்பதற்கு மிக அழகாக உள்ள இந்த மரங்கள் பகல் முழுவதும் மின்சாரத்தைச் சேமித்து இரவு முழுவதும் பூங்காவுக்கு மின்சாரத்தை வழங்குகின்றன. இரவில் தேவலோகத்தில் இருப்பது போன்ற உணர்வைத் தருகிறதாம் இந்தப் பூங்கா.


© Photo News

ஹிலாரி கிளங்ரன் அமெரிக்க அதிபர் பதவி ஆசையைக் கைவிட்டுவிட்டார். அவரே பல தடவைகள் இதைச் சொல்லிவிட்டார். 2016இல் தான் அதிபர் தேர்தலில் நிற்கமாட்டேன் என்றும் கூறிவிட்டார். ஆனால் அதெல்லாம் பொய், கிலாரிக்கு உள்ளூர அதிபர் ஆசை இன்னும் இருக்கிறது என்று வம்பை அவிழ்த்து விட்டுள்ளது அவரைப் பற்றிய ஒரு புத்தகம். [illegible]ம்பு ஒத்துழைத்தால் அப்போது பார்க்கலாம் என்ற நினைப்பில் இருக்கிறாராம்.





ஒஸாமா பின்லேடனின் கதை முடிந்தாலும் அவரைப் பற்றிய கதைகளுக்கு முடிவேயில்லை. ஹொலிவூட் இப்போது பின்லேடன் பற்றிப் படம் எடுக்க ஆரம்பித்திருக்கிறது. பிரிட்டன் நடிகரான ரிக்கி ஷேக் கொன் தான் பின்லேடன் வேடத்தில் நடிக்கப் போகிறவர். ஒஸ்கார் விருது பெற்ற கேத்தரின் பெகிலோவ் இயக்குகிறார். பின்லேடனை எப்படிக் கொன்றார்கள் என்பதுதான் படத்தின் ஒரே வரிக் கதை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடம் அடம் பிடித்தலும்

## விளையாட்டு மைதானம் யாருக்கு?

■ விகேளம்



வவுனியா மாவட்டத்தில் முதல் தடவையாக பெண்கள் பிரிவில் உதைபந்தாட்டச் சம்பியனாக கனகராயன் குளம் மகாவித்தியாலய அணி தெரிவுசெய்யப்பட்டுள்ளது. அடுத்த வாரம் அளவில் இந்த அணி மாகாண மட்டப் போட்டியில் கலந்து கொள்ளவேண்டும். தவிர இந்தப் பாடசாலையில் கூடைப்பந்து, கரப்பந்து அணிகளும் இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்று மாகாண மட்டத்துக்குச் செல்லவுள்ளன.

மாணவர்களின் திறமை அவர்களின் ஆவல் என்பவற்றை வெளிப்படுத்துவதோடு பாடசாலைக்கும் புகழைத் தேடித் தரக்கூடிய வகையில் இந்த நிகழ்வுகள் அமைந்துள்ளன. வரவேற்பைப் பெற்றுள்ளன.

போருக்குப் பின்னர் வன்னியில் கல்விச் செயற்பாடுகள் சீர்குலைந்து தற்போது படிப்படியாக சீர்ப்படுத்தப்பட்டுவரும் நிலையில் மாணவர்களது திறமைகளையும் அவர்களது ஆளுமைகளையும் வெளிப்படுத்த வேண்டிய பொறுப்பு கல்விச் சமூகத்தவரதும், துறைசார்ந்த அதிகாரிகளதும் கடமை.

மாகாண மட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்ட உதைபந்தாட்ட பெண்கள் அணி அதற்கான பயிற்சியில் ஈடுபடுவதற்கு விளையாட்டு மைதானம் இல்லாது தவிக்கின்றது என்பதே வேதனையானதும் வியப்பானதுமான விடயம். போர் முடிவுற்று மீளக் குடியமர்வுச் செயற்பாடுகளின் பின்னர் கனகராயன் குளம் மகாவித்தியாலயம் மீள ஆரம்பிக்கப்பட்டு கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்துவரும் நிலையில் அந்தப் பாடசாலைக்கு என இருக்கும் விளையாட்டு மைதானம் தற்போது பிறிதொரு தரப்பின் பாவனையில் இருப்பது என்பது ஏற்றுக் கொள்ளமுடியாது. இதற்கும் மேலாக பாடசாலை நிர்வாகத்தினர் அதனைக் கண்டும் காணாமல் இருப்பது மாணவர்களது முயற்சிக்குத் தடையான ஒத்துழைப்பு.

மாவட்ட ரீதியில் உதைபந்தாட்டப் போட்டியில் சம்பியன்களான இந்தப் பாடசாலையின் பெண்கள் அணி மாகாண மட்டத்தில் பங்குபற்றும்போது பல்வேறு சவால்களை எதிர்கொள்ள வேண்டும். இதற்காக அவர்கள் தினமும் பயிற்சியில் ஈடுபட வேண்டும். ஆனால் அந்தச் சூழல் பாடசாலையில் இல்லை.

எதிர்வரும் ஜூலை மாதம் 6ஆம் திகதி பொலிஸாருக்கு நடைபெறவுள்ள தேசிய மட்ட விளையாட்டுப்போட்டியில் பங்குபற்றுவதற்காக கனகராயன் குளம் பொலிஸ் பிரிவுப் பொலிஸார் குறித்த பாடசாலை மைதானத்தை முழு நேரமாகப் பயன்படுத்தி வருகின்றனர். முதலில் அனுமதியின்றி பொலிஸார் மைதானத்தைப் பயன்படுத்துவதாக சொல்லப்பட்ட போதும், பின்னர் அனுமதியுடனேயே அவர்கள் மைதானத்தைப் பயன்படுத்துவதாகத் தெரிவிக்கப்பட்டது. இது விடயத்தில் பாடசாலையின் அதிபரையும், விளையாட்டுக்குப் பொறுப்பான ஆசிரியரையும் கேட்ட போது வாரத்துக்கு இரண்டு தடவை குறிப்பிட்ட நேரத்துக்குள் மாணவர்கள் பாடசாலை மைதானத்தில் பயிற்சியில் ஈடுபடலாம் எனப் பதில் தந்துள்ளனர். பாடசாலை மாணவர்கள் தமக்குச் சொந்தமான மைதானத்தில் விளையாடுவதற்கு அனுமதி பெறவேண்டும் என்பதும், குறிபிட்ட நாள்களே மைதானத்தைப் பயன்படுத்த வேண்டும் என்பதும் வேடிக்கையான விடயம். பாடசாலைக்குப் புகழ் தேடித் தரக்கூடிய போட்டி ஒன்றில் கலந்து கொள்வதற்கு குறித்த மாணவிகள் தமது மைதானத்தில் பயிற்சி பெற முடியாமல் இருப்பது துரதிர்ஷ்டமானது.

கனகராயன் குளத்துக்கு பொது விளையாட்டு மைதானம் ஒன்று உள்ளபோதும் அது போருக்குப் பின்னர் சீர் செய்யப்படவில்லை. பிரதேச சபையின் கட்டுப்பாட்டில் இருக்கும் அந்த மைதானத்தில் ஏ-9 வீதி திருத்தப் பணிகளுக்காக கிரவலும் கற்களும் பறிக்கப்பட்டு அதற்கான களஞ்சியமாக அந்த மைதானம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இது தொடர்பில் வீதி அபிவிருத்தி அதிகார சபை தம்மிடம் அனுமதி பெறவில்லை எனத் தெரிவிக்கும் பிரதேச சபையினர் மைதானத்தை சீர் செய்ய விரைவில் நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவிக்கின்றனர். ஆனாலும் அது எவ்வளவு தூரம் சாத்தியம் என்பது கேள்வியே.

இதனால் பொது மைதானம் ஒன்று இல்லாத நிலையில் கிராமத்து இளைஞர்களும் பாடசாலை மைதானத்தையே மாலைவேளைகளில் பயன்படுத்தி வந்தனர். எனினும் அதற்கான அனுமதி பாடசாலை நிர்வாகத்தினரால் மறுக்கப்பட்ட நிலையில் இளைஞர்கள் வீதியில் நின்று வேடிக்கை பார்க்கும் நிலை தோன்றியுள்ளது.

''சம்பந்தமே இல்லாத சிலர் முழுநேரமாக மைதானத்தைப் பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பாடசாலையில் படித்து வெளியேறிய எங்களுக்கு அரை மணிநேரம் கூட மைதானத்தைப் பயன்படுத்த அனுமதியில்லை'' என்று குறைபட்டுக் கொள்கிறார்கள் ஊர் இளைஞர்கள்.

கனகராயன் குளம் பொலிஸ் நிலையம் அதற்கென வழங்கப்பட்ட காணியில் இயங்காது கமநல சேவை நிலையத்துக்குச் சொந்தமான காணியிலேயே அமைக்கப்பட்டுள்ளது. பாடசாலைக்கு அருகில் இருக்கும் இவர்கள் தமது பிரத்தியேக விளையாட்டுப் போட்டிக்காக பாடசாலை மைதானத்தை அதிகாரத்தின் அனுமதியுடன் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்தச் சம்பவம் குறித்து வலயக் கல்வி அலுவலகத்துக்கு தெரியப்படுத்தப்பட்டதாகத் தகவல் இல்லை. பாடசாலை நிர்வாகத்தினர் மாணவர்களது தேவை அறிந்தும் இந்தச் செயற்பாட்டைக் கண்டும் காணாமல் இருக்கக் கூடாது.

கனகராயன் குளம் மகாவித்தியாலயத்தில் 700 வரையான மாணவர்கள் கல்விகற்று வருகின்றனர். உயர்தரம் வரை உள்ள இந்தப் பாடசாலையில் பல்வேறு வளப்பற்றாக்குறைகள் காணப்படுகின்றன. இந்த நிலையில் மாகாண மட்டப் போட்டி ஒன்றுக்கு பெண்கள் அணி தெரிவு செய்யப்பட்டிருப்பது பாராட்டப்படவேண்டிய ஒன்று. அவர்களை எதிர்காலத்தில் வளர்த்தெடுக்க வேண்டிய பொறுப்பு பாடசாலைக்குள்ளது. எனவே இது விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் கவனம் செலுத்தி மாணவர்களது தேவைகளை நிறைவேற்ற செயல்பட வேண்டும், பொறுப்புடன் நடந்து கொள்ளவேண்டும் என்று ஊர் மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

வன்னியில் போரின் பின்னர் தனியார், அரச காணிகள் இராணுவ ஆக்கிரமிப்பில் இருப்பதோடு நிலச் சுவீகரிப்புகளும் வகை தொகையின்றி இடம்பெற்று வருகின்றன.

தனியாருக்குச் சொந்தமான காணியிலேயே கனகராயன் குளத்தில் விகாரை ஒன்று எழுந்திருப்பதும் இங்கு குறிப்பிட வேண்டிய விடயம்.

பொலிஸார் விளையாட்டுப் போட்டியில் ஈடுபடவேண்டுமாயின் அவர்களுக்கென்று மைதானங்களை ஏற்பாடு செய்து பயிற்சியில் ஈடுபடவேண்டும். இதற்கு அந்தத் துறைசார்ந்த கட்டமைப்புகளிடம் மாற்று ஏற்பாடுகளைக் கோரவேண்டும். பதிலாக அதிகாரத்தைப் பயன்படுத்தி மக்கள் பாவனை நிலங்களைத் தமது தேவைக்குப் பயன்படுத்துவது ஏற்றுக் கொள்ள முடியாத விடயம்.

எனவே மாணவர்கள் மேல் கரிசனை கொள்பவர்கள் அவர்களுக்கான தற்போதைய தேவையைப் பூர்த்திசெய்ய உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும். ✸

> ''சம்பந்தமே இல்லாத சிலர் முழுநேரமாக மைதானத்தைப் பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பாடசாலையில் படித்து வெளியேறிய எங்களுக்கு அரை மணிநேரம் கூட மைதானத்தைப் பயன்படுத்த அனுமதியில்லை''

---

■ சொ.ஞானசம்பந்தன்

# அரசர் இயற்றிய கவிதை

*பிரான்சில் 17 ஆம் நூற்றாண்டில் பதினான்காம் லூய் மன்னன் ஆண்டபோது நிகழ்ந்த சுவையான நிகழ்ச்சிகள் சிலவற்றை மதாம் த செவிஞே என்ற பெண்மணி பதிந்திருக்கிறார். கீழ் காணும் செய்தி 1- 12 -1664 இல் எழுதப்பட்டது. அதன் மொழிபெயர்ப்பு இங்கே*

கொஞ்சக் காலமாய் அரசர் கவிதைகள் இயற்றுவதற் குக் கடுமையாய் முயல்கிறார்.

ஒரு நாள் சிறு கவியொன்றை எழுதினார்; அது அவருக்கே பிடிக்கவில்லை.

மார்ஷல் கிராமோனிடம் அதைக் காட்டி, ''மார்ஷல், இதை வாசியுங்கள்; இவ்வளவு மட்டமான கவிதை யொன்றை நீங்கள் கண்டதுண்டா என்று பாருங்கள். அண்மைக் காலமாக நான் கவிகளை விரும்புகிறேன் என்பதால் பல தரப்பட்ட கவிகளைக் கொண்டுவருகிறார்கள்'' என்றார்.

அதை வாசித்துப் பார்த்த மார்ஷல், ''நீங்கள் எல்லாவற்றையும் மிகச் செம்மையாய் மதிப்படுகிறீர்கள்; உண்மையிலேயே இதைப் போன்ற மடத்[illegible] ஏளனத்துக்கு உரிய [illegible] கவிதையை நான் இதுவரை படித்ததே இல்லை'' என்றார்.

மன்னர் சிரித்துக்கொண்டே, ''இதை இயற்றியவர் ஒரு தற்பெருமை கொண்ட முட்டாள் என்பது மெய்யல்லவா?'' என்று கேட்டார்.

''அவரை வேறு விதமாய் [illegible] என்று [illegible] விடயம் தெரியாமல் ஒத்துப்பாடினார் மார்ஷல்

''நன்று, இவ்வளவு வெளிப்படையாய் நீங்கள் அதைப் பற்றி என்னிடம் கூறியதற்கு மகிழ்ச்சி; அதை எழுதியவன் நான் தான்'' என்றார் அரசன்.

"ஆ! அவசரப்பட்டுவிட்டேன். அதைத் திருப்பத் தாருங்கள்; நான் சரியாய்ப் படிக்கவில்லை'' என்று துடித்தார் மார்ஷல்.

''வேண்டாம் மார்ஷல்! முதல் உணர்ச்சியே எப்பொழுதும் இயற்கையானது'' என்று மறுத்துவிட்டார் மன்னர்.

மார்ஷலின் நிலையை எண்ணி அரசர் பின்னர் பெரிதாய்ச் சிரித்தார். வயதான ஓர் அதிகாரிக்குச் செய்யக்கூடிய மிக மோசமான கொடுமை இதுவே என்பது அனைவருடைய கருத்துமாகும்.

சிந்திப்பதை எப்போதும் விரும்புகிற நானோ, வேந்தர் இதுபற்றி எண்ணிப் பார்க்க வேண்டும் என்றும் உண்மையைத் தெரிந்து கொள்ளமுடியாத எவ்வளவு நெடுந்தொலைவில் அவர் இருக்கிறார் என்பதை அவர் புரிந்துகொள்ள வேண்டும் என்றும் விரும்புகிறேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவம் என்ன 'கொமிசன்' வியாபாரமா?

ஜனாநந்தி

நான் நோயாளியாக மாறியிருந்தேன். திடீரென இரவில் மூச்சு முட்டியது. நெஞ்சு படபடத்தது. பலவீனமாக உணர்ந்தேன். அருகில் படுத்திருந்த மகனைப் பார்த்தேன். திருமணம் இன்னும் சரிவரவில்லை. நெஞ்சு நொந்தது. காலையில் அருகிலுள்ள புதிதாகத் திறந்த வைத்தியசாலைக்குச் சென்றோம். என்றும் தாங்கும் கணவர் என்னைப் பரிவாக அழைத்துச் சென்றார். எங்கள் கண்களில் பயப்பீதி.

எங்களைக் கண்டதும் அவர்களின் முகங்கள் மலர்ந்தன. சந்தோஷப்பட்டனர். "ஏன் எங்களைப் பார்த்து சந்தோஷப்படுகின்றனர்" என எனது சிறிய மூளை குழப்பமடைந்தது. காசைக் கட்டிய பின்னர் வெளிநோயாளர் பிரிவிலுள்ள (O.P.D) வைத்தியரிடம் எங்களை அனுப்பினர். அவர் சம்பந்தமில்லாத ஏதேதோ கேள்விகள் கேட்டார் நிறைய டெஸ்ட் எடுக்க வேண்டும் எனக் கூறி பலவற்றிற்கு எழுதினார். அந்தச் சிட்டையை வேலை செய்யும் பெண்மணி ஒருவர் அவசரமாகப் பிடுங்கிக் கொண்டு சென்று காசு ரிசீட் போட்டார். உடனே 6,000 ரூபாய் கட்டும்படி கட்டளையிட்டார். எம்மைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதைச் சுதாகரித்துக் கொள்ள முடியவில்லை. ஏதோ பெரும் இதயக் கோளாறு தான் எனக்கு ஏற்பட்டு விட்டது என்ற பயம் நெஞ்சை மேலும் அழுத்தியது. நெஞ்சைக் கைகளால் அழுத்திப் பிடித்துக்கொண்டு பல வகை மருந்துகளோடு வீடு வந்து சேர்ந்தேன்.

அடுத்த நாள் நிலமை வேறு மாதிரி மாறியது. ஒரே வாந்தி, ஓங்காளம் மறுநாள் திரும்பவும் "ரிப்போட்" எடுக்க ஓடினோம். " டெஸ்ட் " ரிப்போட் வந்தது. எல்லாம் "நோர்மல்"! பிறகேன் எனக்கிந்த வருத்தம் என்று வைத்தியரும் சொல்லவில்லை.

ரிப்போட்டைத் தந்தவுடன் முன்னறைக்கு என்னை இழுத்துப் போனார்கள். முதல் நாள் சாறி உடுத்து சென்ற என்னை இன்று சாறியும் உடுக்க முடியாத நிலையில் இங்கு கொண்டுவந்தது. இந்த அறை தான். ஆனால் இப்போது வைத்தியர் வேறு. அன்றிருந்தவர் இன்றில்லை. இன்று வேறுவிதமான கேள்விகள் "ஈ.சீ.ஜி யில் கோளாறு இருக்குது" "முன்பு ஹாட் அட்டாக் வந்ததா? இவை புது வைத்தியரிடம் இருந்து வந்த வார்த்தைகள். "இல்லை" என்றேன் "இரத்த அழுத்தமும்" இருப்பதாகக் கூறி குளிசைகள் தந்தார். கைநிறைய மருந்துகள்! எதற்காக இவ்வளவும்? எந்தவிதமான விளக்கமும் இல்லை. அவ்வளவு மருந்துகளும் கட்டாயமாக அந்த வைத்திய சாலையிலேயே வாங்கியாக வேண்டியிருந்தது. இது என்ன புதுக்கட்டுப்பாடுகள் என்று நொந்தபடி வீடு வந்தோம்.

பின்னேரம் என்னை மூத்த மகன் இதய வைத்திய நிபுணரிடம் கூட்டிப் போனார். வருகைக்காகக் காத்திருந்தோம் "இதய வால்பு ஒப்பரேசன் என்றால் எவ்வளவு செலவாகும்" அருகில் உள்ளவர்களிடம் இரகசியமாகக் கதைத்துக்கொண்டிருந்தேன். என்ன செய்வது! மனதைத் திடப்படுத்துகிறேன். நல்லூரானுக்கு நேர்த்திக் கடன் வைத்திருக்கிறேன் " கந்தா , முருகா குமரகுருபரனே... காப்பாற்று..."

"டொக்டர் வந்திட்டார்" நடுங்கும் கரங்களினால் "ரிப்போட்" களைக் காட்டுகிறேன்.

"உங்களுக்கு ஒன்றும் இல்லையம்மா" "முருகா...!" ஒரு தரம் அவனை நினைத்துக்கொண்டேன். வைத்தியரின் வார்த்தைகள் என் இதயத்தை வருடின நிமிர்ந்து உட்காருகிறேன். கடவுளே ! இந்த வார்த்தைகளுக்குத் தான், எவ்வளவு சக்தி!

"ஈ.சீ.ஜி."யில் ஒன்றும் பிழையில்லை. நீங்கள் இவ்வளவு மருந்துகளையும் குடித்ததால் தான் உங்களுக்கு வாந்தி. எல்லா மருந்தையும் நீற்பாட்டுங்கோ. உங்களுக்கு இரத்த அழுத்தமும் இல்லை" வைத்திய நிபுணர் அடித்துச் சொல்லுகிறார்.

எனக்கு மறுபிறவி எடுத்தது போல் இருக்கிறது. என் கைமேலே எழும்புகிறது. அவரை கையெடுத்துக் கும்பிட என் மனம் நினைக்கிறது. பூரண குணமடைந்து விட்டது போல் உணருகிறேன். எதுவுமில்லை என்பது உறுதிப்படுத்துவதற்காக ஒரே டெஸ்ட் எடுக்குமாறு எழுதித் தருகிறார் வைத்திய நிபுணர்.

மீண்டும் வேலை பார்க்கும் பெண்மணி 'ரிசீட் போட' ஒடுகின்றார். வலுவான இதயத்துடன் நானும் பின்னால் விரைகின்றேன். அந்த டெஸ்டை வெளியில் செய்ய விரும்புவதாகக் கூறுகிறேன். அங்கே தான் பதிய வேண்டும் என்கிறார்கள். "இங்கே பதிஞ்சு போட்டு அங்கே போய் செய்யுங்கள்" என வற்புறுத்துகின்றனர். தைரிய நெஞ்சமுடன் "ஏன் அப்படி?" என்று கேட்கிறேன் "அப்போது தான் எங்களுக்கு கொமிசன் கிடைக்கும்" என்ற வார்த்தைகளைக் கேட்டு நான் அதிர்ந்து போனேன். "எங்களுக்கு என்ன கிடைக்கும்" என்று திருப்பிக் கேட்டேன்". உங்களுக்கு ஒன்றும் கிடைக்காது" என அரசியல் வாதியாகி, மந்தாரமாகச் சிரித்தார் அந்த மாது.

இது என்ன பொல்லாத உலகம், மருத்துவமா? இல்லை கொமிசன் வியாபாரமா? பணமும் பிணியும் பல்லபங்குழி விளையாடுகிறதோ!

* * *

அன்று தனியார் வைத்திய சாலைக்கு சென்றிருந்தேன் முற்பதிவு செய்யப்பட்டதன் காரணமாக குறிப்பிட்ட நேரத்திற்கு சென்று எனக்குத் தந்த 'நண்பரின் ஓடரில்'கதிரையில் அமர்ந்து கொண்டேன். எனக்கு முன்னரும் பின்னரும் பதிவு செய்தவர்கள் வரிசையாக வந்தமர்திருந்தனர். நேரம் காலை 6 மணி. சற்றுநேரத்தில் கதிரைகள் நிரம்பி விட்டன.

"டொக்டர் எப்ப வருவார் " இது ஒரு வயோதிபப் பெண்ணின் கேள்வி

"இந்தா வந்திடுவார் அம்மா" என்றார் அங்கிருந்த தாதி.

எனது கைக்கடிகாரத்தை உற்று நோக்கினேன். அது நேரம் 6.45 ஐக் கடந்து கொண்டிருப்பதைக் காட்டியது. மக்கள் வரிசையோ நகரவில்லை

" சரியா 6 மணிக்கு வாங்கோ, பிந்தினால் டொக்டர் கொஸ்பிட்டலுக்கு போயிடுவா என்று எனக்கு அடித்துச் சொல்லப்பட்டிருந்தது.

எனக்கு 6 மணிக்கு என்றால் எனக்கு முன்னால் இருந்தவர்களுக்கு இன்னும் முன்னரே நேரம் ஒதுக்கப்பட்டிருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை ஆனால். வைத்தியரை காணோம் நோயின் வேதனையைவிட இங்கு வந்து காத்திருப்பது சோதனையாக இருந்தது. சலிப்பு தட்டியது.

சரியாக 7 மணிக்கு வந்தார் மருத்துவர். நம்பருக்குரிய பெயரை உச்சரிக்க ஆரம்பித்தார் உதவியாளர்.

"வீட்டில் நின்றிருந்தால் இந்த நேரத்துக்குள் எவ்வளவு வேலை பாத்திருக்கலாம்" என்று எனக்குப் பக்கத்திலிருந்த ஒருவர் புலம்பினார். இன்றைய உலகில் நேரம் என்பது மிக முக்கியமான ஒன்றாகும். நேர முகாமைத்துவத்தை சரியாக பேணிக் கொள்வது அனைத்து தரப்பினருக்கும் வேண்டியதாகும்.

- கறுப்பி

# சிறந்த வழிகாட்டல் தேவை



தற்போது அதிகரித்துக் காணப்படும் அளவிட முடியாத வன்முறைகளுக்கு மூல காரணமே "மது". யாழ்ப்பாணத்தில் உண்மை விம்பத்தைக் குழிதோண்டிப் புதைக்க வந்த அரக்கன் என்ற நிலையை மது எட்டிவிட்டது என்றால் இதில் இருவேறுபட்ட கருத்துகளுக்கு இடமில்லை.

சோபனா

மாற்றமடைந்து வரும் நாகரிகங்கள், நடைமுறைகள் சமுதாயத்தின் பிரதிபலிப்புக்கு ஏற்றால் போல் யாழ்ப்பாணத்தில் ஒவ்வொன்றும் புதிது புதிதாக முளைவிடத் தொடங்கியுள்ளன.

ஆனால் இந்த மாற்றங்கள் எமது பண்பாடுகளையும், கலாசாரத்தையும் எந்தளவுக்கு பாதிக்கின்றன என்பதைச் சிந்திக்க வேண்டிய கட்டாயத்தில் நாம் உள்ளோம்.

கடந்த காலங்களில் எமது கலாசாரப் பின்னடைவுக்கு பல காரணங்களை அடுக்கடுக்காக சொல்லிக் கொண்டே இருந்தோம். ஆனால் அந்தப் பின்னடைவுக்கான காரணங்கள் யாராலும் ஆராயப்படவில்லை. அங்கே அப்படி நடக்கிறதாம்? இங்கு இப்படி நடக்கிறதாம்? என விதண்டாவாதக் கதைகளுக்கு மட்டும் அளவில்லை.

அந்த அசண்டையினப் போக்கே எமது யாழ்ப்பாணத்தைச் சீர்குலைக்க காரணமாக அமைந்துவிட்டது. சமுதாயத்தில் ஏற்படும் பிறள்வுகள், தாக்கங்கள் தொடர்பாக யாருக்குமே சிந்திக்க நேரமில்லை. இந்த அளவுக்கு அவசரமான உலகம் இதுவாகிப் போய்விட்டது.

இதனால் வன்முறைக் கலாசாரம் தாராளமாக யாழ்ப்பாணத்தில் குடியமர்ந்து விட்டது. கட்டுப்பாடுகள் எதுவும் இன்றித் தட்டிக் கேட்க நாதியற்றவர்களாக வன்முறைவாதிகள் தாராளமாக உருவவெடுத்து விட்டார்கள். ஆனால் இந்த வன்முறைவாதிகள், தாமாகவே உருவெடுத்து ஒன்றும் பிறந்து விடவில்லை. இவர்கள் புதிதாக உருமாற்றப்பட்டுள்ளார்கள் என்றே தான் கூறவேண்டும்.

தற்போது அதிகரித்துக் காணப்படும் அளவிட முடியாத வன்முறைகளுக்கு மூல காரணமே "மது". இதன் பாவனை யாழ்ப்பாணத்தில் அதிகரித்துக் காணப்படுகிறது. இது அதிகரிக்கச் செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் உண்மை விம்பத்தைக் குழிதோண்டி புதைக்க வந்த அரக்கன் என்ற நிலையை மது எட்டிவிட்டது என்றால் இதில் இருவேறுபட்டகருத்தகளுக்குஇடமில்லை.

மது போதையின் தாக்கங்களே வன்முறைவாதிகளை தாராளமாக இறக்குமதி செய்வதற்கு காரணமாக அமைந்துவிட்டன.

யாழ்ப்பாணத்தில் தற்போது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட கசிப்பு உற்பத்தியையும் தாண்டி "அரச சாராயம்" முண்டியடித்து வருமானத்தை அரசுக்கு அள்ளி வழங்கிக் கொண்டிருக்கிறது. அரசுக்கு கிடைக்கும் மதுவின் மூலமான வருமானம் அதிகளவு வடமாகாணத்தில் இருந்து கிடைப்பது ஓர் வரப்பிரசாதம்தான் என்று எண்ணும் அளவுக்கு அரசுக்கு இந்த வருவாய் கிட்டியுள்ளது. இந்த வருமானம் அதிகளவு யாழ்ப்பாணத்தில் இருந்தே கிடைப்பது அரசுக்கு பெரும் நன்மைதான்.

மதுவுக்கு அடிமையாவோர் தொகை நாளாந்தம் யாழ்ப்பாணத்தில் அதிகரிக்க, அதிகரிக்க வன்முறைகள் எல்லை தாண்டிச் சென்று கொண்டிருக்கின்றன.

யாழ். போதனா வைத்தியசாலையில் வெட்டுக் கொத்து காயங்களுடன் 21 வயதுடைய இளைஞன் ஒருவரையும் 34 வயதுடைய இன்னொரு நபரொருவரையும் சந்தித்தேன்.

கை, கால்களில் என்ன காயம்? இது என்னுடைய கேள்வி. 21 வயதுடைய இளைஞன் தலை குனிந்து தனக்குள்ளே சிரித்தார். மறுபடியும் கேட்டேன். பிசுங்கான் துண்டுகளால் குத்தினார்கள் என்றார். அந்த இளைஞனின் கைகளில் இடைவெளியில்லாத காயங்கள் "பிசுங்கான் குத்து" இது ஒரு புதுப் பாஷன். எனக்குப் புதிதாகத் தான் இருந்தது.

என்னத்துக்காக குத்தினார்கள்? எனது அடுத்த கேள்வி. கிராமத்தில் மது போதையில நான்கைந்து இளைஞர்கள் நான்கைந்து நாளாக இரவில் [illegible]. சம்பவம் நடந்த போதும் அப்படித் தான் கும்மாளம். தட்டிக் கேட்ட ஒருவரை கட்டையால் அடித்து விட்டாங்கள் அதைக்கேட்கப் போன என்னையும் போத்தலை உடைத்து பிசுங்கான் துண்டுகளால் குத்தினாங்கள்.

இப்படித்தான் கிராமம், நகரம் எல்லை மீறி சண்டை சச்சரவுகள் தொடங்கியுள்ளன. யாழ்.போதனா வைத்தியசாலையில் அடிதடிக் காயங்களில் சிகிச்சை பெறுவோர் இவரைப் போல் பலர். காயங்களுக்கு ஆளாகி அனுமதிக்கப்பட்டுள்ள பலருடன் கதைத்த போது மது போதையில் அட்டகாசம் புரிந்ததாலே ஏற்பட்ட விளைவு என்றே பதில் வந்தது.

வன்முறைகளைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாத பட்சத்தில் வன்முறைகள் எல்லை மீறி தாராளமாக நடைபெறுவதற்கு சாதகமாக அமைந்துள்ளன.

மனம் போன போக்கில் சமுதாய நடைமுறைகளுக்கு ஏற்றால் போல் தமது வாழ்க்கையை பின் தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள். சமுதாயத்தின் இத்தகைய போக்கு யாழ்ப்பாணத்தை எந்தளவுக்கு மாற்றமடையச் செய்துகொண்டிருக்கிறது.

இளைய சமுதாயம் தவறான வழியில் அன்றாட செயற்பாடுகளை நடத்துவது எமது கலாச்சாரத்தைப் பின்னடைவுக்கு கொண்டு செல்வதற்குமே வழிவகுத்துள்ளது.

யாழ்ப்பாணத்தின் கலாச்சார பின்னடைவு தொடர்பாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டிய கட்டாயம். மக்கள் நலன் காக்கும் சமுக சேவையாளர்கள் இது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். புதிது புதிதாக முளைவிடத் தொடங்கும் வன்முறைகள் இளைய சமுதாயத்தின் வாழ்வை தடம்புரளச் செய்வதற்கு ஏதுவாக அமைந்துள்ளன.

கடந்த காலங்களில் போரின் விளைவு காரணம் என கூறப்பட்டாலும் தற்போது வளர்ச்சியடைந்து வரும் நாகரிக உலகில் தீய சிந்தனைகளை புறந்தள்ளி நற்சிந்தனைகளையும் உரிய வழிகாட்டல்களையும் சமுதாயம் இளம் சந்ததியினருக்கு எடுத்துக்கூறும் பட்சத்திலேயே யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் வன்முறைகளைக் கட்டுப்பாட்டுக்கு கொண்டுவர முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர் குற்றங்களால் சீரழியும் சமுதாயம்

■ விஷ்ணு

எமது சமூகத்தில் ஏதோ ஒரு வகையில் சீரழிவுகள் இன்று வரை தொடர்ந்து கொண்டு தான் இருக்கின்றன. சீரழிவை ஏற்படுத் தும் வடிவங்கள் பலவகைப்பட்டுள்ள நிலையில் வளர்கின்றனவே தவிர தடுத்து நிறுத் தப்பட வில்லை. இதற்கான வலுவான நட வடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப்பட வில்லை.

பாலியல் துஷ்பிரயோகம், திருட்டு, கொள்ளை, போதைப் பாவனை, வாள் வெட்டு எனச் சீரழிவின் வடிவங்கள் பல்கிப் பெருகிச் செல்கின்றன. இந்தக் குற்றங் களைப் புரிந்தவர்களில் ஒரு பகுதியினர் பிடிபடுகின்றனர். பெரும் பகுதியினர் தப்பித்துக் கொள்கின்றனர்.

வடமராட்சியில் அண்மையில் பட்டப் பகலில் இளைஞர் ஒருவர் அடித்துக் கொலை செய்யப்பட்டார். அதேபோல் பல்வேறு இடங்களிலிருந்தும் வாள்வெட் டுக் காயங்களுடன் பலர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்படுகின்றனர். கரையோரப் பகுதிகளில் இவ்வாறான சம்பவங்கள் அதிகம் இடம்பெறுகின்றன. எதற்காக அவற்றைத் தடுத்து நிறுத்த முடி யாமல் இருக்கின்றது என்பது பற்றி ஆராய வேண்டிய பொறுப்பு பலரையும் சார்ந்திருக்கிறது.

கரையோரப் பகுதிகளில் இவ்வாறான சம்பவங்கள் தொடர்வதற்குக் காரணம் என்ன என்பது பற்றி அந்தச் சமூகத்தில் உள்ளவர்கள்தான் சிந்திக்க வேண்டும். அவர்களைவிட சமூகப் பெரியார்கள் அதுபற் றிக் கவனம் எடுக்கவேண்டியதும் அவசியம்.

அண்மையில் யாழ்.மடம் வீதி, வைத் தியசாலை வீதிகளிலுள்ள நான்கு வீடுக ளினுள் புகுந்த கும்பல் மோசமாக வாள் வீச்சில் ஈடுபட்டது. இதில் நான்கு பேர் கை, தலை, கழுத்துப் பகுதிகளில் வெட் டுக் காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் 23 வயதான 5 மாதக் கர்ப்பிணிப் பெண்ணுக்கும் கழுத்துப் பகுதியில் ஆழமான வெட்டுக்காயம் ஏற்பட்டு ஆபத்தான நிலையில் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இத்தனைக்கும் அவ்வாறு தாக்குதல் மேற்கொண்ட கும்பலும் அதே இடத்தைச் சேர்ந்ததே. இதில் வியப்புக்குரிய விடயம் என்னவெனில், சுமார் 30 பேர் கொண்ட அந்தக் கும்பலில் 15 பேர்வரையானோர் பெண்கள். கர்ப்பிணிப் பெண் உட்பட 2 பெண்களையும் பெண்களே வெட்டினர் எனப் பாதிக்கப்பட்டவர்கள் தெரி விக்கின் றனர்.

> “வியப்புக்குரிய விடயம் என்னவெனில், சுமார் 30 பேர் கொண்ட அந்தக் கும்பலில் 15 பேர் வரை யானோர் பெண்கள். கர்ப்பிணிப் பெண் உட்பட 2 பெண்களையும் பெண்களே தாக்கியுள்ளனர்

ஒரு வீட்டில் வளர்க்கப்பட்டு வந்த சுமார் 40 புறாக்களை இந்தக் கும்பல் அடித்தும் திருகியும் கொன்று போட்டுள்ளது. வீடுகளது கதவு, ஜன்னல் கண்ணாடிகள் என்பன அடித்து நொருக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட தரப்பைச் சேர்ந்தவர்களில் ஒரு பெண் தாக்குதலிலிருந்து தப்பிக்க தான் மதில் ஏறிப் பாய்ந்தார் எனத் தெரி வித்தார். மனிதர்களிடையேயான கைகலப் பில் புறாக்களைக் கூடக் கொல்லுமள வுக்கு நிலைமை மோசமாகிவிட்டது.

தாக்குதலை மேற்கொண்ட தரப்பில் பெரும்பாலான ஆண்கள் போதை தலைக் கேறிய நிலையில் கண்மண் தெரியாது நடந்து கொண்டனர் எனக் கூறப்படுகிறது. தாக்குதலுக்கு உள்ளானவர்களில் ஒருவர் சிவில் பாதுகாப்புக்குழு உறுப்பினர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அங்கு போதைப்பொருள் வியாபாரம், போதைப் பொருள் பாவனை என்பன தாராளமாக இடம்பெறுவதாகச் சுட்டிக்காட் டப்படுகிறது. நீண்டகாலமாக இவ்வாறான வெட்டுக் குத்துக்கள் இடம்பெற்று வரு வதற்குப் போதைப் பொருள் பாவனை பிர தான பங்கு வகிக்கிறது என்றும் கூறப் படுகிறது.

அவ்வாறெனின் அதனுடன் தொடர்பு பட்டவர்கள் இன்றுவரை கைதுசெய்யப்படா மல் இருப்பதற்குக் காரணம் என்ன? என்பது ஒரு சாரரது கேள்வியாகவுள்ளது.

அந்தத் தாக்குதலை மேற்கொண்டவர் கள் இதுவரை கைதுசெய்யப்படவில்லை. விரைவில் கைது செய்வோம் என்கிறார் கள் பொலிஸார்.

ஆனால் கடந்த செவ்வாய்க்கிழமை இந்த வாள்வெட்டுச் சம்பவம் இடம்பெற் றதைத் தொடர்ந்து மற்றுமொரு வாள் வெட்டுச் சம்பவம் இடம்பெறவிருந்த நிலையில் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதை அடுத்து அன்றிரவு 6 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அவர்களில் 4 பேர் மாணவர்கள். 6 பேரும் கொக்குவில், தாவடி, சுண்டிக்குளி, கோயில் வீதியைச் சேர்ந்தவர்கள்.

அன்று பகல் இடம்பெற்ற சம்பவத்தை யடுத்து அன்றிரவு மீண்டுமொரு அழிவை ஏற்படுத்துவதற்காக இந்த 6 பேரும் அந்தப் பகுதிக்கு அழைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரியவருகிறது. அங்கு சென்ற வர்களில் 6 பேர் மட்டும் பிடிபட ஏனையோர் தப்பிச் சென்றுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். அவர்கள் ஈச்சமோட்டை பால்குளம் பகுதியில் சருகுகளுக்குள் வாள்களை மறைத்து வைத்திருந்த நிலை யில் பொலிஸார் அவற்றை மீட்டுள்ள னர். 13 வாள்களும், இரும்புக் கம்பி யொன்றும், 3 மோட்டார் சைக்கிள்களும் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

13 வாள்களில் ஒரு சில பழைய வாள்கள். ஏனையவை புதிய வாள்கள். அண்மையிலேயே செய்யப்பட்டன என் பதை அவற்றின் பளபளப்பே காட்டு கின்றன. அழிவுகளுக்கு என்றே அந்த வாள்கள் செய்யப்பட்டன. அவை எங்கு செய்யப்பட்டன? செய்து கொடுத்தவர் கள் யார்? என்பது பற்றி விசாரணை செய்ய வேண்டியது பொலிஸாரின் கடமை.

அந்தந்தப் பகுதி மக்கள் எந்த மதத்தைச் சார்கிறார்களோ அந்தந்த மதத் தலைவர்கள் இதில் ஆர்வமாகத் தலை யிட்டுக் கைகலப்பு, விரோதங்களைத் தடுக்க முன்வரவேண்டும். மதத் தலைவர்களது பங்களிப்பு, குற்றச் செயல்களை, சமூகச் சீரழிவுகளை தடுக்கப் போதியதாக இல்லை என்றும் கூறப்படுவதைத் தடுக்க இது வழிவகுக்கும்.

பொலிஸார் மேலெழுந்த வாரியாகவே விசாரணை செய்வதும், சந்தேகநபர்கள் கைது செய்யப்படுவதுமாக இருக்கின்ற னர். பிரதான சந்தேகநபர்கள் தப்பித்துக் கொள்கின்றனர். போதைப் பாவனை, விற்பனையை பொலிஸார் முற்று முழு தாக இன்னுமே தடுத்து நிறுத்தவில்லை என்பதும் பலராலும் சுட்டிக்காட்டப் படுகிறது. இவ்வாறான சமூகச் சீர்கேடு கள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்பதே பொதுமக்கள் எதிர்பார்ப்பு. ★

# ஊழலுக்கு எதிராக டில்லியில் கூட்டு

■ யமுனா

“ஊழல்' என்ற சொல் உல கிலுள்ள பெரும்பாலான நாடுகளில் இன்று பரவ லாகப் பேசப்படும் பேசு பொருளாக விளங்கி வருகிறது. அதாவது, எந்தவொரு நாட்டிலும் அதிகார வர்க்கத்தில் உள்ள வர்கள் மத்தியில் இது மேலோங் கிக் காணப்படுகிறது. அந்த வகையில் இன்று இந்தியாவிலும் இந்த விவகாரம் பூதாகரமாக உருவெடுத்துத் தலை விரித்தாடுகிறது. இதற்குச் சிறந்த உதாரணமாக 'ஸ்பெக்ட் ரம்' அலை வரிசை தொடர்பான ஊழல் சுட்டிக்காட்டத்தக்கது. இவ்வாறு மேல் மட்ட அதிகார வர்க்கத்தினர் தமது அதி காரத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளும் ஊழல்களால் உண்மையில் பாதிப்புள்ளா வோர் குறித்த நாடுகளின் சாதாரண ஏழைப்பொதுமக்களே.

இவ்வாறு மிக இரகசியமாக திரை மறைவில் இடம்பெறும் இத்தகைய ஊழல் மோசடிகளில் சமூக ஆர்வலர்கள் ஏதோ ஒரு விதத்தில் தோண்டித் துருவித் தேடிக் கண்டறிந்து வெளிக்கொணர்ந்து பிரபலப்படுத்துகின்றனர். அந்த வகையில் இந்தியாவில் ஊழலுக்கு எதிராக போரா டும் முக்கிய சமூக ஆர்வலர் அன்னா ஹஸாரே எல்லோராலும் அறியப்பட்ட வர். இவர் பல தடவை ஊழலுக்கு எதிராக உண்ணாவிரதப் போராட்டங்களை முன் னெடுத்து அனைவரது கவனத்தையும் தம்பால் ஈர்த்தவர்.

> “இந்தியாவில் ஊழலுக்கு எதிராக போராடும் முக்கிய சமூக ஆர்வலர் அன்னா ஹஸாரே எல்லோராலும் அறியப்பட்டவர்.

இவற்றில் குறிப்பிடத்தக்க மற்றொரு அம்சம் கறுப்புப் பண விவகாரம். இது இன்று உலக நாடுகளிடையே அதிகம் மலிந்து காணப்படும் விவகாரமாகும். இந்தியாவும் அதற்கு விதிவிலக்கா என்ன? இந்தியாவின் பொருளாதாரநிலை தற் போது குறிப்பிடத்தக்க வீத வளர்ச்சியை கண்டுவருகிறது. இந்தியர்களில் வர்த்தகத் துறையில் பெரும்புள்ளிகள் வசமுள்ள கறுப்புப் பணம் வெளிநாட்டு வங்கிகளில் வைப்புச் செய்யப்பட்டுள்ளது. இந்தக் கறுப்புப் பணப் பதுக்கலுக்கு எதிராகப் போராட்டத்தில் குதித்தவர்தான் யோகா குரு பாபா ராம்தேவ். டில்லி ராம்லீலா மைதானத்தில் இந்த விவகாரத்தை முன் வைத்து கடந்த வருடம் ஜூன் மாதம் ஊழலுக்கு எதிரான போராட்டத்தில் குதித்தார் அவர்.

ராம்தேவ் போராட்டத்தில் ஈடுபட்ட போது அவரது ஆதரவாளர்கள் கூடியி ருந்த ராம்லீலா மைதானத்தில் நள்ளிரவு வேளையில் நுழைந்த பொலிஸார், தடியடி நடத்தி கூட்டத்தைக் கலைத்துள் ளனர். அதனையடுத்து ராம்தேவைப் பொலிஸார் கைது செய்தனர். பின்னர் ஹரித்துவாரில் உள்ள அவரது ஆச்சிரமத் துக்கு ஹெலிகொப்டரில் கொண்டு சென் றனர். டில்லியில் பொலிஸாரின் இந்த



அத்துமீறல் செயற்பாட்டுக்கு உச்சநீதி மன்றம் கண்டனமும் தெரிவித்திருந்தது.

இந்தச் சம்பவம் இடம்பெற்று சுமார் ஒரு வருடம் கழிந்த நிலையில், கடந்த வாரம் ராம்தேவ் மீண்டும் உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ளார். இதில் குறிப்பிடத்தக்க மிகப்பெரிய விடயம் என்னவென்றால் அன்னா ஹஸா ரேயும், ராம்தேவும் இதுவரை தனித்தனியாகத் தான் தமது போராட்டங்களை முன்னெ டுத்து வந்தனர். ஆனால் இரு வரும் இணைந்து முதன் முத லாக டில்லியில் ஒருநாள் அடையாள உண்ணாவிரதத் தில் ஈடுபட்டமை இதுவே முதல் தடவையாகும். ஊழ லுக்கு எதிரான பலவந்தமான, மக்கள் ஆதரவையும் பெற் றுள்ள இந்த இரண்டு தரப்புக் களும் ஒன்று சேர்ந்தால் எப் படி இருக்கும். ஆளும் காங் கிரஸ் கட்சியே ஆடிப்போய் நின்றது.

இந்த உண்ணாவிரதப் போராட் டத்தின் போது கருத்து வெளி யிட்ட பாபா ராம்தேவ், வலுவான லோக்பால் பிரேரணை தேவை என்ப தையும் பிரதமர் மன்மோகன் சிங் மட்டும் நேர்மையாக இருந்தால் மட்டும் போதாது. அவரது அமைச்சரவையும் நேர்மையாகச் செயற்பட இருக்கவேண்டும் என்றும் பாபா ராம்தேவ் வலியுறுத்தியிருந்தார். ✦

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிமைகளின் மீட்பர்

## ஆபிரஹாம் லிங்கன்



ஆபிரஹாம் லிங்கனின் இளமைக்கால வீடு

பா.உண்மை

நெடுந் தொடர்

4

தோமஸ் லிங்கனின் குடும்பம் கென்டகியில் இருந்து இண்டியானாவுக்கு மாறியது முதலே ஆபிரஹாமின் தாய் நான்ஸி உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டார். நாள் செல்லச் செல்ல அவரது நோய் முற்றிக் கொண்டே வந்தது.

ஒரு நாள் ஆபிரஹாமை அருகே அழைத்தார் நான்ஸி.

''என்னம்மா?'' என்று கேட்டபடி தாயிடம் இழைந்த ஆபிரஹாமை ஆரத் தழுவியபடியே, ''ஆபிரஹாம்! நான் உன்னை விட்டுப் போறேன் . உங்கள் அப்பாவிடமும் அக்காவிடமும் எப்போதும் நீ அன்பா இருப்பாய் என்று எனக்குத் தெரியும். நான் சொல்லிக் கொடுத்ததை எல்லாம் மறந்துவிடாதே. அதேபோல் நடந்துகொள்'' என்றார். அம்மா சொன்னதற்கெல்லாம் தலையை ஆட்டினான் ஆபிரஹாம்.

1818 ஒக்டோபர் மாதம், ஐந்தாம் திகதி நான்ஸி இறந்து போனார்.

ஏற்கனவே கொள்ளை நோய்க்குப் பலியானவர்களுக்காகச் சவப்பெட்டி செய்த பழக்கம் தோமஸ் லிங்கனுக்கு இருந்தது. தோமஸ், ஆபிரஹாமை அழைத்துக் கொண்டு காட்டுக்குப் போனார். ஒரு மரத்தை வெட்டித் தன் மனைவி நான்ஸிக்காக அவரே ஒரு சவப்பெட்டி செய்தார்.

அந்தச் சவப்பெட்டியில் நான்ஸியின் உடலை வைத்து, தூக்கிக் கொண்டு போய், அவர்கள் வீட்டிலிருந்து அரை மைல் தூரத்தில் இருந்த ஓர் இடத்தில் மரத்தினடியில் அக்கம் பக்கத்திலிந்தவர்களின் துணையோடு குழிதோண்டிப் புதைத்தார்கள். தோமஸும் நான்ஸியும் மிகுந்த கடவுள் நம்பிக்கை உள்ளவர்கள். ஆனால், பாதிரியார் யாரும் கிடைக்காததால் சடங்குகள் எதுவும் நான்ஸிக்காகச் செய்யப்படவில்லை.

பாதிரியார் யாரும் கிடைக்காததற்குக் காரணம், அந்தப் பகுதியில் அப்போது கிறிஸ்தவ தேவாலயங்கள் எதுவும் இல்லை. அவர்கள் கென்டகியில் இருந்தபோது, ஒரு மத போதகர் ஆபிரஹாமுக்கு அறிமுகமாகி இருந்தார். அவர் பெயர் டேவிட் எல்கின்.

அவர் வந்தால் அம்மாவுக்கு இறுதிச் சடங்கு செய்ய முடியுமே என்று யோசித்தான் ஆபிரஹாம். அப்போது அவனுக்கு ஒன்பது வயது தான். இருந்தாலும் அவனுடைய ஏழைத் தாயை நினைவு வைத்துக் கொண்டு, அந்த மத போதகர் நிச்சயம் வருவார் என்று அவன் நம்பினான். எனவே, அவருக்காக ஒரு கடிதம் எழுத முடிவு செய்தான்.

சரி! கடிதத்தை எப்படி எழுதுவது ? இன்றைய நாள்களைப் போல, அப்போதெல்லாம் பென்சில், பென், பேப்பர் அதிகம் புழக்கத்தில் இல்லாத காலம் அது. பறவையின் இறகினால் மையைத்தொட்டுத் தொட்டுத்தான் எழுதவேண்டும். தபால் செலவும் அதிகம். ஆனாலும் ஆபிரஹாம் எப்படியோ ஒரு கடிதத்தை எழுதி, கென்டகிக்குப் போகிற ஒருவரிடம் கெஞ்சிக் கூத்தாடி அந்தக் கடிதத்தைக் கொடுத்து, அந்தப் பாதிரியாருக்கு அனுப்பியும் விட்டான்.

சில மாதங்கள் கழிந்தன. இலைகள் மறுபடியும் மரங்களின் மேல் ஏறி அமர்ந்து கொள்ளும் வசந்தம் வந்தது. காட்டு மரங்களில் மலர்கள், பூத்துக் குலுங்கின. ஒரு சிறுவன் எழுதிய கடிதத்துக்கு மதிப்புக் கொடுத்து அந்த மத போதகரும் இண்டியானாவுக்கு வந்துசேர்ந்தார்.

நல்ல மனம் படைத்த அந்தப் பாதிரியார், ஆபிரஹாமின் குடும்பம் கொடுக்கப்போகும் பணத்துக்காகவோ சன்மானத்துக்காகவோ அங்கு வரவில்லை. ஆபிரஹாம் அன்பு சொட்டச் சொட்ட எழுதிய கடிதத்துக்காகத்தான் அங்கு வந்திருந்தார்.

அவர் வந்ததும் நண்பர்களும் அக்கம் பக்கத்தில் இருந்தவர்களும் ஆபிரஹாமின் அம்மா அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் கூடினார்கள். ஊரில் இருந்து வந்திருந்த அந்தப் பாதிரியார், இறுதிச் சடங்கை முறைப்படி செய்து வைத்தார். வேதப் பாடல்கள் பாடப்பட்டன. எல்லோரும் பிரார்த்தனை செய்தார்கள். அன்பாக இரக்கம் தொனிக்கும் வார்த்தைகள் உச்சரிக்கப்பட்டன. மிகச் சிறப்பாக ஆபிரஹாமின் தாய் நான்ஸியின் இறுதிச் சடங்கு நடந்தது.

ஆபிரஹாம் லிங்கன் உலகம் அறிந்த மனிதராக உயர்ந்த பிறகு ஒரு நாள் சொன்னார்: நான் இப்படி உயர்ந்திருப்பது, இனிமேல் உயரத்துக்குப் போவது எல்லாமே என் தாய் என்கின்ற தேவதை எனக்குக் கொடுத்த வரத்தால்தான்.

வீடு வெறுமையாக இருந்தது. ஆபிரஹாம், அம்மா இல்லாத தனிமையை உணர்ந்தான். அந்தத் தனிமை அவனை வாட்டி எடுத்தது. 12 வயதான அவனுடைய அக்கா சாரா, வீட்டு வேலைகளைச் செய்து கொண்டிருந்தாள். அவள் சமைப்பதைத்தான் ஆபிரஹாமும் தோமஸும் சாப்பிட வேண்டும் என்றாகிவிட்டது.

ஆபிரஹாமின் அப்பாவுக்கு வீட்டுக்கு தரை போடவும் வாசலுக்குக் கதவு போடவும் நேரம் இல்லாமல் இருந்தது. அந்தப் பிளவுகள் வழியாக அவ்வப்போது குளிர்காற்றும் மழையும் உள்ளே வந்து படுத்தி எடுத்துக் கொண்டிருந்தன.

# புத்தம் சரணம் கச்சாமி சொல்லத் தயாரா?

திில்லாலங்கடி

"அவங்கள் இருந்தா இவங்கள் இப்பிடி கதைப்பாங்களோ, அல்லது இப்படித்தான் செய்வாங்களோ. இப்பதான் அவங்கள் இல்லாட்டி என்ன நடக்கும் என்று தெரியுது''.

இன்று பரவலாக இந்தச் சொற்றொடர்களைக் கேட்க முடிகிறது. ஒருவர் இருக்கும் போது அவரது பெருமைகள் தெரியாது, அவர் இல்லாத போது, அதனால் பாதிப்புக்கள் ஏற்படுகின்ற போதுதான் அவரது அருமை தெரியவரும். அதே போன்றுதான் இப்போது தமிழ் மக்களும் '' அவங்கள் '' இல்லாததன் விளைவுகளை ஒவ்வொன்றாக உணரத் தொடங்கியிருக்கின்றனர். பாதுகாப்பு அமைச்சின் செயலரும், ஜனாதிபதியின் சகோதரருமான கோத்தபாய ராஜபக்ஷ '' வடக்கு, தமிழர்களுக்கு மட்டும் சொந்தமில்லை'' என்று தெரிவித்திருந்தார். அதற்கு வக்காளத்து வாங்குவதைப் போன்று ஜாதிகஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் எல்லாவல மேதானந்த தேரரும் கருத்துத் தெரிவித்திருந்தார்.

இவர்கள் வெறுமனே எங்களது தமிழர் அரசியல்வாதிகளைப் போன்று அறிக்கைகளை மட்டும் விடுத்துவிட்டு இருப்பவர்கள் அல்லர். அதற்கான காரண காரியங்களை ஆரம்பித்துள்ளதுடன், மேலும் தீவிரமாக முன்னெடுக்க இருக்கின்றார்கள்.

சிறுபான்மையினம் எங்கும் பெரும்பான்மையாக இருக்கக் கூடாதென்பதில் விடாப்பிடியாக இவர்களது செயற்பாடுகள் இருக்கின்றன. அதனுடன் பௌத்த மதத்தைப் பரப்புவதிலும் வெகுவேகமாக தமது பணிகளை முன்னெடுத்துச் செல்லுகின்றனர்.

2009 ஆம் ஆண்டு இலங்கை அரசினால் போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதாக அறிவிக்கப்பட்ட பின்னரே இத்தகைய நடவடிக்கைகள் முழுமூச்சில் இடம்பெறுகின்றன. அதுவரையில் இவர்கள் எங்கிருந்தார்கள், இந்தக் கருத்துக்களை முன்னர் ஏன் தெரிவிக்கவில்லை என்பது எல்லாம் '' அவர்கள் '' இருந்ததன் விளைவே.

வடக்கு - கிழக்கு தமிழரின் பூர்வீக தாயகம். அதனை மீட்டெடுக்கவே ''அவர்கள்'' போராடினார்கள். ''அவர்கள்'' இருந்த காலத்தில் தமிழரின் பூர்வீக தாயகங்கள் பெரும்பாலும் தமிழர்களிடமே இருந்தன. அத்துடன் பூர்வீக தாயக நிலப்பரப்பினுள் எந்தவொரு குடியேற்றவாதியும் கால் பதிக்கவில்லை. ஏன் புத்தர் கூட ஊடுருவவில்லை.

அந்தளவு தூரம் '' அவர்கள் '' எங்களது நிலங்களை காப்பதற்காக இரவு பகலாக கஷ்டப்பட்டார்கள். பாதுகாத்தார்கள். நிலங்களை மட்டுமல்ல எங்களது கலாசாரங்களையும் பண்பாடுகளையும் முன்னெடுப்பதிலும் அதற்கு எந்த வகையிலும் பாதிப்பு ஏற்படாத விதத்திலும் பாதுகாத்தார்கள்.

தப்புச் செய்கின்றவனுக்கு தண்டனை மீது பயமிருந்தால் அந்தத் தப்பைச் செய்ய மாட்டான். அதற்காக ''அவர்களது'' தண்டனைகள் அதி உச்சபட்சமாக இருந்தது. அதனால் சமூகம் கட்டுப்பாடான சமூகமாக இருந்து வந்தது. இவ்வாறு எங்களுக்காக '' அவர்கள் '' செய்தவைகள் ஏராளம். நாங்கள் வாழ வேண்டும் என்பதற்காக தங்களின் உயிரை - உறவுகளை - துச்சமென மதித்து போராடினார்கள். ஆனால் நாங்களோ முள்ளிவாய்க்காலின் பின்னர் ''அவர்களை '' மெல்ல மெல்ல மறக்கத் தொடங்கி விட்டோம். இன்னும் எஞ்சியிருக்கின்ற சில ''அவர்களது '' நினைவுச் சின்னங்களையும் அபிவிருத்தி என்ற பெயரால் ஆக்கிரமிப்பதற்கு நாங்கள் சம்மதித்து விட்டோம். இவ்வாறு எங்களது மனப்பதிவுகள் மெல்ல மெல்ல '' அவர்களை'' மறக்கத் தொடங்கும் தருணத்தில் மறுபுறம் '' அவர்கள்'' இல்லாததன் விளைவுகள் எங்களை அலைக்கழிக்கத் தொடங்கியுள்ளன.

தமிழர் பகுதிகள் எங்கும் சிங்களக் குடியேற்றங்கள் எந்தவிதமான தங்குதடையுமின்றி முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதனை தடுப்பதற்கு எங்களாலும் முடியவில்லை. '' அவர்கள் '' இருந்திருந்தால் இவ்வாறு நடக்காது என்று எங்களது உள்மனம் உறுத்துகின்றது.

கலாசார சீரழிவுகள் கட்டுக்கடங்காமல் பெருகிச் செல்கின்றன. பதின்மவயது கர்ப்பங்கள் கணக்கில் வராமலே அதிகரித்துச் செல்கின்றன. ஒருவனுக்கு ஒருத்தி என்ற வாசகம் மெல்ல மெல்ல அழிக்கப்பட்டுச் செல்கின்றது. எங்கள் கலாசாரங்களை பின்னிருந்து அழிப்பவர்கள் யாரென்று தெரிகையில் '' அவர்கள் '' இல்லாததன் வேதனை தெரிகின்றது.

இன்று '' அவர்கள் '' இல்லாததால் வடக்கு தமிழர்களுக்கு மட்டும் சொந்தமில்லை என்று உரிமையுடன் சொல்கின்றார். இலங்கையின் ஈச்சரங்களில் ஒன்றான திருக்கேதீச்சரத்தில் புத்தர் பெருமான் தனக்கும் இடம் வேண்டும் என்று அடம்பிடிக்கின்றார்.


எங்களது எதிர்கால இருப்புக்கள் கேள்விக் குறியாகின்றன. இவை நடக்கையில்தான் '' அவர்கள் '' இல்லாததன் விளைவு தெரிகின்றது.

இப்போதும் எங்களின் சுயநலத்திற்காகவே '' அவர்களை '' தேடுகின்றோம். '' அவர்கள் '' இருந்தால் இவ்வாறு நடக்காமல் பார்த்துக் கொள்வார்கள். நாங்கள் எங்களின் இருப்புக்களை வைத்துக் கொண்டு இருக்கலாம். ஒரு போதும் நாங்கள் மீளவும் '' அவர்களுக்கு '' உயிரூட்டும் முயற்சியில் ஈடுபடுவதாகத் தெரியவில்லை. மாறாக நாங்கள் வாழ வேண்டும். ஆனால் '' அவர்கள் '' மட்டும் போராட - சாக - வேண்டும் என்றே நினைக்கிறோம்.

இன்னும் சிலர் '' அவர்கள் '' மீண்டும் வருவார்கள். வந்து எங்களை மீட்பார்கள் என்று சொல்லியே காலத்தை வீணடித்துக் கொண்டிருக்கின்றனர். நாங்கள் '' அவர்களாவதற்கு '' தயாரில்லை. நாங்கள்தான் '' அவர்கள் '' என்ற நிலை வந்தால்தான், வடக்கு தமிழர்களுக்கு மட்டும் சொந்தமில்லை என்று சொன்னவர்களுக்கு இல்லை அது எங்களுக்கு மட்டும்தான் சொந்தம் என்று சொல்ல முடியும். இல்லாவிட்டால் எதிர்காலத்தில் நாங்களும் '' புத்தம் சரணம் கச்சாமியை '' ஓதத் தயாராக இருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 218



அனுப்புபவர் பெயர்:..........................................

விலாசம்:..........................................

..........................................

கையொப்பம்:..........................................

### இடமிருந்து வலம்

1.காமத்தால் வரும் நோய்/ எண்ணம்.
6. கடலில் விளையும் இராஜசின்னம்
7. (மாட்டின்) சாணி
8.துப்பாக்கி
10. கோபம்
11.நவக்கிரகங்களுள் ஒன்று
12. சேர்
13. கூட்டல் குறி
14. முளை விடும் நிலை
16. இரும்பை அறுப்பது இந்தக் கருவியினால்
18. அறிவு/மதி
20. இறுதி உறக்கம் இங்கே
22.நிறுத்து
23. சிறிய பாத்திரம்
24. இந்து சமயத்தில் ஓர் உட்பிரிவைச் சேர்ந்தவன்

### மேலிருந்து கீழ்

1. பாராட்டி வழங்கும் கௌரவம்
2. நறுக்கு/முறுக்கு/ கயக்கு
3. பிடித்துக் கொள்
4. பிரி
5. ஆசைப்படு
7. எண்க
9. பன்றி/ தசாவதாரத்தில் ஒன்று
10. காலில் அணியும் அணிகலன்
12. உயிர்ப்பின் ஆரம்ப இடம்
13. பொருள்/ சாமான்
14. தாய்
15. ஒரு நெறியின் வழிகாட்டி
17. உரம்
19. மூன்று/ விளக்கில் எரிவது
21. திக்கு

★வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 216 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) விசித்திரம் (6) காண் (7) சுதி (8) தண் (9) கடுகதி (11) பரணி (12) வலி (13) கத்தரி (15) கடி (16) தத்தம் (17) கிளி (18) காதல் (19) கராம்பு (21) மைல் (22) வலம்புரி

**மேலிருந்து கீழ்**

(1) விசாகம் (2) சிண்டு (3) திகதி (4) ரதி (5) கண்ணிவெடி (8) தர (10) கணித்தல் (11) பலி (12) வரி (13) கத்தல் (14) தம் (15) களிம்பு (16) தகாமை (17) கிராம் (19) கல (20) புரி

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 218**
*நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேற்]லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*
என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன் கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், 20.06.2012 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

7.சொற்சிலம்பம்போட்டி இல.218இல்வெற்றி பெறுவோர்களது விவரம் 24.06.2012 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 216 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
**பிரணவி பிரகலாதன்,**
இல.276, மூர் வீதி, மன்னார்.

**2 ஆம் பரிசு**
**நா.இரத்தினராசா,**
அளம்பில், முல்லைத்தீவு.

**3 ஆம் பரிசு**
**ஏ.சிவகணேஸ்வரி,**
1 ஆம் கட்டை ஒழுங்கை, புலோலி வடக்கு, பருத்தித்துறை.

**4 ஆம் பரிசு**
**இ.சிவசிறிதரன்,**
அல்பா மிக்சர் (கடை), சங்கானை.

**5 ஆம் பரிசு**
**திருமதி த.நாகநந்தினி,**
புதுமுறிப்பு, உருத்திரபுரம், கிளிநொச்சி.

**பாராட்டுப் பெறுவோர்**

**உ.ஜனார்த்தனி,**
கைதடி மேற்கு, கைதடி.

**லோ.வாகினி,**
இல.58, மணிக்கூட்டு வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.

**ஸ்ரீ சிவசோதி,**
இல. 388, பிரதான வீதி, பருத்தித்துறை.

*பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால்மூலம் அனுப்பிவைக்கப்படும்.*

# கலாசாரத்தை காப்போம்

மருத்துவர் இ.சிவசங்கர்
*இந்து மகாசபை*

ஒட்டுமொத்த சமூகத்தின் வாழ்வுப் பயணமாகட்டும், தனிமனிதனின் வாழ்வுப் பயணமாகட்டும், அனைத்துக்கும் மீள் ஆராய்வு, சுய ஆய்வு தேவைப்படும். பயணத்தில் தொடர் கண்காணிப்பு இருக்கும் வரையிலேயே பாதை மாறாத பயணமாக அமைந்து, இலக்கை அடையக்கூடியதாக அமையும். இல்லையேல் தனிமனிதர்களும், சமூகமும் பாதை விலகுதலில் அகப்பட்டு, இலக்கை அடையமுடியாது சிதைந்து போவோம்.

**இலங்கை தமிழரின் பூர்வீகம்**

தமிழர்களின் வரலாற்று வாழ்வியல் பிரதேசம் தென்கிழக்காசியா என்பது துணிபு. வரலாற்றுக்கு முற்பட்ட முதற்சங்க கால குமரிக்கண்ட வாழ்வியல் பிரதேச நிலையிலிருந்து, இன்றைய வாழ்வியல் பிரதேசம் வரைக்கும் இது பொருந்தும். தென்கிழக்கு ஆசியாவே தமிழரின் தோற்றமும் வாழ்வும் ஆகும்.

**இலங்கை தமிழரின் சமயம்**

இந்துசமயம், தென்கிழக்கு ஆசியாவில் தோற்றம் பெற்றது. அதன் ஒரு பிரிவாகிய சைவமே தமிழரின் சமயமாகும். சைவத்தமிழ் என்பது இதனால் ஏற்பட்ட மொழித் தொடர் என்பது யாவரும் உணர்ந்ததே. தமிழரின் கலை, கலாசாரமாகட்டும், அங்கு சைவசமயத்தை விலக்கி எதுவும் இல்லை. ஒன்றை மட்டும் உதாரணமாகக் கூறலாம். தமிழரின் ஆடற்கலையான பரதம், நடராஜருடன் பிணைந்துள்ளது. நடராஜரை விலக்கி பரதம் இல்லை. பரதம் பயிலும் தமிழ் கிறிஸ்தவர்கள் நடராஜ வணக்கத்துடனேயே அரங்கேற்றம் நிகழ்த்துகின்றனர். யாழ்ப்பாண தமிழ் கிறிஸ்தவர்களின் கலை மையமாக திகழும் திருமறை கலாமன்றத்தில் நடராஜரின் வைப்பு இதைத் தெளிவுபடுத்துகின்றது. இதிலிருந்து தமிழ் கலாசாரம் சைவத்துடன் இணைந்ததே என்பது உறுதியாகின்றது.

**கிறிஸ்தவத்தின் தோற்றமும் பரம்பலும்**

யேசுகிறிஸ்து நாதரினால் 2000ஆம் ஆண்டுகளுக்கு முன்னர் பலஸ்தீனத்தில் கிறிஸ்தவம் தோற்றுவிக்கப்பட்டது. யூதர்களின் தாக்குதல்களால் கிறிஸ்தவம் அங்கு வேர் கொள்ள முடியாதுபோனதால், ரோம் நாட்டிற்கு வந்து வளர்ச்சியடைந்தது. இதனாலேயே றோமன் கத்தோலிக்கம் என்ற சொற்றொடர் உருவாக்கம் பெற்றது. ரோமன் கத்தோலிக்கத்திலிருந்து உருவாகியவையே ஏனைய அனைத்து கிறிஸ்தவ அமைப்புக்களும் என்பது வரலாற்றுத் தெளிவு.

**காலனித்துவ காலத்தில் இலங்கை தமிழரின் சமயம்**

தமது வாழ்வின் தேவைக்காக ஐரோப்பியர்களால் நாடுகாண் பயணங்கள் மேற்கொள்ளப் பட்டன. இதிலிருந்து தொடங்கியதே காலனித்துவ காலகட்டமாகும். தமது உணவுப் பொருள்களை பெற்றுக் கொள்ள ஆசியாவிற்கு வந்த கிறிஸ்தவ ஐரோப்பியர்கள் வன்முறை, பலாத்காரத்தின் ஊடாக ஆசியாவின் வளங்களை சூறையாடினார்கள் என வரலாறு கூறுகின்றது. இந்தக் காலத்தில் இலங்கைதீவின் வடகிழக்குத் தமிழர் பிரதேசத்து கரையோரங்களில் வந்திறங்கிய கிறிஸ்தவ ஐரோப்பியர்கள், பிரதேச அரசுகளுடன் வன்முறையில் ஈடுபட்டதுடன், பிரதேச சைவத் தமிழர்களை மத மாற்றங்களுக்கு உட்படுத்தினர். மதமாற்றத்திலிருந்து தப்பித்து கொள்ள கரையோர இந்துத் தமிழர் உள்நோக்கி இடம்பெயர்ந்தனர். கடல்தொழில் நிமித்தம் உள்நோக்கி இடம்பெயர முடியாத இந்துக்கள் கிறிஸ்தவ ஐரோப்பியர்களினால் மதம் மாற்றப்பட்டனர். அத்துடன் நிபந்தனைகளுடன் வழங்கப்பட்ட கல்வி, தொழில்களைப் பெற்று வாழ்வை மேற்கொள்ளுமுகமாக இந்துக்கள் கிறிஸ்தவ மதம் மாறினர். இத்தகைய துன்பியல் அடிமைப்பட்ட காலத்திலேயே இலங்கை வாழ் தமிழ்ச் சமூகத்தில் கிறிஸ்தவ மத தழுவல் நிலை ஏற்பட்டது.

**காலனித்துவ கால கட்ட சைவத்தமிழ் முன்னோடிகள்**

காலனித்துவ கால கட்டத்தில் ஏற்பட்ட கிறிஸ்தவ மத மாற்ற ஆபத்தை தடுக்கும் நோக்குடன் பல பெரியோர்கள் செயற்பட்டனர். அத்துடன் தமிழ் மொழியை பாதுகாக்கபாடுபட்டனர். அத்தகைய பலநூறு பெரியோர்களில் ஆறுமுகநாவலரும், இந்துபோர்ட் இராஜரட்ணமும் உதாரணமாகக் குறிப்பிடக் கூடியவர்கள். அவர்களின் சமூகநல திட்டங்களான கஞ்சிதொட்டி, படியரிசி ஊடான சமயம் காத்தலுக்கான செயற்பாடுகள் அவர்களின் சமூக உணர்வு சார்ந்த நிலைப்பாட்டை காட்டி நிற்கின்றது. இத்தகைய சமூக உணர்வு சார்ந்த பெரியோர்களின் தொடர்வருகை இன்மையால் கிறிஸ்தவத்துக்கான மாற்றம் நிகழ்ந்து கொண்டே செல்கின்றது.

**தமிழர் பிரதேசத்தில் தற்கால சமய இயங்கியல்**

தொடக்கத்தில் ஐரோப்பிய கிறிஸ்தவர்களால் தொடங்கப்பட்டு தொடரப்பட்ட இந்து மக்களை மதமாற்றம் செய்யும் செயற்பாடுகள், தற்பொழுது காலனித்துவ ஆட்சியில் கிறிஸ் தவத்துக்கு மதம் மாறிய இந்துக்களின் பரம்பரையினால் தொடரப்படுகின்றது. கடந்த முப்பது ஆண்டுகளாக தொடர்ந்த போர் காலத்திலும் மதமாற்ற செயற்பாடுகள் தொடர்ந்தன. போர் அழிவுகளுக்கு முகம் கொடுத்து கொண்டிருந்த தமது சக இன இந்துக்களை உதவி செய்யும் நிபந்தனையாக மதமாற்றத்தை முன்வைத்து செயற்பட்டது அன்பற்ற, கவலையளிக்கும் செயற்பாடாகும். இடர்களும், இழப்புக்களும் நிறைந்த இந்த இன விடுதலை போராட்ட காலத்தில் அதிக விகித தமிழ் இந்துக்கள், கிறிஸ்தவர்களாக மதமாற்றத்துக்குள்பட்டுள்ளார்கள். இத்தகைய தமிழ் இந்துக்களின் மதமாற்றத்துக்கு ஐரோப்பிய அமெரிக்க நிறுவனங்களின் உதவியும் பெறப்படுவது மேலும் கவலை அளிப்பதாகும்.

பல்வேறு பொருளாதார, கல்வி அழுத்தங்களினால் கிறிஸ்தவமதம் மாறிய இந்துக்களின் பரம்பரையினர் அந்த வகை அழுத்தங்களை முன்வைத்து தமது இன இந்துக்களை மதமாற்றம் செய்வது கவலையளிப்பதுடன், வேதனை தரும் வேடிக்கை நிகழ்வாகவும் காணப்படுகின்றது. ஐரோப்பிய, அமெரிக்க நிறுவனங்களினால் எமது இன இந்துக்களை மதமாற்றம் செய்வதற்காகத் தரப்படும் பொருளாதார நன்மைகளுக் காக, முக்காலத்திய இந்துக்களின் பரம்பரையினராகிய தமிழ் கிறிஸ்தவர்கள் தமிழின இந்துக் களை மதம் மாற்றுவது தவறான நிகழ்வாகும். காலனித்துவ ஆட்சி காலத்தில் அவர்கள் செய்தவற்றை இன்று நாம் எமது இனத்துக்கு செய்கின்றோம். இந்துமத அழிவென்பது தமிழ்மொழி கலாசார அழிவுக்கு இட்டு செல்லும். இது மாற்றம் பெறவேண்டியதொன்றாகும்.

**தாய் மதம் திரும்புதல்**

இலங்கை வாழ் தமிழினம் சைவத் தமிழர்களே என்பதும், தற்போதைய தமிழ் கிறிஸ்தவர்கள் என்போர் உண்மையில் காலனித்துவ ஆட்சி காலத்தில் மதமாற்றம் செய்யப்பட்ட இந்துக்களின் பரம்பரையினரே (இந்துக் கிறிஸ்தவர்களே) என்றும் தெளிவு பெறுவது நன்மை பயக்கும். பாதை (மத) மாற்றப்பட்டவர்களின் பரம்பரையினர் தமது முன்னோரின் பாதைக்கு (இந்துமதம்) திரும்புவது ஆன்மீக, ஆரோக்கிய நிலைக்கு இட்டு செல்ல அனுகூலமாகும். தமிழ் கிறிஸ்தவர்கள் தத்தமது வேர்களின் வேரடி மண்ணுடன் (இந்துமதம்) இணைந்து கொள்வதே கலாசார விழுமிய வளர்ச்சிக்கு இட்டு செல்லும். அதற்கும் மேலாக சொந்த அடையாளம் எனும் உயர் உள தேவையை பூர்த்தி செய்து பூரணப்படுத்த தாய்மதம் திரும்பல் உதவும். மேலும் தாய்மதம் திரும்புகை என்பது எமது சக இனத்தவர் களை மதமாற்றும் நிர்ப்பந்தங்களில் இருந்து விடுபட உதவும். தாய்மதம் திரும்பினால் ஐரோப்பிய, அமெரிக்க கிறிஸ்தவ நிறுவனங்களின் அழுத்தங்கள் செயலற்று போகும். இது தமிழின முன்னேற்றத்தை சிந்தித்து முன்னெடுக்க உதவி செய்யும். சிங்கள பெரும்பான்மைவாதத்திற்குள் கரைந்து கொண்டிருக்கும்தமிழ் கலாசாரத்தைக் காப்பாற்றும் பணியும் இந்த இடத்தில் முனைப்புப் பெறுதல் அவசியமானதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானத்துக்கும் எல்லை உண்டு




**வைத்தியசாலையில் காவேரி மகேஷை நினைத்துப் பார்த்தாள். அவனுடன் வாழ்ந்த காலத்தை மறக்க முடியவில்லை. கண்களிலிருந்து கண்ணீர் முத்துக்கள் பிதுங்கின. மகேஷ் வந்தால் கடைசி வரைக்கும் பார்க்கவேண்டியவள் நானே! இது வரைக்கும் தன் எல்லையைத் தாண்டாதவள் இப்படியே வாழ்க்கை தொலைந்து விடுமோ என்றிருந்தபோது விழித்துக்கொள்ள விடிவெள்ளியாய் ஒரு வெளிச்சம் தெரிந்தது.**

*- அளவையூர் எஸ்.கௌரி.*

மயக்கமடைந்து சுயநினைவை இழந்த காவேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தாள். மெல்லத் தன் இருகண்களையும் திறந்தவள், விடிந்ததை உணர்ந்துகொண்டாள். இரவு ஏற்றப்பட்ட 'சேலைன்' முடிந்திருந்தபோதும் ஊசி பொருத்தப்பட்ட கை வலியை உணர்த்தியது. அவளின் இளையமகள் ஆரணி அவளை தாங்கிச் சென்று கடமைகளை முடித்து கட்டிலில் படுக்கவைத்து கோப்பி கலந்து கொடுத்தாள்.

பார்வையாளர் நேரம் முடிந்து பலரும் சென்றதும் ஆரணி கொண்டுவந்திருந்த அந்தப் பார்சலைப் பிரித்து காவேரிக்கு ஊட்டிவிட்டாள். தன் கணவரால் தான் ஏமாற்றப்பட்டிருந்தபோதும் தான் பெற்ற செல்வங்களை எண்ணும்போது பூரிப்படைகிறாள். க.பொ.த.சாதாரண பரீட்சைக்கு ஒருவாரம் நெருங்குகையில் ஆரணி தன்னுடன் இருப்பதை எண்ணக் காவேரிக்கு கஷ்டமாயிருந்தது. ஆரணி கடைக்குட்டியாதலால் செல்லத்துடன் வளர்ந்தவள். சமாதானம் கூறப்போனாலும் அவள் படபடவெனப் பேசித் தாயை அடக்கிவிடுவாள். அவள் சுபாவத்தை நினைத்து காவேரி கலங்கியதும் உண்டு.

''அம்மா என்னம்மா செய்யுது. ஏதாவது செய்தால் சொல்லுங்கோ கை எல்லாம் குளிராக இருக்கே'' காவேரியின் கைகளைப் பற்றி இறுகத் தன் கையுடன் சேர்த்தாள் ஆரணி. ஆரணியின் கண்களும் கலங்கியதைத் கவனிக்கத்தவறவில்லை. காவேரி தன் தாய் தந்தை மீது அளவு கடந்த பாசம் வைத்திருந்தவள். திருமணமாகிய பின்பும் தன் பெற்றோரை அவள் கவனிக்கத் தவறவில்லை. அதேபோலத் தன் பிள்ளைகளுக்கும் இருக்கும் கடமையுணர்வை எண்ணி உள்ளம் உருகினாள். இந்த நிலைக்குத் தான் தள்ளப்படுவதற்குக் காரணம் தனது கணவர் என எண்ணியவளின் கண்களில் வழிந்த நீர் கன்னங்களில் உருண்டு தலையணையைத் தொட்டுப் பார்த்தது.

திருமணமானதிலிருந்து மகேஷுடன் எப்படி வாழ்ந்தேன். இருபது வருட வாழ்வு ஊர் உறவு மெச்சிய வாழ்வு நரகமாகியதை எண்ணினாள். ''உனக்கு நான் எனக்கு நீ'' என்ற வார்த்தையாலன்றி செயல் மூலம் வாழ்ந்தவர்கள். காவேரி களைப்படைந்து படுத்தால் கூட மகேஷ் அருகில் இருந்து கவனிக்கத் தவறமாட்டான்.

அரச வைத்தியசாலையில் தாதியாக வேலை பார்த்த மகேஷ் வைத்தியசாலையில் பணி முடிந்தவுடன் வீடு வந்து விடுவதுண்டு. அவளாக எங்கேயும் வெளியில் செல்லலாம் என்று கேட்குமுன்பே அவளைத் தன்னுடன் வெளியே அழைத்துச் சென்றுவிடுவான். அருகிலிருந்த கோயிலின் சகல திருவிழாவுக்கும் அவனே கூட்டிச் செல்வான். அவள் விரும்பும் பொருள்களை அவளின் கைகளில் விருப்பத்தோடு நிரப்பிவிடுவான். தூரப் பயணங்களில் இருவரும் சேர்ந்தே செல்வது அவனுக்குப் பிடிக்கும். வாழ்வு இனிமையாகச் சென்று கொண்டிருந்தது. பிள்ளைகளின் அன்பையும் பெற்று அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கும்போது தான் ஊரை விட்டு வெளியேறும் நிலை மகேஷுக்கு உருவாகியது. மனைவியையும் பிள்ளைகளையும் விட்டுச்செல்ல அவன் விரும்பியதில்லை. மகேஷைப் பிரிய மனமின்றிக் காவேரி அவனை அனுப்பிவைத்தாள். வன்னிப் பிரதேசத்தில் வைத்தியசாலைக்கு மகேஷ் மாற்றலாகிச் சென்றான். வன்னி நிலப் பரப்புக்கு இடையேயான போக்குவரத்துத் துண்டிக்கப்பட்டது. மகேஷ் - காவேரி தொடர்புகளும் துண்டிக்கப்பட்டன.

அதே வைத்தியசாலையில் பரிசாரகராக வேலை பார்த்தவள் புனிதா. ஆரம்பத்தில் நட்புடன் பழகிய இவர்களின் உறவு, தாம்பத்திய உறவுக்குத் தள்ளப்பட்டது. புனிதாவும் தன் கணவரை விலக்கிவிட்டுத் தனித்திருந்தாள். தனது மூன்று பிள்ளைகளையும் தாயுடன் விட்டுவிட்டுத் தனியே வைத்தியசாலையில் தொழில் புரிந்தாள். மகேஷ் - புனிதா தொடர்பு அந்த வைத்தியசாலையில் கசியத் தொடங்கியது. சமூகத்தில் அவர்கள் பற்றிய பேச்சுக்கள் அடிபட்டபோதும் மகேஷ் அவற்றை அலட்சியப்படுத்தினான். பார்ப்பவர்களின் கேலிப் பார்வைகளை அவன் சவாலாக ஏற்றுக் கொண்டான். எவரது வார்த்தைகளையும் மகேஷ் மதிக்கத் தவறினான். மகேஷுன் மாதச் சம்பளத்திலிருந்து எதுவுமே காவேரிக்கு வருவதில்லை. மகேஷுக்கு காவேரியின் நினைவு வந்து அவன் அவள் மீது இரங்கியபோதிலும் புனிதாவின் அழுத்தமான பிடியிலிருந்து அவனால் விலக இயலவில்லை. காவேரி பெற்றோரின் உதவியுடன் பிள்ளைகளைக் கல்வியில் ஈடுபடுத்தினாள். மகேஷைப் பற்றிய செய்திகள் பலவாறாகவும் வன்னியிலிருந்து ஊர்வரை பரவின. நான்கு வருடங்கள் உருண்டோடின. போர் முடிந்து வவுனியா முகாமில் மக்களோடு மக்களாக மகேஷ், புனிதா தங்கியிருந்தார்கள்.

'இளம் வயதில் விடாத பிழையை மகேஷ் இப்ப செய்வாரா' சனங்களின் கதைகளைக் கேட்டபோது காவேரிக்குத் தலை சுற்றியது. ''சனங்களுக்கோ வெறும் வாய்க்கு அவல் கிடைத்த மாதிரி'' என்று தனக்குத்தானே பேசிக்கொண்டாள். மகேஷ் குறித்த செய்திகளை அவளால் சீரணிக்க இயலவில்லை. காவேரி திடீரென ஒரு முடிவுடன் வவுனியாவுக்குப் புறப்பட்டுச் சென்றாள். வவுனியாவில் தனது தோழியின் உதவியுடன் மகேஷ் தங்கியிருக்கும் இடத்தைக் கண்டுபிடித்த காவேரி அவர்களைப் பற்றிய செய்திகளையும் அறிந்து கொண்டாள். மாலை நேரம் ஆறரை மணி மகேஷை எதிர் பார்த்து பக்கத்திலிருந்த வீட்டில் தோழியுடன் அமர்ந்திருந்தாள் காவேரி.

இரவு ஏழரையாகி விட்டிருந்தது. மோட்டார் சைக்கிளின் ஒலியைக் கேட்டு காவேரி நிமிர்ந்து பார்த்தாள். மகேஷுடன் ஒட்டிக் கொண்டு தேளில் கைபோட்டபடி அமர்ந்திருந்தவளைப் பார்த்ததும் ஊர் சொன்னது புரளி அல்ல என்பதை விளங்கிக் கொண்டாள். தானிருந்த இடத்தில் அவளுக்கொரு இடமா ஆத்திரமடைய முடியாமல் வேதனைப் பட்டாள். மனம் கொந்தளித்தபோதும் இப்படியும் ஒரு தலைவிதியா? அதனை ஏற்கத் தான் வேண்டுமா? என்று நொந்து கொண்டாள்.

வந்த வேகத்தில் சற்றுத் தூரத்தில் நின்றிருந்த காவேரியைக் கண்ட மகேஷ் அதிர்ச்சியடைந்தான். வினாக்குறி, வியப்புக்குறி அவன் முகத்தில் தோன்றிட அவன் கலவரமடைந்தான். காவேரி கேட்ட கேள்விகளுக்கு அவனால் பதில் கூற இயலவில்லை. அயலில் கூடிய கூட்டத்தால் வெட்கமும் ஆத்திரமும் அடைந்தான். ''இதுக்குத்தான் இங்கை வந்தியா?'' என்று கேட்டுக் கொண்டே மகேஷ் காவேரியை அடிப்பதற்கு முந்தினான். அவளோ; ''நான் உங்களை ஏமாத்தேல்லை; ஏன் என்னை இப்படி ஏமாத்தினீங்கள், இனியெண்டாலும் பிள்ளைகளுக்காகவாவது வாங்கோ'' என்றவாறு தலையில் அடித்தபடி புலம்பினாள். ''அவள் தன்ரை புருசனுக்குத் துரோகம் செய்து கொண்டு உங்களை வைச்சிருக்கிறாள். அவளும் இன்னொருத்தன்ரை பெஞ்சாதி. உங்களுக்கு அருவருப்பா இல்லையா?'' காவேரி கத்தினாள். காவேரியின் அருகில் வந்த மகேஷ் 'மரியாதையைக் கெடுக்க வெண்டு ஊர்விட்டு ஊர் வந்தனியோடி'' என உறுமியபடி அவளை இழுத்து உதைத்தான். மண்ணில் விழுந்த காவேரியைத் கூடிவந்தவர்கள் தூக்கி நிறுத்தினார்கள். மகேஷ் புனிதாவுடன் வீட்டுக்குள்ளே போய் விட்டான். வாய் பேச முடியாத சிட்டுக் குருவிக்குக் கூட வானில் பறந்து திரிய அனுமதி உண்டு. ஆனால் காவேரியால் பேச முடியவில்லை. பொழுது போக்குக்காக சிலர் உறவுகளை மாற்றிக் கொள்கிறார்கள். இதனால் பலமான குடும்ப உறவுகள் சீரழிக்கப்படுகின்றன. சுய இன்பங்களுக்காக அடுத்தவர் வாழ்வு சொல்லாமல் கொள்ளாமல் பறிக்கப்படுகிறது. சத்தியங்கள், உண்மை, நேர்மை எல்லாம் விடை பெற்றுப் போகின்றன.

காவேரி யாழ். நோக்கித் திரும்பி விட்டாள். காவேரியின் துயரத்தைப் பெற்றோரும் உணர்ந்து கொண்டார்கள்; பிள்ளைகளால் உணரவா முடியாது? பெற்றோர் மனம் உடைந்தபோதும் காவேரி முன் அவர்கள் காட்டிக் கொள்வதில்லை. தனது வயதான அப்பா அம்மாவைப் பார்க்கிறாள் காவேரி. இந்த வயதிலும் ஒருவருக்கு ஒருவர் என்ற மனப்பாங்குடன் ஒருவர் தயவில் ஒருவர் பகிடிவிட்டு அன்பாகப்பேசி நேர்மையாக வாழ்கிறார்கள். என் வாழ்வும் இப்படி அமைந்திருந்தால் என எண்ணிய போது வாழ்வின் மீதே வெறுப்படைந்தாள். அம்மாவின் ஆறுதலான வார்த்தைகளோடு தடவிக் கொடுத்த கரத்தை இறுகப் பற்றியபடி வாசலை விட்டு எழுந்து உள்ளே போனாள். சோம்பலும் கவலையும் கண்களை உறுத்தப் பாயிலே படுத்திருந்தவள் கண்களை மூடினாள். சுமார் ஒரு வருடகாலம் மகேஷ் சந்தேக நபராக பயங்கரவாதச் சட்டத்தில் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டது தெரிந்து கொண்டாள். மீண்டும் புனிதாவுடன் ஜோடிக் கிளிகளாகத் திரிகிறான் என்றும் பேசப்பட்டது. அதன்பின் அவள் அவர்களைப் பற்றித் தெரிந்துகொள்ள முயற்சிக்கவுமில்லை. ஆசைப்படவும் இல்லை. சட்டத்தால் விலக அவள் முடிவெடுக்கவுமில்லை. பிள்ளைகளின் எதிர்காலம் அவள் முன் தெரிந்தது.

அன்று ''மகேஷைப் பார்த்தேன் காவேரி'' என்று கூறியபடி எதிரே நின்ற அவளின் சினேகிதி சித்திரா, ''வவுனியா வைத்தியசாலையில் ஒரு காலை இழந்த நிலையில் நின்றிருந்தான் மகேஷ். கைவிரலில் இரண்டு விரல் வெட்டப்பட்டிருந்தன. விசாரிச்சுப் பார்த்தேன். மகேஷ் பயணித்த பைக்குடன் 'ஹையஸ்' வான் மோதியதால் அவன் அங்கங்களை இழந்திருக்கிறான். என்னைக் கண்டதும் உன்னைப் பற்றி விசாரித்தான்'' என்றாள் அவள்.

''புனிதா இப்பொழுது மகேஷை விட்டு விலகி இன்னொருவனுடன் திரிகிறாளாம்''. அதையும் மகேஷ்தான் சொன்னார் என்றாள் சித்திரா.

தோழியின் வார்த்தைகள் மகேஷுடன் வாழ்ந்த அந்த ரம்மியமான கடந்த காலத்தை சீரழித்த பெண் பேயை விட்டு மகேஷ் விலகியதை மட்டும் எண்ணமிட வைத்தது.

மரம்விட்டு மரம் தாவும் பெண்களிருக்கும் வரை ஆண் தன் குடும்பத்தை சீரழிக்கத்தான் போகிறான். பெண்ணாகப் பிறப்பது ஒரு மகத்தான அனுபவம். ஆனால் இன்று பெண்ணே இன்னொரு பெண்ணின் வாழ்வைப் பறிக்கிறாள். சட்டமுறைமைகள், உரிமைகளை மீறும் ஒரு பெண்ணால் மற்றொரு பெண் பாதிப்புக்குள்ளாகிறாள். வேகமான இந்த உலகத்தில் பணத்துக்காக சுய இன்பங்களுக்காக கொடுக்கப்படும் பெரு மதிப்பு நல்ல பெண்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. உலகமே வியக்குமளவுக்கு இன்று பெண்கள் வளர்ச்சி கண்டுள்ளார்கள். பெண்கள் விடுதலைக்காகப் பாரதியார் பங்காற்றியுள்ளார். ஆனால் சமுதாயத்தில் தம் ஆசைகளை நிறைவு செய்யத் தவறான வழியில் செல்லும் பெண்களை ஏனோ கண்டு கொள்ள மறுக்கிறது இந்தச் சமுதாயம்.

வைத்தியசாலையில் காவேரி மகேஷை நினைத்துப் பார்த்தாள். அவனுடன் வாழ்ந்த காலத்தை மறக்க முடியவில்லை. கண்களிலிருந்து கண்ணீர் முத்துக்கள் பிதுங்கின. மகேஷ் வந்தால் கடைசி வரைக்கும் பார்க்க வேண்டியவள் நானே! இது வரைக்கும் தன் எல்லையைத் தாண்டாதவள் இப்படியே வாழ்க்கை தொலைந்து விடுமோ என்றிருந்தபோது விழித்துக்கொள்ள விடிவெள்ளியாய் ஒரு வெளிச்சம் தெரிந்தது. காவேரிக்கு உடல் வருத்தம் தீர்ந்தது போன்ற நிலை. மகள் ஆரணியின் கைகள் காவேரியின் தலையை வருடிக் கொடுத்தன. காவேரி தன் கைகளை ஆரணியின் கைகளோடு இறுகச் சேர்த்துக் கொண்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடி பிடித்துப் பார்த்து வைத்தியம் செய்த பரியாரிமார்

■ எஸ்.எம்.கோபாலரத்தினம்




வடமாகாண அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய எம்.ஸ்ரீகாந்தாவை ஒரு நாள் காலையில் அவரின் அழைப்பின் பேரில் சந்திக்கப் போயிருந்தேன். அந்த நேரம் மருந்துச் சிரட்டையில் அவர் மருந்துக் குளிசையொன்றைத் தேய்த்துக் கரைத்துக் கொண்டிருந்தார். முந்நாளில் வீடுகளில் சிறிய தேங்காய்ச்சிரட்டையை நன்றாகத் செதுக்கி மருந்து கரைத்துக் குடிப்பதற்கென்றே வைத்திருப்பார்கள். இது போலவே சில வீடுகளில் கூழ்குடிப்பதற்கும் சிரட்டை செதுக்கி அழகாகவும் சுத்தமாகவும் வைத்திருப்பார்கள்! "ஸ்ரீகாந்தாவும் கஸ்தூரியார்" வீடுட்டுச் சிகிச்சை தான்!

கஸ்தூரியார் பரம்பரையில் நான் சொன்ன பிரம்மச்சாரி வைத்தியரின் பின் அவரது உதவியாளர் பரராஜசிங்கம் கந்தர்மடத்தில் வைத்தியம் செய்து வந்தார்.அவருடன் கஸ்தூரியார் சித்தஆயுள் வேத வைத்தியம் முடிவுக்கு வந்தது!

சித்தஆயுள்வேத வைத்தியத்தை எங்கள் மக்கள் தமிழ் வைத்தியம் என்றும் சொல்வதுண்டு. சிவராசப் பரியாரியார் வீதியால் போனால் சில நிமிடங்களுக்கு அங்கு சுகந்தவாசனை வீசும். அது அவர் தயாரிப்பு.

அலோபதி வைத்தியம் என்று ஆங்கில வைத்தியத்தைச் சொல்வதுண்டு. இன்று விஞ்ஞான வளர்ச்சியினால் வைத்தியத்துறையில் அதிசயிக்கத்தக்க வகையில் நோய்கள் பல்வேறு சாதனங்கள் மூலம் கண்டறியப்படுகின்றன. இவற்றுக்குச் சிகிச்சை செய்வதற்கும் புதிய புதிய சாதனங்களும் சில முறைகளும் மருந்துகளும் கண்டுசெயற்படுத்தப்படுகின்றன.

என்றாலும் இன்றும் பிரசவத்துக்கும் மற்றும் இதுபோன்ற சில வியாதிகளுக்கும் யாழ். நகரில் திருநெல்வேலி, முடமாவடி ,கல்வியங்காடு,நாயன்மார்கட்டு போன்ற இடங்களிலும் நகருக்கு வெளியே ஆவரங்கால் ,சுதுமலை என்றும் குழந்தை வைத்தியத்துக்கு சில்லாலை என்றும் பரம்பரை வைத்தியர்களைத் தேடிப் போவோர் இன்றுமுள்ளனர்! முறிவு நெரிவுக்கு இன்றும் நாயன்மார்கட்டு, ஒட்டகப்புலம் சிகிச்சையை நாடுபவர்கள் பலர். யாழ். நகரில் ஒட்டகப்புலம் கிளையுமுண்டு!

விக்ரோறியா வீதியில் யாழ்ப்பாணம் தர்மாஸ்பத்திரி இருந்த காலத்தைத் தொடர்ந்து பத்தியமில்லாமலும் ,பணச் செலவில்லாமலும் நோய்க்குச் சிகிச்சை பெற்றுக் குணப்படுத்தலாம் என மக்கள் மத்தியில் கதைபரவியது. இதுமட்டுமல்லாமல் பிள்ளை பெறுவதற்கு இணுவில் ஆஸ்பத்திரிக்குப் போகாமல் "தர்மாஸ்பத்திரியிலும் வெள்ளைக்காரரே நர்சுகள் நல்லாய்க் கவனிக்கினம்" என்ற கதையும் பரவியது. இதனால் தர்மாஸ்பத்திரி என்ற பெயர் மாறி பெரியாஸ்பத்திரி என்ற பெயர் ஏற்படலாயிற்று. இது வளர்ந்து இன்று போதனா வைத்தியசாலையாயிற்று! இன்று யாழ்ப்பாணமும் டாக்டர்களை உற்பத்தி செய்து பெயர் பெற்று நிற்கிறது!

பெரியாஸ்பத்திரியில் நோயாளர்கள் தொகை அதிகரித்தது. பிரசவ வாட் சிறிய கட்டடமாக இருந்தது. இடம் போதாததால் பெரிதாக விரிவாக்கப்பட்டது. மற்றும் தொற்று நோயால் பீடிக்கப்பட்டவர்களை பெரியாஸ்பத்திரியிலிருந்து தனிமைப் படுத்தவேண்டுமெனத் தீர்மானிக்கப் பட்டது. சின்னம்மை, கொப்புளிப்பான் கண்டவர்கள் பண்ணைப் பகுதியில் தனிக்கட்டடத்தில் சிகிச்சைக்கு அனுமதிக் கப்பட்டனர். காசநோயாளர்களுக்கும் தனியாக 'வார்ட்' ஒதுக்கத் தீர்மானிக்கப் பட்டது.இந்தச் சமயத்தில் பெரியாஸ்பத் திரியில் காசநோயாளர் 'வார்ட்' அமைந்தாலும் அது மற்றவார்ட் நோயாளர்களுக்கும் பரவக்கூடுமென்பதால் வெளியில் இடம் தேடினார்கள்.

இப்பொழுது வெளிநோயாளர் பகுதியிருக்கும் இடம் முன்பு மரவள்ளித் தோட்டமாக இருந்தது. இந்த மரவள்ளித் தோட்டத்தின் முன்பகுதியிலேயே ஓர் இடத்தில் காசநோயாளர் 'வார்ட்' ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் அந்தக் காணியும் அதனுடன் சேர்ந்த பகுதியும் பெரியாஸ் பத்திரியுடன் இணைக்கப்பட்டது. காசநோய் மார்புச் சிகிச்சை நிலையமாக பண்ணையில் இடம் பிடித்துக்கொண்டது. மரவள்ளித் தோட்டக்காணியும் பெரியாஸ் பத்திரியுடன் இணக்கப்பட்டதும் மணிக் கூட்டு வீதியின் குறுக்கே புளுக்குத்தித் தோட்டத்துக்கு அருகே சுவர் எழுந்தது. முற்றவெளிக்கு மாடுகள் மேய்ச்சலுக்குக் போவதும் தடைப்பட்டது!

மணிக்கூட்டு வீதி இடையில் தடுக்கப் பட்டதுடன் மரவள்ளித்தோட்டக் காணியுடன் மின்சாரநிலையக் காணியில் இருந்தும் சிறிது சேர்க்கப்பட்டதாக நினைவு . மணிக்கூட்டு வீதி இடையில் தடுப்புச் சுவர் தோன்றியதால் அப்போது பெருமாள் கோயிலுக்கு முன்பாகவுள்ள வீதியில் நின்றுபார்த்தால் தெரிந்த மணிக் கூட்டுக் கோபுரம் மறைந்து பதிலாக இன்று மாடிக்கட்டடமாக எழுந்து நிற்கும் பெரிய ஆஸ்பத்திரியின் நோயாளர் விடுதி தான் தெரியும்!

சித்த ஆயுள்வேத வைத்தியம் யாழ். நகரில் ஆங்கில வைத்தியத்துக்கு சுலபமாக இடம் கொடுக்காத அந்தக் காலத் திலும் கூட 'தொய்வு' என்று சொல்லப் பட்ட ஆஸ்துமா நோயினால் பீடிக்கப்பட்ட வர்கள் குருநகர், பாஷையூர் கடற்கரைப் பகுதியில் நல்ல சுவாத்திய கடற்கரை யில்அமைந்திருந்த டொக்ரர் பி.சுப்பிர மணியத்தின் ஆஸ்பத்திரிக்குத்தான் செல் வார்கள்.

---

■ தானா

# நா காக்க

பக்கச்சார்பற்ற, நியாயமான விமர்சனங்கள் எப்போதும் கனதி மிக்கவையே. சாதகமான விமர்சனங்கள், பாராட்டு, புகழ்ச்சி என்ற வகைகளுள் அடக்கப்படும். பாதகமான விமர்சனங்கள் விமர்சனத்துக்குள்ளாக்கப்படுவோருக்கு மன அழுத்தம், கோபம், குரோதம் என்பவற்றை ஏற்படுத்தத்தக்கவை. ஒருவரது கருத்து, அவரால் உரையாகவோ, எழுத்தாகவே வெளிப்படுத்தப்படும்போது, அதைக் கேட்பவரது, வாசிப்பவரது மனம் அந்தக் கருத்தை ஏற்காது விடின், அது கடுமையான விமர்சனத்துக்கு உள்ளாகக் கூடும். அத்தகைய விமர்சனம், கருத்தை வெளிப்படுத்திய பிரமுகரை அசௌகரியத்துக்கு உள்ளாக்குவது தவிர்க்க இயலாததொன்றே. அத்தகைய வேளைகளில் ஒரு சிலர் மன அழுத்தத்துக்கு உட்படுவதும், வேறு சிலர் விமர்சகர் மீது கோபம், குரோதம் பாராட்டுவதும் இயற்கையே.

'யாகாவா ராயினும் நாகாக்க- காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு'

என்பது வள்ளுவன் வாக்கு.

எந்தவொரு விடயத்திலும் தமது எண்ணத்தை, அபிப்பிராயத்தை முன்பின் யோசனையின்றி கொட்டித் தீர்த்து விடுவது எம்மில் சிலரது வழக்கம். தமது கருத்து மற்றவர்களது மனதைப் புண்படுத்தவோ, ஆத்திரமடையவோ செய்யும் என்பது குறித்து அவர்கள் அக்கறை கொள்வதில்லை. அதே சமயம் விமர்சனத்துக்கு உள்ளாவோர் கூட, விமர்சனம் குற்றச்சாட்டாகவோ, கண்டிப்பதாகவோ அமையும் வேளை, அவை குறித்து ஒரு கணம் ஆழ்ந்து சிந்திக்காமல், ஆத்திரப்பட்டு, அவசரப்பட்டுத் தம்மை விமர்சிப்பவர் மீது கடுஞ்சொற் பிரயோக விதத்தில் விமர்சனத்தை மறுத்துரைத்து மறுதலிப்பதும் நியாயமானதொன்றல்ல. எந்தச் செயற்பாட்டையும், எவரையும் விமர்சிக்கும் உரிமை சகலருக்கும் உள்ளதொரு மனித உரிமைகளில் ஒன்றே.

இன்றைய நவீன உலகில், பல்வேறு வகை ஊடகங்கள் பணி செய்து வருகின்றமை நாமறிந்ததொன்றே. அதே சமயம் எந்தவொரு நாட்டிலும், அதிக அளவில் ஊடகங்களின் விமர்சனத்துக்கு உள்ளாவோர் அரசியல்வாதிகள், சமய, சமூக, கலைத்துறைகளில் பிரபல்யம் பெற்றிருப்போர் மற்றும் அரசதுறை உயரதிகாரிகள் போன்ற தரப்பினரே. இத்தகையோர் இடம், பொருள், ஏவல் அறிந்து, சூழ்நிலையை அனுசரித்து தமது கருத்துக்களை நியாயமாக வெளியிடுவார்களானால், அவர்கள் ஊடகங்களினதோ, பொதுமக்கள் தரப்பினதோ கடும் விமர்சனத்தை எதிர்கொள்ள வாய்ப்பில்லை. அதேவேளை தமது கருத்து, மற்றவர் மனதைப் புண்படுத்தாத விதத்தில் தாம் சுட்டிக்காட்ட வேண்டியவற்றை நாசூக்காகச் சுட்டிக்காட்டுவது ஆரோக்கியமான கருத்து வெளிப்பாடாகக் கொள்ளத்தக்கது.

விமர்சகரது குற்றச்சாட்டு நியாயமற்றது; உண்மையற்றது என்று விமர்சனத்துக்கு உள்ளாகுபவர் கருதினால், அதற்கான தமது மறுப்பை, விளக்கத்தை வெளிப்படுத்தும் உரிமை அவருக்குண்டு. நாகரிகமான விதத்தில் தம்மீதான விமர்சகரது குற்றச்சாட்டுக்கு விளக்கமளிப்பதன் மூலம், அவரால் உண்மை நிலையை ஏனையோருக்கும் தெளிவுபடுத்த இயலும். இத்தகைய கலாசார விழுமியம் இன்று அருகி வருவது கவலைக்கு உரியதொன்று.

சமூக கீழ்மட்டத்தில் இத்தகைய அபிப்பிராய பேதங்கள் பலதரப்பட்ட அசம்பாவிதச் செயற்பாடுகளுக்கும் வித்திட்டு விடுகின்றன. சமூக கீழ்மட்டங்களில் இத்தகைய முரண்பாடுகள் கோடேறி வழக்காடும் நிலைவரை பலரை இட்டுச் சென்று விடுகின்றன. அண்மைக் காலமாக இருவேறு தரப்புக்களிடையே உருவாகும் கருத்து வெளிப்பாட்டுப் பிணக்குகள், 'அவருக்கு ரென்சன்' என்றோ, 'ரென்சனால் அப்படிப் பேசிவிட்டார்' என்றோ, 'ரென்சனின்' மீது பழிபோட்டுச் சமாளிக்கும் நிலைவரை உச்சம் பெற்றுள்ளன.

இன்று எமது [illegible] ளிலும், இத்த[illegible] பலர் அவதிக்கு ஆளாகி வருவதாக மருத்துவர்கள் தெரிவித்து வருகின்றனர். மூன்று தசாப்தகாலம் தமிழ்ப் பகுதிகளில் மட்டுமென்றல்லாது நாடு தழுவிய ரீதியில் நிலவிவந்த போர்ச் சூழலின் தாக்கத்தின் விளைவே இதுவென்பது தவறான கணிப் பல்ல. அத்தகையோருக்கான மனவள மேம்பாட்டுச் செயற்பாடுகள் சொல்லிக் கொள்ளும் அளவுக்கு மேற்கொள்ளப்படுவதில்லை என்பது கசப்பான உண்மையே.

மற்றவரைக் கிண்டல் செய்யும் நோக்கில் ஒருவர் குறிப்பிட்ட ஒருவரை விமர்சித்தால், விமர்சனத்துக்கு உள்ளாவோர் அது குறித்து ஆத்திரம் அடையாது, தாம் அந்த விமர்சனத்துக்கு நாசூக்காகப் பதிலளித்து விமர்சித்தவரின் வாயை அடக்கிய பல சம்பவங்கள் அரசியலரங்கில் முன்னர் பல சந்தர்ப்பங்களில் நிகழ்ந்துள்ளன. அவை வெகு சுவாரஸ்யமானவை; ரசனைக்கும் உரியவை.

பிரித்தானியப் பிரதமராக சேர்.வின்ஸ்ரன் சேர்ச்சில் பதவி வகித்த வேளையில், ஒரு சமயம் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் கொமன்ஸ் சபையில் நடந்ததொரு சம்பவம் மிக்க சுவாரஸ்யமான ஒன்று.

முக்கியத்துவம் மிக்கதொரு விடயம் தொடர்பான உரையொன்றை ஆற்றி முடித்து தனது இருக்கையில் சேர்ச்சில் அமர்ந்து கொண்டார். அவரது உரையின் கருத்தை ஜீரணித்துக்கொள்ள இயலாத நிலையில் ஆத்திரத்துடன் தமது இருக்கையிலிருந்து எழுந்த நாடாளுமன்ற எதிர்க்கட்சிப் பெண் உறுப்பினர் ஒருவர் "நீர் மட்டும் எனது கணவராக இருந்திருந்தால், இத்தகைய பொருத்தமற்ற கருத்தை வெளிப்படுத்தியதற்காக என் கையாலேயே உமக்கு விஷம் தந்திருப்பேன்" என ஆத்திரத்துடன் கூறினார்.

நாடாளுமன்ற சம்பிரதாயங்கள், தமது பிரதமர் பதவியின் கௌரவம் என்பவற்[illegible]ளித்து பழக்கப்பட்ட, அனுபவம் மிக்க அரசியல்வாதியான சேர்ச்சில், அந்தப் பெண் நாடாளுமன்ற உறுப்பினரின் கருத்தால் குழப்பமோ, கோபமோ அடையாது சாவகாசமாக அப்பெண்மணியைப் பார்த்து "நல்லது அம்மணி, நீர் மட்டும் எனக்கு மனைவியாக வாய்த்திருந்தால் நான் அந்த விஷத்தை வாங்கி மகிழ்ச்சியோடு அருந்தியிருப்பேன்" என நகைச்சுவையாகப் பதிலடி கொடுத்தாராம். ஒன்றுக்கொன்று முரணான கருத்துக்கள் அங்கு நாசூக்காக, நகைச்சுவை உணர்வுடன் வெளிப்படுத்தப்பட்டதால் அங்கு கடும் வார்த்தைப் பிரயோகங்களோ, அசம்பாவிதங்களோ ஏற்பட இடமிருக்கவில்லை.


இந்த நாட்டு நாடாளுமன்ற வரலாற்றிலும் இதுபோன்ற ஆரோக்கியமான, வரன்முறை மீறாத விதத்திலான கருத்து வெளிப்பாடுகளும், கருத்து மோதல்களும் முன்னைய காலங்களில் நிறையவே இடம்பெற்றுள்ளன. அத்தகைய விமர்சனங்கள், பதிலடிகள் என்பவற்றில் ஈடுபட்ட அந்த வேளைய நாடாளுமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்றம், அதன் சம்பிரதாயங்கள் என்பவற்றுக்கு மதிப்பளித்து, தத்தமது கருத்துக்களை ஆரோக்கியமான, நாகரிகமான விதத்தில் வெளிப்படுத்தி சொற்சமரில் ஈடுபட்டமை வரலாற்றுப் பதிவுகள்.

ஆனால் இன்றோ, இவற்றுக்கெல்லாம் முற்றிலும் நேர்மாறான விதத்தில், ஆளும் கட்சி உறுப்பினர்கள் பலர் தத்தமது நாட்டாண்மைத் தனத்தை வெளிப்படுத்தும் விதத்தில், தரமற்ற விதத்தில், ஆக்ரோசத்துடன் எதிரணி உறுப்பினர்கள் வெளிப்படுத்தும் கருத்தைச் சகித்துக்கொள்ள இயலாது, அவர்கள் மீது அசிங்கமான வார்த்தைப் பிரயோகங்கள் மேற்கொள்வது மட்டுமல்லாது, மேசை மீதிருக்கும் புத்தகங்களையோ, ஏன் தண்ணீர்ப் போத்தல்களைக் கூட தமக்கெதிரான கருத்தை வெளியிடுபவர் மீது தாக்குதல் மேற்கொள்ள ஒரு கருவியாகப் பயன்படுத்துவது குறித்தும் நாம் கேள்விப்பட்டுள்ளோம். இதில் வெறும் அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் என்ற தலைக்கனத்துடன் செயற்பட்டு, தமது மதிப்பையும், கௌரவத்தையும் குறைத்துக்கொள்வதை நாம் கேள்விப்படுகிறோம். அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் என்ற பதவி வகிப்போர் மட்டுமன்றி, அமைச்சர், பிரதியமைச்சர் மட்டத்திலுள்ளோரும் இத்தகைய விதத்தில் செயற்படுவது இந்த நாட்டின் சாபக்கேடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ மட்டுவில் நல்லதம்பி

# அனுமனை தேவனாக்கி மகிழ்ந்த இராமன்



இலக்கியக் காட்சி 136

வனவாச காலத்தின் ஆரம்பத்தில், முதலில் இராமனோடு நட்புப் பூண்டவன் குகன் என்னும் படகோட்டி. கங்கையை கடந்து செல்ல உதவிய குகன், உணவும் இருப்பிடமும் நல்கி, இராமன், இலக்குமணன், சீதை மூவரையும் அன்புடன் உபசரித்தான். அதனால் பெரியோரது நட்பைப் பெறுவதிலும் குறியாக இருந்தான். அவனது மன நிலையை உணர்ந்து, இராமன், அவன் வேடன் என்றும் பாராது, குகனை ஐந்தாவது உடன் பிறப்பாக ஏற்றுக்கொண்டு குகனொடும் ஐவரானோம் என்கிறான்.

பின்னர், சீதையைத் தேடிச் சென்ற வேளை, சுக்கிரீவனைச் சந்திக்கிறான் இராமன். அப்போது, சீதையை இழந்த நிலையில் இராமனும், மனைவியை இழந்த நிலையில் சுக்கிரீவனும் இருக்கிறார்கள். வலிமை படைத்த வாலியிடமிருந்து தன்னைப் பாதுகாக்க வேண்டிய தேவை சுக்கிரீவனுக்கு இருக்கிறது. அதனால், அபயம் அளித்து, ஆறாவது உடன் பிறப்பாக சுக்கிரீவனை ஏற்றுக்கொள்கிறான் இராமன்.

'பிறன் மனை நயத்தல் பிழை' என உணர்ந்தாலும் அரன் இருந்த மலையெடுத்த எனது வீரம் என்னாவது என்னும் செருக்கால், இராவணன் இராமனோடு போராட விரும்புகிறான். ''இன்று போய்ப் போர்க்கு நாளை வா'' என்ற பொழுது, யானையோடு போர் செய்த மார்பும், மலையினை எடுத்த தோளும், சாமகானம் பாடிய நாவும், பத்துக் கிரீடமும் சங்கரன் கொடுத்த வாளும், வீரமும் ஆகிய எல்லாவற்றையும் யுத்தகளத்தில் போட்டுவிட்டு வெறுங்கையோடு இலங்கை நகர் புகுந்த இராவணனுக்கு அவமானம் தலைக்கு மேல் போய்விட்டது. இந்த நிலைமை வரும் என்பது தெரிந்திருந்த விபீடணன்,

*''பிறன் மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு*
*அணிஒன்றோ ஆன்ற ஒழுக்கு''*
*(குறள் 148)*

என்ற குறள் வழி நின்று, சீதையைச் சிறை நீக்கிவிடும்படி கேட்கிறான். அறிதுயில் கொள்ளும் பரந்தாமன் போல, தெரிந்து கொண்டே பிழை செய்யும் இராவணனுக்கு எங்கே விளங்கப்போகிறது? விதியே மதியாய் நிற்கும் தனது அண்ணனை விட்டு நீங்கி, விபீடணன் இராமனிடம் சரணடைகின்றான்.

விபீடணனது உண்மை நிலையை அனுமன் மூலம் அறிந்த இராமன், அவனை ஏழாவது உடன் பிறப்பாக ஏற்றுக் கொள்கிறான். சொல்லின் செல்வனான அனுமனைச் சந்தித்த பின், அனுமனது யோசனைப்படியே சுக்கிரீவனையும் விபீடணனையும் உடன் பிறப்புக்களாக இராமன் ஏற்றுக் கொள்ளுகின்றமையைக் காண்கிறோம். ஆக, இந்த ஆஞ்சநேயரான அனுமனை இராமன் சகோதரருக்கும் மேலாக தேவனாக்கி மகிழ்வதைக் காண்போமாக.

மூத்தோனான வாலிக்குப் பயந்து இரிஸ்ய சிருங்க மலையில் ஒளிந்திருக்கும் சுக்கிரீவனோடு அனுமன் இருக்கும் வேளையில் அம்மலைப் பக்கமாகச் சென்ற இராம இலக்குமணரை அவன் காண்கிறான். அவர்கள் வாலியின் ஏவலாளராயிருக்கலாம் என்று பயந்து சுக்கிரீவன் மலைக்குகைக்குள் மறைகிறான். அனுமன் தானும் மறைந்து நின்று, அவர்களைக் கவனிக்கிறான்.

'இவர்களைக் கண்டதும் எனக்கு அன்பு சுரக்கிறது; முத்திக்கு வழிகாட்டும் தேவரோ?' என எண்ணியவாறு அவர்களை எதிர்கொண்டு வரவேற்கிறான் அனுமன். ''நீ யார்?'' என இராமன் கேட்கிறான். ''இந்த மலையில் வாழும் சூரிய குமரனான சுக்கிரீவனின் ஏவலாளன். தேவனே! உங்களை அறியவந்தேன்'' என்கிறான் அனுமன். அந்த அளவில் அனுமனது அறிவு, ஆற்றல் அமைதி என்பவற்றைக் கணிப்பிட்ட இராமன்,

*''இல்லாத உலகத்தை எங்கும் இங்கு இவன் இசைகள் கூரக் கல்லாத கலையும் வேதக் கடலுமே என்னும் காட்சி சொல்லாலே தோன்றிற்று அன்றே! யார் கொல் இச்சொல்லின் செல்வன் வில்லார் தோள் இளையவீர! விரிஞ்சனோ? விடைவலானோ?''*

*என இலக்குமணனைப் பார்த்துக் கேட்கிறான்.*

*(விரிஞ்சன்-பிரமன்;*
*விடைவலான்-உருத்திரன்)*

இவன் மாணவன் அல்லன்; உலகுக்கு அச்சாணி போன்ற பெரியோன். பிரமனாய் அல்லது உருத்திரனாய் இருக்கலாம். இவனது மெய்ம்மையைப் பின்னர் காண்பாய் என இலக்குமணனுக்குக் கூறுகின்றான் மூவரில் ஒருவனான கண்ணன் (இராமன்).

அனுமன் சுக்கிரீவனைக் காட்டி, அவனுக்குண்டான துன்பத்தைக் கூறுகின்றான். இலக்குமணனும் இராமனுக்கு உண்டான இழப்பைக் கூறுகின்றான். அப்பொழுது, வாயுமைந்தனான அனுமன், இராமனது பாதந்தொட்டு வணங்குகின்றான். ஆனால் இராமன், தன்னை அப்படி வணங்குவது தகாது என்கிறான்.

அனுமன், தனது பெரிய உருவைக் காட்டி, தான் எத்தகைய பணியையும் செய்யக் கூடியவன் என்பதை இராமன் அறிந்துகொள்ள வைக்கிறான். அது கண்ட இராமன் ''இனிமேல் நமக்கு இன்பமேயன்றி துன்பம் ஒன்றும் இல்லை'' எனத் தம்பிக்குக் கூறுகின்றான்.

ஆக, முதலில் அனுமனையும் சுக்கிரீவனையும் கண்ட இராமன், அனுமனைத் தன்னை ஒத்த தேவனாகவே முடிவு செய்து விடுகிறான் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். ஆயின், சுக்கிரீவன், உதவிபெறும் நோக்கில் உள்ளவன்; அவனுக்கு அபயம் அளித்து உடன் பிறப்பு ஆக்குகிறான்.

இராமன் எண்ணியதற்கும் மேலாக, எதிர்பார்ப்பு ஏதும் இல்லாமல் அனுமன் (மற்கட சம்பந்த தத்துவமாய்) இராமனைப் பிடித்துக் கொள்ளுதல் காண்போமாக.

அதனால், தனது அந்தரங்கமான செய்திகளை-மிதிலையில் கன்னி மாடத்தில் நின்ற சீதையைத் தான் கண்டதும் மனங்கொண்டதும், வில்லை முறித்ததும் ஒருவரல்லாத போது சீதை உயிர் விட நினைத்ததும், தான் சீதையைப் பிரிந்து உயிரற்ற உடலாய் நிற்பதும் ஆகிய செய்திகளைச் சீதையிடம் சொல்லும் படி அனுமனிடம் இராமன் கூறுவதைக் காண்கின்றோம்.

தனது மனைவியைக் கண்டு இத்தனையும் பேசக் கூடிய தூய உள்ளங்கொண்டவனாக அனுமனை இராமன் காண்கிறான். இவ்வாறு இராமன் சீதையிடம் கூறும்படி சொன்னவற்றைச் செவிமடுத்ததோடு, கணையாழியையும் பெற்றுக்கொண்ட ஆஞ்சநேயர், கடல் கடந்து சென்று இலங்கையில் சீதையைத் தேடும் பணியைத் தான் மேற்கொண்டு போகிறான். அங்கே, உயர்ந்த மரங்களிலிருந்தவாறு தேடியதில், அசோகவனத்தில் அரக்கியர் நடுவில் சிறையிருந்த சீதையைக் காண்கிறான்.

*''விற்பெருந் தடந்தோள் வீர! வீங்குநீர் இலங்கை வெற்பில்,*
*நற்பெரும் தவத்தளாய நங்கையைக் கண்டேன் அல்லேன்;*
*இற் பிறப்பு என்பது ஒன்றும், இரும்பொறை என்பது ஒன்றும்*
*கற்பெனும் பெயரது ஒன்றும் களிநடம்புரியக் கண்டேன்.''*

எனப் பின்னர் இராமனிடம் கூறுவதாகக் கம்பர் நயம்படக் கவிபுனைந்திருப்பதைக் காண்கிறோம்.

இந்த அளவில், இராவணனால் சீதை கொடுமைப்படுத்தப்படவில்லை. அவள் கற்புக்கு எதுவித பங்கமும் ஏற்படவில்லை என்பதை இராமன் உணர்ந்து கொள்ள வைத்த சொல்லின் செல்வனைக் கம்பன் காட்டும் அழகே அழகு!

உடன் பிறப்புகளாக இராமனால் சேர்த்துக்கொள்ளப்பெற்ற மூவரும் சரணடைந்து உதவி பெற்றவர்கள்; அனுமன் தானாகவே முன்சென்று இராமனுக்கு உதவி செய்தவன், போர்க்களத்தில் இராமன் மயங்கியபோது அவனைத் தாங்கி உதவியவன்; இராமன் இராவண வதம் முடிந்து வெற்றியோடு வருகிறான் என்ற செய்தியை பரதனுக்குச் சொல்லி, அவன் தீக்குளிப்பதைத் தடுத்தவன். அதனால் பட்டாபிஷேகத்தின்போது, அனுமனை சிங்காசனத்தைத் தாங்க வைத்து தேவனாகக் கண்டு மகிழ்ந்தான் இராமன். இதனால், இராம நாம செபத்தினால் உயர்வு பெற்ற அனுமன், கோயில் கொண்டு வழிபடு தெய்வமாகவும் உயர்வடைகிறான்!

■ புத்தகவாசி

# தொலைக்காட்சி சிறார்களின் சிறைச்சாலையா?

இன்று மக்கள் மத்தியில் தொலைக்காட்சியைப் போல் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும் வேறு எதுவும் இல்லை எனலாம். வயது வரம்பின்றி எல்லாத் தரப்பினரையும் அது கவர்ந்துவிட்டது. குறிப்பாக நமது சிறார்கள் தொலைக்காட்சியே கதியென்று கிடக்கின்றார்கள். விடுமுறை நாள்களில் தொலைக்காட்சியோடுதான் அவர்களது பொழுதெல்லாம் கரைகிறது. அவர்களைக் குறிவைத்தே புதிய புதிய தொலைக்காட்சி அலைவரிசைகள் நாளுக்கு நாள் வந்து கொண்டிருக்கின்றன.

ஆளுக்கொரு சினிமா ஹீரோவைப் பிடித்துக்கொண்டு அந்த ஹீரோவைப் போல பேசுவதும், தலை சீவுவதும், ஆடை அணிவதும் மற்றவர்களோடு அந்த ஹீரோவைப் பற்றி வாக்குவாதம் செய்வதும் சிறார்கள் மத்தியில் அதிகரித்துவரும் பழக்கமாக உள்ளது. ஹீரோ என்றால் மற்றவர்களை எப்படியாவது அடித்து வீழ்த்தி, ஒழித்துக் கட்ட வேண்டும் என்ற சிந்தனையை' தொலைக்காட்சி சிறார்கள் மனதில் வேரூன்றச் செய்வதால் அவர்கள் முரட்டுக் குணம் படைத்தவர்களாகவும் மாறத் தொடங்குகிறார்கள்.



தொலைக்காட்சியால் நமது சிறார்கள் பல்வேறு உறவுச் சிக்கல்களுக்கும் ஆளாகிறார்கள். முன்பெல்லாம் வீட்டுக்கு மாமா, பாட்டி என்று யாராவது வந்துவிட்டால் சிறார்கள் அவர்களை ஓடிச்சென்று அணைத்துக்கொள்வது வழக்கம். இப்போதோ, யார் வந்தாலும் எனக்கென்ன என்று 'ரீமோட்டைக்' கையில் வைத்துக் கொண்டு தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருக்கும்போது பெற்றோர்கள் ஏதாவது வேலை செய்யச் சொல்லிவிட்டால் எளிதில் எரிச்சல் அடைந்து விடுகிறார்கள். தனக்கு விருப்பமான அலைவரிசையை பார்க்க வேண்டும் என்று சிறார்கள் தமக்குள்ளே ஓயாமல் சண்டைபோட்டுக் கொள்கிறார்கள்.

தொலைக்காட்சி தரும் ஆச்சரியமும், பயமும், வன்முறையும் நிறைந்த மாயாஜாலக் காட்சிகளை யதார்த்தமாக நினைத்துக் கொண்டு தாங்களும் அதேபோல் செய்ய வேண்டும் என்ற தீராத மயக்கத்தில் இன்றைய சிறார்கள் உள்ளனர். இதனால் நடந்தேறும் விபரீதங்கள் கொஞ்சமல்ல.

1999 ஆம் ஆண்டளவில் இந்தியா முழுவதும் 30 க்கும் மேற்பட்ட சிறார்கள் அன்றைய சாகச வீரனான சக்திமானைப் பின்பற்றி தீக்குளித்தல், உயரத்திலிருந்து குதித்து கை கால்களை முறித்துக்கொள்ளுதல் போன்ற பல்வேறு விபரீதங்களுக்கு ஆளானார்கள். 27.08.2006 அன்று மதுரையைச் சேர்ந்த தியாகேஷ் என்ற சிறுவன் பவர் ரேஞ்சர்ஸ்களை நினைத்துக் கொண்டு தீயோடு விளையாடி உயிரை மாய்த்துக்கொண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



க.நவீனா

## மறக்க முடியவில்லை

பத்து மாதம் சுமந்து பெற்ற
அன்னையே உன்னை
என்னால் மறக்க முடியவில்லை

ஈரெட்டு ஆண்டுகள்-என்
பாதம்பட்ட தாய் மண்ணே
உன்னை என்னால்
மறக்க முடியவில்லை

மானிடன் துன்பமதில்
இன்பம் கண்ட காலமே
உன்னை என்னால்
மறக்க முடியவில்லை

இயற்கையை அழித்து
இதம் கண்ட விஞ்ஞானமே
உன்னை என்னால்
மறக்க முடியவில்லை

ஞானிகளை உருவாக்கும்
ஆசான்களே! உம்மை
என்னால் மறக்க முடியவில்லை
கண்களைப் படைத்து
கண்ணீரைத் தந்த இறைவா!
உன்னைக் கூட என்னால்
மறக்க முடியவில்லை

## அந்த வளவு...

உயிர்ப்பை இழந்து விட்ட
பூவரச மரம் நண்பனை
ஞாபகப்படுத்தும்
ஒற்றையடிப்பாதை
புல்புதரால்...

வட்டிழந்த
தென்னை மரங்கள்
வலிமையிழந்த
கல்வேம்புகள்

சாமையும் குரக்கனும்
விளைந்த
நிலத்தில் இன்று
சிவப்பு நிற பலகைகள்...

தூரத்தே வானில்
ஆள்காட்டி குருவிகள்
சப்திக்கின்றன.



## அத்துமீறும் புத்தர்

தானே முளைத்த மரம்
தானாக வளர்ந்த மரம்
ஊருக்குள்ளே உள்ள மரம்
உயர்ந்த அரச மரம்

களைத்து வருவோர்க்கு
கனிவாய் நிழல் கொடுக்கும்
இளைத்து வருவோர்க்கு
இதமாய் இடம்கொடுக்கும்

குருவி இனங்கள் அங்கே
கூடு கட்டி வாழ்ந்திருக்கும்
பறவை இனங்கள் எல்லாம்
பயமின்றிக் குடி இருக்கும்

சங்க காலம் முன்பான
எங்களூரில் உள்ள மரம்
சங்கமித்தை கொணர்ந்ததாகச்
சரித்திரம் படைக்கிறார்கள்

அரச மரங்களை கண்டால்
புத்தர் சிலைகளெல்லாம்
அங்கொன்று இங்கொன்றாய்
அவசரமாய் முளைக்கின்றன

நட்டுவிட்ட பிற்பாடும்
நடுகிறார்கள் புத்தர் சிலை
அத்துமீறிக் குடியேற
அவர் செய்யும் தந்திரங்கள்

அரச மரங்களும் இங்கே
ஆக்கிரமிப்புச் சாதனமாக
அஹிம்சை சொன்ன புத்தரும்
அத்துமீறும் சாத்தனா


ஆ.முல்லைதிவ்யன்



## வேண்டாம்

என்னவளே!
மரணித்து விட்ட
எனக்காக
மல்லிகை
மலர்களை
பறித்து விடாதே!
மல்லிகை
மலர்கள்
மலர்ந்திருப்பது
என் கல்லறைக்கு
வைப்பதற்கு அல்ல.
என்றும்...
உன் கூந்தலை
அழகுபடுத்தவே.

சா.ஜிந்துஜா,
கோண்டாவில்.



## நான் கண்ட நகரம்

அழகான ஒரு நகரம்
அதில் அன்புமிக்க மக்கள்
அங்கு ஜாதி என்பது
ஆண் ஜாதி பெண் ஜாதி
என்ற இரண்டுமே
போட்டி இல்லை
பொறாமை இல்லை
எல்லோரும் சமம் என
நினைக்கும் மக்கள்
ஏழை பணக்கார பேதம் இல்லை
கொள்ளையிடும் மக்கள் இல்லை
கடத்தல்காரர்கள் இல்லை
கற்பழிப்பாளர்கன் இல்லை
சீதனக் கொடுமை இல்லை
எல்லோர் மனதிலும்
சந்தோசக் கோலம்
அந்த நகரத்திலே
நானும் ஒரு
பட்டாம் பூச்சிபோல்
சிறகடிக்கும் பறவை
சந்தோச உற்சாகத்தில்
சத்தமிட்டுச் சிரித்தேன்
அன்புத்தோழி அவள்
என்னைத் தட்டினாள்
கண்விழித்து பார்த்தேன்
நேரமோ இரவு 12 காட்டியது



## தூரத் துரத்து

தவறிழைப்பான்!
தான் தப்ப,
மானத்தையும் விற்பான்!
கால் பிடிப்பான்
காட்டிக் கொடுப்பான்
உயிர் பெரிதென்று
ஊழைச் சதை வளர்க்க!
நக்குண்டு வாழ்வான்
நாவிழந்து சாவான்
நன்றி மறப்பான்
நட்பையும் முறிப்பான்!

மற்றவர் முதுகிலேறி
தான் உயர நினைப்பான்!
ஈனப்பிறவியிவன்
இனத்தின்
கோடரிக்காம்பாவான்!
இனங்கண்டு இவனை
தூரத் துரத்தி விடு!

கோன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழ்ச்சிகளை வெல்வோம்

தனியாக இருந்த ஒரு பெண் தான் வெளியில் செல்லவும், உறவினர் வீடுகளுக்குச் செல்லவும் தொடர்ச்சியாக வீதியில் நிற்கும் ஓர் ஒட்டோவை அழைப்பதை வழக்கப்படுத்திக் கொண்டுள்ளார். அந்த ஒட்டோ சாரதிக்கும் தனது கைத்தொலை பேசி இலக்கத்தைக் கொடுத்துள்ளார். ஆனால் அந்த ஓட்டோ சாரதி இந்தப் பெண் தனிமையில் இருப்பதை தெரிந்து கொண்டு தகாத நடத்தையுடைய ஒருவனுக்கு இந்தப் பெண்ணின் கைத்தொலைபேசி இலக்கத்தைக் கொடுத்து விடுகின்றான்.

தனிமையில் இருந்த இந்தப் பெண்ணுக்குத் திடீரென உள்ளத்தை உருக்கும் வகையில் எஸ்.எம்.எஸ் கள் வர ஆரம்பிக்கின்றன. உருகிய இந்த பெண் அனுப்புவது யாரென்று தெரிந்துகொள்ளும் ஆவலில் அந்த எண்ணுக்கு அழைக்கிறார். தொடர்பு ஆரம்பமாகின்றது. இந்தப் பெண்ணின் தனிமையையும், அனைத்து விவரங்களையும் தெரிந்துகொண்ட அந்த நபர் இந்தப் பெண்ணுக்கு ஆறுதல் அளிக்கும் விதத்திலும், அரவணைக்கும் விதத்திலும் பேசி அவளுடன் இரகசியத் தொடர்பு கொள்கின்றான்.

கணவன் மீண்டும் விடுமுறையில் வருகின்றான் என்று தெரிந்தவுடன் இருவரும் ஓடிப்போவதற்குத் திட்டமிடுகின்றார்கள். அந்த நபரின் திட்டப்படி கணவன் வந்ததும் முதல் நாள் இரவு கணவனுக்குப் பாலில் மயக்க மருந்தைக் கலந்து கொடுத்துவிட்டு கணவன் கொண்டு வந்திருந்த பொருள்களுடனும் ஏற்கனவே இருந்த நகைகளுடனும் குழந்தையையும் தூக்கிக்கொண்டு மாயமாகிவிடுகிறாள் அந்தப் பெண்.

காலையில் எழுந்த கணவன் விசயம் அறிந்து அதிர்ச்சியடைகின்றான். வெளியில் தெரிந்தால் மானம் போய்விடும் என்பதால் இரகசியமாக ஒரு வழக்கறிஞர் உதவியுடன், பல்வேறு முயற்சிகளுக்குப் பின் தேடிச் சென்று தன்னுடன் வருமாறு அழைக்கின்றான். அவள் வர மறுக்கின்றாள். பின்னர் தனது குழந்தையை மட்டும் மீட்டுக்கொண்டு கணவன் திரும்பி விடுகின்றான்.

அவளின் இளமையை நன்கு அனுபவித்த அந்த நபர் ஓர் இரவில் அந்தப் பெண் கொண்டு வந்திருந்த பணம், நகை என ஒட்டுமொத்த பொருள்களையும் சுருட்டிக் கொண்டு தலைமறைவாகி விடுகின்றான்.

கதறிய அவள் மீண்டும் தன்னைச் சேர்த்துக் கொள்ளும்படி கணவனிடம் கதறுகிறாள். கணவன் மறுத்துவிடவே, அவளின் பெற்றோரும் கைகழுவி விடவே இன்று வீதிகளில் விபச்சாரியாகத் திரிகிறாள்.

இது ஓர் உண்மைச் சம்பவம்.

ஆகவே பெண்களே! மாணவிகளே! உங்கள் கற்பைச் சூறையாடி உங்களை நாசப்படுத்தி விபச்சாரியாக்கி, உங்கள் சமூகத்தை அவமானப்படவைக்க பயிற்றுவிக்கப்பட்டவர்கள் காதல் என்று வேடம் போட்டுக் கபட நாடகம் ஆடுவார்கள். ஏமாந்து விட வேண்டாம்!

பெற்றோர்களே! கணவன்மார்களே! நீங்களும் சற்று சிந்திப்பீர்! வெள்ளம் கரை கடந்தபின் கதறாமல், இப்போதே அணை போடத் திட்டமிடுவீர்! உங்கள் பெண்பிள்ளைகளைக் கண்காணிப்பீர். பெண்மணிகளின் தியாக வரலாற்றையும் வீர வரலாற்றையும் அவர்கள் மனதில் பதியும்படி செய்யுங்கள். இது அவர்களை நேர்வழிப்படுத்த உதவும்.

சிந்திப்பீர் செயற்படுவீர்!! சூழ்ச்சிகளை நாம் விவேகத்தால் வெல்வோம்.

# பெண்ணுக்கு மென்மை இயற்கையா? செயற்கையா?



*"முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்*
*கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇ*
*குவளை உண்கண் குய்ப்புகை கழுமத்*
*தாழ்துழந்து அட்ட தீம்புளிப்பாகர்*
*இனிது எனக் கணவன் உண்டலின்*
*நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே"*
*[குறுந்தொகை : பாடல் 167]*

புகை படிந்த கண்களோடு தலைவி சமைத்துப் போட்டாலும் கணவன் அவள் சமையல் இனிது என்று பாராட்டுவதைக் கேட்டுத் தலைவி பிறர் அறியாத வண்ணம் நுண்ணிதாக மகிழ்ந்தாள் என்று இப்பாடல் ஒரு காட்சியை விளக்குகிறது. மிகப் புகழ் பெற்ற சங்கப் பாடல் இது. உண்மையில் இது மிகவும் ரசிக்கத்தக்க பாடல்தான். என்ன ஒரு ரசமான குடும்பக் காட்சி. ஆனால், மனைவி சமைத்துப்போட கணவன் பாராட்ட அதைக் கண்டு பெண் நாணிச் சிவக்க என்று குறுந்தொகைக் காலத்திலேயே இந்த ஆண்-பெண் வேலைப் பேதமும், உன் கை ருசியே தனிதான் என்று ஏமாற்றி அடுக்களையை அவளது சாம்ராச்சியமாகத் தலையில் கட்டியதும் வந்துவிட்டதே என்று நினைக்கையில் பாடல் வருத்தமளிக்கிறது. தொல்காப்பியத்திலேயே,

*"ஏனது சுவைப்பினும், நீ கைதொட்டது*
*வானோர் அமிழ்தம் புரையுமால் எமக்கு"*

என்று பெண்கள் தலையில் அரைக்கப்பட்டு விட்டது. முதல் வரியில் வரும் காந்தள் மெல் விரலை மட்டும் எடுத்துக் கொள்கிறோம். கெட்டித் தயிரைப் பிசைந்ததால் சிவந்து போன ஒரு பெண்ணின் கை விரல்களைப் பற்றி இந்த வரி பேசுகிறது. அவ்வளவு மென்மையான விரல்கள் என்று! இப்படியே ஆரம்பித்து பெண்மையைவிட மென்மையானது என்று இன்று விளம்பரம் செய்யப்படுகிறது.

மென்மை என்பது பெண்மையின் ஓர் அம்சம் என்கிற கருத்து காலம் காலமாக நம் மனங்களில் கட்டமைக்கப்பட்டுள்ளது. வெள்ளைக்காரனும் வெண்டைக்காய்க்கு 'லேடீஸ்பிங்கர்' (பெண் விரல்) என்று பெயர் வைத்து அங்கேயும் இதே கொடியை நாட்டி வைத்து நாங்களும் உங்களுக்குக் குறைந்தவர்கள் இல்லை என்று சொல்லி விட்டனர். மென்மையானவள் என்பதால் முரட்டு வேலைக்கு லாயக்கில்லாதவள் என்று சமூக உற்பத்தியின் பல தொழில்களிலிருந்தும் பெண் விலக்கி வைக்கப்படுகிறாள். கையைப் பிடித்தால் பஞ்சு போன்று மென்மையாக இருக்க வேண்டும் என்கின்ற எதிர்பார்ப்பு பொதுவாக ஆண்களிடம் இருக்கின்றது .

ஆனால், நாட்டின் பெருவாரியான உழைக்கும் பெண்களின் கைகள் முரடாகவும் உறுதிப் பட்டும்தான் இருக்கின்றன. சங்க இலக்கியங்களும் உப்பு மூட்டைகள் சுமந்த உமணப் பெண்கள் பற்றிப் பேசுகிறது.

வீதி வேலைகளிலும் கரும்பு வெட்டும் தோட்டங்களிலும் உயர்ந்து எழுகின்ற கட்டட வேலைகளிலும் இன்று பெண்கள் அரிவாளும் மண்வெட்டியும் பிடித்துக் கடினமான வேலைகள் செய்கிறார்கள். மென்மை, மெல்லியலாள் என்பதெல்லாம் மத்திய தரவர்க்கம் மற்றும் அதற்குமேல் உள்ள பெண்களின் மீதுதான் பெரிதும் சுமத்தப்பட்டுள்ளது.

சிலப்பதிகாரத்தில் கண்ணகியை 'மண் மகள் அறியா வண்ணச் சீறடியாள்' என்று இளங்கோவடிகள் குறிப்பிடுவார். கண்ணகியும் மிக வசதியான வீட்டுப் பிள்ளைதான். கண்ணகியின் பாதங்கள் மண்ணிலேயே பட்டதில்லை என்று பெருமையாகப் பேசினாலும், இன்னொரு பக்கம் அவளை வீட்டை விட்டு வெளியே விடாமல் அப்படி அடைத்து வைத்திருந்தார்கள் என்பதும் அறியப்பட வேண்டிய ஒன்று. உள்ளேயே பூட்டி வைத்திருந்தால் காயும்கூட அவிந்து மென்மையான கனியாகி விடுவதில்லையா? அதுபோலத்தான் பெண்களும், மென்மையாக்கப் பட்டிருக்கிறார்கள். இது இயற்கையான மென்மை இல்லை. பல்லாயிரம் ஆண்டுகளாகப் பூட்டி வைத்துப் பழுக்க வைத்த மென்மை.

## அன்பின் அகராதி



*பெண்!*
*ஆண்டவனின் பிரதிநிதியாய்*
*அவனியில் உலவும் அன்பின் அகராதி!*
*ஆதிநாள் தொட்டு*
*அவலத்தீயில் வெந்து*
*அக்கினித் தெறிப்பாய்*
*ஆர்ப்பரித்து நிமிரும்*
*அமைதியின் விஸ்வரூபம்!*
*மண்ணில் ஜனனம் மாட்சிமை கொள்ள*
*மாமடி திறக்கும் தியாகப் பிரமம்!*
*பெண்மையின் பெருமையைப்*
*பேசித் தீர்க்க*
*ஒரு மொழி இங்கே போதுமோ?*
*பெண்ணே! உனை*
*விதவையென்று சொன்னதற்காய்*
*மொழி வெட்கப்படட்டும்*
*மலடியென்று சொன்னதற்காய்*
*ஆணினம் வெட்கப்படட்டும்!*
*கவலைப்படாதே!*
*தாயெனச் சொல்லி*
*சகோதரியெனச் சொல்லி*
*பெருமைப் படுவோம்!*
*விண்ணும் மண்ணும்*
*பெண்ணின் மடியில்*
*அன்னையின் வடிவில்*
*மனைவியின் வடிவில்*
*சகோதரியின் வடிவில்...*

நிலா

# பெண்ணுக்குரிய சடங்கு, ஆசாரங்கள்





திருமணமான பெண், தலை உச்சியில் குங்குமம் இட்டுக்கொள்ள வேண்டும் என்கிறது தர்மசாஸ்திரம். பெண்களுக்குத் திருமணமாகும் வரை பிறந்தவீடு சொந்தம். திருமணமான பின்னர் புகுந்த வீடுதான் சொந்தம். அந்த வீடு வாழ்நாள் முழுவதும் சிறப்பாக இருக்க வேண்டும். ஆனால் சிலருக்குப் புகுந்த வீடு நன்றாக அமைவதில்லை. காரணம் அவர்கள் தலைவிதியென்று கூறுவார்கள். தலைவிதி என்று கூறிக்கொண்டு கஷ்டப்படத்தான் வேண்டுமா? என்று சிந்தித்து அதற்கு ஒரு வழி கண்டார்கள் பெரியோர்கள். தலைவிதி என்பது பிரம்மா தலையில் எழுதிய எழுத்து என்று கூறுவார்கள். அதை நல்லதாக மாற்ற சரணாகதியே வழியென்றும், கண்டார்கள். சரணாகதியென்பது விழுந்து நமஸ்கரித்து வணங்குவதாகும். ஆண்கள் அஷ்டாங்கம் (எட்டு உறுப்புகள்) பூமியில் படும்படியாக வணங்கவேண்டும். பெண்கள் பஞ்சாங்கம் (ஐந்து உறுப்புகள்) பூமியில் [illegible] இரண்டு கைகள் [illegible] வணங்க வேண்டும். பெண்கள் தம் குறைகளைத் தாயிடந்தான் கூறுவார்கள். எல்லாக் குறைகளையும் கஷ்டங்களையும் நிவர்த்திப்பவள் ஜகன்மாதாவான தேவியே. அவள் திருவடிகளை வணங்கினால் அவள் திருவடிகளில் பலர் அர்ச்சித்திருக்கும் குங்குமம் இவள் உச்சந்தலையில் ஒட்டிக்கொள்ளும். அதனால் அம்பாள் திருவடியும் குங்குமமும் தலையில் பட்டதால் தலையெழுத்து அழிந்துவிடும் என்பதை அருணகிரிநாதர் "கால்பட்டழிந்தது, இங்கு என் தலைமேல் அயன் கையெழுத்தே" என்பார்.

அம்பாளுடைய குங்குமம் நெற்றியில் இட்டுக் கொள்வதால் தலையெழுத்து நல்லதாக அமையும். இதனையே அரசனிடம் அமாவாசையை பௌர்ணமியென்று கூறிய அபிராமிப்பட்டர் தன் தலையெழுத்து அரச தண்டனைக்கு ஆளாக நேரிடும் என்று எண்ணி, அபிராமியைக் குறித்து அந்தாதி முதல் பாடலில் " உச்சித் திலகம் தலையெழுத்தை மாற்றும் என்பார்களே! என் உள்ளத்தில் எப்போதும் உறைந்திருக்கும் தேவியே! உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலகம்" என்று பாட அமாவாசை பௌர்ணமியாகி, காட்சி தந்து, அவர் தலையெழுத்து மாறியது. அதுபோன்று திருமணமான பெண்கள் நெற்றியில் குங்குமமிட்டுக் கொள்வதால் தலையெழுத்து நல்லதாக அமைந்து நல்ல கணவனுடனும் நல்ல குழந்தைகளுடனும் மகிழ்ச்சியான வாழ்க்கை அமையும்.

- நித்தியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவயதிலேயே பெற்றோரை இழந்த ஆண்டியப்பன், தன் தந்தையின் நண்பர் வீட்டில் வளர்ந்தான். அவன் பெரியவனானதும், அவனிடம் இரண்டு ஆட்டுக்குட்டிகளும், கொஞ்சம் பணமும் கொடுத்து எப்படியாவது பிழைத்துக் கொள்ளுமாறு அந்தப் பெரியவர் கூறி விட்டு இறந்தார். அந்தப் பணத்தை வைத்து சிறிய குடிசையைப் போட்ட ஆண்டியப்பன், ஆட்டுக்குட்டிகளை வளர்த்து அவற்றை இறைச்சிக் கடையில் விற்றான். அந்தப் பணத்தில் மீண்டும் நான்கு ஆட்டுக்குட்டிகளை வாங்கினான். இப்படியே ஆட்டுக்குட்டிகளை வாங்கி வளர்த்து கசாப்புக் கடைகளில் விற்று பணம் சம்பாதித்தான். தன்னிடம் ஓரளவு பணம் சேர்ந்ததும், லட்சுமி என்ற ஏழைப் பெண்ணை திருமணம் செய்துகொண்டான். ஆண்டியப்பன் செய்து வந்த இந்தத் தொழில் லட்சுமிக்கு பிடிக்கவில்லை.

''ஆடுகளை நாமே வளர்த்து அவற்றை இறைச்சிக் கடைகளுக்கு அனுப்புவது பெரும் பாவம். இந்தத் தொழிலை விட்டு, கறவை மாடுகள் வாங்கி வியாபாரம் செய்யலாமே'' என்று ஆண்டியப்பனுக்கு அறிவுரை கூறினாள். ஆனால் இதை ஏற்காமல் லட்சுமியை கோபமாக திட்டிவிட்டு தன் தொழிலைத் தொடர்ந்தான்.

அதற்கு பிறகு ஆண்டியப்பனுக்கு அறிவுரை கூறுவதை நிறுத்திய லட்சுமி, ''நீங்கள் செய்யும் தொழிலில் இனி நான் குறுக்கிட மாட்டேன். ஆனால் ஆட்டுக்குட்டியை எனக்கு கொடுங்கள். அதற்கு ராமு எனப் பெயர் வைத்து நான் வளர்க்கிறேன்'' என ஆண்டியப்பனிடம் கேட்டுக் கொண்டாள். அவனும் அழகான ஒரு ஆட்டுக்குட்டியை அவளிடம் அளித்தான்

சில நாட்களுக்குப் பின், பண்ணையார் ஒருவர் பலி கொடுக்க ஆடு கேட்க, தன்னிடம் இப்போது ஆடுகள் ஏதும் கைவசம் இல்லாததால் லட்சுமி வளர்க்கும் ராமு ஆட்டை எடுத்துச் செல்ல நினைத்தான். ஆனால் ராமுவைத் தரமாட்டேன் என உறுதியாக நின்றாள்.

மனைவியின் பேச்சைத் தட்டிய ஆண்டியப்பன், இரவு நேரத்தில் கடும் மழையில் ஆட்டை இழுத்துக்கொண்டு பண்ணையார் வீட்டுக்கு விரைந்தான். ஆனால் சிறிது தூரம் சென்றதும் இருட்டில் கால் தடுமாறி சுவரில்லாத கிணற்றில் விழுந்தான். ஆடு விழவில்லை. கிணற்றினுள் ஒரு செடியின் வேரைப் பிடித்துக் கொண்டு ஆண்டியப்பன் அலறினான். ஆனால் அவன் அலறல் வெளியே கேட்கவில்லை.

தன் எஜமானன் கிணற்றில் விழுந்ததைக் கண்ட ஆடு, உதவிக்கு ஆட்களைக் கூப்பிடும் விதமாக அங்குமிங்கும் ஓடி அலறியது. சிறிது நேரம் கழித்து மழை நின்ற பின் அவ்வழியே சென்றவர்கள் ஆட்டின் அலறல் சத்தம் கேட்டு, அங்கு சென்றனர். பின் கிணற்றில் எட்டிப் பார்த்து, ஆண்டியப்பனைக் காப்பாற்றினர்.

தன்னைக் காப்பாற்றியது ராமுவே ஆடுதான் என்பதை உணர்ந்து கொண்ட ஆண்டியப்பன், கண்ணீர் பெருக்குடன் அதை கட்டியணைத்துக் கொண்டான். பின்னர் வீடு சென்ற அவன், ராமுவே தான் தன் உயிரைக் காப்பாற்றியதாகவும், இனி ஆடுகளை விற்கும் தொழில் செய்யப் போவதில்லை எனவும் மனைவிக்கு உறுதியளித்தான். அதன் பின் கறவை மாடுகள் வாங்கி இருவரும் தொழில் செய்து செல்வந்தத் தம்பதியராக வாழ்ந்தார்கள்.

# உயிரைக் காத்த பலி ஆடு!



## விடை தெரியுமா? 163

### உங்களுக்கும் பரிசில்கள்

1. பேராதனைப் பல்கலைக்கழகம் எந்த நகரில் அமைந்துள்ளது?
2. மகாத்மா காந்தியின் இயற்பெயர் என்ன?
3. சைவசமயத்தவர்களால் வணங்கப்படும் நாயன்மார்கள் எத்தனை பேர்?
4. கடல் மட்டத்துக்குக் கீழே உள்ள நாடு எது?
5. இலங்கை சுதந்திரம் அடைந்த நாள் எது?



**விடைகள் 161**

1. பல்
2. வைரஸ்
3. எட்டயபுரம்
4. பைக்கால்
5. 1972

### வெற்றி பெற்றோர் விவரம் (160)

★ ரி.தர்சிகா, தரம்-2, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி.
★ உ.குகனேஸ்வரன்- தரம்- 2, கொக்குவில் பி.சி.த.க.பாடசாலை.
★ வி.விதுஷா- தரம்- 8, மருதனார்மடம், இராமநாதன் கல்லூரி.
★ செ.அகனீதா, தரம்- 5 சி, யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை.
★ கோ.தமிழினி- தரம்- 6 ஏ, வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.
★ த.பிரதீப்- தரம்-9 ஏ, மயிலிட்டி றோ.க.த.பாடசாலை.

**விடை தெரியுமா?**

தெரிந்தால் 16.06 .2012 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா75வீதமும் பரிசில்கள் நூல்களாக வழங்கப்படும்.

சிறுவர்கதிருக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்பும் சிறார்கள்
''சிறுவர்கதிர்'',
உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

# ஐசாக் நியூட்டனின் அழியா கண்டுபிடிப்புகள்



புவிஈர்ப்பு விசையை கண்டுபிடித்து மக்களுக்கு அறிவியலின் மீது ஈர்ப்பை உண்டாகச் செய்தவர் சேர் ஐசாக் நியூட்டன்.

சேர் ஐசாக் நியூட்டன் இங்கிலாந்தில் கிறிஸ்துமஸ் நாள் அன்று பிறந்தவர். மத எதிர்ப்புகளுக்கு பயந்து பல கண்டுபிடிப்புகளை வெளியிட அஞ்சியவர். பலதுறைகளில் ஆழ்ந்த அறிவைக் கொண்டவர்.

இவரது ஒளி இயல்பு ஆராய்ச்சியில் உருவாக்கிய பிரதிபலிப்பு தொலைநோக்கியின் நவீன வடிவமே இன்றைய வானியல் தொலை நோக்கியாகும் .

பொருள் இயக்க விதிகள், ஒளி விதிகள், போன்றவை ஐசாக் நியூட்டனை என்றும் அழியாப் புகழ் உடையவராக நிலைக்கச் செய்யும் கண்டுபிடிப்புகளாகும்.

## நிலவே






வானவில்லெடுத்து
வளைத்துக் கட்டிய
வான் மதியே!
வானமும் அச்சம் கொண்டது
வண்ண நிலவாம்-உன்
வதனத்தில் மயங்கி
உனக்கென பல ரசிகர்களை
உன்னகத்தே கொண்டு
உயிரையும் விலை பேசுகிறாய்
உன்னோடு போட்டி வேண்டாம்
உனக்கே ஒரு கும்பிடு.

த.தஸ்மினி, யா/மா.மெ.ஆ.பா








சு.டிலக்ஷன்,
யா/புத்தூர், இந்து ஆரம்பப் பாடசாலை.



ஆ.தியூலன்
யா/புனித திரேசா மகளிர் கல்லூரி



ஜோகான்சன்,
சங்குவேலி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை.



லோ.திணேஸ்குமார்,
தரம்- 7, தொண்டைமானாறு வீரகத்தி பிள்ளையார் ம.வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரம்யன்

# பிரிட்டிஷ் சிம்மாசனத்தில் 60 ஆண்டுகள்

எலிசபெத் மகாராணி திருமணமான பிறகு பலநாடுகளுக்கும் பயணம் மேற்கொண்டிருந்தார். மத்தியகிழக்கில் அல்லது ஆபிரிக்காவில் கணவருடன் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த போது வன விலங்குகளைப் பார்வையிடுவதற்காக ஒரு விசாலமான மரத்தின் மீது அமைக்கப்பட்டிருந்த பரண் மீது கணவருடன் ஏறி அமர்ந்து காட்டுமிருகங்களைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது அவர் இளவரசி.

மரத்தின் மீது அவர்கள் இருக்கும் போதே இங்கிலாந்தில் ஆறாவது ஜோர்ஜ் மன்னர் மரணமான செய்தி வந்தது. உடனே நாடு திரும்புவதற்காக கணவனும் இளவரசியும் மரத்தை விட்டு கீழே இறங்கினார்கள். அதற்குள் இங்கிலாந்தில் மகாராணியாக இளவரசி எலிசபெத் பிரகடனப் படுத்தப்பட்டுவிட்டார். அதனால் எலிசபெத் மகாராணியார் மரத்தின் மீது ஏறும் போது இளவரசியாகவும் இறங்கும் போது மகாராணியாகவும் மாறியிருந்தார் என்று அந்தக் காலத்தில் பத்திரிகைகளில் செய்திவந்திருந்தது.

மகாராணி எலிசபெத் தம் கணவருடன் ஒரு முறை இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார். மலைநாட்டில் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த போது ஒரு தோட்டத்தின் தொழிலாளர் குடியிருப்புக்குள் போய் ஒரு பெண் சமைத்துக் கொண்டிருப்பதைப் பார்த்து மகிழ்ந்தார் என்று ஒரு செய்தியுண்டு.

கண்டி பிரதானிகளை சந்தித்த போது அவர்கள் ஏன் நீளமான படுதாக்களை இடுப்பில் சுற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்ற கேள்வியை எழுப்பினார்.

அந்தக் கேள்விக்கு அப்போதைய பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவலையாலும் கூட விளக்கம் தரமுடியாமல் போனது என்பது செய்தி.

**மகாராணி பற்றிய சிறு குறிப்பு**

பிறந்த திகதி:- 21 ஏப்ரல் 1926
பெயர்:- எலிசபெத் அலெக்சான்ராமேரி
திருமணம்:- 1947 ஆண்டு
கிரேக்க இளவரசர் பிலிப் மவுன்ட்பேட்டனை மணந்தார்.
மகாராணியானார்:-1952 இல் தந்தையார் ஆறாம் ஜோர்ஜ் மன்னரின் மரணத்தையடுத்து மகாராணியானார்.
முடிசூடல்:-1953 இல் வெஸ்ற் மின்ஸ்டர் தேவாலயத்தில் முடி சூட்டப்பட்டார்.

நீண்ட காலம் ஆட்சி:-2007 ஆம் ஆண்டு தமது பாட்டியார் விக்டோரியாவுக்குப் பிறகு அவருக்கு மேலாக நீண்ட காலம் ஆட்சிபுரிந்தவர் என்ற சாதனையை நிகழ்த்தினார்.

**மகாராணி பற்றிய சிறு குறிப்பு**

பிறந்த திகதி :- 27 ஏப்ரல் 1926
பெயர்:- எலிசபெத் அலெக்சான்ராமேரி
திருமணம்:- 1947 ஆண்டு
கிரேக்க இளவரசர் பிலிப்மவுன்ட்பேட்டனை மணந்தார்.
மகாராணியானார்:-1952 இல் தந்தையார் ஆறாம் ஜோர்ஜ் மன்னரின் மரணத்தையடுத்து மகாராணியானார்.
முடிசூடல்:- 1953 இல் வெஸ்ற் மினிஸ்டர் தேவாலயத்தில் முடிசூட்டப்பட்டார்.

மகாராணி யின் வைர விழாவையொட்டி தேம்ஸ்நதியில் 1000 படகுகளின் அணிவகுப்பு ஒன்று கடந்த 3 ஆம் திகதி இடம்பெற்றது. மகாராணியும் அரச குடும்பத்தினரும் பயணம் செய்த ஸ்பிரிட் ஒப் சாட்வெல் என்ற அலங்கரிக்கப்பட்ட பெரிய படகு அணிவகுப்பின் நடுவில் பயணித்தது. வைரவிழா கொண்டாட்டங்களில் இது ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாக அமைந்தது. சிவப்பும் பொன்நிறமும் கொண்ட அந்தப் படகில் எலிசபெத் மகாராணி பயணம் செய்வதைப் பார்த்து மகிழ, பத்துலட்சம் மக்களுக்கும் அதிகமாக தேம்ஸ் நதிக் கரையில் கூடியிருந்தார்கள். விக்டோரியா மகாராணிக்குப் பிறகு இந்தமாதிரி அரச பவனி 2ஆவது எலிசபெத் ராணியின் காலத்திலேயே இடம்பெறுகின்றது.

பவனி ஆரம்பிக்கும் போது பெருமழையொன்று ஆரம்பித்தாலும் பின்னர் தெளிவாயிற்று. ஆனால் பின்னர் மீண்டும் ஆரம்பித்தது. ஆனால் அது கூடியிருந்த மக்களின் ஆர்வத்தையும் ஆரவாரத்தையும் குறைத்துவிடவில்லை. இருந்தாலும் விமான அணிவகுப்பொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போது வானம் தெளிவின்மையால் இரத்து செய்யப்பட்டு விட்டது.

ஆற்றில் நடந்த படகுப்பவனி மகாராணியின் 60 ஆண்டு வைரவிழாவின் முக்கிய நிகழ்ச்சியாகும். பிரிட்டன் முழுவதும் நகர விருந்துகளும் வீதி விருந்துகளும் நடை பெற்றன.

முடிக்குரிய இளவரசரான சார்ள்ஸ் தமது மனைவியுடன் பிக்கா டில்லி என்ற இடத்தில் நடந்த விருந்தில் கலந்து கொண்டு பொது மக்களுடன் கலந்துரையாடினார். 350 வருடங்களுக்குப் பிறகு நடந்த இந்தப் படகுப் பவனியின் போது எட்டு விழாமணிகள் ஒலிக்கத் தொடங்கி கடைசிப் படகு 7மைல் தூரத்தைக் கடந்து கரை ஒதுங்கும் வரை ஒலித்துக் கொண்டிருந்தன. 86 வயதான மகாராணி வெள்ளைத் தொப்பியும் வெள்ளை மற்றும் வெள்ளை மேல் கோட்டும் அணிந்திருந்தார்.

## அசை போட ஒரு விடயம் 31

அவரது ஆடைகள் அஞ்சலா கெல்லி என்ற பிரபல ஆடை தயாரிப்பாளரால் வடிவமைக்கப்பட்டிருந்தது. மகாராணியால் மிகவும் விரும்பப்பட்டதான பிரிட்டானியா என்ற உல்லாசக் கப்பல் மூலம் அவரது ஆடைகள் அலங்காரப்படகுக்கு கொண்டு போய் கொடுக்கப்பட்டன. பிரிட்டானியா கப்பல் 1997 ஆம் ஆண்டு பாவனையிலிருந்து நீக்கப் பட்டுவிட்டது.

பிலிப் இளவரசர் மகாராணியாருடன் அலங்காரப் படகின் முன் வரிசையில் பிரயாணம் செய்தார். பிரின்ஸ் வில்லியம் அவரது மனைவி, கதரின் மற்றும் அரச குடும்பத்தினர் குதூகலமாகக் காணப்பட்டனர்.

பின்னர் நடந்தவைகளில் கணவர் பிலிப் கலந்துகொள்ளவில்லை. சுகவீனமுற்று மருத்துவமனையில் இருந்தார்.

* * *

**ஆபிரகாம் லிங்கனும் பராக் ஒபாமாவும்**

அமெரிக்க அதிபர் ஆபிரகாம்லிங்கன் பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொண்டு திரும்பியிருந்தார்- அவருக்கு சிறுமி ஒருத்தியிடமிருந்து கடிதம் ஒன்று வந்திருந்தது. அதை வாசித்த பிறகு லிங்கன் தாடி வளர்க்க ஆரம்பித்தார். ஏன் தாடி வளர்க்கிறீர்கள் என்று கேட்டபோது, எனக்கு சிறுமியொருவர் கடிதம் எழுதியிருந்தாள். தாடி வளர்த்தால் நான் அழகாய் இருப்பேன் என்பது அவள் கருத்து. அதனால் அந்த சிறுமிக்காகத்தான் தாடி வளர்க்கிறேன் என்று கூறினாராம்.

அதேபோல் இப்போதைய அதிபர் பராக் ஒபாமாவும் ஒரு சிறுவனுக்காக ஒரு காரியம் செய்துள்ளார்.


11 வயதான் டைவர் சுல்லிவன் என்ற பையன் மின்னசொட்டா என்ற இடத்தில் ஒரு தொழிற்சாலைக்கு ஒபாமா வருவதைக் கேள்விப்பட்டு பாடசாலைக்குப் போகாமல் அவர் பேசிய கூட்டத்தைப் பார்க்க போயிருந்தான்.

ஒபாமா பேசி முடிந்ததும் சுல்லிவனைப் பார்த்து இன்றைக்கு நீ பள்ளிக்கூடம் போகவில்லையா என்று கேட்டார். உங்களைப் பார்ப்பதற்காக இன்று பள்ளிக்கு கள்ளம் போட்டுவிட்டேன் என்றான் அவன்.

பின்னர் தொலைக்காட்சியில் ஒரு நிகழ்ச்சியில் கூட்டத்தில் நான் முன் கதிரையில் அமர்ந்திருந்தேன். அவருடன் கை குலுக்கினேன் என்று கூறினான். அடுத்த நாள் பள்ளிக்குச் சென்ற போது அவனுக்கு ஆச்சரியம் காத்திருந்தது. அமெரிக்க ஜனாதிபதி முதல் நாள் சுல்லிவன் பாடசாலைக்கு வராமைக்காக மன்னிப்பு கேட்டு பாடசாலை அதிபருக்கு கடிதம் எழுதியிருந்தார்.

# மார்புச் சளிக்கு மணலிக் கீரை

## நலம் தரும் தெய்வீக மூலிகைகள்



**மணலிக் கீரை**

**வேறுபெயர்- மணலி, நாவமல்லிக்கீரை**
**தாவரவியற்பெயர்-** Gisekia Pharna-ciaides
**( ஜீசேக்கியா பர்னசியோய்ட்ஸ்)**
**குடும்பம்-**(Aizoaceae)
**சமஸ்கிருதப் பெயர்-வாலுகா**

இது ஒரு பூண்டு. பெயருக்கேற்ப மணற்பாங்கான நிலங்கள், கடற்கரையோரங்களில் காணப்படும் நிலத்தில் படிந்து வளரும். தண்டு சதைப்பிடிப்பானது தனியிலைகள். எதிரான இலை ஒழுங்கு.

இலைகள் அடி ஒடுங்கி நுனி அகன்றிருக்கும். துடுப்பு வடிவானவை சற்று சதைப் பிடிப்பாவை.

பூக்கள் சிறியவை சிவப்பு அல்லது வெளிறிய பச்சை நிறம். பூந்துணரில் காணப்படும்.

*மார்புச் சளிக்கு*

இந்தக் கீரையைக் கறி சமைத்து உண்டுவர மார்புச் சளி வாத கேஸம் என்பன நீங்கும்

இந்தக் கீரையை குடிநீரிட்டுக் குடித்து வந்தாலும் இவை மாறும்

*குடற்புழுக்களுக்கு*

இந்தக் கீரை இலை, வேர் என்பவற்றை நீர் விட்டுக் கரைத்து கலக்கி அதிகாலையில் வெறும் வயிற்றில் மூன்று நாள் கொடுத்து பிறகு ஒரு வாரம் கழித்து மீண்டும் அது போல் மூன்று நாள் கொடுக்க குடற்புழுக்கள் நீங்கும்.

**புதினாக்கீரை**

**வேறுபெயர் -பொதினா, ஈயெச்சக்கீரை, புதியன் மூளி**
**தாவரவியற்பெயர்-**Mentha Javanica
**(மேன்தா ஜவானிக்கா)**
**குடும்பம்-** Labiate
**(லேபியேற்றே)**
**சிங்களப் பெயர்-புதினா**
**சமஸ்கிருதப் பெயர்-புதினா**
**ஆங்கிலப் பெயர்-** (The March Mint)

இது ஈரலிப்பான இடங்களில் வளரும் பூண்டு தண்டு, இலை என்பவற்றில் சற்று வெண்மை அல்லது கருமையாக இருக்கும்.

இலைகள் முட்டை வடிவானவை ஓரம் அழுத்தமற்றது ஒருவித நறுமணமுள்ளவை

*பசியின்மை, செரியாமைக்கு*

இந்தக் கீரையைத் தனித்த கறி அல்லது சம்பல் செய்து சாப்பிடலாம். அல்லது கறிவேப்பிலை போல பிற கறிக்குச் சேர்த்தும் சாப்பிடலாம் அதனால் அஜீரணம் நீங்கும். பசியும் நன்கு ஏற்படும்

*தலைவலிக்கு*

புதினா இலை, கற்பூரப்புல் அல்லது துளசியிலையை சம அளவில் எடுத்து குடிநீர் செய்து பருகிவர தலைவலி, வாந்தி என்பன நீங்கும்.



Dr. சே.சிவசண்முகராஜா M.D. (S),
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கில்லா அம்புகள்

■ சங்கர்

போர் நிறைவுக்குப் பின்னர் பல்வேறு துறைகளில் கவனம் செலுத்தப்பட்டு வருவதாக அரச தரப்பினர் அடிக்கடி கூறி வருகின்றனர்.

அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்தல், குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தல் உள்ளிட்ட பல்வேறு துறைகள் கவனத்தில் கொள்ளப்பட்டு அவற்றுக்கான செயல் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருவதாகவும் கூறப்படுகிறது.

குறிப்பாக வடபகுதியில் பல்வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற போதும் அவை எதுவுமே வறிய மக்களின் வாழ்க்கைத்தரத்தில் எந்த மாற்றத்தையும் உண்டு பண்ணவில்லை என்ற விமர்சனம் முன்வைக்கப்பட்டே வருகிறது.

இந்த நிலையில் குற்றச் செயல்களின் அதிகரிப்பால் அந்த மக்கள் மேலும் திணறிப் போயுள்ளனர். வடபகுதியில் சிறுவர் துஷ்பிரயோகம், பாலியல் வன்புணர்வு, பதின்ம வயதுக் கர்ப்பம், மதுபோதைப் பொருள் பாவனை, குடும்ப வன்முறை, தற்கொலை, விபத்து, மரணம், கொள்ளை களவு, அடிதடி, வன்முறை உள்ளிட்ட பல்வேறு குற்றச்செயல்கள் அதிகரித்தே வருகின்றன.

இவற்றைக் கட்டுப்படுத்த வென வடபகுதியிலுள்ள அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், சமூக மட்ட நிறுவனங்கள் மற்றும் பொது அமைப்புகளின் ஏற்பாட்டில் பல்வேறு கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன.

அதிக செலவில் ஏற்பாடு செய்யப்படும் இத்தகைய கலந்துரையாடல்கள், கூட்டங்கள் மணிக்கணக்கில் இடம்பெறுகின்றன. இத்தகைய நிகழ்வுகளுக்கு துறை சார்ந்தவர்கள், சமூக ஆர்வலர்கள், சமய, சமூக பெரியவர்கள் அழைக்கப்படுகிறார்கள். அபிவிருத்தி திட்ட முன்னெடுப்புக்காக நடத்தப்படும் கலந்துரையாடல் களுக்கு இணையாக குற்றச்செயல்களை கட்டுப்படுத் துவதற்காக கலந்துரையாடல்கள் இடம்பெறுவது தற்போதைய சூழலில் அவசியமானதுதான். ஆனால் இத்தகைய கலந்துரையாடல்களின் முடிவில் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கான செயல் திட்டம் தயாரிக்கப்படுகின்றதா? அவை நடைமுறைப்படுத்தப் படுகிறதா என்பது கேள்விக்கு உரிய விடயம்தான்.

விடயம் தொடர்பான கலந்துரையாடல்களுக்கு வருபவர்களில் அனேகமானவர்கள் நமது வித்துவச் செருக்கை வெளிப்படுத்தும் விதமாக பல கருத்துக்களைக் கூறுவார்கள். அப்படிச் செய்யவேண்டும் இப்படிச் செய்யவேண்டும் என கூறியதையே கூறிக்கொண்டிருப் பதே அவர்கள் செயற்பாடாகிவிடும். கூறியதைக் கூறுவதுக்கும் அதனைக் கேட்பதுக்குமென கலந்துரையாடலின் போது அதிக நேரம் செலவிடப்படும். அத்துடன் கலந்துரையாடல் நிறைவு பெற்றுவிடும். இதுவே அனேகமான கூட்டங்கள் கலந்துரையாடல்களில் தொடர்வதாகி விட்டது.

குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவதுக்கான செயல் திட்டம் அங்கு முன்மொழியப்படுவதோ தற்செயலாக அவ்வாறான ஒரு திட்டத் முன் மொழியப்பட்டால் அந்தச் செயல் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதோ மிகவும் அரிதுதான்.

குற்றச் செயல்களைப் பற்றி கதைப்பதற்கு ஒதுக்கப்படும் நேரம், அதற்கான செயல் திட்டத்தைத் தயாரிப்பதுக்கு ஒதுக்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டு பரவலாக உள்ளது. குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் விடயத்தில் மட்டுமல்ல ஏனைய விடயங்களிலும் இதே நிலைமைதான்.



தற்போது இடம்பெற்றுவரும் பெரும்பாலான கலந்துரையாடல்கள் உரிய இலக்கை எட்டுவதில்லை. இவ்வாறான கலந்துரையாடல்களுக்கு எமது நேரத்தை செலவிடுவது வீணானது எனக் கருதி அவற்றை நான் தவிர்த்து வருகிறேன் என குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற ஆர்வமுள்ள வைத்திய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

உண்மையும் அதுவாகத்தான் இருக்கிறது. நோக்கம் சிறப்பாக எட்டப்படாத நிகழ்வுகள், கலந்துரையாடல்கள் தான் தற்போது அரங்கேறி வருகின்றன.

தேவைக்காக கூட்டப்படும் கூட்டங்கள், கலந்துரையாடல்கள், நிகழ்வுகள் உரிய இலக்கை எட்டுவதாக இருக்கவேண்டும். ஏற்பாட்டாளர்கள் அந்த விடயத்தில் அதிக அக்கறை காட்ட வேண்டும். ✸

# வருமுன் காப்போம்



■ நித்தியா

வெளிநாடுகளை மிஞ்சும் அளவுக்கு விதவிதமாக நவீன மருத்துவ வசதிகளுடன் இன்று எமது நாட்டில் எத்தனை எத்தனையோ மருத்துவமனைகள் உதித்துக் கொண்டே இருக்கின்றன. திறமைமிகுந்த வைத்தியர்கள், விதவிதமான மருந்துகள் என்று எத்தனையோ மருத்துவ வசதிவாய்ப்புக்கள் இருந்தும், மனிதர்களுக்கு ஏற்படும் நோய் நொடியில் குறைவில்லை.

பல்வேறு விதமான நோய்கள், புதுப்புதுப் பெயர்களில் உருவாகிக் கொண்டே இருக்கின்றன. இவ்வாறு நோய்கள் பல்கிப் பெருகக் காரணம்தான் என்ன?

நாம் எங்கோ தவறு செய்து கொண்டிருக்கின்றோம் என்பதை முதலில் உணரவேண்டும். மனித சமுதாயம் எங்கு திசைமாறியது? எதனால் இப்படி ஏற்படுகின்றது என்பதை எப்போதாவது நாம் சிந்தித்ததுண்டா? இவற்றுக்கெல்லாம் எமது உணவுப் பழக்கவழக்கமே மூல காரணம் என்பதை அன்றே வள்ளுவப் பெருந்தகை தெளிவுபடுத்திவிட்டார்.

அதனால்தான் மருந்து என்ற அதிகாரத்தையே படைத்திருக்கின்ற திருவள்ளுவர் மருந்துக்குக்கூட ஒரு மருந்துப் பெயரைச் சொல்லவில்லை. இத்தனை நோய்களில் ஒரு நோயின் பெயரைக் கூடச் சொல்லவில்லை. அவர் ஏன் அப்படிக் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று கேள்விதான் எழுப்பினோமா?

வள்ளுவர் ஏன் மருந்துப் பெயரைச் சொல்லவில்லை. அவர் காலத்தில் மிளகு, சீரகம், வேப்பிலை, ஏலக்காய் இப்படி ஒரு மருந்து கூடவா இருந்திருக்காது? அல்லது அவர்தான் அறியாமல் இருந்திருப்பாரா? இவையல்ல காரணம்.

நோய் வந்து உடல் நொந்த பின் மருந்தைத் தேடிச் சென்று உட்கொண்டு பின்பு நோய் தீருவதை வள்ளுவர் விரும்பவில்லை. ''வருமுன் காப்பதுதான் வாழ்க்கை'' என்று முன் சொன்னவர், பின்னர் எப்படி நோய்க்கு இன்ன மருந்து என்று கூறுவார். அதனால்தான் அவர்

**''மருந்தென வேண்டாவாம் யாக்கை அருந்தியது**
**அற்றது போற்றி உணின்''** என்கிறார்.

இந்த உடலுக்கு மருந்து தேவைப்படாது. அது வேண்டவே வேண்டாம். எப்பொழுது என்றால் நாம் முன்னர் உண்ட உணவு செரித்து விட்டது என்று தெரிந்த பின் மீண்டும் உணவு உண்டால் மருந்து தேவைப்படாது என்று கூறியிருக்கிறார்.

''அற்றால் அளவறிந்து என்றும் அற்றது அறிந்து'' என்றும் ஒரே கருத்தையே மீண்டும் கூறியிருக்கிறார்.

ஆனால் வள்ளுவர் கூறிய கருத்துக்களைக் கடைப்பிடிப்பவர்கள் இன்று எவரும் இல்லை. பாடசாலையில் கட்டாயத்தின் பேரில் படித்து மதிப்பெண்களைப் பெற்றுக் கொள்வதோடு சரி, அந்த அறிவுரைகளை நடைமுறை வாழ்வில் எவரும் பின்பற்றுவதில்லை. இதுதான் இன்றைய நோய்ப் பெருக்கத்துக்கு மூலகாரணம்.

நாம் எமது உறவினர்களையோ, நண்பர்களையோ சந்தித்தால் எப்படி இருக்கிறீர்கள்? சௌக்கியமா? என்று தொடங்கி சாப்பிட்டீங்களா? என்றே முடிக்கின்றோம். அதுமட்டுமன்றி நேரத்துக்குச் சாப்பிடுங்கள். நேரம் தவறாது சாப்பிடுங்கள் என்று ஆலோசனை வேறு.

வேளாவேளைக்கு நன்றாகச் சாப்பிடுகிறோம். வயிறு நிரம்பச் சாப்பிடுகிறோம். அதன் விளைவு நோயோடும், மருந்து மாத்திரைகளோடும் போராடும் வாழ்க்கைக்குத் தள்ளப்படுகிறோம்.

பசித்துச் சாப்பிடுங்கள், அளவாகச் சாப்பிடுங்கள் என்று எமது நாட்டில் ஏதாவது ஒழுங்குமுறைதான் இருக்கிறதா? உணவு உண்பதை மட்டுமே வாழ்க்கையாக, சடங்காக மாற்றிவிட்டோம். இந்த இடத்தில்தான் நாம் பறவைகள், விலங்குகளிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டிய பாடம் ஒன்று உள்ளது.

பகலில் நடமாடும் விலங்குகளோ பறவைகளோ இரவில் உண்பதில்லை. ஆனால் நாம் இரவிலும் உண்கிறோம். பகலிலும் உண்கின்றோம். அதிலும் அசைவ உணவு என்றால் மணிக்கொரு தடவை உண்பவர்களும் உள்ளனர். இவ்வாறு சாப்பிட்டால் நோய் வராமல் என்ன செய்யும்.

''பசித்தால் சாப்பிடுங்கள், தேவைக்குச் சாப்பிடுங்கள். இதுதான் வள்ளுவர் கண்ட மாமருந்து. மருத்துவத்துக்காக பணம், பொருள், நிம்மதி எல்லாவற்றையும் இழப்பதை விட, வள்ளுவ மருந்தாகிய பசித்த பின் உண்ணுதல் சிறந்தது. இதைத்தான் ''பசித்த பின் புசி'' என்று கூறுகிறது பழமொழி. ஒவ்வொருவரும் மருந்து மாத்திரை, நோயின் வேதனை வேண்டாம் என்று நினைத்தால் வள்ளுவர் கண்ட பசியை உணருங்கள். அதுதான் சகல நோய்களில் இருந்தும் எம்மைக் காக்கும்.

வேளா வேளைக்கு நன்றாகச் சாப்பிடுகிறோம். வயிறு நிரம்பச் சாப்பிடுகிறோம். அதன் விளைவு நோயோடும், மருந்து மாத்திரைகளோடும் போராடும் வாழ்க்கைக்குத் தள்ளப்படுகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 3 வெற்றி பெறலாம் வாங்க!

ராகவன் அல்பி

## ஒரே விஷயம் வெவ்வேறாக ஏன் தோன்றுகிறது?

வாழ்க்கையைப் பற்றி அவரவருக்கென்று சொந்த மனப்பாங்கு உள்ளது. வெற்றி என்றால் என்னவென்பதன் தனிப்பட்ட வரையறைகளை அதுதான் வடிவமைக்கிறது. மேலும் நம்மை வெவ்வேறு விஷயங்களையும் விரும்பச் செய்கிறது.

விளம்பரப் படங்களுக்கு இந்தச் சிறப்புத் தன்மை இருக்கிறது. அழகான இரண்டு பேர் ஒரு குறிப்பிட்ட பொருளைப் பயன்படுத்துவதால் சந்தோஷமாக இருக்கிறார்கள் என்று சொல்லும் ஒரு விளம்பரப் படத்தைப் பார்த்தால், இயல்பாகவே நமக்கும் அந்தப் பொருளை வாங்கினால் நாமும் அவர்களைப் போல சந்தோஷமாக இருப்போம் என்ற எண்ணம் தோன்றும். இப்படித்தான் நிறுவனங்கள் எல்லாம் தங்கள் பொருள்களை எங்கள் தலைகளில் கட்டியடித்து எம்மை நுகர்வோராக வைத்திருக்கின்றன.

இதைப் புரிந்து கொள்வது வெற்றிக்கான அடிப்படைகளில் ஒன்று. இதிலிருந்து மீளும்போதுதான் வெற்றி எமக்கு வசப்படும். ஒரு விஷயத்தை ஏன் வெவ்வேறு விதமாகப் பார்க்கிறோம் என்பதற்குப் 10 காரணங்கள் உள்ளன.

1. **பெற்றோர்:** நமது பெற்றோரின் வாழ்க்கையைப் பற்றிய கண்ணோட்டமே நம்மை உருவாக்கிறது. அவர்களது குறிக்கோள்கள் விருப்பங்களை நீங்கள் ஆதரிக்கலாம் அல்லது அதை எதிர்த்துச் சண்டையிடலாம். உங்கள் பெற்றோர்களின் மனோபாவத்தை யோசித்துப் பாருங்கள். அவர்கள் உங்களை எப்படி உருவாக்கி இருக்கிறார்கள் என்று பாருங்கள்.
2. **இடம்:** நீங்கள் உலகத்தில் எந்த இடத்தில் இருக்கிறீர்கள் என்பது விஷயங்களை எப்படிப் பார்க்கிறீர்கள் என்பதில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். நீங்கள் நியூயோர்க்கில் பிறந்து வளர்ந்திருப்பதாகக் கற்பனை செய்யுங்கள். அந்தக் குழந்தை பருவச்சூழல் உங்களின் பார்வையை மாற்றியிருக்குமா? இல்லையா?
3. **உடனிருக்கும் நபர்கள்:** பெரும் சாதனையாளர்கள் பிற சாதனையாளர்களுடன் பள்ளிக்குச் செல்வார்கள். இது அவர்களை அதிகப் போட்டித் திறனுடன் இருக்க ஊக்கப்படுத்துகிறது. உங்களுடன் விளையாட்டு மைதானத்துக்கு வருபவர்களில் சிறப்பாகச் செயல்படுவது யார்? அவர்களிடமிருந்து நீங்கள் என்ன கற்றுக்கொள்கிறீர்கள்? என்பதும் முக்கியமானது
4. **ஆர்வங்கள்:** பனிச்சறுக்கு விளையாட்டை நீங்கள் விரும்பலாம் அல்லது குளிரை நீங்கள் வெறுக்கலாம். நீங்கள் நாய்களை விரும்பலாம் அல்லது நாயால் கடிபட்டிருந்தால் நாய் இனத்தையே வெறுத்து ஒதுக்கலாம்.
5. **உடலின் நிலை:** நீங்கள் நன்றாக நிமிர்ந்து நடந்தீர்கள் என்றால் உலகம் உங்களை விட மிகப்பெரியதாகத் தெரியும். குனிந்து பணிவுடன் நடந்தால் உங்களின் பாதத்துக்கு அருகில் இருப்பது போலத் தோன்றும். நீங்கள் பார்ப்பதை நிற்கும் நிலை எப்படிப் பாதிக்கிறது பார்த்தீர்களா? நீங்கள் உயரமானவராக இல்லாவிட்டால் பெரும் கூட்டத்தைத் தாண்டி எப்படிப் பார்ப்பீர்கள் என யோசித்துப் பாருங்கள். உயரம் உங்களைப் பின்னடையச் செய்வதைத் தடுத்துவிடும்.
6. **தவறான அபிப்பிராயங்கள்:** உங்களின் மற்றும் உங்களைச் சுற்றியுள்ளவர்களின் தவறான அபிப்பிராயங்கள் உங்களின் சிந்தனையை வடிவமைக்கிறது. உங்களுக்குத் தவறான அபிப்பிராயங்கள் இருந்தால், அதை எதிர்கொண்டு மாற்றிக்கொள்ள வேண்டிய தேவை இருக்கிறது. நீங்கள் விரும்பாத சூழ்நிலையின் முன்னே நின்று உங்களின் அபிப்பிராயங்களின் பின்னால் இருக்கும் யதார்த்தத்தைக் கண்டறியுங்கள்.
7. **அரசியல்:** உங்களின் அரசியல் நிலைப்பாடு உங்களின் [illegible] பற்றிய பட்டியலைத் தந்துவிடும் சில சமயத்தில் எந்தக் கட்சியையும் சாராமல் தனித்திருங்கள். அப்போது மனதில் உங்களின் சொந்தக் கருத்தை நிரப்புங்கள். பின் சில கட்சிகளின் கொள்கைகளை எடுத்துக்கொள்ளுங்கள். உங்கள் கொள்கையுடன் அதை ஒப்பிட்டுப் பாருங்கள்.
8. **கண்ணோட்டம்:** ஒரே சூழ்நிலையில் உங்களின் கண்ணோட்டமும் பிறரின் கண்ணோட்டமும் வேறுபடலாம். கண்ணோட்டம் வேறுபடும் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும் மேலும் உங்களின் பார்வையையும் எவர் மீது திணிக்காமல் இருக்க முயற்சி செய்ய வேண்டும்.
9. **தத்துவம்:** இந்த ஒரு வார்த்தை மதத்தை விட அதிகமாக நம்மை அரவணைக்கக் கூடியது. வாழ்க்கை, மரணம், ஆன்மிகம் இவைகள் பற்றிய உங்களின் நம்பிக்கைகள் உங்களின் மனப்பாங்கைத் தீர்மானிக்கின்றது. சரியான அல்லது தவறான தத்துவம் என்று எதுவுமில்லை மற்றவர்களின் தத்துவங்கள் உலகைப் பற்றிய அவர்களது பார்வையை எப்படி மாற்றுகிறது என்பது என்று பாருங்கள்.
10. **மனிதர்களின் அண்மை:** பெரும் கூட்டம் என்பது உலகைப் பற்றிய நமது பார்வையில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்துகிறது. உங்களைச் சுற்றி குறைவான நபர்கள் இருக்கும்போது, பிற நபர்களை அதிகமாக மதிப்பீர்கள். கூட்டமான இடத்தில் இருப்பதைவிடத் தனியாக நேரத்தை செலவிட முயற்சி செய்யுங்கள்.

நீங்கள் இன்னும் நீங்களாகத் தான் இருக்கிறீர்கள். ஆனால் ஒவ்வொரு சூழ்நிலையிலும் வெவ்வேறு விதமாக உணர்கிறீர்கள். இது ஏன் என்று உங்களிடம் கேளுங்கள்.

# பிஞ்சுகளின் கல்வியில் அக்கறை அவசியம்

கறுப்பி

சிறார்களின் கல்வியின் ஆரம்பம் முன்பள்ளியில்தான். முன்பள்ளி கற்கை சிறார்களின் உடல் உள ஆரோக்கியம், ஆளுமை, பகுத்தறியும் தன்மை ஒழுக்கங்கள் ஆகியவற்றில் பூரண பங்கு கொண்டது.

> “முன்பள்ளியில் கற்றுக் கொள்ளும் அடிப்படை விடயங்கள் மட்டுமே சிறார்களுக்கு வாழ்நாள் முழுதும் பிரதிபலிக்கும். ஆரோக்கியம், கல்வி மற்றும் இதர பல செயற்பாடுகளில் அத்திபாரமாக விளங்குவன முன்பள்ளிகளே.

பாடசாலைக்குச் செல்லும் முன்பு சிறார்கள் தமது ஆளுமையை வளர்த்துக்கொள்ளும் இடமாக முன்பள்ளிகள் செயற்படுகின்றன.

இது ஒரு கட்டாயக் கல்வி என்ற அடிப்படையில் 3 வயது தொடக்கம் 5 வயது வரையான காலப் பகுதியில் சிறார்கள் முன்பள்ளியில் கற்றுக்கொள்ளுகின்றனர்.

முன்பள்ளியில் கற்றுக் கொள்ளும் அடிப்படை விடயங்கள் மட்டுமே சிறார்களுக்கு வாழ்நாள் முழுதும் பிரதிபலிக்கும். ஆரோக்கியம், கல்வி மற்றும் இதர பல செயற்பாடுகளில் அத்திபாரமாக விளங்குவன முன்பள்ளிகளே.

இந்தப் பள்ளியில் சிறார்களின் விருத்தியை மேம்படுத்துவதற்கு பல்வேறான செயற்திட்டங்கள் முன்னெடுத்து நடத்தப்படுகிறது.

கல்விசாரா செயற்பாடுகளில் விளையாட்டுக்கள் கல்விசார் செயற்பாடுகளில் திறன்கள், பிரித்தறிதல் விலங்குகள், பறவைகள் இனங்காணுதல் போன்றவையும் கற்பித்துக்கொடுக்கப்படுகின்றன.

முதன்முதலாக நட்பு எனும் வட்டாரத்தை ஏற்படுத்தி கொடுப்பது முன்பள்ளிகள் மட்டுமே. அனைத்துச் சிறார்களும் கூட்டாகச் செயற்படுவதும், உணவுகளைப் பரிமாறி உண்பதும் ஏனையவர்களை இனங்கண்டு கொள்ளுவதும் இங்கே தான், மாணவர்களின் ஆற்றலையும் ஆளுமையையும் வெளிக்காட்டிக்கொள்வதற்காக பல்வேறு போட்டிகள் நடத்தப்படுகின்றன.

பாடல்கள், சித்திரப்போட்டிகள், அபிநயங்கள் குழுச் செயற்பாடுகள் போன்றவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்துத் [illegible] வும், கூட்டாகவும் செய[illegible] கின்றனர். இதன் மூலம் தனிநபரின் தமது கூச்ச சுபாவங்கள் பயம் ஆகியவை விலகும். குழுவாகச் செயற்படும் போது, விட்டுக்கொடுக்கும் பக்குவம் வெற்றி தோல்விகளைச் சமமாக நோக்கும் திறமை மேலும் வெற்றிபெற வேண்டும் என்ற ஆர்வம் ஆகியன விருத்தியடைவதற்கு இந்தப் பள்ளிகள் அத்திபாரமிடுகின்றன.

இவ்வாறான முன்பள்ளிகளின் செயற்பாடுகளுக்கு பள்ளிச் சூழ் நிலை, கற்பிக்கும் ஆசிரியர்கள் மற்றும் கற்கும் முறைமைகள் ஆகியன சிறார்களின் மனதைக் கவரக்கூடியதாக இருக்க வேண்டும். அத்துடன் இந்தப் பள்ளியில் கற்கை நெறிகள் பூரணம் என பெற்றோர் மன நிறைவை அடைய வேண்டும்.

[illegible] ர்களுக்கு முன்பள்ளி மாணவர்களுடைய மனநிலையை அறிந்து கற்பிக்கத் தெரிவதில்லை. இந்த வகையில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு பயிற்சி என்பது முக்கியமானது. குறுங்காலப் பயிற்சி, இடையிட்ட பயிற்சி என்பன அவசியம்.

நகர்புற முன்பள்ளிகளை விட கிராமப்புற முன்பள்ளிகள் பௌதீக வளம் அடிப்படை வசதிகளில் பின்தங்கியே காணப்படுகிறது.

விளையாட்டுக்கான மைதானங்கள், தளபாட வசதிகள், மலசல கூடங்கள், விளையாட்டு உபகரணங்கள், கட்டடங்கள், பூங்காக்கள் என்பன திறம்பட இல்லை.

முன்பள்ளியில் 3-4 வயதான சிறார்கள் ஒரு குழுவாகவும் 4-5 வயதானோர் ஒரு குழுவாகவும் செயற்பட்டு வருகின்றனர். அனால் மாணவர்களின் தொகைக்கு ஏற்ப முன்பள்ளி ஆசிரியர்கள் குறைவாக உள்ளனர். இதற்கு போதியளவான சம்பளம் வழங்காமையும் ஒரு காரணம்.

சிறார்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஆசிரியர்களின் எண்ணிக்கைகளும் அதிகரிக்கப்பட வேண்டும் இதற்கு உரிய அதிகாரிகளின் நடவடிக்கைகளும் அவசியம்.

முன்பள்ளி மாணவர்களின் சுயதேடுதலுக்கும், சுய இயல்புகளுக்கும், ஆளுமை விருத்திக்கும், முன்பள்ளி அத்திபாரம் இட்டுள்ளதால் ஒழுங்கான முறையில் கற்பித்தல்களும் சரியான திட்டமிடல் செயற்பாடுகளால் முன்பள்ளிகளின் தரத்தையும் சிறார்களின் கல்வித் தரத்தையும் உயர்த்துவது அவசியமாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ வசாவிளான் தவமைந்தன்

# தனித்துவம் கொண்ட தவில் மேதை தாளச மூர்த்தி இ.புண்ணியமூர்த்தி

சாதனைக் கலைஞரைச் சந்திப்போம் சிந்திப்போம்

47



ஈழத்தமிழரின் பெருமையை, கலையாற்றலை, சாதிக்கும் திறனை உலகிற்கு எடுத்துக் காட்டி தன்மானமுள்ள கலைஞனிற்கு உதாரணமானவராய் வாழ்ந்தவர் லயஞான குபேர பூபதி வி.தெட்சிணாமூர்த்தி. அவதார மூர்த்திபோல் எம்மிடையே வாழ்ந்த அக்கலைஞர் தவில் என்னும் கருவிக்கு இராஜ வாத்தியம் என்னும் பெயரைத் தேடித்தந்தார். இக்கலைஞரோடு மேடையில் அமர்ந்து தவில் வாசிப்பதற்கு பலரும் அஞ்சி நடுங்கி நின்ற அந்தக் காலத்தில் ஒரு சிலர் மட்டுமே அவருடன் இணைந்து வாசித்து வந்தனர்.

பத்து ஆண்டுகளிற்கும் மேலாக லயஞான குபேர பூபதியுடன் இணைந்து தவில் இசை மழை பொழிந்த கலைஞராகவும் ஐம்பது ஆண்டுகளிற்கும் மேலான பட்டறிவு கொண்ட முதுகலைஞராகவும் ஏராளமான கலைஞர்களை உருவாக்கிய தவில் ஆசானாகவும் ஈழத்திலும் தமிழகத்திலும் புகழ்பெற்ற ஒருவராகவும் கலைப் பணியாற்றி வருபவர் லயஞான சிரோன்மணி இ.புண்ணியமூர்த்தி.

மறைந்த இராசு - கௌரியம்மா தம்பதியரின் மகனாக 05.09.1942 இல் இணுவிலில் இவர் பிறந்தார். இணுவில் சைவ மகாஜனா வித்தியாசாலையில் கல்வி கற்ற இவர் அந்தக் காலத்தில் சிறந்த இசை ஆசிரியராக விளங்கிய இணுவில் வி. உருத்திராபதியிடம் தாள நுட்பங்களைக் கற்று அவரது ஆலோசனைப்படி துன்னாலை சுப்பையாபிள்ளையிடம் தவில் கலையை முறைப்படி கற்று வந்தார்.

இதன் பின்னர் திருமெஞ்ஞானம் கிருஷ்ணமூர்த்தி பிள்ளையிடம் இக்கலையைக் கற்று வந்த இவர் தனது பதின் மூன்றாவது வயதிலேயே ஆலயங்களில் தவில் வாசித்து வந்தார். கலைத் தொழிலை மேலும் வளப்படுத்தும் நோக்குடன் அந்தக் காலத்தில் பெரும் புகழ் பெற்றிருந்த இணுவில் என்.ஆர். சின்னராசாவிடம் சில ஆண்டுகள் கற்று முழுமையான தவில் கலைஞனாகத் தன்னை வளப்படுத்திக் கொண்டார். தனது அண்ணரான இ.சுந்தரமூர்த்தியின் குழுவில் பல ஆண்டுகள் பணியாற்றி வந்தார்.

தவில் உலகின் முடிசூடா மன்னனாக அந்தக் காலத்தில் விளங்கிய லயஞான குபேர பூபதியுடன் இணைந்து வாசித்து வந்த தவில் சக்கரவர்த்தி இணுவில் என்.ஆர்.சின்னராசாவின் ஆசீர்வாதத்துடன் அவர்கள் இருவருடனும் இணைந்து பல நூற்றுக் கணக்கான மேடைகளில் இளம் கலைஞனாக அணிசெய்து அனைவரின் பாராட்டுக்களையும் பெற்றுக் கொண்டார். பி.எஸ்.ஆறு முகம்பிள்ளை, எம்.பஞ்சாபிகேசன், என்.கே.பத் மநாதன் எம்.பி.பாலகிருஷ்ணன் போன்ற ஈழத்தின் தலைசிறந்த நாதஸ்வரக் கலைஞர்கள் அனைவருடனும் யாழ்ப்பாணத்திலும் ஏனைய மாவட்டங்களிலும் சென்று தனது தனித்துவத்தை நிலைநாட்டி வந்தார்.

தனது குருவான என்.ஆர்.சின்னராசாவின் ஆசியுடன் 1970 இல் தனியாகக் குழு அமைத்து இசைப் பணியாற்றத் தொடங்கிய இவர் இலங்கை வானொலியில் பல ஒலிப்பதிவுகளை வழங்கியவர். அத்துடன் தமிழகத்திற்கும் சென்று சென்னை, புதுக்கோட்டை, திருச்சி, மதுரை போன்ற இடங்களில் சேதுராமன் பொன்னுச்சாமி, திருமச்சூர் சகோதரர்கள், சுபானி காளிசா, சேக் சின்ன மௌலானா, ஏ.கே.சி. நடராஜன் போன்ற மேதைகளின் நிகழ்வுகளில் சிறப்புத் தவில் கலைஞராகப் பணியாற்றிப் பெரும் புகழ் பெற்றவர்.

தமிழகத்தின் தவில் மேதைகளான வலங்கைமான் சண்முகசுந்தரம், நீடாமங்கலம் சண்முகவடிவேல், கலியமூர்த்தி, முத்துக் குமாரசாமி, பாபு, செல்லையா பிள்ளை, ஏ.கே. பழனிவேல், ஆகிய அனைவருடனும் இணைந்து தவில் வாசித்த முதிர்ந்த அனுபவம் கொண்ட இவர் வெளிநாடு களிற் கும் இன்றுவரை சென்று வருகின்றார்.

தற்போது ஈழத்தில் வாழ்ந்து வருகின்ற தவில் கலைஞர்களுள் மூத்த கலைஞராகவும் இளையோருக்குச் சிறந்த வழிகாட்டியாகவும் தற்புகழ்ச்சி இல்லாத நல் மனிதராகவும் ஈழத்துத் தவில் கலையின் சுவையான வரலாறுகளை நினைவில் வைத்திருக்கின்ற கலைக் களஞ்சியமாகவும் கஞ்சிரா இசைப்பதில் வல்லவராகவும் விளங்குகின்ற இவர் தன்மானமுள்ள கலைஞராகவும் எம்மிடையே வாழ்ந்து வருகின்றார்.

கலைத்துறையில் இருக்கும் சிலர் முறையான மாணவ பரம்பரையை உருவாக்கும் கற்பித்தல் திறனற்று, தன்னம்பிக்கை இழந்து தமக்குத் தாமே பாராட்டு விழாவைத் தமது செலவிலேயே ஏற்பாடு செய்து பட்டங்களைச் சூட்டுகின்றனர்.

ஆனால் இக்கலைஞரோ பட்டங்களை, விருதுகளை விரும்பாத ஒருவராகவும் தனது தொழிலுக்குரிய மாரியாதையைப் பேணிவருகின்ற சிறந்த கலைஞராகவும் தினமும் பயிற்சி செய்து இன்றுவரை தன்னை வளப்படுத்தி வருகின்ற துடிப்புடையவராகவும் இருந்து வருகின்றார்.

அத்துடன் முக்தாய்ப்பு என்பது சமத்தில் தொடங்கி எடுப்பிடத்திற்கு வர வேண்டுமே தவிர விருப்பமான இடங்களில் தொடங்குவதை ஏற்றுக் கொள்ள முடியாது என்னும் கருத்தையும் தெளிவுடன் கூறுகின்றார்.

"லயஞான குபேர பூபதியுடனும் எனது குருவான சின்னராசாவுடனும் இணைந்து தவில் வாசித்த காலங்களை என் வாழ்வின் பொற்காலமாகவே நினைக்கின்றேன்.

அவர்களது பாணியில் தவில் கலையின் முழுமை இருந்ததை என்னால் மறக்கவே முடியாது, லயமும் நாதமும் சொல் சுத்தமும் கற்பனை வளமும் கொண்டதான அளிக்கை முறையை அவர்கள் உருவாக்கி வைத்தனர். இதனை யாழ்ப்பாணப் பாணி என்றே சொல்லலாம். இதுவே தவில் உலகில் உயர்வானதும் நுட்பமானதும் ஆகும்.

இன்று வரை தெட்சிணாமூர்த்தி, சின்னராசா ஆகியோரது பாணியையே நான் பின்பற்றி வருகின்றேன். ஆனால் தற்கால இளம் தவில் கலைஞர்கள் இலகுவான முறை களைப் பின்பற்றி வருகின்றமையும் அவதார நாயகனாக எம்மிடையே வாழ்ந்த லயஞான குபேர பூபதியால் உருவாக்கப்பட்ட அற்புதமான, தனித்துவமான, எமக்கே உரிய தான முறைகளை பின்பற்றத் தவறுகின்றமையும் வேதனைக்குரியவை" என்று தனது கருத்துக்களை இவர் உறுதியுடன் கூறுகின்றார்.

# திட்டமிட்ட செயற்பாடு தேவை

■ பாண்டியம்மா

எந்தவித முன்னறிவித்தல்களும் கொடுக்காமல் இரவோடு இரவாக வீதியில் கல்மண் பறிக்கப்பட்டு திருத்தப் பணிகள் நடைபெறுகின்றன. இதனால் பாதை தடைப்படுவதுடன் மின்சாரமும் இடைநிறுத்தப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் தற்போது வீதி அபிவிருத்திப் பணிகள் பரவலாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால் இந்த அபிவிருத்திப் பணிகள் யாவும் திட்டமிட்ட முறையில் நிறைவேற்றப்படுகின்றனவா?

மேடும் பள்ளமும், குன்றும் குழியுமாகக் காணப்பட்ட வீதிகள், பெருந்தெருக்கள் காப்பெற் வீதிகளாக்கப்பட்டு வருகின்றன. இது பொதுமக்களுக்குப் பயன்தரக் கூடிய வகையில் இருந்தாலும் அவற்றால் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளே அதிகம்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையோ, மாநகர சபையோ பொதுமக்களுக்கு எந்தவித முன்னறிவித்தல்களும் கொடுக்காமல் திடீரென நடைமுறைப்படுத்தி வரும் அபிவிருத்திப் பணிகள் பொதுமக்களைப் பாதிப்படையச் செய்வதாகவே அமைந்துள்ளன.

பொதுமக்களின் நலன்களை முன்னிலைப்படுத்தி மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப் பணிகள் தொடர்பாக மக்கள் அறிந்துகொள்ள நினைப்பதில் தவறு எதுவும் இல்லை.

நிதி ஒதுக்கீடுகள், திட்டமுறைகள் தொடர்பாக அறிவிப்புகள் கொடுக்கப்பட்டே பொதுச் சேவைக்கான அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

யாழ். மாவட்டத்தில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் வீதி அபிவிருத்திப் பணிகள் ஆங்காங்கே அரைகுறையாகவே நிறைவேற்றப் படுவதையும் அவதானிக்க முடிகிறது. குறிப்பாகக் கைதடி, மாணிப்பாய் வீதி அபிவிருத்திப் பணிகள் சில மாதங்களுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் இந்த வீதி பூரணப்படுத் தப்படவில்லை.

குறித்த வீதியில் இருமருங்கிலும் பள்ளங்கள் காணப்படுகின்றன. ஒதுக்கப்பட்ட மணல் மேடுகள், கற்கள் அகற்றப்படாமலும் சிதைவடைந்தும் காணப்படுகின்றன.

இதனைவிட யாழ்ப்பாணத்திலிருந்து பண்ணையூடாக தீவுப் பகுதிக்குச் செல்லும் வீதி மிகவும் குறுகிய இடத்துக்கு மட்டும் காப்பெற் பரப்பப்பட்டுள்ளது. வீதியின் மீதிப் பகுதியில் வாகனங்கள் ஒன்றையொன்று விலத்திச் செல்லமுடியாத அளவுக்கு ஒற்றையடிப் பாதை போன்று அமைந்துள்ளது.

இதுபோன்ற பல வீதிகளில் புனரமைப்பு பணிகளும் பொதுமக்களுக்கு மேலும் பாதிப்பை ஏற்படுத்திக் கொள்ளும் அளவுக்கே திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

வீதி அபிவிருத்திப் பணிகளுக்காகத் திட்டமிட்ட முறையில் நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டிருக்கும். ஆனால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி அனைத்தும் பணிகளுக்காகச் செலவு செய்யப்படுகின்றனவா என்பதை யாரிடம் போய்க் கேட்பது.

இவை இவ்வாறு இருக்கும் பட்சத்தில் எந்தவிதமான முன்னறிவித்தல்களையும் மக்களுக்குத் தெரியப்படுத்தாமல் இரவோடிரவாக வீதிப் புனரமைப்புக்குத் தேவையான பொருள்களை வீதிகளில் பரப்பிவிட்டு 'போக்குவரத்துக்குத் தடை' என மறுநாள் 'போர்ட்' போடப்படுகின்றது.

திடீரென மேற்கொள்ளப்படும் இந்தச் செயற்பாட்டால் பொதுமக்களின் இயல்பு நிலை பெரிதும் பாதிப்படைகிறது. மின்சாரம் தடைப்படுகிறது. போக்குவரத்து தடை செய்யப்படுகின்றது. இது தொடர்பாக அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளத் திட்டமிட்ட அதிகாரிகள் ஏன் ஆராயவில்லை.

அபிவிருத்திப் பணிகளுக்காக நியமிக்கப்பட்ட திட்டமிட்ட அதிகாரிகள் தமக்கு வழங்கப்பட்ட கால எல்லைகளைக் கடந்து பணியாற்றும் செயற்பாடுகள் காரணமாகவே திடீர் திடீரென எந்தவித அறிவிப்புகளும் கொடுக்காமல் அபிவிருத்திப் பணிகளை நடைமுறைப்படுத்த ஆரம்பிக்கிறார்கள். ஒப்பந்தக்காரர்களின் அசமந்தமான போக்கு பொதுமக்களைப் பாதிப்படையச் செய்கிறது.

யாழ்ப்பாணத்தில் பெருந்தெருக்களில் வாகன நெரிசல்கள் அதிகரிப்பதற்குக் காரணம் திட்டமிடப்படாத வீதி அபிவிருத்திப் பணிகளே.

பருத்தித்துறை வீதி உட்பட ஏ-9 வீதிபோன்ற பெருந்தெருக்களில் வாகன நெரிசல்கள் ஏற்பட்டுள்ளன. இப்படித் தொடர்ச்சியான வாகன நெரிசல் காரணமாக வீதி விபத்துக்களும் அதிகரிக்கின்றன.

வீதி அபிவிருத்திப் பணிகள் இடம்பெறுவதன் காரணமாக ஆங்காங்கே மணித்தியாலக் கணக்கில் வாகனங்கள் இடைநிறுத்தப்பட்டு ஒரேயடியாக பயணிக்க விடப்படுவதால் வாகனச் சாரதிகள் தமது நேரத்தைக் கணக்கில் கொண்டு வேகக் கட்டுப்பாட்டையும் மீறி வாகனத்தைச் செலுத்தத் தொடங்குகின்றனர்.

வாகன சாரதிகள் வேகக் கட்டுப்பாட்டை மீறி வாகனத்தைச் செலுத்துவதால் விபத்துக்கள் ஏற்படுவதுடன் பயணிகளும் பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளும் தரப்பு பொதுமக்களின் இயல்பு நிலை பாதிப்படையாத வகையில் அவர்களின் நலன்களை முன்னிலைப்படுத்தி அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

அபிவிருத்திப் பணிகளைப் பகட்டாக மேற்கொள்ளாமல் அவற்றைச் சரியான திட்டமிடலுடன் ஒதுக்கப்பட்ட நிதிகளைக் கொண்டு சரியாக நிறைவேற்றும் பட்சத்திலேயே பொதுமக்கள் நன்மையடைவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி........

தருபவர் - வித்தியா

## 10.06.2012 முதல் 16.06.2012 வரை

### மேடம்



எந்த ஒரு விவகாரத்திலும் போராடி செய்து முடிக்க வேண்டியிருக்கும். சில ஆதாயங்களும் கிடைக்கப்பெறுவீர்கள். அவசரப்பட்ட, தேவையற்ற பேச்சுக்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். உயர்கல்விக்கான முயற்சிகள் வெற்றி பெறும். உடல்நிலையில் சற்று கவனம் தேவை. பண நிலையில் ஏதேனும் ஒரு வகையில் வந்து கொண்டு இருக்கும். தேவைகள் பூர்த்தியாகும்.பெற்றோரால் தக்க சமயத்தில் உதவிகள் கிடைக்கப்பெறும். உடன்பிறப்புகளால் மகிழ்ச்சிகரமான செய்திகள் கிடைக்கப் பெறுவீர்கள். தொழில் வகையில் புதிய முயற்சிகளை மேற்கொள்வீர்கள். வியாபாரத்தில் விற்பனை கூடியபோதும், வாடிக்கையாளர்களின் நலனையும் கருத்தில் கொள்ளுங்கள். உத்தியோகத்தர்கள், மேலதிகாரிகளின் கோபத்துக்கு ஆளாகாமல் நடந்து கொள்ளுங்கள்.

### இடபம்



திட்டமிட்ட பணிகளை வெற்றிகரமாகச் செய்து முடிப்பீர்கள். சமூகத்தில் மதிப்பு மரியாதை கூடும். கொடுத்த வாக்கை எப்பாடுபட்டாவது காப்பாற்றுவீர்கள். அரச வகையில் எதிர்பார்க்கும் விடயங்கள் எளிதாக முடியும். உடல் நிலையில் பழைய தொந்தரவுகளில் இருந்து பூரண குணமடைவீர்கள். பண நிலையில் தேவைக்கு ஏற்ப வரவுகளை ஏற்படுத்திக் கொள்வீர்கள்.குடும்பத்தில் புதிய நபர்களின் வருகை, கூடுதல் சந்தோஷத்தை ஏற்படுத்தும். பெற்றோரால் மருத்துவச் செலவுகள் ஏற்படும். உடன் பிறப்புகளில் சில செயற்பாடுகள் அதிகம் யோசிக்க வைக்கும். தொழில் வகையில் எடுத்துக் கொண்ட பணிகளை சற்று போராட்டத்துடன் முடிக்க வேண்டியிருக்கும். உத்தியோகத்தர்களுக்கு சக பணியாளர்களிடம் பணிவான அணுகுமுறை உங்கள் மீதுள்ள மரியாதையை அதிகரிக்கும்.

### மிதுனம்



மனதில் அமைதியும், இனிமையான சூழ்நிலையும் அதிகம் காணப்படும். புத்திக் கூர்மையாலும், ஆராய்ச்சி தன்மையினாலும் புகழ் செல்வாக்கை அதிகரித்துக் கொள்வீர்கள். நீண்டகால கடன் மற்றும் வழக்குகளுக்கு நல்லதொரு தீர்வு காண்பீர்கள். உடல்நிலையில் சிறுசிறு தொந்தரவுகள் ஏற்பட்டபோதும் அதிகப்படியான செலவுகளுக்கு வாய்ப்பில்லை. குடும்பத்தில் சில நிகழ்ச்சிகள் மனதைப் பாதித்தபோதும் பெரிதுபடுத்திக் கொள்ளாதீர்கள். பெற்றோரால் மனநிறைவும், பண உதவிகளும் கிடைக்கப்பெறும். உடன்பிறப்புகளால் தேவையற்ற கவலைகள் ஏற்படும். தொழில் வகையில் எந்த ஒரு முயற்சிகளையும் அல்லது செயற்பாடுகளையும் தக்க நபர்களின் ஆலோசனைக்குப் பின் செயற்படுத்துதல் நல்லது. வியாபாரத்தில் ஏற்ற இறக்கமான நிலையே என்ற போதும் லாபம் குறையாது.

### கடகம்



புதிய முதலீடுகளில் அதிகப்படியான லாபத்தையும், இடம் மற்றும் நிலம் சம்பந்தப்பட்ட வகையில் கூடுதலான ஆதாயம் ஏற்படும்.பண நிலையில் ஓரளவுக்கு சிக்கன நடவடிக்கைகளால் பற்றாக்குறை இன்றி கொண்டு செல்வீர்கள். கடன் நிலவரங்களில் கவனம் தேவை. உயர் கல்விக்கான முயற்சிகளில் குழப்பம் ஏற்பட்டபோதும், பாதிப்பு இருக்காது. குடும்பத்தில் விருந்தினர்களின் வருகை அதிகம் இருக்கும். சுப நிகழ்ச்சிக்கான பேச்சு மற்றும் தெய்வீக வழிபாடுகள் என்று பரபரப்புக்கு குறைவிருக்காது.பெற்றோரின் உடல்நிலையிலும் கவனம் கூடுதலாகத் தேவை. தொழில் வகையில் சில மாற்றங்கள், சீர்திருத்தங்கள் உடனடித் தேவையானதாக இருக்கலாம். வியாபாரத்தில் சந்தையில் நிலவும் மாற்றங்கள் விற்பனையைப் பாதிக்க வாய்ப்பு உண்டு.

### சிங்கம்



உத்தியோகம் மற்றும் தொழில் ரீதியாக எதிர்பாராத முன்னேற்றம் ஏற்படும். நிலம், வீடு, வாகனம் வாங்க வாய்ப்புகள் கூடிவரும். உயர் கல்விக்கான வாய்ப்புகள் பிரகாசமாகும். முகவர் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். உடல்நிலையில் ஆரோக்கியம் கூடிய போதும் சாதாரணமான பரிசோதனை மனக்குறையை அகற்றும். பண நிலையில் பற்றாக்குறை ஏற்படும். சற்று கவனமுடன் செயற்படுதல் நல்லது. குடும்பத்தில் சில நபர்களால் சச்சரவுகள் உண்டு ஏற்பட்டபோதும் சந்தோஷத்துக்குக் குறைவிருக்காது. பெற்றோரால் எதிர்பார்க்கும் உதவிகள் தாமதமாகும். உடன்பிறப்புகளின் நல்ல ஆலோசனையைத் தவிர்த்துக் கொள்ளாதீர்கள். வியாபாரத்தில் லாபங்கள் கூடியபோதும் சில வகையில் குழப்பங்களும் பிரச்சினைகளும் தவிர்க்க முடியாததாக இருக்கும்.

### கன்னி



உங்கள் வாழ்வில் எதிர்பாராத திருப்பு முனைகளை உண்டாக்குகின்ற சூழ்நிலையே இந்தவாரம் நிலவும். கடன் குறையும். கவலைகள் தீரும். சுபகாரியங்கள் கைகூடும். புதிய ஒப்பந்தங்கள் அதிகப்படியான லாபத்துக்கு வழிவகுக்கும். உடல்நிலையில் சூடு சம்பந்தப்பட்ட தொந்தரவுகள் ஏற்பட்ட போதிலும் அதிகமான செலவுகளுக்கு வாய்ப்பில்லை. பண நிலையில் எவ்வகையில் ஆயினும் உங்களின் தேவைகள் பூர்த்தியாகும். அதே நேரத்தில் கொடுக்கல், வாங்கல் நிலைகளில் சுமூகமான போக்கை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.குடும்பத்தில் சிற்சில பிரச்சினைகள் [illegible] பெரிதுபடுத்திக் கொள்ளாதீர்கள். உடன்பிறப்புகளால் வீண் விரயங்கள் ஏற்படும். தொழில் வகையில் எந்த ஒரு செயற்பாடுகளிலும் மிகுந்த கவனம் அவசியம்.

### துலாம்



பூர்வீகச் சொத்துக்களில் வில்லங்க விவகாரங்கள் தீர்வு காணும். பண நிலையில் சற்று விழிப்போடு செயற்படுதல் கடன், மற்றும் செலவுகளைத் தவிர்த்துக்கொள்ள உதவும். உயர் கல்வியில் உங்களின் விருப்பங்கள் நிறைவேறும். குடும்பத்தில் உங்களின் கருத்துக்களை எடுத்துக்கொள்ள வாய்ப்புக் குறைவு என்றபோதும் மனம் தளராதீர்கள். பெற்றோரால் சிறு சிறு சிரமங்கள் ஏற்பட்டபோதும் பெரிதுபடுத்திக் கொள்ளாதீர்கள். உடன் பிறப்புகளிடம் சுமூகமான அணுகுமுறை தேவையான உதவிகள் பெற வழிவகுக்கும். தொழில் வகையில் இடர்பாடுகளைச் சந்தித்தபோதும் வளர்ச்சி பாதிக்காது. வியாபாரத்தில் ஏற்ற இறக்கமான சூழ்நிலை ஏற்பட்டபோதும் பொருளின் தரத்தில் கவனம் இருக்கட்டும். உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் கருணைப் பார்வை கிடைக்கும்.

### விருச்சிகம்



உடல்நிலையில் ஆரோக்கியம் கூடியபோதும், சில செலவுகள் தவிர்க்க முடியாததாக இருக்கும். பண நிலையில் கையிருப்புக்குத் தகுந்த திட்டங்களும், செலவுகளும் நல்லது. கடன் தவணைகளை தவறாமல் செலுத்துங்கள். சில நீண்டகால கடன் முயற்சிகளை மேற்கொள்வீர்கள்.குடும்பத்தில் வழக்கமான உற்சாகத்துக்கும், சந்தோஷத்திற்கும் குறைவிருக்காது. பெற்றோரின் கருத்துக்கள் அதிகம் யோசிக்க வைக்கும். உடன்பிறப்புகளால் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப்பெறுவீர்கள். தொழில் வகையில், புதிய ஒப்பந்தங்களில் கவனம் செலுத்துவதைவிட நிர்வாக சீர்திருத்தங்களை முதலில் செய்து கொள்வது நல்லது. வியாபாரத்தில் விற்பனை கூடியபோதும், போட்டிகள் தங்களை அதிகம் யோசிக்க வைக்கும். உத்தியோகத்தர்களுக்கு மேல் அதிகாரியின் அனுசரணையான பேச்சு உங்களுக்கு மிகவும் ஆதரவாக அமையும்.

### தனுசு



சில விவகாரங்களில் உங்களை மீறி முனைப்போடு செயற்படுவீர்கள். அதனால் சிலரின் அதிருப்திக்கு ஆளாகலாம். எதிலும் சற்று முன்யோசனையுடன் செயற்படுங்கள். பூர்வீக சொத்து சம்பந்தப்பட்ட வகையில், எதிர்பார்ப்பு ஏமாற்றம் தந்தபோதும் பாதகம் இருக்காது. பண நிலையில் எதிர்பார்த்த வரவுகள் தாமதமாகும். செலவுகளை செய்யும் முன், சற்று யோசித்து பின் மேற்கொள்ளுங்கள். கொடுக்கல், வாங்கல் வகையில் நாணயத்தை காப்பாற்ற சிறிது போராட வேண்டியிருக்கும். குடும்பத்தில், அமைதியற்ற சூழ்நிலை நிலவியபோதும் பெரிய பாதிப்பு என்றும் எதுவும் இருக்காது. இல்லறத் துணையின், கருத்துக்களையும் கவனத்தில் கொள்ளுங்கள். உடன்பிறப்புகளால், வீண் விவகாரங்கள் ஏற்பட்ட போதும் சமாளிப்பீர்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த விற்பனை இருந்தபோதும், விரிவாக்கங்களை சற்று யோசித்து செய்யவும்.

### மகரம்



உங்களுக்கு மிகுந்த சாதகமான சூழ்நிலையே. குடும்பத்தில் ஒற்றுமை மேலோங்கும். கடன் தீரும். உடல்நிலையில் சற்று அலைச்சல் கூடுதலால் சோர்வு காணப்படும். பண நிலையில் எதிர்பார்த்த வரவுகள் இருந்தபோதும், எதிர்பாராத செலவுகளால் பற்றாக்குறை ஏற்படும். கடன்களை வாங்கும்போதோ அல்லது கொடுக்கும்போதோ தெளிவான வரையறை அவசியம். பெற்றோரால் உதவிகள் கிடைத்தபோதும் பயன்படுத்திக்கொள்ள முடியாத சூழ்நிலையே. உடன்பிறப்புகளின் வார்த்தைகள் மற்றும் கருத்துக்கள் தங்களை வழிநடத்திச் செல்லும். உத்தியோகத்தர்களுக்கு சலுகைகள் தாமதமாகும்.

### கும்பம்



சொத்துக்களால் வரும் வருமானங்கள் கூடும். வாகனங்கள் சேர்க்கை ஏற்படும். பிரிந்தவர்கள் மீண்டும் சேர்வார்கள். பண நிலையில் வரவுகள் தாமதப்பட்ட போதும், செலவுகள் மேற்கொள்ளுவதில் சிரமங்கள் இருக்காது. கடன் நிலவரங்களிலும் கவனம் இருக்கட்டும். குடும்பத்தில் கோபதாபங்களைத் தவிர்த்து, முடிந்த அளவுக்கு அமைதியான பேச்சை மேற்கொள்ளுவதால் சந்தோஷங்கள் அதிகமாக இருக்கும். பெற்றோரால் மருத்துவச் செலவுகள் உண்டு. உடன் பிறப்புகளால் எதிர்பார்த்த உதவிகள் தாமதப்படும். தொழில் வகையில் சந்தை நிலவரத்துக்கு ஏற்ப செயற்பாடுகள் நிர்ணயித்த இலக்கை எட்ட உதவும். உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் உத்தரவுகளை புரிந்து அதன்பின் செயற்படுவதால் வீண் விவகாரங்கள் தவிர்க்க உதவும்.

### மீனம்



உடல் நிலையில் அவ்வப்போது அசௌகரியங்கள் ஏற்படும். பண நிலையில் எதிர்பார்த்த வரவுகள், ஏமாற்றம் தந்தபோதும் கையிருப்பைக் கொண்டு சமாளிப்பீர்கள். கடனுக்காகக் கொடுக்கப்படும் தவணைகள் தவறாமல் பார்த்துக் கொள்ளுங்கள். குடும்பத்தில் உற்சாகம் அதிகரிக்கும். சில உருப்படியான காரியங்களுக்கு வழிவகைகள் கிடைக்கப்பெறுவீர்கள்.பெற்றோரால் மனக்கஷ்டங்கள் ஏற்பட்டபோதும் பெரிதுபடுத்திக் கொள்ளாதீர்கள். உடன் பிறப்புகளால் தேவையற்ற தொந்தரவுகள் ஏற்பட்டபோதும் தகுந்த முறையில் சமாளிப்பீர்கள். தொழில் வகையில் எடுத்துக் கொண்ட ஒப்பந்தங்களை உரிய நேரத்தில் செய்து முடிப்பீர்கள். வியாபாரத்தில் வியாபாரம் சீராக நடந்தபோதும் சில குழப்பங்கள் தவிர்க்க முடியாததாக இருக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு பணியில் குடும்ப விவகாரங்கள் தலையிடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ ஆனதி

# வேதனைக்குள்ளும் வியாபாரம்

## 11 இறுதி நாள்களும் எனது பயணமும்

என் தலைமாட்டில் அமர்க்களப்படுத்திக் கொண்டிருந்தவர்கள் தண்ணீரையும் உணவையும் பற்றியே கதைத்தார்கள்.

அதை இதுக்க வை. மற்றதை என்ர பேக்குக்குள் வை, போத்தில் தெரியாமல் மறைச்சு வையப்பா; பிறகு கண்டதுகளும் வந்து தண்ணி கேக்குங்கள், அன்ரி அந்த போத்தில என்னட்ட தாங்க அன்ரி, நான் என்ர பேக்குக்குள்ள வைக்கிறன். என்றெல்லாம் கதைகள். தண்ணீருக்கு மணம் குணமெல்லாம் இல்லைத்தான் என்றாலும் தான் போத்தில் போத்திலாக அருகில் இருக்கிறேன் என்பதை எனக்கு உணர்த்திவிட்டது.

எனக்கு தாகம் தாகமாய் தவித்தது. தண்ணீரும் உணவும் சேகரித்துக் கொண்டு வந்தவனாகத்தான் இருக்கவேண்டும். அவன் பையொன்றின்மீது சரிந்தபோது அவனது தலை என் தலையில் இடித்தது.

ஓ யாரோ தெரியேல்லை என்று முணுமுணுத்தபடி எழுந்திருந்து உற்றுப் பார்த்தான். பின்பு சற்று தள்ளிச் சரிந்தான். எனினும் எங்களது தலைகளுக்கு இடையே ஒரு சாண் இடைவெளிதான் இருந்தது. அவன் வயிறுமுட்ட தின்றிருக்கிறான் என்பதை அவனது ஏப்பம் பறைசாற்றியது.

அந்த தண்ணி போத்தலை ஒருக்கா தாப்பா என்றான். அவன் நீர் அருந்தும் ஒலி தொண்டையில் கடகடத்தது. மீண்டும் சரிந்துகொண்டான்.

என்னருகே இன்னமும்தான் அந்த வயோதிப தம்பதி இருந்துகொண்டிருந்தனர். இருட்டிவிட்ட போதும், பொழுது இரவின் நடுப்பகுதியாக இருந்தபோதும், ஏன் குந்திக்கொண்டு இருக்கிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை.


''அப்பா நான் உங்கட பாக்கில தலைய வைச்சு படுக்கட்டுமா'' என்றேன் நயமாக.

'ஓம் பிள்ள! படு படு'' என்றார் அந்த வயோதியரும் ஆதரவாக. என் பையை தூக்கி பிடறிக்கு மறைப்பாக வைத்துக் கொண்டு அப்பாவும் அம்மாவும் இருந்த பக்கமாக சரிந்து கண்களை மூடிக்கொண்டேன்.

அந்தநேரம் எனக்கொரு சிறிய பாதுகாப்பு உணர்வு ஏற்பட்டது. மனதுக்கு சற்று ஆறுதலாகவும் இருந்தது. இதே அப்பாவையும் அம்மாவையும் இன்னொரு தடவை கண்டால் கூட இவர்கள்தான் என்று இனங்கண்டு கொள்வேனா? இல்லை. ஏனெனில் அவர்கள் தோற்றத்தால் என்னில் எந்த நினைவுப் பதிவையும் ஏற்படுத்தவில்லை. மிகமிக மங்கலாகத்தான் என் நினைவில் அவர்களது தோற்றம் பதிந்துள்ளது. என்றாலும் அவர்கள் தந்த இந்த ஆதரவு உணர்வை என்றைக்குமே என்னால் மறக்க முடியாது.

அவர்கள் யாருக்காக காத்திருக்கிறார்களோ? அவர்கள் யாரை நம்பி வந்தார்களோ? அந்த வயோதிபர்களை தாங்குவதற்கு போகுமிடத்தில் யாராவது இருப்பார்களோ என்னவோ? என்றெல்லாம் விடைதேட முடியாத வினாக்களுடன் அப்படியே அயர்ந்து உறங்கிவிட்டேன்.

எவ்வளவுநேரம் உறங்கினேன் என்று என்னால் சொல்ல முடியாது. ஆனால் நல்ல உறக்கம். நீண்ட நாள்களுக்குப் பின்பு வெடியோசைகள் உலுப்பியெழுப்பாத ஓர் உறக்கம்.



விழிப்பு நிலையை அடைந்தபோதும் முகங்களை அடையாளம் காணும் அளவுக்கு வெளிச்சம் போதவில்லை. நள்ளிரவு தாண்டிய பொழுதா அல்லது அதிகாலையா என்று எனக்கு இனங்காணத் தெரியவில்லை.

வயிறு பயங்கரமாய் பசித்தது. நாக்கு மடமடப்பது போன்ற உணர்வு. தண்ணீர் குடித்தே தீரவேண்டும் என்றிருந்தது. என் தலைமாட்டில் இருந்த குடும்பம் இன்னமும் கலகலத்துக் கொண்டுதான் இருந்தது. அவர்களது பேச்சில் எந்த கவலையுமே தென்படவில்லை.

''அண்ண! தண்ணி கொஞ்சம் தாறிங்களா?'' என்று எழுந்த மானத்தில் கேட்டுவிட்டேன். தருவான் என்ற நப்பாசையில்தான் கேட்டேன். அவனோ தன்பாட்டில் இருந்தான் ஒன்றுமே விளங்காதவனைப்போல. அல்லது நான் அவனை கேட்கவில்லை என்பதைப்போல. எனக்கு சங்கடமாகத்தான் இருந்தது. முன் பின் அறியாத அவர்கள் எனக்கு உதவுவார்கள் என்று நான் எப்படி எதிர்பார்க்க முடியும்?

நீ யார்? உனக்கு எதுக்காக நான் தண்ணி தரணும்? என்று நாகரீகமோ மனச்சாட்சியோ இல்லாமல் அவன் தாறுமாறாக சத்தம்போட்டுவிட்டால்? அப்படி நடந்துகொள்ளக் கூடியவர்களும் இருக்கிறார்கள்தானே. இவர்களும் அப்படிப்பட்ட மனிதர்களாக இருந்தால்? சுயநலம் மிக்கவர்களாகத்தான் இருப்பார்கள் என்று அவர்களது பேச்சே சொல்கிறதே.

சாமத்தில்கூட தாகம் ஏற்படுமா? அதுவும் இத்தனை தவிப்பாய்? உச்சி வெய்யிலில் நிற்பதைப்போல அந்த இரவிலும் தண்ணீருக்காக ஏங்கினேன். மெதுவாக எழுந்து அமர்ந்துகொண்டேன்.

தலைமாட்டில் கிடந்த அவன் கேட்டான், ''அக்கா நீங்க இயக்கமோ?''

''தண்ணி கொஞ்சம் தாறிங்களா?'' என்றேன்.

''உந்த பொம்பிளயள் நித்திரையா போகட்டும். இப்ப கேட்டால் தராளவை'' என்றான்.

''ஒரு மூடி தண்ணி காணும். நாக்கை மட்டும் நனைக்கத்தான்'' என்றேன் என்னையும் அறியாத கெஞ்சலாய்.

''ம்... பிறகு எடுத்து தாறன். அதுசரி நீங்க இயக்கமோ?'' என்றான். ''ம்..'' என்றேன்.

''இயக்கம்விட்ட பெரிய பிழை என்னெண்டால் கட்டாயமாய் ஆக்களை பிடிச்சதுதான். கடைசில படுமோசமாய் நடந்து கொண்டார்கள்'' என்று அவன் பிரசங்கமே பண்ண தொடங்கிவிட்டான்.

லட்சக்கணக்கான மக்கள் பசியோடும் தாகத்தோடும் கிடக்கும்போது இவன் என்னடா என்றால் ஒரு சொல்லுக்குக்கூட அர்த்தம் கெட்ட பிரசங்கம் செய்கிறானே.

எனக்கு அந்த தடியன் மீது எரிச்சலாய் இருந்தது. போத்தில் போத்திலாய் தண்ணீரை வைத்துக்கொண்டு ஒரு மூடியில் தரக்கூடியளவு சொட்டுத் தண்ணீரைக்கூட தாகத்தோடு தவிப்பவனுக்கு ஈய விரும்பாத இவனெல்லாம் போராட்டத்திற்கு எப்படிப்பட்ட பங்களிப்பை செய்திருப்பான்.

மனிதநேயம் அற்றவன்தான் இவனென்று சில கணங்களிலேயே புரிந்துவிட முடிகிறது. தாய்நாட்டுக்காக தம்மை தேய்த்தவர்களிடம்போய் போராளிகளைப்பற்றி வசைபாடி கொண்டிருக்கிறானே. விமர்சிப்பது மட்டுமா?

''அப்ப உங்கட ஊர் எது?'' ''வீட்டுக்காரா போட்டினமோ?'' நீங்க எத்தினையாம் ஆண்டு காயப்பிட்டிங்க? எத்தினபேருக்கு இப்ப கைகால் இல்லாமல் போட்டுது. கை கால் எல்லாம் இல்லாட்டி கஸ்ரம்தான் என்ன?'' என்ற அவனுடைய தொடர்ச்சியான கேள்விகளாலும் விளக்கங்களாலும் என்னுள் எழுந்த கோபத்திற்கு அவனை அறைந்தால் என்ன என்றிருந்தது.

''எனக்கு ஏலாமல் கிடக்கண்ண. என்னட்ட கதை கேட்காதிங்கோ'' என்றேன் பொறுமையாக.

''என்னப்பா! அங்க யாரோட அலட்டிக்கொண்டு கிடக்கிறியள். ஆமிக்காரர் தண்ணிப் போத்தல் குடுக்கிறாங்களாம். போய் அஞ்சாறு வாங்கி வாங்களன்'' என்று கட்டளை இட்டது பெண் குரல்.

அது அவனுடைய மனைவியாகத்தான் இருக்கவேண்டும். அவளின் குரல் அவனுக்கு எரிச்சலை ஏற்படுத்தியிருக்கவேண்டும். ''சும்மா இரப்பா! இருக்கிறது நமக்கு காணும் தானே'' என்று குரலை தாழ்த்தி இரைந்தான் அவன்.

''நீங்கள் என்னப்பா. சும்மா தானே குடுக்கிறான். நாலைஞ்ச வாங்கியந்தால் நூறு நூற்றைம்பதுக்கு விக்கலாமெல்லே'' என்று அவள் நியாயம் சொன்னாள்.

''அப்ப நீ போய் வாங்கி வா. என்னைய கொஞ்சநேரம் கிடக்க விடு'' என்று அவன் உறுமினான். பின்பு புறுபுறுக்கத் தொடங்கினான்.

''இருக்கிற இடத்துக்கு எல்லாம் வருகிதுதானே. போய் அடிபட்டு விழுந்தடிச்சு வாங்கிறவனுக்குதானே அதில உள்ள கஸ்ரம் தெரியும்'' என்று அவனும்...

''இந்த மனுசனுக்கு ஒண்டும் தெரியாது. பிழைக்கத் தெரியாத மனுசன்'' என்றெல்லாம் ஏதேதோ சொல்லி அவளும்.. இரைந்தனர்.

எனக்கு சிரிப்பும் அழுகையும் சேர்ந்து வந்தன. என்ன மனிதர்களோ என்ன குணங்களோ என்று பெருமூச்சு விட்டுக் கொண்டேன். ஒரு போத்தில் தண்ணீர் ஐந்நூறு ரூபா என்றாலும் நான் வாங்கத் தயாராகத்தான் இருந்தேன். ஆனால் அவனிடம் பேச எனக்கு துளியும் விருப்பமில்லை. அவனிடம் வாய் திறப்பதில்லை என்ற முடிவோடு இருந்து விட்டேன்.

தாகம் என்னை பயங்கரமாய் இம்சித்தது. இப்படித்தானே அந்தப் பையன்களுக்கும் இருக்கும். அவர்கள் அண்மையில் காயமடைந்தவர்கள் என்பதால் என்னைவிட அதிகமாக துன்பப்படுவார்கள்.

இப்போது என்னிடம் ஒரு போத்தில் தண்ணீர் இருந்தால் அவர்களுக்கும் கொடுப்பேனே என்று வெறும் நினைவுகளோடு ஏங்கினேன்.

சற்று நேரத்தின் பின் தலைமாட்டில் கிடந்த குண்டன் கதை கேட்டான். நான் செவிடு போல இருந்து விட்டேன். எனக்குள் ஒரே எரிச்சலும் குமைச்சலுமாக இருந்தது. அவ்விடத்தில் இருக்கவே பிடிக்கவில்லை. எழுந்து குந்திக்கொண்டேன்.

''என்னக்கா நித்திரை வரேல்லயோ?'' என்று கதையை வளர்க்க எத்தனித்தவனுக்கு இடமளிக்காமல் எழுந்து நின்றேன். சுற்றயலை பார்த்தேன். மிக மங்கலாய்தான் வெளிச்சமிருந்தது.

மின் விளக்குகள் ஒளிர்ந்த இடங்கள் மட்டும் பளீரென தெரிந்தன. பலியிடப்பட்ட பிணங்களைப்போல மக்கள் தாறுமாறாக கிடந்தார்கள். இந்த வேளையில் தண்ணீர் தொட்டிக்குச் சென்றால் கூட்டம் குறைவாக இருக்கும். எப்படியாவது வயிறு நிறைய தண்ணீர் குடிக்க வேண்டும். குடித்தே தீர வேண்டும். பையை தூக்கி தோளில் மாட்டிக்கொண்டேன்.

''என்னக்கா போகப்போறிங்களோ?'' என்று அந்த குண்டன் மீண்டும் கேட்டான். நான் அருகிருந்த அந்த வயோதிப தம்பதியரிடம் சொன்னேன் ''அம்மா அப்பா போயிட்டு வாறன். நான் தண்ணி தேடப்போறன். எனக்கு ஆறுதலாய் இருந்ததுக்கு உங்களுக்கு நன்றி'' என்று சொல்லிவிட்டு மெதுவாக நடக்க முற்பட்டேன்.

கால்கள் பாரமாய் கனத்தன. என் கால்களே எனக்கு அத்தனை பாரமாய் இருக்கும் என்று எனக்கு அதுவரை தெரியாது. என்னால் சீராக நடக்க முடியவில்லை. இலேசாக தலை சுற்றியது.

குறுக்குமறுக்காக மக்கள் படுத்துக்கிடந்தார்கள். கால் வைத்து நடக்க இடமே போதவில்லை. நினைவு வந்தவளாய் திரும்பிப் பார்த்தேன். என் கால்மாட்டில் கிடந்த பையன்களையும் காணவில்லை. போய்விட்டார்கள் போலும்.

மிக கவனத்துடன் மற்றவர்களின் கால்களிலோ தலைகளிலோ இடறுப்பட்டு விடாமல் நடந்தேன். எங்கே செல்கிறேன் என்று எனக்கே புரியவில்லை. தண்ணீர் எங்கே கிடைக்குமென்றும் தெரியாது.

வரிசையாய் மின் குமிழ்கள் எரிந்த இடத்தை நோக்கி நடந்தேன். அருகே சென்றபோதுதான் அந்த மின்குமிழ் வரிசை கம்பி வேலி என்பதை அறிந்தேன். அடடா வேலியருகே வந்துவிட்டேனே. அப்புறத்தில் படையினர் அல்லவா நிற்பார்கள் என்ற உண்மை அப்போதுதான் உரைத்தது. விர்ரெனக் கிளம்பிய எச்சரிக்கை உணர்வு என் கால்களை வேகமாகத் திரும்ப வைத்தது.

[பயணம் தொடரும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்திய பொலிவூட் நடிகைகளான மதுரி டிக்ஸிட் மற்றும் மல்லிகா ஷராவத் ஆகியோருடன் இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான சனத் ஜெயசூரிய நடனமாடுகிறார். (5)

## மழை விளையாடும் ஆட்டம்



இங்கிலாந்துக்குக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கும், இங்கிலாந்து அணிக்குமிடையிலான 3 ஆவது டெஸ்ட் ஆட்டத்தின் இரண்டாம் நாள் ஆட்டமும் கைவிடப்பட்டுள்ளது. தொடர்ச்சியான மழை மற்றும் ஈரமான மைதான நிலைகள் காரணமாகவே 2 ஆம் நாள் ஆட்டமும் கைவிடப்பட்டது.

பேர்மிங்காம், எட்ஜ்பஸ்டன் மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பிக்கவிருந்த இந்த ஆட்டம் தொடர்ந்தும் மழையால் பாதிக்கப்பட்டு வருகிறது. முதல்நாள் ஆட்டமும் மழை காரணமாக முழுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தது.


இந்த நிலையில் இரண்டாவது நாளுக்கான ஆட்டம் இடம்பெறுவதற்கு வாய்ப்புக்கள் குறைவாகவே காணப்படும் என்று முன்னரே எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், குறைவான பந்து பரிமாற்றங்களையாவது வீசலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது. எனினும் தொடர்ந்து மழை பெய்திருந்ததோடு, அதற்கு முன்னைய நாள்களில் பெய்த மழை காரணமாகப் பாதிக்கப்பட்டிருந்த மைதானத்தில் ஆட்டத்தை ஆரம்பிப்பது சாத்தியமற்றுக் காணப்பட்டது.

கடந்த வியாழக்கிழமை இங்கிலாந்து நேரப்படி மாலை 3.30 இற்கு முதல் நாள் ஆட்டம் கைவிடப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் பிற்பகல் 1.50 இற்கே இரண்டாம் நாள் ஆட்டம் கைவிடப்பட்டிருந்தது.

இன்னமும் 3 நாள்கள் மாத்திரமே போட்டியில் எஞ்சியுள்ள நிலையில் இந்த ஆட்டத்தில் முடிவு பெறப்படுவதற்கான வாய்ப்புக்கள் குறைவாகக் காணப்படுவதுடன், எஞ்சிய நாள்களில் தொடர்ந்தும் மழைக் குறுக்கீடுகள் காணப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (5)

## அரையிறுதியில் சாய்னா






சாய்னா நேவல்

தாய்லாந்து திறந்த பட்மின்ரன் தொடரின் அரையிறுதிக்கு இந்தியாவின் சாய்னா நேவல் முன்னேறினார்.


தாய்லாந்தில் நடைபெற்றுவரும் இந்தத் தொடரின் பெண்கள் ஒற்றையர் பிரிவின் காலிறுதியில் சாய்னா, தாய்லாந்தின் சப்ஸ்ரீயை சந்தித்தார். இதன் முதல் செற்றை சாய்னா 21-10 என்று எளிதாக வென்றார். இரண்டாம் செற்றிலும் தனது அதிரடியைத் தொடர்ந்த சாய்னா 22-20 என்று கைப்பற்றினார். முடிவில், சாய்னா 21-10, 22-20 என்ற நேர் செற் கணக்கில் வென்று, அரையிறுதிக்கு முன்னேறினார்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவின் காலிறுதியில் இந்தியாவின் சவுரப், இந்தோனேசியாவின் சோனி திவியிடம் 22-20, 19-21, 15-21 என்ற செற் கணக்கில் தோல்வியடைந்தார்.

இந்தியாவின் பிரனீத் சீனாவின் சென்னிடம் 15-21, 17-21 என்ற நேர் செற் கணக்கில் வீழ்ந்தார். மற்றொரு போட்டியில் இந்தியாவின் சமீர், சீனாவின் ஹியுனிடம் 16-21, 13-21 என்ற செற் கணக்கில் தோல்வியுற்றார். (5)







## பரபரப்பான ஆட்டம் சமனிலையில் முடிந்தது

யூரோ கிண்ணத் தொடரில், போலந்து-கிரீஸ் மோதிய பரபரப்பான முதல் லீக் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. இரு அணிகளும் தலா ஒரு சிவப்பு அட்டைகள் நடுவரால் காட்டப்பட்டது, அரிய பனால்டி வாய்ப்பை தவறவிட்டது என்று ஆட்டம் முழுவதும் 'ரென்ஷன்' எகிறியது.


ஐரோப்பிய அணிகள் பங்கேற்கும் 14 ஆவது யூரோ கிண்ண கால்பந்து தொடர் நேற்றுமுன்தினம் தொடங்கியது. வார்சாவில் நடந்த முதல் லீக் ஆட்டத்தில், 'ஏ' பிரிவில் இடம்பெற்றுள்ள போலந்து, கிரீஸ் அணிகள் மோதின. சொந்த மண்ணில் உள்ளூர் ரசிகர்களின் உற்சாகத்துடன் போலந்து வீரர்கள் துடிப்பாக ஆடினர். ஆட்டத்தின் 17 ஆவது நிமிடத்தில் லெவண்டாவ்ஸ்கி தலையால் முட்டி ஒரு 'சூப்பர்' கோல் அடிக்க, போலந்து 1-0 என்று முன்னிலை பெற்றது.

இதற்கு பதிலடி கொடுக்க முற்பட்ட கிரீஸ் அணியினர் முரட்டு ஆட்டத்தில் ஈடுபட்டனர். 35 ஆவது நிமிடத்தில் சாக்ரடீஸுக்கு, பாப்பஸ்டத் தோபவுலோஸ், மஞ்சள் அட்டை காட்டப்பட்டது. மீண்டும் 44 ஆவது நிமிடத்தில் போலந்து வீரர் முராவ்ஸ்கியுடன் மோதினார். இந்த முறை லேசான மோதல் தான். ஆனால் அவசரப்பட்ட ஸ்பெயின் நடுவர் கார்லோஸ் கார்பெல்லோ, சாக்ரடீசுக்கு மீண்டும் மஞ்சள் அட்டை காட்டினார். இரண்டாவது முறையாக மஞ்சள் அட்டை என்பதால்,சிவப்பு அட்டை காட்டப்பட்டு சாக்ரடீஸ் வெளியேற்றப்பட்டார். இதையடுத்து கிரீஸ் அணி 10 வீரர்களுடன் விளையாட வேண்டிய பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டது. முதல் பாதி முடிவில் போலந்து 1-0 என்ற முன்னிலையில் இருந்தது.

இரண்டாவது பாதியில் கிரீஸ் வீரர்கள் எழுச்சி கண்டனர். ஆட்டத்தின் 51 ஆவது நிமிடத்தில் டிமிட்ரிஸ் சால்பின் கிடிஸ் ஒரு கோல் அடிக்க, போட்டி 1-1 என்று சமநிலையை எட்டியது. ஆட்டத்தின் 68 ஆவது நிமிடத்தில் போலந்து கோல் காப்பாளர் வோஜ்சியச் செஸ்னி, சிவப்பு அட்டை காட்டப்பட்டு வெளியேறினார். இதற்காக அளிக்கப்பட்ட பனால்டி வாய்ப்பை கிரீஸ் தவற விட்டு ஏமாற்றியது. இரு அணிகளும் தலா 10 வீரர்களுடன் விளையாடியதால், தடுப்பு ஆட்டத்தில் கூடுதல் கவனம் செலுத்தின. இறுதியில் ஆட்டம் 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது. இரு அணிகளும் தலா ஒரு புள்ளி பெற்றனர்.

கிரீஸ் அணிக்கு தலைவர் கியார்கஸ் கராகுனிஸ் வில்லனாக மாறினார். ஆட்டத்தின் 68 ஆவது நிமிடத்தில் கிரீஸ் வீரர் சால்பின்கிடிஸ் கோல் அடிக்க மின்னல் வேகத்தில் பறந்து வந்தார். இவரை முரட்டுத்தனமாக மடக்கிய போலந்து கோல் காப்பாளர் வோஜ்சியச் செஸ்னியை, நடுவர் சிவப்பு அட்டை காட்டி வெளியேற்றினார், தவிர, பெனால்டி வாய்ப்பும் அளித்தார். ஆனால், கீரிஸ் தலைவர் கராகுனிஸ் மிகவும் மந்தமாக வலது திசையில் பந்தை அடித்தார். இதனைச் சரியாகச் கணித்த போலந்தின் மாற்று கோல் காப்பாளர் டைடன் துடிப்பாக தடுக்க, கிரீசுக்கு கிடைத்த பொன்னான வெற்றி வாய்ப்பு பறிபோனது. (5)

## இறுதியில் நடால்



ரபெல் நடால்

பிரெஞ்ச் திறந்த ரென்னிஸ் ஒற்றையர் பிரிவு இறுதிக்கு, ஸ்பெயின் வீரர் ரபெல் நடால் முன்னேறினார். நேற்று முன்தினம் நடந்த அரையிறுதியில் சகவீரர் டேவிட் பெரரை வீழ்த்தினார்.

பிரான்ஸ் தலைநகர் பரிசில், பிரெஞ்ச் திறந்த கிராண்ட்ஸ்லாம் ரென்னிஸ் தொடர் நடக்கிறது. நேற்று முன்தினம் நடந்த அரையிறுதியில், நடப்பு சம்பியன் ஸ்பெயினின் ரபெல் நடால், சகநாட்டைச் சேர்ந்த டேவிட் பெரரை சந்தித்தார். இதில் அபாரமாக ஆடிய நடால் 6-2, 6-2, 6-1 என்ற நேர் செட் கணக்கில் மிகச் சுலபமாக வெற்றி பெற்று, ஏழாவது முறையாக இறுதிக்கு முன்னேறினார். முன்னதாக ஆறு முறை (2005-08, 2010-11) இறுதிக்கு முன்னேறிய இவர், அனைத்திலும் சம்பியன் பட்டம் வென்று அசத்தினார். (5)



## அடுத்த ஆண்டு ஆடலாம்

ஆஸ்திரேலியா தலைநகர் கான்பெராவில் உள்ள கிரிக்கெட் மைதானத்தில் அடுத்த ஆண்டு முதல் சர்வதேச கிரிக்கெட் ஆட்டங்கள் நடத்தப்படும் என்று ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

ஆஸ்திரேலியாவில் ஆண்டு தோறும் முத்தரப்பு ஒருநாள் தொடர் நடைபெற்று வருகின்றது. இந்த ஆண்டு நடைபெற்ற முத்தரப்பு ஒரு நாள் தொடரில் இந்தியா, ஆஸ்திரேலியா, இலங்கை ஆகிய நாடுகள் பங்கேற்றன. இது போன்ற சர்வதேச ஆட்டங்கள் நடத்த ஆஸ்திரேலியாவில் ஓவல், மெல்போர்ன், சிட்னி, பிரிஸ்பேன், ஹோபர்ட் ஆகிய பகுதிகளில் கிரிக்கெட் மைதானங்கள் உள்ளன. ஆனால், ஆஸ்திரேலியாவின் தலைநகர் கான்பெராவில் உள்ள மைதானத்தில் உள்ளூர் கிரிக்கெட் ஆட்டங்கள் மட்டுமே நடைபெற்று வந்தன. இந்த நிலையில் அடுத்த ஆண்டு நடைபெற உள்ள முத்தரப்பு ஒரு நாள் தொடரின் [illegible] கிரிக்கெட் சபை [illegible] இதற்கான அறிவிப்பை ஆஸ்திரேலியா கிரிக்கெட் சபை மற்றும் வெளியிட்டுள்ளது. இதன் மூலம் கான்பெராவில் முதல் முறையாக சர்வதேச ஆட்டங்கள் நடைபெற உள்ளன. (5)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரிய இலக்கு நோக்கி நகரும் சின்னக் கால்கள்



தேசிய அணி வீரன் அன்ரனிராஜுடன் நேர்காணல்


■ தகனன்



மைதானப் பயிற்சிகளில்....







தேசிய அணி வீரர்களுடன் அன்ரனிராஜ்

30 வருடங்களுக்குப் பின்னர் யாழ். மண்ணின் சார்பில் ஞானேஸ்வரன் அன்ரனிராஜ் தேசிய மட்டப் பாடசாலை உதைபந்தாட்ட அணியில் இடம்பிடித்துப் பெருமை சேர்த்துள்ளார். மே 19 தொடக்கம் ஆசிய உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் நேபாளத்தில் நடத்தப்பட்ட தெற்காசிய நாடுகளின் 14 வயதிற்குட்பட்ட அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பங்குகொண்ட அன்ரனி ராஜ் தற்போது மீண்டும் நாடு திரும்பியுள்ளார்.

நெடுந்தீவு, செபநாயகபுரத்தைப் பூர்விகமாகக் கொண்ட அன்ரனிராஜ் தற்போது பிரான்சிஸ்கன் சபை அருட்சகோதரர்களால் பராமரிக்கப்பட்டு வருகின்ற புனித வளனார் விடுதியில் தங்கியிருந்து கல்வி பயின்று வருகின்றார். அன்ரனிராஜ் தன்னைப் பற்றியும் தனது அனுபவங்கள் பற்றியும் 'உதயனுடன்'' பகிர்ந்துகொண்டார்.

''நெடுந்தீவை பூர்விகமாகக் கொண்ட எனது பெற்றோர் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக இந்தியாவுக்கு இடம்பெயர்ந்து சென்றபோது அங்கேயே நான் பிறந்தேன். எனினும் சிறு வயதிலேயே பெற்றோர் நோயின் காரணமாக இறந்துவிட பின்னர் அம்மம்மாவின் பராமரிப்பில் வளர்ந்தேன்.

அதன் பின்னர் மீண்டும் நெடுந்தீவுக்கு வந்து ஆரம்பக்கல்வியை நெடுந்தீவு மாவலித்துறை றோ.க.த.க. பாடசாலையிலும், தொடர்ந்து ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியிலும் கற்று தற்போது 2 வருடங்களுக்கும் மேலாக இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் கல்வி பயின்று வருகின்றேன். சூரியபிரகாஸ், பிரதீபன் என்ற எனது இரு சகோதரர்களும் இதே கல்லூரியிலேயே கல்வி கற்று வருகின்றார்கள்.

புனித ஹென்றியரசர் கல்லூரியின் 18 வயதிற்குட்பட்ட உதைபந்தாட்ட அணி, மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்று தேசிய மட்டப்போட்டிகளில் கலந்து கொண்டது. அதிலே என்னையும், எனது நண்பனான சுகந்தனையும் தேசிய உதைபந்தாட்ட சம்மேளனத்தினர் பயிற்சி முகாமிற்கு வரும்படி அழைப்புக் கிடைத்தது. அதில் நாடு முழுவதிலிருந்தும் 30 மாணவர்கள் அழைக்கப்பட்டு அதிலிருந்தே இறுதி 22 பேர் அடங்கிய தேசிய அணி தேர்வு செய்யப்பட்டிருந்தது. அந்த இறுதி அணியில் நானும் தேர்வு செய்யப்பட்டிருந்தேன்.'' - என்று தேசிய அணியில் இடம்பிடித்துக் கொண்ட நிகழ்வை மீட்டுகிறார்.

நேபாளம் சென்ற அனுபவம் பற்றி இவர் மகிழ்வுடன் பகிர்ந்து கொண்டார். ''எனது வாழ்விலே அது ஒரு மறக்க முடியாத அனுபவமாக என்றும் நிலைத்திருக்கும். பல நாட்டு வீரர்களுடனும் பழகும் சந்தர்ப்பம் கிடைத்தது. அங்கு எமது அணி 6 போட்டிகளில் விளையாடியது. அதிலே நேபாளத்துடனான போட்டியில் வலது பக்க பின்கள வீரராகவும், பூட்டான், பங்களாதேஷ், இந்தியா ஆகிய நாடுகளுடனான போட்டியில் முன்கள வீரராகவும் களமிறங்கினேன்''- என்றார்.

இவர் இடம் பெற்றிருந்த இலங்கையின் 14 வயதுக்குட்பட்டோருக்கான அணி பூட்டானுடன் நடைபெற்ற போட்டியில் வெற்றி பெற்றது.

உள்ளூரில் வழங்கப்படும் பயிற்சிகளுக்கும் தேசிய ரீதியிலான பயிற்சிகளுக்கும் உள்ள வேறுபாடு பற்றி அன்ரனிராஸ் கூறுகையில்,

''உள்ளூரிலே வழங்கப்படுகின்ற பயிற்சிகள் வெற்றி பெற வேண்டும் என்ற நோக்கமே பிரதானம். எனவே ஆட்டம் பற்றிய பயிற்சிகளே அதிகம் வழங்கப்படுகின்றன. உடல் வலிமையை அதிகரிக்கச் செய்யும் பயிற்சிகள் ஒப்பீட்டளவில் குறைவாகவே காணப்படுகின்றன. ஆனால் தேசிய மட்டப் பயிற்சிகளில் எமது உடல் வலிமையை அதிகரிப்பது தொடர்பாகவே அதிக பயிற்சிகள் தருகின்றார்கள். அதைவிட பந்துக்கட்டுப்பாட்டுப் பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன. 30 பேர் கொண்ட குழாமில் இடம் பெற்ற எனது நண்பன் சுகந்தன் போதிய உடல் வலிமை இல்லாத காரணத்தினாலேயே இறுதி அணிக்குள் இடம்பெற முடியவில்லை''-என்றார்.

பொதுவாகவே சாதிக்கத் துடிக்கும் எம் இளைஞர்களுக்கு தரமான மைதானங்கள் அமையாமை பெரும் குறைபாடாகவே எப்போதும் இருந்து வருகின்றது. இது பற்றி இவர் கூறுகையில் ''யாழ்ப்பாணத்திலும் சரி, களுத்துறையில் எமக்கு பயிற்சி வழங்கப்பட்ட போதும் சரி பல வீரர்கள் உபாதைக்குள்ளானார்கள். ஆனால் நேபாள மைதானங்கள் மிகவும் தரமானதாகக் காணப்பட்டன. எமது நாட்டிலுள்ள மைதானங்களின் குறைபாடுகளை ஏனைய நாட்டு மைதானங்களைப் பார்க்கின்றபோது தான் தெரிய வருகிறது. இத்தகைய வசதி கொண்ட மைதானத்தை இலங்கையிலும் அமைத்தால் இன்னும் நிறைய திறமை யான வீரர்களை உருவாக்கமுடியும்''- என்கிறார்.

உதைபந்தாட்டத்தில் இவருக்கு ஆர்வம் ஏற்பட புனித ஹென்றியரசர் கல்லூரியின் பழைய மாணவர்களான சதீஸ், ஞானரூபன், டனிஸ்ரன் விஜயகுமார், மைக்கல் கொலின் ஆகியோருடன் கல்லூரியின் ஏனைய பயிற்றுவிப்பாளர்களும் இவருக்கு தூண்டுதலாக இருந்திருக்கிறார்கள். எனினும் கல்லூரிக்கென நிரந்தர பயிற்றுவிப்பாளர் இல்லாதது ஒரு குறைபாடாகவே இன்னமும் இருக்கின்றது என்று இவர் ஆதங்கப்படுகிறார்.

இவருக்கு பக்க பலமாக இருந்துவரும் கல்லூரி பற்றியும் விடுதி பற்றியும் இவர் நன்றியுடன் நினைவுகூருகிறார். ''நான் ஊர்காவற்றுறை சென்.அன்ரனிஸ்ஸில் சேர்ந்தது தொடக்கம் அருட்தந்தை ஜே.ஏ. ஜேசுதாஸ் எனக்கு பக்க பலமாக இருந்து வருகின்றார். என்னைப்போன்ற பல மாணவர்களை தனது சொந்தப் பிள்ளைகள் போலவே கவனித்து வருகின்றார். எமக்குப் பாடசாலை நேரத்தில் பயிற்சி நடைபெறுவதில்லை. இதனால் கற்றல் செயற்பாடுகளுக்குப் பாதிப்பு ஏற்படுவ தில்லை. விடுதிச்சாலை பொறுப்பாளர் அருட் சகோதரர் மில்றோய், மற்றும் ஆசிரியர்களும், எனது நண்பர்களும் எனக்கு மிகவும் உறுதுணையாக இருக்கின்றனர்'' என்றார்.

''விளையாட்டினால் கல்வி பாதிக்கப்படும் என்ற கருத்து பொய்யானது. விளையாட்டினால் உடல் சுறுசுறுப்படையும், மகிழ்ச்சி ஏற்படும். எனவே தனியே படிப்புடன் மட்டும் நின்றுவிடாமல் விளையாட்டிலும் ஆர்வம் செலுத்த வேண்டும்'' என்று கூறும் அன்ரனிராஜ் வளர்ந்த பின்னரும் தேசிய அணிக்காக ஆட வேண்டும் என்பதில் அதிக ஆர்வம் கொண்டிருக்கின்றார். அவரது கனவு நனவாகட்டும். *

# சாதிக்கத் தவறும் சங்ககார!

■ டிலிப்



இலங்கையின் நட்சத்திர துடுப்பாட்ட வீரரும் முன்னாள் அணித்தலைவருமான சங்ககார அண்மைக்காலமாக துடுப்பாட்டத்தில் தொடர்ச்சியாக சொதப்பி வருகின்றார். இலங்கை அணியின் நம்பிக்கை நட்சத்திரமான சங்காவின் தனிப்பட்ட துடுப்பாட்ட சரிவுகள் இலங்கை அணியை பெருமளவில் பாதிக்கின்றது. இலங்கையின் தொடர் தோல்விகளுக்கு சங்காவின் சரிவும் முக்கியமாகக் காணப்படுகின்றது.

இலங்கை அணி 1999 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தோல்விக்குப் பின்னர், துடுப்பாட்ட வீரருக்கான தேடலில் சிக்கியவரே குமார் சங்ககார.

2007 ஆம் ஆண்டு உலகக் கிண்ண இறுதியாட்டத்தில் தோல்வியடைந்த பின்னர், அணித்தலைவர் மஹேல ஜெயவர்தனவின் தலைமை மீது கேள்வியெழுந்தது. இந்தச் சந்தர்ப்பத்தில்தான் இலங்கையின் நட்சத்திர துடுப்பாட்ட வீரராக, மிகச் சிறந்த இலக்குக் காப்பாளராக ஜொலித்துக் கொண்டிருந்த சங்காவுக்கு மேலுமொரு பொறுப்பாக அணித்தலைமை பதவியும் வழங்கப்பட்டது.

சங்கா அணித்தலைமைப் பொறுப்பை ஏற்ற பின்னர் இலங்கை அணி முன்னேற்றப் பாதையில் தொடர்ச்சியாக சென்று கொண்டிருந்தது. அதே போன்று சங்காவும் தனது தனிப்பட்ட துடுப்பாட்ட தரவரிசையில் முன்னேற்றத்தை அடைந்து கொண்டிருந்தார்.

இதன் தொடர்ச்சியாக டெஸ்ட் தரவரிசையில் இலங்கை அணி வீரரான சங்ககார முதலிடம் பிடித்தார். 2011 ஆம் ஆண்டு உலகக் கிண்ண இறுதி ஆட்டம் வரையில் இலங்கை அணி முன்னேறுவதற்கு சங்காவின் தனிப்பட்ட துடுப்பாட்டமும் மிகச் சிறந்த அணித்தலைமையுமே காரணமாகியது. அதன் பின்னர் அணித்தலைமைப் பொறுப்பிலிருந்து சில அரசியல் காரணங்களினால் சங்ககார விலகிக் கொண்டார்.

சங்ககார இறுதியாக ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற முக்கோணத் தொடரிலேயே சதம் ஒன்றை விளாசியிருந்தார். அதன் பின்னர் அவரது துடுப்பாட்டம் தளரத் தொடங்கியது. ஆசியக் கிண்ணத் தொடரில் பாகிஸ்தான் அணிக்கெதிராக [illegible] சங்காவின் [illegible] சிறந்த ஓட்ட எண்ணிக்கையாக இருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டெஸ்ட் ஆட்டங்களில் தனக்கென தனி முத்திரை பதித்த சங்கா ஆசியக் கிண்ணத் தொடரின் பின்னர், இலங்கையில் நடைபெற்ற இங்கிலாந்துடனான டெஸ்ட் தொடரில் சாதிக்கவில்லை. 4 இன்னிங்ஸிலும் மொத்தமாக 35 ஓட்டங்களையே பெற்றார். இரண்டு இன்னிங்ஸில் ஓட்டமெதனையும் பெறாமல் ஆட்டமிழந்திருந்தார். இந்தப் பின்னடைவுகள் அவரை டெஸ்ட் தரவரிசையிலிருந்து முதலிடத்தைப் பறித்துக் கொண்டது.

இந்தத் தோல்விகள் சரிவுகளின் பின்னர் பாகிஸ்தான் அணியுடன் இலங்கை மண்ணில் இடம்பெற்ற 2 'ரி-20' ஆட்டங்களிலும் சங்கா பெரிதாக சாதிக்கவில்லை. தொடர்ச்சியாக சங்ககார இவ்வாறு பின்னடைவுகளைச் சந்திப்பது இலங்கை அணியின் வெற்றியை பெரியளவில் பாதிக்கின்றது.

சங்கா என்ற தனிமனிதனை நம்பி இலங்கை அணி இல்லாவிட்டாலும், சங்காவின் சரிவுகள் ஏனைய வீரர்கள் சாதிக்காததால் பெரிதாக தோற்றுகின்றது. 34 வயதான சங்கார அடுத்த உலகக் கிண்ணம் வரையில் விளையாடுவதற்கு வாய்ப்பு உண்டு. ஆனால் இவ்வாறு தொடர்ச்சியாக ஏமாற்றினால் இலங்கை அணி தொடர் தோல்விகளை சந்திக்கும் என்பதோடு அடுத்த தலைமுறை வீரர்களுக்கு முன்மாதிரியான வீரர்களும் இல்லாமல் போய்விடும்.

ஒரு காலத்தில் ஜெயசூர்யா இல்லாத இலங்கை அணியை நினைத்துப் பார்க்க முடியாமல் இருந்ததோ அதே போன்று இப்போது சங்கா இல்லாத இலங்கை அணியை நினைத்துப் பார்க்க முடியாது. அந்தளவு தூரம் ரசிகர்களின் மனதில் இடம்பிடித்த இந்தத் திறமையான வீரர் மீண்டும் இலங்கையின் மீட்பராக மாறுவாரா ? ✦

# பற்றியெரியும் சுற்றுச் சூழல்



**இலங்கை அரசு காற்று மாசடைவதைத் தவிர்க்க வீட்டுக்கு ஒரு மரமாவது நடும்படி கேட்கிறது. வடக்கில் மரங்கள் இல்லாத வீடுகள் இல்லை என்பதை அவர்கள் அறியவில்லை போலும். ஆனால் இலங்கை அரசின் இன ஒடுக்கு முறைக் கொள்கை ஒவ்வொரு நாளும் மரங்களை அழித்துக் கொண்டிருக்கும்போது மரம் நடுகைக் கோரிக்கையில் என்ன அர்த்தம் இருக்க முடியும்?**

கடந்த வாரம் பெரும்பான்மையான ஊடகங்களில் முக்கிய இடத்தைப் பிடித்த விடயம் சுற்றுச் சூழல் பாதுகாப்பு. சூழல் பாதுகாப்புத் தொடர்பான ஆலோசனைகள், அறிவுறுத்தல்கள், கண்டனங்கள் என வெவ்வேறு முனைகளில் பரப்புரைகள் மேற்கொள்ளப்பட்டன. சூழல் பாதுகாப்பு பேணப்படாவிட்டால் ஏற்படும் ஆபத்துக்கள் பற்றியும் விளக்கப்பட்டன. சுற்றாடலைச் சுத்தமாக வைத்திருப்பது, கழிவுப் பொருள்களை அகற்றுவது, மரங்களை நடுவது போன்ற விடயங்களில் பொதுமக்களுக்கு தாராளமான அறிவுரைகள் வழங்கப்பட்டன.

பெரும்பான்மையான ஊடகங்களின் பரப்புரையை நாம் உற்றுநோக்குவோமானால் சூழல் மாசடைவதற்குச் சாதாரண மக்களின் அறியாமை, பொறுப்பின்மை போன்ற விடயங்களே காரணம் எனவும் அவை சீர் செய்யப்பட்டுவிட்டால் எல்லாமே சரியாகிவிடும் என்பது போன்ற ஒரு தோற்றப்பாடே வெளிப்படும். ஆனால் யதார்த்தத்தில் சுற்றுச் சூழல் மாசடைவதில் பொதுமக்களின் பங்கு மிகமிகச் சிறிய அளவினதேயாகும். அவர்களின் அவ்வாறான தவறுகளுக்கு அடிப்படையாக இருப்பவை அவர்களின் சக்திக்கு அப்பாற்பட்ட மேலாதிக்கங்களே.

ஒவ்வொரு வருடமும் ஜூன் 5 ஆம் நாள் சுற்றாடல் பாதுகாப்பு நாள் அனுஷ்டிக்கப்படும்போது வருடாந்தம் சூழல் மாசுபடுவது வேகமாக அதிகரித்தே வருகிறது. நிலம், நீர், காற்று என்பன வேகமாக அசுத்தமடைவதன் மூலம் மனித வாழ்வே கேள்விக்குறியாகி விட்டது. வெள்ளம், வரட்சி, பூகம்பம், சூறாவளி போன்ற வெவ்வேறு இயற்கை அனர்த்தங்களும் புதிய புதிய நோய்களும் மனித குலத்தின் உயிர் வாழ்வையே கேள்விக்குறியாக்கிவிட்டன.

அடிப்படையில் இந்தச் சூழல் மாசுக்கு யார் காரணம் என ஓர் ஆய்வுக் கண்ணோட்டத்தில் நோக்குவோமாயின் அந்தந்த நாட்டின் ஆட்சியாளர்களே மூல காரணமாயிருக்கின்றனர். துரித அபிவிருத்தி என்ற பேரில் இயற்கையைச் சிதைத்து அதன் சமநிலையை அழித்துவிடுகின்றனர்.

ஒவ்வொரு ஆட்சியாளரும் நீண்ட கால அடிப்படையிலான திட்டங்கள் எதுவுமின்றி தமது ஆரம்ப காலத்திலேயே இயற்கையிடம் எவ்வளவு கறக்க முடியுமோ அவ்வளவு கறந்து அந்த நேரத் தேவையை நிறைவேற்றிக் கொள்கின்றனர். ஆனால் அதன் தாக்கம் எதிர்காலத்தில் ஏற்படுத்தக் கூடிய பேரழிவுகளையிட்டு அவர்கள் கவலைப்படுவதில்லை.

இதற்கு ஒரு நல்ல உதாரணமாக இன்று இலங்கையில் தொடர்ந்து ஏற்படும் மண்சரிவு, வெள்ளப் பெருக்கு, வரட்சி என்பனவற்றுக்கு காரணமாய் அமைந்த ஒரு பெரும் நடவடிக்கையைக் குறிப்பிடலாம். இது இடம்பெற்று சில நூறு ஆண்டுகள் கடந்த பின்பே அதன் தாக்கம் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தி வருகிறது.

பிரிட்டன் இலங்கையைக் கைப்பற்றிய பின் மலையகத்திலுள்ள பெருங்காடுகள் அழிக்கப்பட்டு அங்கு தேயிலை, இறப்பர் தோட்டங்கள் உருவாக்கப்பட்டன. அதன் மூலம் பிரிட்டிஷ் நிறுவனங்கள் கோடி கோடியாகச் சம்பாதித்தன. ஆனால் அவர்கள் கொள்ளை லாபம் பெறுவதற்காக வித்திட்ட அந்த ஆபத்து இன்று பேரழிவுகளை ஏற்படுத்தி வருகிறது. மலைகளில் ஓங்கி வளர்ந்த காடுகள் இருக்கும் காலத்தில் பருவம் தவறாது மழை பெய்தது. நாடுகளில் பெய்யும் மழையில் பெரும் பகுதி நிலத்தில் ஊறி நிலக்கீழ் நீரோட்டமாக மாறுகிறது. அவை சிறு சிறு நீரூற்றுக்களாகிப் பின் ஒன்று சேர்ந்து எரித்த கோடையிலும் வற்றாத ஆறுகளாக ஓடின. அதுமட்டுமன்றி அந்த நிலக்கீழ் நீரோட்டங்கள் நெடுந்தூரம் பரவி சமவெளிப் பகுதிகளிலுள்ள கிணறுகள் குளங்களையும் நீர்வளம் பொருந்தியவையாக பாதுகாத்தன. எங்கும் எப்போதும் வரட்சி என்ற பேச்சுக்கே இடமின்றியிருந்தது.

காடுகள் அழிக்கப்பட்டு தேயிலை, இறப்பர் நடப்பட்ட பின்பு பெய்யும் மழை நீரைத் தடுத்து நிலத்தில் ஊறவிட அங்கு மரங்களோ, செடிகளோ, புற்களோ இருக்கவில்லை. மழை நீர் வேகமாக ஓடி வந்து ஆறுகளில் சேர்ந்தன. அப்படி நேரடியாக ஓடிவரும்போது மலைகளின் மண்ணையும் அரித்து ஓடியது. அந்த மண் ஆறுகளிலும் முகத்துவாரங்களிலும் சேர ஆறுகளில் ஆழம் குறைந்தது. எனவே மலைகளில் பெய்யும் நீரை ஆறுகள் கொள்ள முடியாத நிலையில் வெள்ளப் பெருக்குகள் ஏற்பட்டு ஊர்களை அழிக்கின்றன. அதே வேளையில் நிலத்தில் போதிய அளவு நீர் ஊறாத காரணத்தால் நீரூற்றுக்கள் வற்றிப் போக கோடையில் ஆறுகள் வரண்டு போகின்றன. சமவெளிப் பகுதி கிணறுகள், குளங்கள் கூட வற்றும் நிலை ஏற்படுகிறது.

மழைகாலத்தில் வெள்ளப் பெருக்கும் கோடையில் வரட்சியும் தடுக்க முடியாதவையாகி விடுகின்றன.

இது மட்டுமன்றி வெட்டப்பட்ட காட்டு மரங்களின் வேர்கள் காலப்போக்கில் உக்கிப்போக அந்த இடைவெளிகளுக்குள் மழைநீர் புகுந்து மண்ணின் கடினத்தன்மையை இல்லாமல் செய்கிறது. எனவே அந்தப் பகுதியில் தொடர்ச்சியாக மழை பெய்யும்போது மண்சரிவுகள் ஏற்படுகின்றன.

மலைக்காடுகளை அழித்தமை மழை குறைவு, வரட்சி, வெள்ளம், மண்சரிவு போன்ற இடர்களுக்கு முக்கிய காரணமாய் அமைகிறது.

அன்றைய ஆங்கில அரசுக்கோ, பிரித்தானிய நிறுவனங்களுக்கோ எமது நாட்டைப் பற்றியோ நாட்டு மக்களைப் பற்றியோ கவலை இருக்கவில்லை. லாபம் ஒன்று மட்டுமே அவர்களின் நோக்காக இருந்தது.

ஆனால் இன்றைய ஆட்சியாளர்கள் தேசம், தேசப்பற்று என்பன பற்றியெல்லாம் உரத்த குரலில் பேசிக் கொண்டே ஆங்கிலேயரை விடப் படுமோசமான முறையில் இயற்கைக்கு எதிரான தீங்குகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அண்மையில் வெளியிடப்பட்ட ஓர் ஆய்வறிக்கையில் இலங்கையில் உள்ள 25 மாவட்டங்களில் 15 மாவட்டங்களில் உள்ள நீர் குடிப்பதற்குப் பொருத்தமற்றது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதற்குத் தெரிவிக்கப்பட்ட காரணம் அதீதமாகப் பாவிக்கப்படும் இரசாயன உரங்கள், கிருமிநாசினிகள் என்பதாகும்.

ஏ-9 வீதி படையினரால் தடை செய்யப்படுவதற்கு முன்பு ஒவ்வொரு நாளும் எரு, காவிழாய் போன்ற குழை வகைகள், வைக்கோல் என்பனவற்றை ஏற்றிக் கொண்டு வவுனியா, மன்னார், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலிருந்து நூற்றுக் கணக்கான லொறிகள் யாழ்ப்பாணம் செல்வதைக் காணலாம்.

ஆனால் போர் முடிவுக்கு வந்து ஏ-9 வீதி திறக்கப்பட்ட பின்பு ஓர் எரு லொறியையோ ஒரு குழை லொறியையோ வீதியில் காணமுடியவில்லை. ஆனால் பெரும் பன்னிரு சக்கரவாகனங்களில் இரசாயனப் பசளைகள் யாழ்ப்பாணம் நோக்கிக் கொண்டு செல்லப்படுகின்றன. அரசு மானியம் வழங்கி இரசாயனப் பசளைப் பாவனையை ஊக்குவிக்கிறது.

இதன் காரணமாக நிலம் மாசடைகிறது, நீர் மாசடைகிறது, விளைபொருள்களில் நச்சுச் செறிவு காரணமாக மனிதர்கள் நோய்வாய்ப்படுகின்றனர். இயற்கைப் பசளைகளைப் பாவிக்கும் போது நிலம் மேலும் மேலும் பண்படுகிறது. இரசாயனப் பசளைப் பாவனையின்போது நிலம் பாழாகி மலடு பற்றிப் போகிறது.

இப்படி நீர் மாசடைவதற்கு மாற்றீடாக அரசு கண்டுபிடித்த வழி, நல்ல நீரைப் போத்தலில் அடைக்கும் நிறுவனம் ஆரம்பிக்கப் போவதுதானாம். அதாவது இலங்கையில் 15 மாவட்டங்களிலுள்ள மக்கள் குடிதண்ணீரைக் கூடப் பணம் கொடுத்து வாங்கும் நிலைமை உருவாகப் போகிறது.

வன்னி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தபோது சகல உரவகைகளையும் அரசு தடை செய்தது. ஆனால் விடுதலைப் புலிகள் உள்ளூர் மூலப் பொருள்களைக் கொண்டு 'அமுது' என்ற பசளையைத் தயார் செய்தனர். அதைப் பாவித்து விவசாயிகள் நல்ல விளைச்சலைப் பெற்றனர். உண்மையான தேசப்பற்றுள்ள ஓர் அரசு அப்படி ஒரு ஏற்பாட்டைச் செய்தால் அது நியாயமானது. ஆனால் குடிதண்ணீர் மாசடைவதால் ஏற்படும் கஷ்டத்துக்கு நிவாரணமாகப் போத்தலில் அடைக்கும் நீரை அறிமுகப்படுத்துவதன் மூலம் நீரைப் போத்தலில் அடைக்கும் நிறுவனங்களையும் இரசாயனப் பசளை இறக்குமதியாளர்களையும் திருப்திப்படுத்தலாம். ஆனால் சூழல் தொடர்ந்து மாசடைந்து கொண்டேயிருக்கும்.

காற்று மாசு என்பதில் பெருங்கைத்தொழில் நிறுவனங்களும் வாகனங்களும் பெரும்பங்கு வகிக்கின்றன. தொழிற்சாலைக் கழிவுகள் காற்றை மட்டுமன்றி நிலம், நீர் எனப் பலவற்றையும் அசுத்தப்படுத்துகின்றன. மேற்கு நாடுகள் இந்த மாசடைதலைத் தவிர்க்க பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்கின்றன. அந்த நிறுவனங்கள் எமது நாடுகளில் அவற்றைப் பற்றி அக்கறைப்படுவதில்லை. அரசும் பொருட்படுத்துவதில்லை, இலங்கை அரசோ காற்று மாசடைவதைத் தவிர்க்க வீட்டுக்கு ஒரு மரமாவது நடும்படி கேட்கிறது. வடக்கில் மரங்கள் இல்லாத வீடுகள் இல்லை என்பதை அவர்கள் அறியவில்லை போலும். ஆனால் இலங்கை அரசின் இன ஒடுக்குமுறைக் கொள்கை ஒவ்வொரு நாளும் மரங்களை அழித்துக் கொண்டிருக்கும்போது மரம் நடுகைக் கோரிக்கையில் என்ன அர்த்தம் இருக்க முடியும்.

இராணுவக் குடியிருப்புக்கள், சிங்களக் குடியேற்றங்கள், இராணுவ முகாம்கள், விமான நிலையங்கள் என்பன அமைப்பதற்கென பல்லாயிரக்கணக்கான மழைக் காடுகள் அழிக்கப்படுகின்றன. இந்த நிலையில் அரசின் மரநடுகை என்பது எவ்வளவு போலியானது என்பதை நாம் புரிந்துகொள்ள முடியும். எனவே சூழல் பாதுகாப்புத் தொடர்பாக மக்களுக்கு அறிவுரை சொல்வதிலும் ஆலோசனை வழங்குவதிலும் எவ்வித பயனும் இல்லை. ஏனெனில் மக்கள் இயல்பாகவே சூழலைப் பாதுகாத்தே வருகின்றனர். ஆனால் இலங்கை அரசு தான் சூழலை மாசுபடுத்துவதை முதலில் நிறுத்தி உண்மையான தேசப்பற்றுடன் சூழலைப் பாதுகாக்க வேண்டும். ஒருபுறம் அந்நிய நிறுவனங்களைத் திருப்திப்படுத்துவதிலும் மறுபுறம் இன ஒடுக்குமுறையை கைக்கொள்வதிலும் குறியாக இருக்கும் வரை அது சாத்தியமில்லை.




சந்திரசேகர ஆஷாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராஜதந்திரப் படுதோல்வி

## மஹிந்தவின் லண்டன் பயணம்





அதிரன்

லண்டன் மாநகரின் பல பகுதிகளிலும் தமிழ் மக்கள் அலையெனத் திரண்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக மேற்கொண்ட தொடர் ஆர்ப்பாட்டம் இலங்கைக்குப் பெரும் அவமானத்தையும் தலைகுனிவையும் இராஜதந்திரத் தோல்வியையும் ஏற்படுத்திய நிலையில் பிரிட்டனில் இருந்து வெளியேறியிருக்கிறார் ஜனாதிபதி.

புலம்பெயர் தமிழ் மக்களின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒருபுறம். லண்டன் ஊடகங்கள் வெளியிட்ட புதிய போர்க்குற்ற ஆதாரங்கள் மறுபுறம் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் லண்டன் பயணம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி விட்டிருக்கிறது.

அத்துடன் இலங்கை மீதான உலக நாடுகள் கவனத்தையும் இது மென்மேலும் அதிகரிக்கச் செய்திருக்கிறது.

இம்முறை தனது வெளிநாட்டுப் பயணத்தைப் பெரும் நெருக்கடிகளுக்கும் அவமானத்துக்கும் மத்தியில் நிறைவு செய்துவிட்டுப் பெரும் சினத்துடனும் கோபத்துடனும் நாடு திரும்பியிருக்கிறார் ஜனாதிபதி மஹிந்த. அவர் சற்றும் எதிர்பார்க்காத வகையில் இந்த அவமானம் நிகழ்ந்துவிட்டது. இதற்குப் பிரிட்டனின் ராஜதந்திரிகள் சிலரும் உடந்தையாக இருந்திருக்கி றார்கள் என்ற குற்றச்சாட்டை வழமை போல இலங்கை அரசு தூக்கிப் போட்டாலும் ஜனாதிபதி மீதான தமிழர்களின் கடும் அதிருப்தியே இதற்கு முக்கிய காரணம்.

தமிழர்களின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் காரணமாகப் பொதுநலவாய நாடுகள் செயலகத்தில் ஜனாதிபதி நிகழ்த்தவிருந்த உரை திடீரென ரத்துச் செய்யப்பட்டதும் இலங்கைக்கு ராஜதந்திர ரீதியில் படுதோல்வியை ஏற்படுத்தியிருக்கிறது. இதனால் அதிர்ச்சியடைந்துள்ள இலங்கை அரச தலைமை இப்போது பிரிட்டனிலுள்ள இலங்கைத் தூதரகத்தின் மீது சீறிப் பாய்ந்துள்ளது.

வெளிநாட்டுப் பயணத்தில் அவமானத்தைச் சந்தித்தது ஒருபுறம் இருக்க இங்கு ஐக்கிய தேசியக் கட்சி அந்தப் பயணம் குறித்து எழுப்பும் கேள்விகளால் அரசு மேலும் திக்குமுக்காடிப் போயுள்ளது. பிரிட்டனின் ராஜதந்திர நிலைமைகளை சரியாக அரசு கையாளாமையே இந்தப் பயணம் படுதோல்வியில் முடிவடையக் காரணம் என ஐ.தே.க. குற்றம் சுமத்தியுள்ளது.

ஒட்டுமொத்தத்தில் அரசு மீதும் ஜனாதிபதி மீதும் கடும் விமர்சனங்களை முன்வைக்கும் பயணமாக இந்த லண்டன் பயணம் அமைந்துள்ளது.

ஜனாதிபதியை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்வதில் புலம் பெயர் தமிழர்கள் ஆயிரக்கணக்கில் ஒன்று திரண்டமைதான் ஜனாதிபதியின் லண்டன் உரை ரத்தானமைக்கு மிக முக்கிய காரணம்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ லண்டன் விமான நிலையத்திலிருந்து ஹோட்டலை நோக்கிப் புறப்பட்டபோதே அங்கு பெரும் சனத் திரளாகத் திரண்டிருந்த தமிழ் மக்கள் அவருக்கு எதிரான கோஷங்களை எழுப்பித் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். லண்டன் மல்போரோ ஹவுஸ் முன்பாகவும் ஹில்டன் ஹோட்டல் முன்பாகவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கொடும்பாவி எரிக்கப்பட்டது. லண்டனின் பல்வேறு பகுதிகளில் தமிழ் மக்கள் அலையெனத் திரண்டு நாள் முழுவதும் மேற்கொண்ட இந்த ஆர்ப்பாட்ட நிகழ்வுகள் பல்லாயிரக் கணக்கான பிரிட்டன் மக்களையும், சுற்றுலாப் பயணிகளையும் கவர்ந்ததுடன் பல வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு ஊடகங்களிலும் முக்கிய இடம் பிடித்திருக்கிறது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராகத் தமிழ் மக்கள் மேற்கொண்ட தொடர் போராட்டங்கள் காரணமாக பொதுநலவாய நாடுகளின் செயலகம் ஏற்பாடு செய்திருந்த மாநாட்டில் மஹிந்த ராஜபக்ஷ ஆற்றுவதற்கு இருந்த உரை ரத்து செய்யப்பட்டிருந்தபோதிலும் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் மாநாடு நடைபெறும் மான்சன் ஹவுஸ் முன்பாக சன சமுத்திரமாக நிறைந்து நின்று திரண்டு ஆர்ப்பாட்டத்தைத் தொடங்கினர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுப் பின்னர் ஊர்வலம் ஒன்றை லண்டன் மாநகர வீதிகளினூடாக மேற்கொண்டு லண்டனின் பிரசித்தி பெற்ற மால்பரோ ஹவுசின் முன்பாகத் திரண்டு ஆர்ப்பாட்டத்தை தொடர்ந்தனர்.

தமிழ் மக்களின் இந்த ஆர்ப்பாட்டத்தைப் பார்த்துக் கொண்டே எலிசபெத் மகாராணி மால்பரோ ஹவுசினுள் மதிய உணவு விருந்துக்காக உள்நுழைந்து சென்றதுடன் பின்னர் அங்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் சந்தித்திருந்தார். பல்லாயிரக் கணக்கான தமிழ் உணர்வாளர்களால் மல்பரோ ஹவுசின் முன்பாக ஜனாதிபதியின் கொடும்பாவி ஒன்றும் இலங்கைத் தேசியக் கொடியும் எரிக்கப்பட்டன.

முன்னதாக, மான்சன் ஹவுஸ் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் 2 மைல்கள் தொலைவில் உள்ள மால்பரோ ஹவுஸுக்கு மிகவும் பிரசித்தி பெற்ற கனொன் வீதி, ப்ளீட் வீதி, ஸ்ராண்ட் வீதி ஆகியவற்றினூடாக மிக நீண்ட ஒரு ஊர்வலத்தை மேற்கொண்டு மல்போரோ ஹவுசை நோக்கிச் சென்றதால் பல மணி நேரங்களுக்கு லண்டன் மாநகரில் பெரிய வாகன நெரிசல் காணப்பட்டது. நிலக்கீழ் ரயில்களிலும் நெரிசல் அதிகமாக இருந்தது.

இலங்கை அரசின் போர்க் குற்றம், மனித உரிமை மீறல்கள் மற்றும் அடக்குமுறைகளைக் கண்டிக்கும் நூற்றுக்கணக்கான பதாதைகள் மற்றும் சுலோக அட்டைகளைத் தாங்கியும் கோசங்களை எழுப்பியும் தமிழ் மக்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டம் மாநாட்டில் கலந்து கொள்ள வந்திருந்த உலக தலைவர்கள், ராஜதந்திரிகள் மற்றும் பிரதானிகளின் கவனத்தை ஈர்த்துள்ளதுடன் பல வெளிநாட்டு ஊடகங்களின் கவனத்தையும் பெற்றிருந்தது.

ஐரோப்பாவின் பல நாடுகளில் இருந்தும் பிரிட்டனின் பல்வேறு பாகங்களில் இருந்தும் மக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் இணைந்துள்ளனர். நூற்றுக்கணக்கான பிரிட்டன் பொலிஸார் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

பிரிட்டன் தமிழர் பேரவை மற்றும் இதர புலம் பெயர் தமிழ அமைப்புக்கள் ஒருங்கிணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தியிருந்தன.

எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் ஒருபுறம் இருக்க ஜனாதிபதி லண்டனில் தங்கியிருந்த சமயம் பார்த்து வன்னியில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் புதிய ஆதாரங்களை வெளியிட்டு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது 'தி இன்டிப்பென்டன்ட்' நாளேடு சரியான சந்தர்ப்பம் பார்த்து காத்திருந்தது போல இந்த நாளேடு வெளியிட்ட புதிய ஆதாரங்களால் லண்டனில் மட்டுமல்ல உலக நாடுகளிலும் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. அத்துடன் பல இணையத் தளங்கள் புதுப்புது போர்க்குற்ற ஆதாரங்களை வெளியிட்டு இலங்கை அரசின் போர்க் குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களை மேலும் வலுக்கச் செய்ததால் வத்திக்கான் சென்று பாப்பரசரை சந்திக்க இருந்த ஜனாதிபதி பெரும் சங்கடத்துக்கு உள்ளானார்.

இலங்கை அரசு ராஜதந்திர ரீதியில் எதிர்கொண்ட மிகப் பெரும் பின்னடைவாக ஜனாதிபதியின் லண்டன் பயணம் முடிந்திருக்கிறது. ஆயினும் இதுபற்றி எந்த விதமான கருத்தையும் வெளியிடாமல் வெறுமனே ஜனாதிபதியின் லண்டன் பயணம் வெற்றிகரமாக முடிவடைந்திருக்கிறது என்று மட்டும் கூறி வாயை அடைத்துக் கொண்டார் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ். அதேவேளை ஜனாதிபதியின் லண்டன் பயணம் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்துமாறு ஐ.தே.க. விடுத்த கோரிக்கையையும் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ அடியோடு நிராகரித்துவிட்டார். தொடர்ந்தும் இதுபற்றிப் பேசினால் பெரும் சங்கடம் ஏற்படும் என்பதை நன்கு விளங்கிக் கொண்ட அரசு இந்தப் பயணத்தை இப்படியே பூசி மெழுகுவதற்கு திட்டமிட்டிருக்கிறது. பாப்பரசரை ஜனாதிபதி சந்தித்ததை வைத்துக் கொண்டு லண்டன் பயணத் தோல்வியை மறைப்பதற்கு அரசு திட்டமிட்டிருக்கிறது. நேற்று நாடு திரும்பிய ஜனாதிபதி தனது வெளிநாட்டுப் பயணம் குறித்து என்ன சொல்லப் போகிறார் என்பதை அடுத்த சில தினங்களில் எதிர்பார்க்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றுக் கோஷங்களைக் கைவிடுங்கள்

சுகந்தன்



முன்னொரு காலத்தில் வங்க தேசத்தை சிங்கபாகு என்ற மன்னன் ஆண்டுவந்தான். அவனுக்கு 16 இரட்டைக் குழந்தைகள் பிறந்தன. மொத்தமாக 32 பிள்ளைகள்.

இவனது ஆட்சி சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை, 32 பிள்ளைகளில் மூத்தவனான விஜயன் தனது 700 சகாக்களுடன் சேர்ந்து நாட்டு மக்களுக்குச் சொல்லொணாத் துன்பங்களை விளைவித்து வந்தான்.

துன்பத்தைப் பொறுத்துப் பொறுத்து பொறுமையின் எல்லைக்கு வந்த மக்கள் விஜயனைக் கொன்றுவிடுமாறு அரசனுக்கு முறையிட்டனர். இவனின் செயலால் கொதித்துப் போயிருந்த மன்னனும் விஜயனையும் 700 தோழர்களையும் பிடித்து சுதந்திரமிழந்த அடிமைகள் எனும் வகையில் அவர்களது சிரசு மயிர்களை அரைமுண்டம் செய்தான். பின்னர் மூன்று மரக்கலங்களில் இவர்களைத் தனியாகவும், மனைவிமாரை தனியாகவும் , பிள்ளைகளைத் தனியாகவும் ஏற்றி மூன்று வெவ்வெறு திசைகளில் அனுப்பி நாடு கடத்தி விட்டான்.

இவ்வாறு திக்கற்று சென்ற மரக்கலங்களில் 700 சகாக்களுடன் விஜயனும் ஏற்றி அனுப்பட்ட கலம் எதிர்பாராத விதமாக இலங்கையின் தம்பபன்னிக் கரையை அடைந்தது.

அங்கு உணவு நீர் இன்றி தவித்த இவர்கள் உணவு தேடி அலைந்தனர். அப்போது ஒருநாயை கண்டனர். அதைக் கண்ட இவர்களுக்கு ஒரே மகிழ்ச்சி. காரணம் நிச்சயமாக அருகில் மக்கள் வசிக்கின்றார்கள் என்ற அறிகுறிதான் அது.

உடனே தனது சாகா ஒருவனை அழைத்த விஜயன் "நாயைப் பின்தொடர்ந்து சென்று எங்கு குடிமனை இருக்கிறது என இடத்தை அறிந்து வா'' என்றான்.

அவனும் நாயைப் பின்தொடர்ந்தான் அங்கே ஒரு அழகிய பெண் மரநிழலில் நூல் நூற்பதைக் கண்டான். அருகில் கிணறு இருப்பதையும் அறிந்து நீர் அருந்த ஓடினான். அதைக் கண்ணுற்ற அந்தப் பெண் அவனை சிறைப்பிடித்து கிணற்றுக்குள் அடைத்தாள்.

நீண்ட நேரமாகியும் தனது சாகா வராததை எண்ணிய விஜயன், அவனைத் தேட தனது 700 தோழர்களையும் ஒவ்வொருவனாக அனுப்பினான்.

அந்தப் பெண் 700 பேரையும் ஒவ்வொருவராக சிறைப்பிடித்து கிணற்றினுள் சிறைவைத்தாள். ஈற்றில் தோழர்களை காணாது ஏமாற்றமடைந்த விஜயன் ஆயுதங்கள் சகிதம் காத்திருக்கும் ஆபத்துகளை எதிர்கொள்ளத் தயார் நிலையில் சென்றான். அப்போது மரநிழலில் அமர்ந்திருந்த பெண்ணை கண்ணுற்ற அவனுக்கு இவள் தான் தனது தோழர்களை ஏதோ செய்திருக்க வேண்டும் என புரிந்தது.

உடனே அவளது தலைமயிரை ஒரு கையால் பிடித்து மறுகையில் அவளை வெட்டுவதற்கு வாளை ஏவினான். தன்னை குவேனி என அறிமுகம் செய்த அந்தப் பெண் தனது இராட்சியத்தையும் தன்னையும் தருவதாக விஜயனிடம் வாக்களித்து உயிர்ப் பிச்சை கேட்டாள்.

இதுவே இலங்கை அரசியலின் வரலாற்றுத் திருப்புமுனை எனலாம். பின்னர் தனது தோழர்களை மீட்ட விஜயன் அந்த இராட்சியத்தை கைப்பற்றினான். அதனை தொடர்ந்து தனது சொந்த நாட்டிலிருந்து மக்களை அழைத்து இங்கு குடியேற்றினான். இவ்வாறு வந்தேறு குடிகளாக இலங்கையை அடைந்தவர்களே பின்னர் சிங்களவரென சொல்லப்படுகின்றனர். இவர்கள் வருவதற்கு முன்னர், இங்கு வாழ்ந்த இலங்கைத் தீவின் ஆதிக் குடிகள் இயக்கர், நாகர் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயம். அதாவது குவேனியின் கூட்டத்தினரே ஆதிக்குடிமக்களாகக் கூறப்படுகின்றனர். ஆதிக்குடிகள் இவர்களாயின் இவர்கள் திராவிடர்கள் என்பதை இவர்களது சமய வழிபாடுகள் ஆதிப்பிராமிச் சாசனங்கள் ஈமச் சின்னங்கள் என்பன நிரூபிக்கின்றன.

அது மட்டுமல்லாது இலங்கை மன்னன் இராவணன் இங்கு வாழ்ந்த கதைகள் வேறு உண்டு. கடும் சிவபக்தனான இவனின் வரலாறு ஆரம்பத்தில் இலங்காபுரியில் சிவனை வழிபட்ட இந்துக்கள் வாழ்ந்ததைக் காட்டுகிறது.

இது இவ்வாறு இருக்க "வந்தேறு குடிகளான தமிழ் மக்கள் எப்படி வடக்குக்கு உரிமை கோருவது'' எனத் தெரிவித்த ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் எல்லாவல மேதானந்த தேரரின் கருத்து பெரும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

**குவேனியை விஜயன் சந்தித்த கணமேஇலங்கை அரசியலின் வரலாற்றுத் திருப்புமுனை எனலாம். பின்னர் தனது தோழர்களை மீட்ட விஜயன் அந்த இராட்சியத்தை கைப்பற்றினான். அதனை தொடர்ந்து தனது சொந்த நாட்டிலிருந்து மக்களை குடியேற்றினான். இவ்வாறு வந்தேறு குடிகளாக இலங்கையை அடைந்த ஆரியரே பின்னர் சிங்களவரென சொல்லப்படுகிறது. இவர்கள் வருவதற்கு முன்னர், இங்கு வாழ்ந்த இலங்கைத் தீவின் ஆதிக் குடிகள் இயக்கர் நாகர் என்பது ஏற்கப்பட்ட விடயம்.**

போரால் அனைத்தையும் இழந்து தமது மறுவாழ்வுக்கு வழிபிறக்கும் என ஏங்கியிருக்கும் தமிழ் மக்கள் மத்தியில் மேதானந்த தேரரின் கருத்துக்கள் பேரிடியைக் கொடுத்துள்ளன என்றுதான் கூறவேண்டும். வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் பாரம்பரிய பூமி அல்ல என்று கருத்துகளைத் திணித்து, வடக்கில் பௌத்த ஆதிக்கத்தை நிலை நிறுத்தி, தமிழ் மக்களை அழிக்கும் முயற்சியில் தேரர் வெளிப்படையாகவே ஈடுபட்டுவருவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா குற்றஞ் சாட்டியுள்ளார். இலங்கை அரசமைப்புக்கூட வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் செறிந்த குடிப்பரம்பலும் காணப்படுவதாகக் கூறுகிறது.

சிங்கள வரலாற்று ஆசிரியர் கே.எம்.டி.சில்வா கூட வடகிழக்குப் பகுதி தமிழர்கள் செறிந்து வாழும் பகுதி எனக் கூறுகிறார்.

இதேவேளை, பௌத்த மதத்துக்கு எதிரான செயற்பாடுகளை முன்னெடுத்துவரும் மேதானந்த தேரரை பௌத்த மதத்திலிருந்து ஒதுக்க மகாநாயக்க தேரர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென புதிய சிஹல உறுமயவின் தலைவர் சரத் மன மேந்திர கோரிக்கை விடுத்துள்ளதாகவும் தகவல்கள் வெளிவந்துள்ளன.

அது மட்டுமல்ல அதிகாரப் பகிர்விற்கு அரசு இணங்குமானால் அதன் ஆட்சிப் பயணம் அஸ்தமிக்கும் காலம் வெகு தொலைவில் இல்லை என அரசை எச்சரிக்கிறது தேசிய பிக்குகள் முன்னணி. ஐக்கிய தேசியக் கட்சி அதிகாரப் பரவலாக்கத்துக்கு இணங்கியதால் இரண்டு வருடங்களில் அதன் ஆட்சிப்பீடம் கவிழ்ந்ததாகவும் சுட்டிக்காட்டிய அந்தக் கட்சி அரசின் வயிற்றுள் புளியைக் கரைக்க முற்பட்டுள்ளது.

அரசின் கடந்த ஆட்சியில் தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு வழங்கப்பட்டால் அரசின் ஆதரவை நீக்குவோம்; ஆட்சியைக் கவிழ்ப்போமென சிங்களப் பேரினவாதக் கட்சிகள் போட்ட கூச்சல் மலிந்திருந்தன. காரணம் அரசு பெரும்பான்மைப் பலமின்றி இக் கட்சிகளின் துணையுடன் ஆட்சியை தக்கவைத்திருந்தமையே ஆகும். இப்போது, போர் வெற்றியின் பின்னர், ஆளும் கட்சி பெரும்பான்மை பலத்துடன் ஆட்சி அமைத்துள்ளதால் இவர்களால் அரசை நேரடியாக அசைக்க முடியாது போனது.

இதனால் ஓய்ந்திருந்த கோஷங்கள் தற்போது மீண்டும் தலைதூக்கத் தொடங்கியுள்ளன. அதுவும் பௌத்த மக்களின் பெருமதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய மதகுருக்களினால் கூறப்பட்ட கருத்து நாட்டில் சமாதானத்தை கட்டியெழுப்ப வேண்டும் என்று விரும்பும் மூவின மக்களையும் கொதிப்படைய வைத்துள்ளது

எது எவ்வாறிருப்பினும் மூவின மக்களும் சமாதானமாக வாழ வேண்டும் என்பதே அனைத்து மக்களினதும் எதிர்பார்ப்பாகும். வெறும் அரசியல் நலன்களுக்கான வெற்றுக் கூச்சல்கள் மூலம் நாட்டு மக்களின் நிம்மதியான வாழ்வை சீர்குலைத்து சமாதான முயற்சிகளுக்கு யாரும் வேட்டு வைக்க முயலக்கூடாது.

புத்த பெருமானின் வழிகாட்டலை அரசுகளின் தலைவர்கள் பின்பற்றுவார்களானால் நிகழ்காலத்தில் உலக மக்கள் எதிர்நோக்கியுள்ள உள்நாட்டு மற்றும் சர்வதேச மட்டத்திலான மோதல்களுக்குத் தீர்வுகாண முடியும்.

இந்தக் கருத்தை தாய்லாந்தில் பாங்கொக் நகரில் நடைபெற்ற புத்தரின் பிறந்த நாள் நிகழ்வில் கூறிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தனது நாட்டில் உள்ள பிரச்சினைகளையும் உரிய முறையில் கையாண்டு அதற்குத் தீர்வை முன்வைப்பதன் மூலம் எமது நாட்டின் மீதான அன்னியத் தலையீட்டை தவிர்க்க முடியும், சமாதானத்தை ஏற்படுத்த முடியும் [illegible].

அவரது இந்த அறிவுரையை முதலில் அவரது அரசியல் சகாக்கள் நன்கு பின்பற்றுவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

# வலிகளை இறக்கி வைக்க...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

சூழ இருப்பவர்களும் சாட்சியத்தின் பங்காளிகளாக இருப்பதால் மனதில் உறைந்திருக்கும் கொடூரங்களின் படிமத்தை அவர்களிடம் பகிர்ந்து கொள்ள முடியாது. ஏனெனில் அவர்களும் இத்தகைய போர் வலிச் சிலுவைகளை மனதுக்குள் ஏந்தியபடியே தான் இருக்கிறார்கள். ஆகவே மனதில் நினைத்துக் கொண்டிருக்கும் வலிகளாலான சிலுவைகளை நேர்த்தி மூலம் காவடிகளாக்கி அலகு குத்தி இறக்கி வைக்க முனைகிறார்கள். போருக்குப் பின்னான காலத்தில் வற்றாப்பளையில் மட்டுமல்லாது ஏனைய ஆலயங்களிலும் காவடிகளின் எண்ணிக்கை அதிகரித்தமைக்கு இதுவே காரணம்.

*[இந்த முறை மட்டும் 120 பறவைக் காவடிகளும், 1500க்கும் மேற்பட்ட செதில் காவடிகளும் வற்றாப்பளைக்கு வந்ததாக ஆலய நிர்வாக சபையினர் கூறுகின்றனர். 120 பறவைக் காவடிகளில் அநேகமானவை ஒன்றுக்கும் மேற்பட்ட மனிதர்களைச் சுமந்திருந்தன. சில வற்றில் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளும் தொங்கியபடி வந்திருந்தனர்].*

கண்ணகி – தலைவர்– ஊழி– பூசி மெழுகப்பட்ட பொழுதுகள் என எல்லாக் காலங்களிலும் வற்றாப்பளை வலிகளை இறக்கிவைக்கும் தலமாகவே இருக்கிறது. வலிகளாலான சிலுவைகள் தொடர்ந்தும் அங்கே இறக்கிவைக்கப்படுதல் தொடரத்தான் போகின்றது; குருதி கசிந்து கொண்டிருக்கும் மனக் காயங்கள் ஆறும் வரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழர் வரலாற்று தொடர் ஓட்டத்தில் சம்பந்தர் பொறுப்பெடுத்துள்ள வகிபாகம்



பருதி

தமிழ்த் தேசிய இனத்தின் இறையாண்மையை உறுதி செய்வதற்கான போராட்டம் ஒரு தொடர் அஞ்சல் ஓட்டம் போன்றது. அது மிக நீண்ட ஒரு பாதையில் பயணிக்கின்றது.

வகைவகையான புவியமைவுத் தன்மைகளுக்கு ஊடாக, விதவிதமான காலநிலைச் சூழல்களை ஊடறுத்து, பல பத்தாண்டு காலங்களைக் கடந்து, அந்தப் பாதை செல்கின்றது.

எங்களுக்கு முன்னாலும் பலர் இந்தப் போராட்டக் கோலைக் கொண்டு ஓடினார்கள்; இப்போது நாங்கள் ஓடுகிறோம்.

## நீண்டு தொடரும் வரலாற்று ஓட்டம்

தொடக்க ஓட்டக்காரர்களாய் களமிறங்கிய பலர் இப்போது உயிரோடு கூட இல்லை; இப்போது ஓடுகின்ற எங்களில் பலர், ஓட்டம் தொடங்கியபோது பிறந்திருக்கவேகூட இல்லை.

சிறு வயதிலேயே இந்த ஓட்டத்தில் இணைந்து இன்றும் ஓடுகின்றவர்களும் உண்டு; மிக நீண்ட காலமாக ஓரத்தில் காத்திருந்துவிட்டு, பின்னாளில் வந்து இணைந்தவர்களும் உண்டு.

உண்மையான பற்றோடும் திறமையோடும் ஓட்டத்தில் இணைந்தவர்களும் உண்டு; வேறு செல்வாக்குகளோடும் பழம் பெருமைகளோடும் ஓட வந்தவர்களும் உண்டு.

ஓட்டத்தை விரைந்து முடிக்க வேண்டும் என்ற வேட்கையோடு ஓடியவர்களும் உண்டு; விரைந்து ஓடிக் களைத்து விழுந்துவிடக்கூடாது என நிதானத்தோடு ஓடியவர்களும் உண்டு. ஓடிக் களைத்து இடையிலேயே ஓய்விற்குச் சென்றுவிட்ட வீரர்களும் உண்டு; விவேகத்தோடு இன்றும் தொடர்ந்தும் ஓடுகின்ற சான்றோரும் உண்டு.

இது வெல்ல முடியாத ஓட்டம் என எப்போதோ மதிப்பீட்டு ஒதுங்கிக் கொண்டோரும் உண்டு; வெல்லமுடியாதெனினும் ஓடியே தீரும் திடங்கொண்டு இப்போதும் விரைவோரும் உண்டு.

ஓட்டத்தின் நடுவே நட்பங்களை மாற்றி நின்று நிலைக்கும் தீரர்களும் உண்டு; மாறாத மனதோடு மட்டுமே ஓடி மடிந்து வீழ்ந்து போன மறவர்களும் உண்டு. கல்லும், சகதியும், கொல்லும் கிருமிகளும் நிறைந்த கடினப் பாதைகள் வழியாக, கொடிய வெயிலிலும் சிலர் ஓடினர்; பசும் புற்தரைகளில், பொன் மாலைப் பொழுதுகளில், இளந்தென்றலின் வருடலோடும் சிலர் ஓடினர்.

அணியின் மீது கொண்ட ஆத்மார்த்த பக்தியினால், தம் அடையாளத்தையே மறைத்து அற்புதங்கள் செய்து ஓடி முடித்தனர் சிலர்; தம் அடையாளத்தைப் பதிவதற்காகவே அணியில் பணிகள் ஏற்று அரிநயங்கள் புரிந்து நிலைக்கின்றனர் வேறு சிலர்.

தமக்குள் ஒருங்கிணைந்து, பொருத்தமான தடங்களைப் பகிர்ந்தெடுத்து, ஒத்திசைவாக ஓடிய உத்தமர்களும் உண்டு; சக வீரர்களின் கால்களையே இடறிவிட்டு, பெருமைகளைத் தாமெடுத்தும் பழிகளைப் பிறர்க்களித்தும் ஓடிய வல்லவர்களும் உண்டு.

ஓட்டத்தின் நடுவே தடம் மாறிப் போய், மாற்று அணி மாறி ஓடிய நண்பர்களும் உண்டு; அவ்வாறு, அணிமாறிய போதும், மீண்டும் எமதணிக்கே வந்து, இப்போதும் ஓடும் நல்லுள்ளங்களும் உண்டு.

முன்னாலே ஓடியோர் கடக்க இயலாதுபோன தூரங்களையும், பின்னாலே வந்து நிவர்த்தி செய்து தாமும் முன்னேறிய வீரர்களும் உண்டு; முன்னாலே ஓடியவர்கள் எடுத்துக் கொடுத்த முன்னேற்றங்களையே பின்னிறங்கச் செய்யும் உத்திகளைக் கைக்கொண்ட சூரர்களும் உண்டு.

ஓரத்தில்நின்று ஓட்ட வீரர்களுக்கு நீர் வார்த்துத் தெம்பு தந்த பங்காளரும் உண்டு; ஓட்டத்தையும் வீரர்களையும் நம்பி வாழ்த்துரைத்து ஆசீர்வாதங்கள் தந்த ஆத்மாக்களும் உண்டு.

எங்கள் ஓட்டம் ஒரு மிக நீண்ட பாதையில் பயணிக்கின்றது. நாங்கள் ஓடி முடிக்காதுவிட்டால் - எங்களது காலத்தில் அது முடியாது போனால் - நாளை வேறு வீரர்கள் ஓடுவார்கள்: இப்போது வெளியில் நிற்பவர்களும் இணையக் கூடும்; இன்னும் இந்த மண்ணில் பிறக்காதவர்களோகூட தொடரக் கூடும். எவர் இருந்தாலும் இல்லாது போனாலும், இந்த ஓட்டம் தொடர்ந்தது; இன்னும் தொடர்கின்றது; ஏனென்றால், இந்த ஓட்டம், எந்த ஒரு காலத்திலும், தனி ஒருவருக்குச் சொந்தமானது அல்ல. தனி ஒருவருக்குச் சொந்தமானதாக எப்போதும் இருக்கப்போவதும் இல்லை. இது எம் எல்லோராலும், எம் எல்லோருக்குமாகவும் நடத்தப்படுகின்ற ஓட்டம். எமக்குப் பின்னாலே வாழப்போகின்றவர்களுக்காகவும் நடத்தப்படுகின்ற ஓட்டம்.

எவர், எங்கே, எப்போது, எவ்வாறு இந்த ஓட்டத்தில் இணைந்திருந்தாலும், முடிவிடத்தை யார் சென்று அடைகின்றார்கள் என்பது ஒரு பொருட்டே அல்ல; எமது போராட்டக் கோல் உரிய முடிவிடத்தைச் சென்று அடைய வேண்டும் என்பதுதான் பொருட்டானது.

இது ஒரு நீண்ட வரலாற்று ஓட்டம். நாம் ஒவ்வாருவருமே இந்த ஓட்டத்தின் நாயகர்கள். அரசியல் - பொருளியல் - சமூகவியல் - சட்டவியல் - ஊடகவியல் எனத் தொடர்ந்து வரிசைப்படும் எந்த இயலை நாம் செய்தாலும் - நாம் ஒவ்வொருவருமே இந்த ஓட்டத்தின் நாயகர்கள்தான்.

இந்த ஓட்டத்தில், எம் ஒவ்வொருவரது பணிநிலைகளையும் வரலாறுதான் தீர்மானிக்கின்றது. எம் ஒவ்வொருவருக்கும் - அவரவரது தன்னியல்பு மற்றும் வல்லமையைப் பொறுத்தும், அவரவர் இருக்கும் சூழல் மற்றும் காலத்தைப் பொறுத்தும், பொருத்தமான பணிகளை வரலாறு வழங்குகின்றது. இனியும் புதுப் பணிகளை அது வழங்கும். புதிய ஆள்களுக்குப் பழைய பணிகளும் வழங்கப்படலாம்; பழைய ஆள்களே புதிய பணிகளிலும் அமர்த்தப்படலாம்.

## பொறுப்புணர்வு வேண்டும்

இங்கே - அடுத்தவர்களது பணிகளின் ஆழமான அர்த்தப் பரிமாணங்களும் மகிமையும் எமது புரிந்துகொள்ளும் ஆற்றலுக்கு அப்பாலேயும் இருக்கக்கூடும்; அதற்காக, அந்தப் பணிகள் உப்புச்சப்பு அற்றவை என்ற முடிவுக்கோ, அல்லது அந்த ஆள்கள் நம்பகத்தன்மை அற்றவர்கள் என்ற தீர்மானத்திற்கோ எவரும் வந்துவிட முடியாது.

எல்லோராலும் எல்லோரது பணிகளின் தாற்பரியங்களையும் புரிந்துகொள்ள முடியும் என்றும் இல்லை, அவ்வாறு புரிந்துகொள்ள வேண்டும் என்ற அவசியமும் இல்லை. ஆனால், இந்தப் போராட்டத்தில் எனது இடமும் எனக்கான பணிகளும் எந்த அளவுக்கு முக்கியமானதோ, அதே அளவுக்கு என்னோடு கூட ஓடும் சக போராளிகளின் பணிகளும் இடங்களும் முக்கியமானதாகத்தான் இருக்கும் என்பதை ஏற்று மரியாதை செய்யும் பக்குவமும், தேவையான ஒத்துழைப்பை வழங்கும் கூட்டுப் பொறுப் புணர்ச்சியும் எம் எல்லோரிடமும் இருக்க வேண்டும். குறிப்பாக - மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல் நாயகர்களிடம் அது இருக்க வேண்டும். கூட்டுப் பொறுப்புணர்ச்சி என்பதுதான், மக்கள் சேவகர்களுக்கு - மக்களின் நாயகர்களுக்கு - இருக்கவேண்டிய அதியுச்ச அடிப்படைத் தகுதி.

இந்த ஓட்டத்தில் - நானா, நீயா முதன்மை? என்று புடுங்குப்படுவதற்கு எதுவுமேயில்லை. ஏனென்றால் - நாம் தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டும், ஏனென்றால் - ஓடுவது மட்டும்தான் நாங்கள், பயணம் மட்டும்தான் எங்களது. ஆனால், எமது பாதையும், அதன் செல்திசையும், அதன் முடிவிடமும் - வேறு ஆள்களாலேயே தீர்மானிக்கப்படுகின்றது; வேறு ஆள்களால் - வெளி ஆள்களால்.

## சம்பந்தன் சொன்ன செய்தி

இலங்கைத் தமிழரசுக் கட்சியின், இந்த ஆண்டிற்குரிய தேசிய மாநாட்டில் தலைமைப் பேருரை நிகழ்த்திய இராஜவரோதயம் சம்பந்தன் அவர்கள் - தமிழரசுக் கட்சியே தலையாய கட்சி எனத் தகுதிப்படுத்தியது தொடர்பில் - மாறுபட்ட கருத்துக்களும், அதனை அவ்வாறு ஏற்றுக்கொள்வது தொடர்பான தயக்கங்களும் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால், தான் தலைமையேற்றுள்ள கட்சியின் மாநாட்டில், அந்தக் கட்சியைப் பற்றி அவர் கூடக் குறைவாகப் பேசியிருக்கிறார்; அப்படித்தான் அங்கு அவர் பேசவும் வேண்டும். அதற்காக நாம் நிம்மதியிழக்க முடியாது.

2009, மே 18ஆம் நாளுக்குப் பின்னரான இலங்கைத் தமிழரது வாழ்வில், 2012, மே 27 அன்று, மட்டக்களப்பில் இரா. சம்பந்தன் ஆற்றிய பேருரை ஒரு வரலாற்று ஆவணம் என்பது என் கருத்து. இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் தற்கால அரசியற் கொள்கை நிலைப்பாடு தொடர்பான ஒரு துல்லியமான விளக்கம் அது.

நுட்பமாக வார்த்தெடுத்த சிந்தனைகளை, நுணுக்கமான வார்த்தைகளில் கோர்த்தெடுத்து, மிகக் கவனமாகக் கூர்மைப்படுத்தி - தான் ஆற்றிய பேருரையில் - சம்பந்தன் வெளிப்படையாகச் சொல்லாத, ஆனால், மறைபொருளாகக் குறிப்புணர்த்தும் விடயம் என்னவெனில்

பழைய உலகச் செல்நெறிக்குள் நகர்த்த முடியாமல் பிரபாகரன் விட்டுச்சென்ற இடத்திலிருந்து, புதிய உலகப் புறச்சூழலுக்கு இசைவாக, போராட்டக் கோலை அவர் எடுத்துச் செல்கின்றார் என்பதாகும். அந்தப் போராட்டக் கோல் - தமிழ்த் தேசியம்.

பிரபாகரன் விட்டுச் சென்ற இடம் என்று நான் குறிப்பிடுவது தமிழீழ விடுதலைப் புலிகளாலும், அன்றைய ரணில் விக்கிரமசிங்க அரசினாலும், 2002ஆம் ஆண்டில், நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில், உலக சமூகத்தின் அனுசரணையுடன் கையெழுத்திடப்பட்ட ஆவணமாகும்.

இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் இறையாண்மைப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் விவகாரத்தில் - இலங்கைத் தமிழர் தரப்பிற்கும், சிறிலங்கா அரசுக்கும் இடையில் - ஏற்றுக்கொள்ளப்பட்டு, எழுதப்பட்டு கைச்சாத்திடப்பட்ட ஆகக் கடைசி ஆவணம் என்ற வரலாற்றுத் தகுதி - அரசியற் சிறப்பு - உடைய ஆவணம் அதுவாகும்.

ஐக்கிய இலங்கை என்ற அரச கட்டமைப்பிற்குள், ஒரு சுயாட்சி முறைமையை நிறுவுவது தொடர்பான சாதகத் தன்மைகளைக் கண்டறிவதில் தமக்கிருக்கும் விருப்புறுதியை இரண்டு [illegible] [illegible] முப்பது ஆண்டு கால ஆயுதப் போராட்டம் அடைந்த அதியுச்சப் புள்ளி அந்த ஆவணம்தான்.

தமிழர்களுக்குரிய ஆட்சியலகிற்கான அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கும் முன்னெடுப்பானது - 1987ஆம் ஆண்டு, சிறிலங்காவின் அரசமைப்புச் சட்டத்தில் செய்யப்பட்ட 13ஆவது திருத்தத்தினைவிடவும் மேலே உள்ள ஒரு புள்ளியிலிருந்து தொடங்கப்படவேண்டும் எனச் சம்பந்தன் குறிப்பிடும் புள்ளி, ஆயுதப் போராட்டம் அடைந்திருந்த அந்த அதியுச்சப் புள்ளிதான் என்பது எனது அவதானிப்பு.

"தமிழ் பேசும் மக்களாகிய எமக்கு, ஒன்றுபட்ட இலங்கை என்ற அமைப்பிற்குள், எமது அரசியல் - குடியியல் - பொருளாதார - சமூக - பண்பாட்டு அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய விதமான ஓர் ஆட்சியலகை ஏற்படுத்த இந்தத் தீவின் ஆட்சியாளர்கள் மனப்பூர்வமாக முன்வரவேண்டும். அந்தத் தீர்வானது - தமிழ் பேசும் மக்கள், தமது அபிலாசைகள் தொடர்பான தமது ஜனநாயகத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தக்கூடிய நிரந்தரச் சட்டத் தகுதி உடையதாக அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட வேண்டும் இந்த ஆட்சியலகில் - நமது நிலத்தை நாமே ஆளுகை செய்து, நமது சமூகத்தை நாமே பாதுகாத்து, நமது பொருளாதாரத்தை நாமே வளப்படுத்தி, நமது பண்பாட்டை நாமே செழுமைப்படுத்தும் அதிகாரங்கள், எத்தகைய இடையூறுகளுமற்று உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும்" என்று சம்பந்தன் குறிப்பிடுவது - காலச் சூழலுக்கு அமைவாக - உலக சமூகத்திற்கு உணர்த்தும் வகையாக - மறைபொருளாக - அவர் குறிப்புணர்த்தும் தமிழ்த் தேசிய நிலைப்பாடு என்றே நான் கருதுகின்றேன்.

இங்கே - தமிழ்த் தேசிய நிலைப்பாடு என்று நான் குறிப்பிடுவதை, ஒரேயடியாக, தயான் ஜெயதிலக போன்றவர்கள் கற்பிதம் செய்ய முனைவது போல - தமிழீழத் தனியரசு என்று அர்த்தப்படுத்திவிடக் கூடாது.

வட்டுக்கோட்டையில், புறவயச் சுயநிர்ணய உரிமையின் (Right to External Self&Determination) அடிப்படையில், தமிழீழத் தனியரசு நிறுவும் நிலைப்பாட்டை எடுத்த செல்வநாயகத்திடம் இருந்து போராட்டக் கோலைப் பொறுப்பெடுத்த பிரபாகரன், இரண்டரைத் தசாப்தங்களுக்குப் பின்பு - அகவயச் சுயநிர்ணய உரிமையோடு (Right to Internal Self&Determination) ஐக்கிய இலங்கைக்குள் சுயாட்சி தேடும் நிலைப்பாட்டுக்கு வந்திருந்தார் (மாவீரர் நாள் உரை, நவம்பர் 27, 2002.)

இப்போது - பிரபாகரனிடமிருந்து போராட்டக் கோலைப் பொறுப்பெடுத்திருக்கும் சம்பந்தன், அதே போல, அகவயச் சுய நிர்ணய உரிமையோடு ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு தேடும் முயற்சியிலிருந்தே தனது பணியைத் தொடங்குகின்றார். இருந்தாலும், மீண்டும், புறவயச் சுயநிர்ணய உரிமையைப் பிரயோகித்துத் தீர்வு தேட எமது இனத்திற்கிருக்கும் உரிமையையும், வாய்ப்புக்களையும், உறுதிப்பாட்டையும் கூட அவர் மீள வலியுறுத்துகின்றார்.

எனவே - சம்பந்தனின் தமிழ்த் தேசிய நிலைப்பாடு என்று நான் குறிப்பிடுவது, எமது இனத்திற்கு இருக்கும் சுய நிர்ணய உரிமையையே அல்லாமல், அது எந்த வடிவத்தில் இருக்கின்றது, அல்லது எந்த வடிவத்தை எடுக்கப்போகின்றது என்பதை அல்ல.

இந்த நிலைப்பாடு, அவருடையது மட்டும் அல்ல; அது, இலங்கைத் தமிழரசுக் கட்சியினதும் மட்டும் அல்ல; வேறு முரண்பாடுகள் முதிர்ச்சியுற்றிருந்தாலும், அந்த நிலைப்பாடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும்தான்.

இப்போது - புதிய சூழல்; இனி - புதிய உத்திகள். போராட்டக் கோல் இப்போது புதிய நாயகர்களின் கைகளிற்கு வந்துள்ளது - புதிய அர்த்தங்களோடு. கூட்டமைப்பின் சுமந்திரன் நாடாளுமன்றிலேயே விளம்பித்தது போல - தமிழர்களைப் புலிகளாக்கி, புலிகளைப் பயங்கரவாதிகளாக்கி, பயங்கரவாதிகளைத் தமிழர்களாக்கிய கோட்பாட்டோடு நிகழ்ந்த 'கோத்தாவின் போர்' முடிந்துவிட்டதற்குப் பின்னரான தற்காலச் சூழலில் - தமிழர்களின் அரசியல் விருப்புணர்வுகள் எல்லாம் பயங்கரவாதக் கொள்கைகள் என நிறுவுவதற்கு எந்த வாய்ப்புக்களுமற்ற அரசியற் தளத்தில் இருந்தபடி - தமிழ் பேசும் மக்களின் உண்மையான அரசியல் நிலைப்பாடு எது என்பதை, வெளிச் சக்திகளுக்கு மட்டும் அல்லாமல், சிங்கள மக்களுக்கும், தனது மக்களுக்குங்கூட சம்பந்தன் தெளிவுபடுத்தியிருக்கிறார் என்று நான் கருதுகின்றேன். அந்த நிலைப்பாடு - உரிய தரத்தைப் பெறாத, எமக்கு நிறைவைத் தராத, தமிழ் பேசும் மக்களின் தேசிய அபிலாசைகளைப் பூர்த்தி செய்யாத, அவர்களது சுய நிர்ணய உரிமையை மறுதலிக்கின்ற எந்த ஒரு தீர்வையும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஏற்கப்போவதில்லை என்பதாகும்.

## சம்பந்தனின் பாத்திரம்

தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்குள் இருக்கும் முரண்பாடுகளுக்கும் சீரின்மைக்கும், அதன் தலைவர் என்ற வகையில் சம்பந்தனே பொறுப்பானவராக இருந்தாலும் - தமிழ் பேசும் மக்களின் அரசியல் உரிமைகளை உறுதி செய்வதற்கான போராட்டத்தில் - இன்றைய காலகட்டத்தில் - சம்பந்தன், மாற்றீடு செய்யப்பட முடியாத ஒரு மாபெரும் சக்தி.

எமது போராட்டக் கோல், இன்னொருவரின் கையிற்கு மாறும் ஒரு நிலை ஏற்பட்டால், அவ்வாறு அது மாறும் வரை - சம்பந்தன், மாற்றீடு செய்யப்பட முடியாத சக்தி.

இருந்தாலும் - இந்த ஓட்டத்தின் இன்றைய காலகட்டத்தில், வரலாறு தனக்கு அளித்திருக்கும் பாத்திரத்தை - வரலாற்றில் தான் பூண்டிருக்கும் அவதாரத்தை - அவர் சரிவரப் புரிந்துணரவேண்டும். அந்தப் பாத்திரம் - அந்த அவதாரம் - வெறுமனே இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் என்பது அல்ல; அல்லது, தமிழ்த் தேசிய இனத்தின் இறையாண்மைப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது மட்டும் அல்ல.

தமிழரசுக் கட்சி என்ற குறுகிய வட்டத்திற்குள் தன்னைச் சுருக்காது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெரிய வட்டத்திற்கும் வெளியிலே சென்று, ஒட்டுமொத்தமான தமிழினத்தின் தலைவனாக - தனது புதிய அவதாரத்தில் - அவர் ஆற்றிய கடமை என்ன என்பதைத் தான் வரலாறு நாளை கேட்கும். பிரபாகரன் விட்டுச் சென்ற இடத்திலிருந்து, தமிழ் பேசும் மக்களை அவர் எங்கே அழைத்துச் சென்றார் என்பதைத்தான் வரலாறு நாளை கேட்கும். அந்தக் கேள்வியிலிருந்து, அவரை, திருகோணமலையில் அவர் போற்றிய காளித் தாயாலும் காப்பாற்ற முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org